தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை

2020
ஆண்டறிக்கை





நீர் வழங்கல் அமைச்சு

நோக்கம் :

தொழில்நுட்ப மற்றும் சேவைச் சிறப்பின் மூலம் இலங்கையின் அதிஉன்னத பொது வசதிகள் நிறுவனமாக விளங்குதல்

குறிக்கோள் :

பாவனையாளர்களின் பூரண திருப்தியை உறுதிப்படுத்திக்கொண்டு குடிநீர் மற்றும் சுகாதார மேம்பாட்டுக்கான நிலையான தீர்வுகளை வழங்குவதன் மூலம் நாட்டிற்கு சேவை புரிதல்

இலக்குகள்

- நீர் வழங்கல் மற்றும் துப்புரவேற்பாட்டு நடவடிக்கைகளை விஸ்தரித்தல்
- தொழில்துறை வினைத்திறனை மேம்படுத்தல்
- உயர் பொறுப்புடைமையையும் வெளிப்படைத் தன்மையையும் உறுதிசெய்தல்
- கிராமிய மற்றும் விழிப்புநிலை சமூகங்களுக்கு பாதுகாப்பான குடிநீர் வழங்கலையும் துப்புரவேற்பாட்டு வசதிகளையும் வழங்கல்

உள்ளடக்கம்

நீ.வ.அ. செயலாளரின் செய்தி அறிக்கை பற்றிய அறிவிப்பு 01
தலைவரின் கூற்று 02

கூட்டு ஆளுகையும் புள்ளிவிபர மீளாய்வும்

முக்கியமான பதவியினர் 08
தற்போதுள்ள நீர் வழங்கல் திட்டங்கள் 11
கூட்டிணைந்த திட்டம் 12
நீர் வழங்கல் மற்றும் சாக்கடைத்துறையின் பிரதான செயலாற்றுகை 15
தொழிற்பாடுகளின் பொழிப்பு 17
முதலீடுகளின் பொழிப்பு 21
ஊழியர்கள் 23

நிலைபேறான அறிக்கை

தகவல் தொழில்நுட்பம் 28
வர்த்தக நடவடிக்கைகள் 29
கிராமிய நீர் வழங்கல் மற்றும் சுகாதார மேம்பாடு 30
பொதுமக்கள் விழிப்புணர்வூட்டல் நிகழ்ச்சிட்டம் 30
வலுசக்தி முகாமைத்துவம் 31
மத்திய ஆய்வுகூடம் 31
வருவாயற்ற நீர் குறைப்பு 32
நிலக்கீழ் நீர் 32
விநியோகம் மற்றும் பொருட்கள் முகாமைத்துவம் 32
நாட்பட்ட சிறுநீரக நோய் நிகழ்ச்சித்திட்டம் 33
அபிவிருத்தி 33
ஆராய்ச்சியும் அபிவிருத்தியும் 34
GIS மற்றும் வரைபடமாக்கல் 34
நீர் பாதுகாப்புத் திட்டம் 35

உட்கட்டமைப்பு அபிவிருத்தி

பிராந்திய உதவி நிலையங்கள் 38

நீர் வழங்கல்

நடைமுறையிலுள்ள வெளிநாட்டு / உள்நாட்டு வங்கி நிதியளிப்பிலான நீர் வழங்கல் கருத்திட்டங்கள் 48
இலங்கை அரசாங்க நிதியளிப்பிலான சிறிய மற்றும் நடுத்தர அளவிலான நீர் வழங்கல் கருத்திட்டங்கள் 56
குழாய் வழிக் கருத்திட்டங்கள் (நீ.வ.க.) 60
திட்டமிடல் மற்றும் வடிவமைப்பு (நீ.வ.க.) 60
61
61

சாக்கடை

தற்போதுள்ள சாக்கடைத் திட்டங்கள் 63
நடைமுறையிலுள்ள சாக்கடைக் கருத்திட்டங்கள் 64
திட்டமிடல் மற்றும் வடிவமைப்பு (சாக்கடை) 66
எதிர்பார்க்கப்பட்ட பிரதான செயற்பாடுகள் 67
நிலைபேறானதன்மை மற்றும் அவசர பதில்நடவடிக்கைகள் 67

நிதி மற்றும் கணக்காய்வு அறிக்கைகள்

கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு அறிக்கை 69
நிதிக் கூற்று 72
2020 திசெம்பர் 31 ஆம் திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கான கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அறிக்கை 75
சுருக்க வடிவங்கள் 131
அடிப்படைத் தகவல்கள் 134

நீர் வழங்கல் அமைச்சு செயலாளரின் செய்தி



நாட்டின் கொள்கை வரைச்சட்டகமான "சுபீட்சத்தின் நோக்கில்" "அனைவருக்கும் பாதுகாப்பான நீர் வழங்கலின்" முக்கியத்துவம் அடையாளங்காணப்பட்டுள்ளது. ஆதலால் அரசாங்கம் நீர் சார்ந்த துறையை பிரித்து தனியானதொரு அலகாக நீர் வழங்கல் அமைச்சைத் தாபிப்பதற்குத் தீர்மானித்தது. அதிலிருந்து இலங்கைப் பிரசைகளுக்கு குழாய்வழி குடிநீர் வழங்கல் மற்றும் குழாய்வழி கழிவுநீர் சேகரிப்பு வசதிகளை விநியோகிக்கும் அளப்பரிய சேவையை வழங்குவதற்கு தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபையை (கே.நீ.வ.வ.ச.) அமைச்சு வழிகாட்டி வருகின்றது.

2016 - 2020 கூட்டிணைந்த திட்டத்தின் ஊடாக 2020 ஆம் ஆண்டளவில் குழாய் நீரை சனத்தொகையில் 55% க்கு கிடைக்கச் செய்வதும், குழாய் வழி கழிவுநீர் சேகரிப்பு முறையை சனத்தொகையில் 2.22% க்கு கிடைக்கச் செய்வதும் இலக்காக காணப்பட்டது. எவ்வாறாயினும், உலகளாவிய தொற்றுநோய் நிலைமைக்கு மத்தியில் 2020 ஆம் ஆண்டினுள் தே.நீ.வ.வ.ச. யினால் நாட்டின் குழாய்வழி நீர் வழங்கல் உள்ளடக்கத்தை 53.1% ஆகவும், குழாய்வழி சாக்கடை இணைப்புகளின் உள்ளடக்கத்தை 2.05% ஆகவும் அதிகரிக்க முடியுமாயிருந்தது.

2020 ஆம் ஆண்டில் நீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் சேகரிப்பு துறைக்கான விரிவான மூலோபாய முதலீட்டு நிகழ்ச்சித்திட்டத்தை தயாரித்தல் நீர் வழங்கல் அமைச்சினால் கையாளப்பட்ட குறிப்பிடத்தக்கதொரு பொறுப்பாகக் காணப்பட்டது. இதற்கு சமாந்தரமாக, "அனைவருக்கும் தூய்மையான நீர் மற்றும் சுகாதாரம்" பற்றிய ஐக்கிய நாடுகளின் நிலேபேண்தகு அபிவிருத்தி இலக்கு - 06 உடன் இசைந்து செல்லக்கூடியதாக "சுபீட்சத்தின் நோக்கு" தேசிய கொள்கை வரைச்சட்டகத்தில் குறித்துரைக்கப்பட்டுள்ள "அனைவருக்கும் நீர்" எனும் தே.நீ.வ.வ.ச.யின் அபிவிருத்தி மூலோபாயத் திட்டத்திலுள்ள உறுதிமொழியை அடைவதற்காக நீர் வழங்கல் அமைச்சு வழிகாட்டியது. 2025 ஆம் ஆண்டளவில் மொத்த குழாய்வழி நீர் உள்ளடக்கத்தை 79% வரை அதிகரிப்பதற்கு தே.நீ.வ.வ.ச. கூட்டிணைந்த திட்ட (2020 - 2025) மூலோபாயங்கள் திட்டமிடப்பட்டுள்ளன. மீதி 21% தேசிய சமுதாய நீர் வழங்கல் திணைக்களத்தினால் (தே.நீ.வ.தி) உள்வாங்கப்படும்.

நிலைபேண்தகு அபிவிருத்தி இலக்குகள் (SDG) 06 இன் படி, 2030 ஆம் ஆண்டளவில் குழாய்வழி கழிவுநீர் சேகரிப்பு உள்ளடக்கத்தை 6.8% வரை அதிகரிப்பதற்கு முன்மொழியப்பட்டுள்ளது. அதன் மூலம் இலங்கையின் மொத்த கழிவுநீர் சேகரிப்பு உள்ளடக்கம், பாதுகாப்பாக முகாமை செய்யப்பட்ட மற்றும் அடிப்படை தலத்திலான கழிவுநீர் சேகரிப்பு வசதிகள் 2030 ஆம் ஆண்டளவில் 100% வரை அதிகரிக்கப்படுகின்றது. இலக்கிடப்பட்டதை அடைவதற்காக தே.நீ.வ.வ.ச. யினால் சுகாதார மேம்பாட்டு பிரதான திட்டம் தயாரிக்கப்பட்டு வருவதோடு 2021 ஆம் ஆண்டில் நிறைவு செய்யப்படும்.

நீர் வழங்கல் மற்றும் சுகாதாரம் தொடர்பிலான அரசாங்கத்தின் கொள்கையை நடைமுறைப்படுத்துவதில் தலைமை வகித்து வழிகாட்டியமைக்காக மேன்மைதங்கிய சனாதிபதி அவர்களுக்கும் பிரதம மந்திரிக்கும், நீர் வழங்கல் அமைச்சருக்கும் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவிப்பதற்கு நான் இச்சந்தர்ப்பத்தை பயன்படுத்துகிறேன். இப்பெரும் முயற்சியில் எம் அனைவருக்கும் வழிகாட்டல்களை வழங்கியமைக்காக கௌரவ கிராமிய மற்றும் பிராந்திய குடிநீர் வழங்கல் கருத்திட்ட அபிவிருத்தி இராஜாங்க அமைச்சருக்கு எனது விசேட நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். நீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் சேகரிப்பு துறையின் அனைத்து நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் செயற்பாடுகளையும் மேற்கொள்வதில் தமது தொடர்ச்சியான ஒத்துழைப்பை வழங்கியமைக்காக திறைசேரியின் செயலாளருக்கும், திணைக்களங்களின் தலைவர்களுக்கும் நான் நன்றி தெரிவிக்கின்றேன். நீர் வழங்கல் மற்றும் சுகாதார அபிவிருத்தியில் பல்வேறு விதத்தில் தமது பங்களிப்பை வழங்கிய எமது முதலீட்டாளர்களுக்கும் நான் நன்றி தெரிவிக்கின்றேன்.

உயர் தரத்திலான வினைத்திறன்மிக்க குழாய்வழி நீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் சேகரிப்பு சேவைகளை மக்களுக்கு வழங்குவதற்கும் அதேபோன்று 2021 ஆம் ஆண்டுக்காக திட்டமிடப்பட்ட நீர் வழங்கல் மற்றும் துப்புரவேற்பாடு இலக்குகளை அடைவதற்கான பல்வேறு அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களின் நடைமுறைப்படுத்தலுக்கும் தே.நீ.வ.வ.சபை எடுக்கின்ற பெரும் முயற்சி வெற்றியளிக்கட்டும் என வாழ்த்துகின்றேன்.



கலாநிதி (பொறியியலாளர்) பிரியத் பீ. விக்ரம
செயலாளர்
நீர் வழங்கல் அமைச்சு



தேசிய நீர் வழங்கல், வடிகாலமைப்புச் சபை

குடிநீர் வழங்கும் பொறுப்பு ஆரம்பத்தில் பொது வேலைகள் திணைக்களத்தின் கீழ் காணப்பட்டதோடு, 1965 ஆம் ஆண்டில் இப்பொறுப்பு நீர் வழங்கல் திணைக்களத்திற்கு ஒப்படைக்கப்பட்டது. பின்னர் பாராளுமன்றச் சட்டமொன்றின் மூலம் 1975 ஆம் ஆண்டில் தேசிய நீர் வழங்கல், வடிகாலமைப்பு சபை உருவாக்கப்பட்டது.

தேசிய நீர் வழங்கல், வடிகாலமைப்புச் சபை தற்போது நீர் வழங்கல் அமைச்சின் கீழ் இயங்கி வருகின்றது.

அறிக்கை பற்றிய அறிவிப்பு

கௌரவ நீர் வழங்கல் அமைச்சர்,
நீர் வழங்கல் அமைச்சு,
"லக்திய மெதுர",
இல. 35, சுனில் மாவத்தை
பெலவத்தை,
பத்தரமுல்லை.

கனம் அமைச்சர் அவர்களே,

ஆண்டறிக்கையும் நிதிக் கூற்றுக்களும் - 2020
தேசிய நீர் வழங்கல், வடிகாலமைப்புச் சபை

1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 14 (2) ஆம் பிரிவின் நியமங்களுக்கமைவாக, 2020 டிசெம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவுற்ற ஆண்டுக்கான தேசிய நீர் வழங்கல், வடிகாலமைப்புச் சபையின் ஆண்டறிக்கையும் நிதிக் கூற்றுக்களும் சபை அங்கத்தவர்களால் இத்தால் கௌரவத்துடன் சமர்ப்பிக்கப்படுகின்றது.

இப்படிக்கு உண்மையுள்ள,

நிஷாந்த ரணதுங்க
தலைவர்
தேசிய நீர் வழங்கல், வடிகாலமைப்புச் சபை



“தே.நீ.வ.வ.ச. யினால் ஆண்டினுள் 122,733 புதிய நீர் வழங்கல் இணைப்புகளை வழங்கி மொத்த இணைப்புகளின் எண்ணிக்கையை 2,560,237 ஆக கொண்டு வருவதற்கு இயலுமானதோடு, இதன் மூலம் தே.நீ.வ.வ.ச. யினால் வழங்கப்படுகின்ற குழாய்வழி நீர் வழங்கலை சனத்தொகையில் 43.2% ஆக உயர்த்துவதற்கும் அதேவேளை நாட்டின் குழாய்வழி நீர் உள்ளடக்கத்தை 53.1% ஆக உயர்த்துவதற்கும் இயலுமாயிருந்தது.”

தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலப்புச் சபையின் (தே.நீ.வ.வ.ச.) தலைவராக 2020 சனவரி மாதத்தில் நான் பொறுப்பேற்றதோடு, நிறுவனத்தின் தொலைநோக்கு மற்றும் செயற்பணிக்கு இசைந்து செல்கின்ற வகையில் முழுமொத்த பயன்பெறுனர்களினதும் திருப்தியை உறுதிசெய்கின்ற விதத்தில் நிலைபேறான நீர் மற்றும் சுகாதார தீர்வுகளை வழங்குவதன் மூலம் மக்களுக்கு சேவையாற்றுவதற்கு 2020 ஆம் ஆண்டு முழுவதிலும் பணிப்பாளர் சபை மற்றும் எனது பணியாட்தொகுதியினருடன் நிறுவனத்தை வழிநடத்தினேன்.

அரசாங்கத்தின் அபிவிருத்தி நிகழ்ச்சி நிரலான சுபீட்சத்திற்கான நோக்கில், 2025 ஆம் ஆண்டின் இறுதியாகின்றபோது தே.நீ.வ.வ.ச. இலங்கையிலுள்ள அனைத்து மக்களுக்கும் பாதுகாப்பான குடிநீரை வழங்குவதற்கான மூலோபாயத் திட்டத்தை அபிவிருத்தி செய்தல் வேண்டுமெனத் தெளிவாகக் கூறப்பட்டுள்ளது.

இப்பெரும் முயற்சியில், அடுத்துவருகின்ற 5 ஆண்டுகளுக்கான நன்றாகத் திட்டமிடப்பட்ட கூட்டிணைந்த திட்டத்தை / வியாபாரத் திட்டத்தை தே.நீ.வ.வ.ச. அபிவிருத்தி செய்தல் மிக முக்கியமானதாகும் எனக் கருதப்பட்டது. பாவனையாளர்களுக்கு மிகச் சிறந்த சேவையை வழங்குவதை நோக்கமாகக் கொண்ட அத்தகையதொரு திட்டத்தை அவிருத்தி செய்வதற்கு தே.நீ.வ.வ.ச. அலுவலர்களை வழிநடத்துவதே எனது முதலாவது கடமையாக இருந்தது.

இத்திட்டத்தை அபிவிருத்தி செய்வதற்கான முதலாவது கட்டமாக, அமைச்சு, NPD, ERD ஆகிய அனைத்து தரப்பினர்களினதும் பங்குபற்றுதலுடன் ஊடாக, நிதியியல் கற்கை தொடர்பில் கவனம் செலுத்தி தே.நீ.வ.வ.ச. யின் அனைத்து பணியாளர்களினதும் கருத்துக்களைப் பெறுகின்ற வகையில் மிலோதா நிலையத்தில் 2020 பெப்ரவரி மாதம் ஓர் ஆலோசனைச் செயலமர்வு நடத்தப்பட்டது. பல சுற்றுக் கலந்தாலோனைகளின் பின்னர், ஆலோசனை ரீதியிலான அமர்வும் சமர்ப்பணங்களும் மேற்கொள்ளப்பட்டு, அரசாங்கத்தினால் எதிர்பார்க்கப்பட்டவாறு சேவை உள்ளடக்கத்தை வழங்குகின்ற எமது இறுதி இலக்கை அடைவதற்கான முன்னெடுப்பில் இறுதிக் கருத்தொருமைப்பாடு எட்டப்பட்டது. இம் முயற்சியின் விளைவாக, 2020 ஆம் ஆண்டின் பெரும்பாலான காலப்பகுதியினுள் நிலவிய கோவிட் - 19 முடக்க நிலைக்கு மத்தியிலும் தே.நீ.வ.வ.ச. அதன் கூட்டிணைந்த / வியாபார திட்டத்தை அபிவிருத்தி செய்தது.

2025 ஆம் ஆண்டளவில் பாதுகாப்பான குடிநீரை 79% வீடுகளுக்கு வழங்குகின்ற இலக்குடன் கூடியதாக தே.நீ.வ.வ.ச. யின் கூட்டிணைந்த திட்டம் (2020 - 2025) ஆரம்பித்து வைக்கப்பட்டு 2020 நவெம்பர் மாதத்தில் கௌரவ பிரதம மந்திரிக்கு சமர்ப்பிக்கப்பட்டது.

“அனைவருக்கும் நீர்” என்ற எண்ணக்கருவானது இக் கலந்தாலோசனையின் நேரடிப் பெறுபோகும். மேற்படி கூட்டிணைந்த கருத்து உதிர்ப்புச் செயற்பாட்டினூடு மிக குறுகிய காலத்தில், நாம் எதிர்நோக்க வேண்டி நேரிடும் நிதிசார் கட்டுப்பாடுகள் மற்றும் ஏனைய சவால்களைப் பொருட்படுத்தாது, 2025 ஆம் ஆண்டளவில் முழு நாட்டையும் உள்ளடக்குகின்ற குறுகிய கால, நடுத்தர கால மற்றும் நீண்ட கால அடிப்படையில் அனைத்து மக்களுக்கும் நீர் வழங்குவதற்கான கூட்டிணைந்த திட்டம் 2020 - 2025 ஆனது அபிவிருத்திச் செயற்பாட்டில் பாரியதொரு உந்துசக்தியை ஏற்படுத்தும் முகமாக முன்மொழியப்பட்டது.

நாடளாவிய ரீதியிலான குடிநீர் வழங்கல் மற்றும் துப்புரவேற்பாட்டு உள்ளடக்கம் பின்வரும் திட்டத்தின் கீழ் அமுலாக்கப்படவுள்ளது.

i. குறுகிய கால: நடைபெற்று வருகின்ற கருத்திட்டங்களை நிறைவு செய்தல் மற்றும் நடைமுறையிலுள்ள நீர் வழங்கல் திட்டங்களின் மற்றும் தர மேம்பாடு.

ii. நடுத்தர கால: நடைமுறையிலுள்ள நீர் வழங்கல் மற்றும் சுகாதார மேம்பாட்டுத் திட்டங்களின் முழு இயலளவையும் பயன்படுத்துவதற்கான மேம்பாடுகள் மற்றும் வினைத்திறன் மேம்பாடுகள்.

iii. நீண்ட கால: சுபீட்சத்தின் நோக்கில் உள்ள இறுதிப் பெறுபேறுகளை நிறைவேற்றிக்கொள்வதில் எதிர்பார்க்கப்படும் இலக்கை அடைவதற்கு 2020 - 2025 கூட்டிணைந்த / வியாபாரத் திட்டத்தில் அடையாளம்காணப்பட்டுள்ள கருத்திட்டங்களை நடைமுறைப்படுத்தல்.

தே.நீ.வ.வ.ச. யினால் ஆண்டினுள் 122,733 புதிய நீர் வழங்கல் இணைப்புகளை வழங்கி மொத்த இணைப்புகளின் எண்ணிக்கையை 2,560,237 ஆக கொண்டு வருவதற்கு இயலுமானதோடு, இதன் மூலம் தே.நீ.வ.வ.ச. யினால் வழங்கப்படுகின்ற குழாய்வழி நீர் வழங்கலை சனத்தொகையில் 43.2% ஆக உயர்த்துவதற்கும் அதேவேளை நாட்டின் குழாய்வழி நீர் உள்ளடக்கத்தை 53.1% ஆக உயர்த்துவதற்கும் இயலுமாயிருந்தது. 2025 ஆம் ஆண்டளவில் முழுமொத்த குழாய்வழி நீர் உள்ளடக்கத்தை 79% ஆக அதிகரிக்கச் செய்வதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. மீதி 21% சமுதாய நீர் வழங்கல் திட்டங்கள் மற்றும் பாதுகாப்பான தல மூலங்களினால் உள்ளடக்கப்படும்.

2020 ஆம் ஆண்டில் தே.நீ.வ.வ.ச. 782 மில்லியன் க.மீ. குடிநீரை உற்பத்தி செய்ததோடு, இது 2019 ஆம் ஆண்டில் உற்பத்தி செய்யப்பட்ட 746 மில்லியன் க.மீ. குடிநீர் உற்பத்தியுடன் ஒப்பிடுகின்றபோது 4.83% அதிகரிப்பாகும். இதற்கு மேலதிகமாக, ஆண்டினுள் 1,364 குழாய்வழி கழிவுநீர் சேகரிப்பு இணைப்புகள் வழங்கப்பட்டு, நாளொன்றுக்கு 90,600 க.மீ. மொத்த கழிவு நீர் சுத்திகரிப்புக் கொள்ளளவுடன் கூடியதாக மொத்த கழிவுநீர் சேகரிப்பு இணைப்புகளின் எண்ணிக்கை 25,858 ஆக அதிகரிக்கப்பட்டது.

தே.நீ.வ.வ.ச. 2020 ஆம் ஆண்டினுள் ரூபா 100.86 பில்லியனை நீர் வழங்கல் மற்றும் சுகாதார மேம்பாட்டுத் துறையின் அபிவிருத்திச் செயற்பாடுகளில் முதலீடு செய்ததோடு, இது 2019 ஆம் ஆண்டுடன் ஒப்பீடு செய்யப்படுகின்றபோது 30.24% அதிகரிப்பாகும். இந்த முதலீடுகள் அரசாங்கத்தின் மூலமான ரூபா 43.03 பில்லியன் நேரடி ஒதுக்கீட்டுக்கு மேலதிகமாக, உள்நாட்டு/வெளிநாட்டு வங்கிகளிலிருந்து கடன் பெறுதலின் மூலம் நீர் வழங்கல் கருத்திட்டங்கள் மீது முதலீடு செய்யப்பட்ட ரூபா 52.94 பில்லியன் மற்றும் உள்நாட்டு வங்கிகளிலிருந்தான ரூபா 3.35 பில்லியன் மற்றும் அதன் சொந்த நிதியத்திலிருந்தான ரூபா 1.54 பில்லியன் தொகையை நிதியிடல் மூலோபாயங்கள் உள்ளடக்குகின்றன.

23 பாரிய அளவிலான நீர் வழங்கல் திட்டங்கள், 03 சுகாதார மேம்பாடுட்டுத் திட்டங்கள், 11 உள்நாட்டு வங்கி நிதியிடல் நீர் வழங்கல் திட்டங்கள், 03 சிறிய மற்றும் நடுத்தர நீர் வழங்கல் திட்டங்கள், 01 நீர்துறை சமுதாய வசதியேற்பாட்டு திட்டம் மற்றும் 05 கிராமிய மற்றும் பிரதேச குடிநீர் வழங்கல் திட்டங்களின் அபிவிருத்தி ஆகியவற்றின் நடைமுறைப்படுத்தலை தொடர்வதற்காக மேற்படி முதலீடு மேற்கொள்ளப்பட்டது. இந்தத்திட்டங்களில் 2020 ஆம் ஆண்டினுள் இரண்டு பாரிய அளவிலான வெளிநாட்டு நிதியிடல் நீர் வழங்கல் திட்டங்கள் மற்றும் ஒரு உள்நாட்டு வங்கி நிதியிடல் திட்டத்தை நிறைவு செய்வதற்கு தே.நீ.வ.வ.ச.யினால் இயலுமாயிருந்தது.

ரூபா 273.72 மில்லியன் செலவிடப்பட்டு, கிராமிய மற்றும் பிரதேச குடிநீர் வழங்கல் திட்டங்களின் அபிவிருத்தியின் ஊடாக நீண்டகால சிறுநீரக நோயினால் (CKDu) பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் வசிக்கும் மக்களுக்கு பாதுகாப்பான குடிநீரை வழங்கும் பொருட்டு விசேட கவனம் செலுத்தப்பட்டது. இதற்கு மேலதிகமாக, நாடு முழுவதிலும் நீர் வசதிகளற்ற பாடசாலைகளுக்கு நீர் வழங்கலை பெற்றுக் கொடுப்பதற்காக ஏற்பாடுகள் செய்யப்பட்டன.

2020 ஆம் ஆண்டு நவெம்பர் மாதத்தில் களனி ஆற்றங்கரை நீர் சுத்திகரிப்பு நிலையம் வைபவ ரீதியில் திறந்து வைக்கப்பட்டமை, நீர் வழங்கல் சபைக்கான குறிப்பிடத்தக்கதொரு திருப்புமுனையாக அமைந்தது. அத்துடன், அலவ்வ - பொல்கஹவெல மற்றும் கம்பஹ - அத்தனகல்ல நீர் வழங்கல் கருத்திட்டங்கள் மீள் இயங்கவைக்கப்பட்டு பொறுப்பளிக்கப்பட்டது.

வியாபார வினைத்திறன் மேம்பாட்டின் பொருட்டு தே.நீ.வ.வ.ச. வருவாயற்ற நீர் (NRW) குறைப்பை விரைவு படுத்தியதோடு, 2020 ஆம் ஆண்டின் இறுதியளவில் வருவாயற்ற நீர் வீதம் உற்பத்தியில் 24.63% ஆக கணிக்கப்பட்டது. ஆசிய அபிவிருத்தி வங்கியின் (ADB) உதவியுடன், கொழும்புப் பிரதேசத்தின் நீர் திட்டங்களின் மூலம் உருவாக்கப்படுகின்ற வருவாயற்ற நிலைமையின் தொகையை மேலும் குறைப்பதற்கு எதிர்பார்க்கப்படுகிறது. 2020 ஆம் ஆண்டு முழுவதிலும் தே.நீ.வ.வ.ச. தகவல் தொழில்நுட்ப அபிவிருத்தி மற்றும் சக்தி முகாமைத்துவ நிகழ்ச்சித்திட்டங்கள் மீது கவனம் செலுத்துவதை தொடர்ந்தும் மேற்கொண்டது.

2020 ஆம் ஆண்டில் சேவை வழங்குனர் என்ற வகையில் வரவு செலவுத்திட்ட இழப்பு ரூபா 3092 மில்லியனாக காணப்பட்ட போதிலும் எமக்கு அதனை ரூபா 528 மில்லியன் தேறிய இலாபமாக அதிகரிக்கச் செய்வதற்கு இயலுமாயிருந்தது. அரசாங்கமானது 20% - 25% வரையிலான நிறுவனச் செலவினைக் குறைப்பை கோரியிருந்த போதிலும் எமக்கு அதனை 28% - 32% இனால் குறைப்பதற்கு இயலுமாயிருந்தது.

கோவிட் தொற்றுநோய் நிலைமையின் மூலம் பாரிய சவால் விடுக்கப்பட்டிருந்த போதிலும், சுகாதார அமைச்சு மற்றும் ஆயுதப் படைகளுடன் இணைந்து, இலங்கை முழுவதிலும் வைத்தியசாலைகள் மற்றும் கோவிட் சிகிச்சை நிலையங்களுக்கு ஒழுங்கான விதத்தில் நீர் மற்றும் கழிவு நீர் வசதிகளை வழங்குவதற்கு எமக்கு இயலுமாயிருந்தது.

2020 நவெம்பரில் பிரதான சுகாதார மேம்பாட்டுத் திட்ட அறிக்கையை (2021 - 2030) தயாரிப்பதற்கான ஆரம்ப வேலைகள் ஆரம்பிக்கப்பட்டதோடு, திட்டத்தை அமுலாக்குவதன் மூலம், 2030 ஆம் ஆண்டளவில் நாட்டில் தற்போது காணப்படுகின்ற மொத்த அடிப்படை கழிவு நீர் சேகரிப்பு உள்ளடக்கத்தை 100% வரை அதிகரிப்பதற்கு இலக்கிட்டுள்ளது.

நிறுவன மீள்கட்டமைப்பு நடைமுறை, பணியாட்டொகுதி நியதிகளைத் தயாரித்தல், ஆட்சேர்ப்புத் திட்டம், பிரதான செயலாற்றுகைச் சுட்டிகள் ஆகிய நிறுவன நடைமுறைகளின் அபிவிருத்தியை, 2012 ஆம் ஆண்டு முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் (DMS) வெளியிடப்பட்ட சுற்றறிக்கைக்கமைய, தே.நீ.வ.வ.ச. முன்னெடுத்துள்ளது. எவ்வாறாயினும், வரைவு முன்மொழிவுகள் சமர்ப்பிக்கப்பட்டபோது ஊழியர்களினால் எழுப்பப்பட்ட தொடர்ச்சியான எதிர்ப்பின் காரணமாக அவற்றை பூரணப்படுத்துவது வெற்றியளிக்கவில்லை. ஊழியர்களின் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு என்னால் பொறுப்பேற்கப்பட்ட சவால்களில் ஒன்றாக இது காணப்பட்டதோடு, முகாமைத்துவ சேவைகள் திக்களத்தின் நியதிக்கேற்ப பணிப்பாளர் சபை மற்றும் நீர் வழங்கல் அமைச்சின் செயலாளரின் இசைவைப் பெற்றுக்கொள்ளக் கூடியதாக இருந்தது.

நல்லாட்சிக் கொள்கைகளின் நியதிகளுக்கமைய தீர்மானம் எடுக்கும் நடைமுறைகள் மற்றும் அத்தகைய தீர்மானங்களை அமுல்படுத்தும் நடைமுறைகள் பின்பற்றப்பட்டன. வளங்கள் பயன்படுத்தப்படுவதைக் குறைப்பதற்காக 'குறைந்தளவு கடதாசிகள்' எண்ணக்கரு நடைமுறைப்படுத்தப்பட்டதன் மூலம் கடதாசி வேலைகளைக் குறைப்பதை நாம் ஆரம்பித்துள்ளோம்.

மேலும், ஊழல்கள் குறைக்கப்பட்டுள்ளதென்பதை நான் உறுதி செய்கிறேன். தே.நீ.வ.வ.ச. யின் நிகழ்கால மற்றும் எதிர்காலத் தேவைகளை முன்னிட்டு தீர்மானங்கள் எடுக்கின்றபோது, பிரதிபலிப்புச் செய்யத்தக்கதாக சிறு பான்மையினரின் கருத்துக்கள் மற்றும் சபையிலும் பங்குதாரர்கள் மிகவும் மிக பாதிக்கப்பட்ட நிலையிலுள்ளவர்களின் குரல்களுக்கு செவிமடுக்கப்பட்டது.

நீர் பாவனையாளர்களுக்கு நிலைபேறான நீர்க் கட்டண முறையொன்றை அறிமுகப்படுத்துவதற்கு இணையவழி

விழிப்புணர்வூட்டல் நிகழ்ச்சித்திட்டங்கள் நடத்தப்பட்டதோடு, இவ்வசதிகளின் ஊடாக வலையமைப்பின் அறவீட்டுச் சேகரிப்புச் சதவீதத்தை 123% வரை அதிகரிக்கச் செய்ய முடியுமாயிருந்தது. இதற்கு மேலதிகமாக, நீர் வழங்கல் முறைமைகளின் நீர் இணைப்புக்களை அதிகரிக்கச் செய்வதற்காக நடமாடும் சேவை முறைமை இயக்கப்பட்டது. மேலும், நடமாடும் நீர் தர ஒழுங்குமுறைப்படுத்தல் நிகழ்ச்சித்திட்டம் அமுல்படுத்தப்பட்டமை மற்றும் பிராந்திய ஆய்வுகூடங்களுக்கு 5S சான்றிதழ் பெறுதல் ஆகியன குறிப்பிடத்தக்க அடைவுகளாகும்.

45 ஆண்டுகளாக சீராக பராமரிக்கப்படாதிருந்த ஆதனப் பதிவேடு கனணிமயப்படுத்தப்பட்டு தாபிக்கப்பட்டதோடு, அபிவிருத்தி செய்யப்பட்ட ஆதன முகாமைத்துவ முறைமை மென்பொருளூடு, 16 மாதங்கள் போன்றதொரு குறுகிய காலத்தில் 294 பில்லியன் டொலர் பெறுமதியான 75,000 அலகுகள் வரை சேர்க்கக் கூடியதாக இருந்தது.

குடி நீர்த் தரம் தொடர்பான உலக சுகாதார நிறுவனத்தின் (WHO) சிபாரிசுகளைப் பின்பற்றி நீர் பாதுகாப்புத் திட்டம் நாடு முழுவதிலுமுள்ள 281 நகர நீர் வழங்கல் திட்டங்களில் அமுல்படுத்தப்பட்டுள்ளன. இதற்கு மேலதிகமாக, 2020 ஆம் ஆண்டில் தே.நீ.வ.வ.ச. யினால் நீர் மாதிரிப் பரிசோதனைகள் மற்றும் தரவுப் பகுப்பாய்வுகள் விரைவுப் படுத்தப்பட்டதோடு, நுண்ணுயிரியல் பரிசோதனைகளில் 99.2% திருப்திகரமாயிருந்தமை வெளிப்படுத்தப்பட்டது. எந்தவொரு நேரத்திலும் நீர் தரச் சுட்டிகளைப் பார்வையிடுவதற்கு எந்தவொரு அலுவலருக்கும் அனுமதியளிக்கின்ற வகையில் இணையவழியிலான ஒரு நீர் தர கண்காணிப்பு முறைமை ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

தற்போது நீர் வழங்கல மற்றும் வடிகாலமைப்பு சபையில் குறிப்பிடத்தக்க ஆய்வுகூடங்கள் இலங்கை தராதரச் சபையிலிருந்து ISO 17025: 2017 தரச் சான்றிதழைப் பெற்றுள்ளன. மத்திய ஆய்வுகூடம், அம்பத்தலே மற்றும் பியகம உற்பத்தி ஆய்வுகூடம், மேற்கு - தென், யாழ்ப்பாணம் மற்றும் வவுனியா பிராந்திய ஆய்வுகூடங்கள் ஆகியன இந்த ஆய்வுகூடங்களாகும்.

கூட்டிணைந்த மற்றும் தேசிய இலக்குகளை அடைவதில் தே.நீ.வ.வ.சபைக்கு நீர் வழங்கல் அமைச்சும் நிதி அமைச்சும் தொடர்ந்தும் அவர்களது ஒத்துழைப்பையும் வழிகாட்டல்களையும் வழங்கின. 2012 ஆம் ஆண்டு தொடக்கம் எவ்வித நீர்க் கட்டண அதிகரிப்பும் இன்றி, செலவின மீள்அறவீட்டு பிரச்சினைகளுக்கும் மத்தியில் இலக்குகளை அடைவதற்கும் அதன் சேவைகளைத் தொடர்வதற்கும் தே.நீ.வ.வ.ச.க்கு இயலுமாயிருந்ததென்பதை குறிப்பிடுதல் வேண்டும்.

எவ்வாறாயினும், தே.நீ.வ.வ.ச.யின் தலைவர் என்ற வகையில், பாவனையாளர் சேவைகளை மேம்படுத்துவதற்கான உற்பத்தித்திறன் மற்றும் வினைத்திறனை மேம்படுத்துவதற்கு தே.நீ.வ.வ.ச.க்கு கட்டமைப்பு ரீதியிலான மாற்றங்கள் தேவைப்படுகின்றதென்பதை நான் அவதானித்துள்ளேன். வகைப்பொறுப்புக்கூறலை உறுதிப்படுத்துவதற்கும் பாவனையாளர் திருப்தியை மேம்படுத்துவதற்கும் வர்த்தக, சந்தைப்படுத்தல் மற்றும் பொதுசன உறவுகள் போன்ற புதிய தொழிற்பாட்டுப் பிரிவுகள் எல்லை வகுக்கப்பட வேண்டியுள்ளன.

தகவல் தொழில்நுட்ப (IT) அபிவிருத்திக்கு உயர்ந்தளவு முன்னுரிமை அளிக்கப்பட்டதோடு, 2020 - 2025 இல் இருந்து செயல்படுத்தப்படக்கூடிய தகவல் தொழில்நுட்பப் பிரிவுக்கான விரிவானதொரு திட்டம் அண்மையில் முறைப்படி திட்டமிடப்பட்டுள்ளது. தகவல் தொழில்நுட்பப் பிரிவின் மூலம், திட்ட முன்னேற்றக் கண்காணிப்பு முறைமை, ஸ்மார்ட் மானி வாசிப்புச் செயலி, இணையவழி கொடுப்பனவுத் தீர்வுகள், ஸ்மார்ட் வலய இணையத் தளம், பாவனையாளர் சேவைகளுக்கான செல்லிடத் தொலைபேசி பிரயோகங்கள் (கள செயலாற்றுகை செயலி மற்றும் ஸ்மார்ட் கொடுப்பனவு பிரயோகம்), வரவுப் பதிவு முகாமைத்துவ முறைமை, நீர் தர கண்காணிப்பு முறைமை, இருப்பு முகாமைத்துவ முறைமை மற்றும் சபைக் கூட்டங்கள் முகாமைத்துவ முறைமை ஆகிய மென்பொருள் உபயோக முறைமைகளை, நீண்ட காலமாக தீர்க்கப்பட வேண்டிய பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காகவும் வினைத்திறனை மேம்படுத்துவதற்காகவும் அபிவிருத்தி செய்து நடைமுறைப்படுத்துவதற்கு புதிய முகாமைத்துவத்தின் கீழ் இயலுமாயிருந்தது.

நீர் கட்டணப் பட்டியல்களின் இணையவழி கொடுப்பனவு, நடமாடும் நீர் கட்டணப் பட்டியல் சேவை மூலம் நிதி திரட்டலை அதிகரிக்கச் செய்தல், கோவிட் முடக்கநிலை காலகட்டத்தில் கூட மானி வாசிப்பு மற்றும் கட்டணப் பட்டியல் விநியோப்பதை மேற்கொள்ளல், புதிய இணைப்புகளைப் பெறுவதற்காக விழிப்புணர்வூட்டல் நிகழ்ச்சித்திட்டங்களின் ஊடாக பொதுமக்களை ஊக்குவித்தல் ஆகியவற்றுக்கும் தே.நீ.வ.வ.ச. வசதி செய்து கொடுத்தது. 'அனைவருக்கும் நீர்' நிகழ்ச்சித்திட்டத்தை கண்காணிப்பதற்காக அபிவிருத்தி செய்யப்பட்டுள்ள புதிய மென்பொருள் முறைமையின் மூலம் முன்னேற்ற கண்காணிப்பு பொறிமுறையுடன் கூடியதாக நாடளாவிய ரீதியிலுள்ள கருத்திட்டகளின் தரவுகளை பேணிவர முடியுமாயுள்ளது.

நீர் வழங்கல் அமைச்சின் செயலாளர் கலாநிதி பிரியத் பந்து விக்ரம அவர்கள் அநேகமாக எல்லாப் பிரந்தியங்களுக்கும் விஜயம் செய்து தே.நீ.வ.வ.ச. யின் பணியாளர் குழுமத்திற்கு அவரது தலைமைத்துவத்தை வழங்கி, தேவைப்பாடுகள் மற்றும் தொழிற்நுட்பத் தடைகளை இனங்காண்பதற்காக சிந்திக்கும் நடைமுறையை ஊக்குவித்து ஆக்கபூர்வமான கருத்துக்களுடன் முன்வருவதற்கு அக்குழுமத்தை முனைப்புடன் வழிநடத்தியதன் மூலம் வழங்கிய குறிப்பிடத்தக்க பங்களிப்பை நான் குறிப்பிடாதிருப்பின் அது எனது கடமையில் நான் தவறிழைப்பதாக இருக்கும்.

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் சனாதிபதி அதிமேதகு கோட்டாபய ராஜபக்ஷ, பிரதம அமைச்சர் கௌரவ மஹிந்த ராஜபக்ஷ, நீர் வழங்கல் அமைச்சர் கௌரவ வாசுதேச நாணாயக்கார, கிராமிய மற்றும் பிரதேச குடிநீர் வழங்கல் கருத்திட்ட அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் கௌரவ சனத் நிஷாந்த, நீர் வழங்கல் அமைச்சின் செயலாளர் கலாநிதி (பொறியியலாளர்) பிரியத் பந்து விக்ரம மற்றும் அவரது பணியாட்தொகுதியினர், பிரதித் தவிசாளர் திரு. என்.ஆர். ரணவக்க, பணிப்பாளர் சபையின் அனைத்து அங்கத்தவர்கள், தே.நீ.வ.வ.ச. யின் மொத்த பணியாளர்கள் ஆகியோருக்கு எனது கடமைகளை மேற்கொள்வதில் எனக்கு வழங்கிய அவர்களது தாராளமான ஒத்துழைப்பு மற்றும் ஊக்குவிப்பு தொடர்பில் எனது நன்றியுணர்வைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

கூட்டிணைந்த வியாபார திட்டமானது எதிர்பார்க்கப்பட்ட இலக்குகளை அடைவதற்கான வெற்றிக்கு மிகப் பலமான அடித்தளமும் தெளிவான வழிகாட்டல்களையும் வழங்க கூடியதாக இருப்பதுடன் தே.நீ.வ.வ.ச தனித்து நின்று தன்னிறைவடைந்ததொரு நிறுவனமாக ஆக முடியுமென நான் உறுதியாக நம்புகிறேன். மேற்படி மாற்றங்களை முன்னிட்டு பணியாற்றுவதற்கும் முழு நாட்டுக்கும் அளப்பரியதொரு சேவையை ஆற்றி சக்திவாய்ந்ததும் தன்னிறைவடைந்ததுமான நிறுவனமாக ஆவதற்கும் தே.நீ.வ.வ.ச. யின் அனைத்து ஊழியர்களிடமிருந்தும் கடப்பாட்டையும் அர்ப்பணிப்பையும் ஒரு முகப்படுத்தலையும் நான் எதிர்பார்க்கிறேன்.



நிஷாந்த ரணதுங்க
தலைவர்
தேசிய நீர் வழங்கல், வடிகாலமைப்புச் சபை



“நீர் முழுமொத்த இயற்கையினதும் இயக்க சக்தியாகும்”

-லியனாடோ டா வின்சி-


கூட்டு ஆலோசனை

புள்ளியிய நீதியான மீளாய்வு



தம்புள்ள பெரும்பாக நீர் சுத்திகரிப்புப் பொறித்தொகுதி

முக்கியமான பதவியினர்



பணிப்பாளர்கள் சபை

01. **திரு. நிஷாந்த ரணதுங்க**
தலைவர்,
தே.நீ.வ.வ.ச. (2020.01.16 தொடக்கம் இன்று வரை)

02. **திரு. நிமல் ஆர் ரணவக்க**
உப தலைவர், தே.நீ.வ.வ.ச.
(2020.01.23 தொடக்கம் இன்று வரை)

03. **டாக்டர் எஸ்.ரீ. கம்லத்**
பிரதிப் பணிப்பாளர் நாயகம்
(சுற்றுப்புற சுகாதாரம்,தொழில்சார் சுகாதாரம் மற்றும் உணவுப்பாதுகாப்பு சுகாதார அமைச்சு, கொழும்பு இலங்கை)
(2019.06.04 தொடக்கம் இன்று வரை)

04. **திருமதி ஏ.ஆர். விக்கிரமசிங்க**
பிரதிப் பணிப்பாளர்,
பொது நிறுவனங்கள் திணைக்களம்
நிதி அமைச்சு, பொருளாதார மற்றும் கொள்கை அபிவிருத்தி செயலகம், கொழும்பு 01, இலங்கை
(2020.01.11 தொடக்கம் இன்று வரை)

05 **பொறி. ரீ.எம்.ஆர்.பி. தென்னகோன்**
(2020.01.09 தொடக்கம் இன்று வரை)

06 **பொறி. ஆர்.ஏ.எஸ். ரணசிங்க**
(2020.02.18 தொடக்கம் இன்று வரை)

07 **திரு. பீ.என். தம்மிந்த குமார**
சிரேஷ்ட உதவிச் செயலாளர் (நிர்வாகம் மற்றும் பயிற்சி)
அரச சேவை, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு,
இல.330, யூனியன் பிளேஸ், கொழும்பு 02, இலங்கை
(2020.06.22 தொடக்கம் இன்று வரை)

சபை செயலாளர்
திருமதி டபிள்யு.பி. சந்தமாலி த சில்வா
Secretary to the Board

2020 ஆம் ஆண்டில் 16 பணிப்பாளர் சபை கூட்டங்கள் நடத்தப்பட்டன.

சிரேஷ்ட முகாமைத்துவம

08 **பொது முகாமையாளர்**

பொறியியலாளர் ஆர்.எச். ருவினிஸ்
(2019.09.05 தொடக்கம் 2020.09.06 வரை)
B.Sc. Eng. (Hon.) M.Sc. in Sanitary Engineering
MBA, C.Eng., FIE (SL), MIE (Aus), CP Eng.

பொறியியலாளர் ரீ.எஸ். விஜேதுங்க
(2020.10.15 தொடக்கம் இன்று வரை)
B.Sc.Eng., MBA, M.Sc. (Planing), MA (Financial Economics), MIM (SL), Pg.Dip. (Finance) – (ICA(SL), Dip. (Mgt.) – DK C.Eng., FIE (SL),

09 **மேலதிக பொது முகாமையாளர்கள் (2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு)**

பொறியியலாளர் கே.டீ.பீ.எப். சிறிவர்தன (வட மத்திய)
M. Sc. (Env.Eng.) Denmark, PG Dip. (const. Mgt.) Moratuwa, C.Eng., FIE (SL),

பொறியியலாளர் என்.எச்.ஆர். குலநாத (சுகாதார மேம்பாடு)
B.Sc. Eng., P.G. Dip.(Condt. Mgt.), PG Dip. (Enviromental Engineering), C.Eng. FIE(SL),

பொறியியலாளர் ரீ.டபில்யூ.எஸ். பெரோ (நீர் வழங்கல் திட்டங்கள்)
B.Sc. Eng. (Hons), M.Sc. (Development Science), C.Eng., MIE (SL)

பொறியியலாளர் சீ.சீ.எச.எஸ். பர்னாந்து (மேற்கு)
B.Sc. Eng., MPM, PG Dip.(OSLO University), C.Eng., FIE (SL), MIM (SL)

பொறியியலாளர் எஸ்.ஜீ.ஜீ. ராஜ்குமார் (கூட்டிணைந்த திட்டமிடல்)
B.Sc. Eng. (Hons), M.Sc.(Denmark), MBA (PIM-US), M.Eng (Moratuwa), C. Eng., FIE(SL)

பொறியியலாளர் ஆர்.ஏ.ஏ. ரணவக்க (தெற்கு/கிழக்கு)
B.Sc.(Eng).Hons, PG Dip. (Env. Eng & Man), C.Eng., FIE (SL)

பொறியியலாளர் டாக்டர் (திருமதி) ஐ.எம்.டபில்யூ.கே.
இலங்கசிங்க (கொள்கை மற்றும் திட்டமிடல்)
B.Sc. (Eng.), M. Eng.(Japan), Phd C.Eng., MIE(SL).

திரு. ஜீ.கே. இத்தமல்கொட
(மனித வள முகாமைத்துவம்)
B.Sc. (B. Admin). Dip. in Per. Mgt. MA (Mgt. & Admin) London

திரு. ஆர்.ஏ.எம்.எஸ். வீரசேன (நிதி)
B.Com (Sp.), PGDBM (Col.), ACA

10 **பிரிவுகளின் பிரதி பொது முகாமையாளர்கள்**
(2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு)
திருமதி என்.வை.எஸ். அபேகுணவர்தன
(கைத்தொழில் உறவுகள்)
BA, P.G. Dip. in Management (PIM), Member (IMSL)

திரு. டபி.ஏ.எஸ். சுமனசூரிய (மனித வளம்)
BB.Mgt. – HR (Special), MBS, PgdLS, NDIPM, MCIPM, MISL
திரு. ஆர்.எம்.ஏ. பண்டார (விநியோகம் மற்றும் பொருட்கள் முகாமைத்துவம்)
B.Sc. (Business Administration – Spl) Dip. in Purchasing and Materials Mgt.
திருமதி எம். எம்.எஸ். பீரிஸ் (நிதி)
B.Sc. (Accountancy & Finance Mgt.), ACA (SL)
திரு. ஏ.ஜீ.எஸ். குமார (விலையிடல்) – பதில்
B.Com. (Sp.), M. Sc. (Management), FCA
பொறியியலாளர் எஸ்.ஜீ.டபில்யூ. ராஜ்குமார் (வர்த்தகம்)
B.Sc. Eng. (Hons), M. Sc. (Denmark), MBA (PIM-US), M. Eng. (Moratuwa), C. Eng. FIE (SL)
பொறியியலாளர் ஐ.வீ.டபில்யூ. எதிரிவீர (கூட்டிணைந்த திட்டமிடல்)
B.Sc. Eng. M.Sc.(Water Resources Management), M.Sc. (Development Studies), C.Eng., FIE(SL), MIWA(UK)
பொறியியலாளர் (திருமதி) எம்.ஏ.சீ.ஹேமசந்திர (கிராமிய நீர் வழங்கல் மற்றும் சுகாதாரம்)
B. Sc. Eng., PG. Dip.(env. & Mgt), PG. Dip (Stra. Eng) MIE (SL)
பொறியியலாளர் (திருமதி டி.எம்.எல்.சி பிட்டவல (அபிவிருத்தி)
B.Sc.Eng. (Hons), MSc. Env. Eng. (DK), C.Eng., MIE (SL)
பொறியியலாளர் ஜாலிய லலித் சீக்குகே (ஆ.அ.வ திட்டங்கள்)
B.Sc.Eng. (Hons), MBA (PIM-SRJ), PG Dip (Const. Mgt.),
PG Dip. in Drinking Water Mgt.(Germany) C.Eng., MIE (SL)
பொறியியலாளர் ரீ.எம்.டபில்யூ. சுனில் பண்டார (இயந்திரவியல் மற்றும் மின்னியல்)
PG Dip. (B. Admin.), PG Dip. (Disaster Mgt.) C.Eng., MIE (SL)
பொறியியலாளர் ஏ. முனசிங்க (திட்டமிடல் மற்றும் வடிவமைப்பு)
B.Sc. Eng. (Hons), M. Eng., H&WR (Netherlands)
பொறியியலாளர் ஜே. சந்திரதாச (தகவல் தொழில்நுட்பம்) - பதிள் கடமை
B.Sc. Eng., PG Dip. (eGov), M.Sc. (GIS/RS), MPA (eGov),
C.Eng. MIE (SL), MBSC, MIEEE
பொறியியலாளர் தனேஷ் குதிலக (சுகாதார மேம்பாடு)
B.Sc. Eng.(Hons), PG.Dip. Env. Eng & Mgt (Moratuwa), M.Sc. Sanitory Eng. (UNESCO-IHE, Delf), C.Eng. Intl.P Eng., FIE (SL) MCIWEM (UK)
திருமதி ஏ. சிறியாலதா (உள்ளக கணக்காய்வு) - பதிற் கடமை
B.Sc. (Busi. Admin.) University of SJP, MBA - University of Colombo
PG Dip. (Busi. & Fin. Mgr.) CUSM (UK), Ex.Dip (Acc. & Fin.) CA (SL),
Int. CA (SL), Member of IMSL

11. மாகாணங்களுக்கான பிரதி பொது முகாமையாளர்கள் (2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு)

பொறியியலாளர் கே.பி.ஆர்.எஸ். சமரசிங்க (மேல் மத்திய)
M.Sc.(WSP Eng.) Netherland, M.Sc. (Eng.), Moratuwa, C. Eng., FLE(SL), AM(OACETT) Canada


பொறியியலாளர் எம்.ரீ.எம். ராசி (மேல் தெற்கு)
B.Sc. Eng. (Hon), PG Dip (Structural Engineering Design), PG Dip (Cons. Mgt.), PG Dip (Project Mgt.), C.Eng. MIE (SL)
பொறியியலாளர் என்.யூ.கே. ரணதுங்க (மேல் வடக்கு)
B.Sc. Eng., PG.Dip. Env. Eng, Master in Dev. Studies, FIESL
பொறியியலாளர் டபில்யூ.என். பிரேமசிறி (உற்பத்தி)
B.Sc. (Eng.), PGD (Water Resources Engineering & Management)
C.Eng. MIE (SL)
பொறியியலாளர் டபில்யூ.ஜீ.சீ.எல். வீரசேகர (வட மேற்கு)
B. Sc. Eng., MBA, PG Dip. (Const. Mgt), M. Sc. (Structural Engineering Design), C. Eng. Intl. PEng.,FIE (SL)
பொறியியலாளர் ஜீ.வீ. விஜேரத்ன (வட மத்திய)
B.Sc.(Eng), PGD (Management), M.Sc(Water Resources Engineering & Management), C.Eng, MIE (SL)
ɒபாறியியலாளர் எம்.கே.டீ.ஜே.எச். மீகொட (மத்திய)
B.Sc. Eng., M.Sc. (Water Management), C.Eng. FIE (SL)
பொறியியலாளர் ரீ. பாரதிதாசன் (வடக்கு)
B.Eng. (India), M. Eng. (Moratuwa), M.Sc. Eng. (UNESCO-IHE)
PGD (Rajarata), C.Eng., MIE (SL)
பொறியியலாளர் ஆர்.எஸ். லியனகே (ஊவா)
B.Sc. Eng., PGD (Management), M.Sc. (Water & Environment Resources Mgt.), MBA, M.Sc. (Water Resources Management) Holland,
C.Eng. FIE (SL), MIM
பொறியியலாளர் ஏ.கே. கபுருகே (சப்பிரகமுவ)
B. Sc. Eng., M. Sc. Eng., C. Eng. (IESL)
பொறியியலாளர் (திருமதி) எம்.கே.ஏ.ஜே.எம். விஜேசிங்க (தென்)
B.Sc. Eng., M.Sc. (Sanitary Engineering) Delft, C.Eng. MIE (SL)
பொறியியலாளர் என். சுதேசன் (கிழக்கு)
B.Sc. Eng., M.Sc. (Const. Mgt.), M.Sc. (Structural Engineering Designs), C.Eng. Intl. PEng., FIE (SL)

12. **கருத்திட்டப் பணிப்பாளர்களாக செயலாற்றுகின்ற பிரதிப் பொது முகாமையாளர்கள் (2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு)**

பொறியியலாளர் எஸ்.ஏ. ரஷீட்
(கொழும்பு நீர் வழங்கல் சேவை மேம்பாட்டு திட்டம்)
B.Sc. Eng., M.Sc.(Sanitary Eng.) Netherlands, PG.Dip. (Structural Engineering Design), Sri Lanka, C.Eng., MIE(SL))
பொறியியலாளர் ரீ.ஆர்.ஜே. பர்னாந்து (களுகங்கை நீர் வழங்கல் திட்டம்)
B.Sc.Eng, C. Eng. (IESL), Member CCP enf. MIE - Australia, Member (M.ASCE) PG. Dip - (IR) - IRBCIS, PG. Dip (Con. Mgr) - OUSL
பொறியியலாளர் என்.ஏ.எஸ். சாந்த (களனி வலது கரை நீர் வழங்கல் திட்டம்)
B.Sc.Eng, PG. Dip. (Stru. Desinge), C. Eng. (IESL)
பொறியியலாளர் என்.எச்.டீ.பி. தர்மபால (கம்பஹா அத்தனகல்ல நீர் வழங்கல் திட்டம்)
B.Sc. (Eng.), M. Sc. (Const. Project Mgt.), PG Dip. (Enviro. Eng. & Mgt.), C.Eng., FIE (SL)

தற்போதுள்ள நீர் வழங்கல் திட்டங்கள்

மாகாணம்/ பி.உ.நி.	நீ.வ.தி.எண்ணிக்கை
மத்திய	35
கிழக்கு	56
வட மத்திய	32
வட மேல்	15
வடக்கு	32
சப்ரகமுவ	23
தென்	51
ஊவா	35
மேல் - மத்தி	19
மேல் - வடக்கு	20
மேல் - தெற்கு	13
மொத்தம்	331


கிளிநொச்சி
முல்லைத்தீவு
மன்னார்
வவுனியா
முருங்கன்
பதவியா
மதவாச்சி
தந்திரிமலை
ஒயமடு
அனுராதபுரம்
மிஹிந்தலை
நாச்சியாதுவ
தலவ்வ
எப்பவல
தம்புத்தேகம
கல்நேவ
கலகமுவ
அம்பன்பொல
ஆணமடு
நிக்கவரெட்டிய
வன்னிமம
நாவுல
புஸ்ஸல்ல
மாத்தளை
உடகம
குருணாகல
மாவத்தகம
நாத்தாண்டிய
தம்தெனிய
அல்வ
தங்கொட்டுவ
மீரிகம
நீர்கொழும்பு
மினுவாங்கொட
கம்பஹ
ஜா-எல
கிரிந்திவெல
கொழும்பு நகரம்
கோட்டே
ஹோமாகம
பிலியந்தலை
தெஹிவல
மொரட்டுவ
பாணந்துறை
களுத்துறை
பயாகல
பேருவல
அலுத்கம
பிட்டிகல
எல்பிட்டிய
பலபிட்டிய
அம்பலாங்கொட
பத்தேகம
ஹிக்கடுவ
காலி
மாத்தறை
தெனியாய
ஊருபொக்க
பிட்டபெந்தர
அங்குனகொலபெலஸ்ஸ
ஹக்மன
மகந்துர
ஹபுகல
போப்பே-போதல
அக்மீமன
ஹபரதுவ
வெலிகம
அஹங்கம
மாத்தறை
தெவிநுவர
கந்தர
கொட்டகொட
திஹாகொட
குடாவெல்ல
தீக்வெல்ல
கராங்கொட
- உயங்கொட
பெலியத்த
தனுல்ல
தங்காலை
ரன்ன
ஹுங்கம
உனகுருவ
சிரிபுரா
அம்பாந்தோட்டை
பந்தல
கிரிந்த
தெபரவெவ
கிரிந்திய
ரிதியகம
சூரியவெவ
எம்பிலிபிட்டிய
கட்டுவன
முருத்தவெல
வலஸ்முல்ல
தனமல்வில
சேவனகல
உடவலவ
கதிர்காமம்
திஸ்ஸமஹாராம
தெனியாய
கொடக்கவெல
நிவித்திகல
கொஹுவத்த
பெல்மடுல்ல
பலாங்கொடை
இரத்தினபுரி
கிரிஎல்ல
ஹெரன
மொரன்துடுவ
வாதுவை
பொம்புவல
பில்லமினவத்த
பயாகல
மத்துகம
ஹபுகொடகந்த
மஹரகம
பாதுக்க
ஹோமாகம
மஹேகோட
பன்னிபிட்டிய
தலாவ
கிரிஎல்ல
இங்கிரிய
மஹகம
மல்வானை
ஹுனுபிட்டிய
கொலன்னாவை
பத்தரமுல்லை
பியகம
ஹோமாகம
கோட்டே
மஹரகம
பிலியந்தலை
தெஹிவல
மொரட்டுவ
பாணந்துறை
களனி
கொழும்பு நகரம்
மாபிம-ஹெய்யந்துடுவ
கட்டுநாயக்க
உடகம்பொல
ரத்தொலுவ
ஜா-எல
யக்கல
கம்பஹ
நீர்கொழும்பு
மீரிகம
தங்கொட்டுவ
வெல்லம்பிட்டிய
நாத்தாண்டிய
மினுவாங்கொட
ராகமை
கடுவெல
பியகம
மல்வானை
பத்தரமுல்லை
கோட்டே
தெஹிவல
மொரட்டுவ
பாணந்துறை
களுத்துறை
பயாகல
பேருவல
அலுத்கம
பிட்டிகல
எல்பிட்டிய
பலபிட்டிய
அம்பலாங்கொட
பத்தேகம
ஹிக்கடுவ
காலி
மாத்தறை
தெவிநுவர
கந்தர
கொட்டகொட
திஹாகொட
குடாவெல்ல
தீக்வெல்ல
ஹபுகல
போப்பே-போதல
அக்மீமன
ஹபரதுவ
வெலிகம
அஹங்கம
கராங்கொட
- உயங்கொட
பெலியத்த
தனுல்ல
தங்காலை
ரன்ன
ஹுங்கம
உனகுருவ
சிரிபுரா
அம்பாந்தோட்டை
பந்தல
கிரிந்த
தெபரவெவ
கிரிந்திய
ரிதியகம
சூரியவெவ
எம்பிலிபிட்டிய
கட்டுவன
முருத்தவெல
வலஸ்முல்ல
தனமல்வில
சேவனகல
உடவலவ
கதிர்காமம்
திஸ்ஸமஹாராம
கொடக்கவெல
நிவித்திகல
கொஹுவத்த
பெல்மடுல்ல
பலாங்கொடை
இரத்தினபுரி
கிரிஎல்ல
இங்கிரிய
மஹகம
மல்வானை
ஹுனுபிட்டிய
கொலன்னாவை
பத்தரமுல்லை
பியகம
ஹோமாகம
கோட்டே
மஹரகம
பிலியந்தலை

"நீர் வழங்கல் மற்றும் சுகாதார மேம்பாட்டு இலக்கை முன்னிட்டான செயற்பாடுகள் நாடளாவிய ரீதியில் மேற்கொள்ளப்பட்டன."

2016 - 2020 கூட்டிணைந்த திட்டத்தின் அமுலாக்கல் பற்றிய நிலைமை

2016 - 2020 கூட்டிணைந்த திட்டத்தின் இறுதி ஆண்டான 2020 இற்கு மீளாய்வுக்குட்படுத்தப்பட்டுள்ளது. ஆண்டினுள் கூட்டிணைந்த திட்டத்தில் வரையறுக்கப்பட்டுள்ள இலக்குகள் மற்றும் குறிக்கோள்களை நிறைவேற்றிக்கொள்வதை முன்னிட்டான செயற்பாடுகளை தே.நீ.வ.வ.ச. தொடர்ந்தும் மேற்கொண்டு வந்தது.

நீர் வழங்கல் மற்றும் கழிவு நீர் சுத்திகரிப்பு சேவையின் உள்ளடக்கம் பற்றிய இலக்கை முன்னிட்டான செயற்பாடுகள் நாடு முழுவதிலும் நீர் வழங்ல் மற்றும் சுகாதார மேம்பாட்டு பிரிவினாலும் அனைத்து பிராந்திய சேவை நிலையங்களினாலும் (RSCs) மேற்கொள்ளப்பட்டன. நாடு முழுவதிலும் சனத்தொகையில் ஏறத்தாழ 93.2% வீதத்தினர் பாதுகாப்பான குடிநீருக்கான அணுகுதலைப் பெற்றுள்ள அதேவேளை இதில் 53.1% வீதத்தினர் குழாய் நீர் வழங்கல் முறைமையின் ஊடாக குடிநீரைப் பெறுகின்றனர். சனத்தொகையில் 2.05% வீதத்தினர் குழாய் வழி கழிவு நீர்ச் சேகரிப்பு வசதிகளைப் பெற்றுள்ளனர். வியாபார வினைத்திறனை மேம்படுத்தும் இலக்கை அடைவதில், வருவாயற்ற நீர் மற்றும் வலுசக்திச் செலவைக் குறைத்தல் தொடர்பில் 2020 ஆம் ஆண்டினுள் விசேட கவனம் செலுத்தப்பட்டமை குறிப்பிடத்தக்க விடயமாகும் என்பதோடு பாவனையாளர் சேவைகளின் மேம்பாடுகள் தொடர்பிலும் முன்னுரிமையளிக்கப்பட்டது. தகவல் தொழில்நுட்ப மேம்பாடுகள், ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திச் செயற்பாடுகள், நிறுவன ரீதியான அபிவிருத்தி மற்றும் பணியாளர்களுக்குப் பயிற்சியளித்தல் ஆகியன தொடர்பிலான முன்னெடுப்புகளும் இவ்விலக்குகளை முன்னிட்டு பங்களிப்புச் செய்தன. ''உயர்ந்தளவில் வகைப்பொறுப்புக்கூறல் மற்றும் பகிரங்கத்தன்மையை உறுதிசெய்தல்'' என்ற இலக்கை அடையப்பெறுவதை முன்னிட்டு உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு மற்றும் அரசாங்க கணக்காய்வுப் பிரிவு ஆகிய இரண்டும் வகைப்பொறுப்புக்கூறல் மற்றும் பகிரங்கத்தன்மை தொடர்பில் செயற்பாடுகளை மேற்கொண்டன. தே.நீ.வ.வ.ச.யின் பாவனையாளர்களுக்கு மட்டுமன்றி முழு சனத்தொகையினதும் குடிநீர் மற்றும் சுகாதார தரத்தை மேம்படுத்துகின்றதான சமூகப்பொறுப்பு தொடர்பிலான நோக்கத்தை முன்னிட்டு பாதுகாப்பான நீர் வழங்கல் வசதிகளைக் கொண்டிராத நாட்பட்ட சிறுநீரக நோயினால் (CKDu) பாதிக்கப்பட்ட, மற்றும் கிராமிய சமுதாயத்தினர் தொடர்பில் கிடைக்கத்தக்கதான வளங்களின் ஊடாக முன்னுரிமையளிக்கப்பட்டது. பிராந்திய சேவை நிலையங்களின் ஊடாக சமூக மைய அமைப்புக்களால் முகாமை செய்யப்படுகின்ற திட்டங்களுக்கு தொழில்நுட்ப உதவிகள் வழங்கப்பட்டன.

2020 ஆம் ஆண்டில் இலங்கையில் நீர் பாதுகாப்புத் திட்டத்தின் (WSP) நடைமுறைப்படுத்தல் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டது. சமுதாயத்தினால் நுகரப்படுகின்ற அனைத்து நீரும் பாதுகாப்பானதாயிருத்தல் வேண்டும் என்பதை உறுதிப்படுத்துவதற்கு தே.நீ.வ.வ.ச. முழு முற்சியெடுக்கிறது. இச் சூழமைவின் கீழ் நீர் பாதுகாப்புத் திட்டங்கள் அமுல்படுத்தப்பட்டு வரப்பட்டன. 2020 இறுதியாகின்றபோது, கண்டியில் தாபிக்கப்பட்ட நீர் பாதுகாப்புத் திட்ட மதியுரை அலகின் உதவியோடு பிராந்திய சேவை நிலையங்களின் (RSCs) பிரதிப் பொது முகாமையாளர்களால் (DGMs) நாடளாவிய ரீதியில் 281 நகர நீர் பாதுகாப்புத் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டன. மேலும், தென் கிழக்கு மற்றும் தென் ஆசிய பிராந்தியத்தில் முதற் தடவையாக இலங்கை பொறியியலாளர்கள் நிறுவனம் (IESL) மற்றும் உலக சுகாதார அமைப்பின் (WHO) உள்நாட்டு அலுவலகத்துடன் இணைந்து தே.நீ.வ.வ.ச.யினால் வெளிவாரியான 14 முறைசார் கணக்காய்வுகள் மேற்கொள்ளப்பட்டன.

நோக்கங்கள், குறிக்கோள்கள் மற்றும் நிர்ணயிக்கப்பட்ட இலக்குகளை வெற்றிகரமாக நிறைவேற்றிக்கொள்ளல் தொடர்பில் காலக்கிரமப்படி மீளாய்வினை மேற்கொள்ளல் முக்கியமானதெனத் தீர்மானிக்கப்பட்டது. இதற்கிணங்க, கூட்டிணைந்த செயற்பாட்டுத் திட்டம் தொடர்பிலான 2019 ஆம் ஆண்டின் 4வது காலாண்டினதும், 2020 ஆம் ஆண்டின் 1வது, 2வது மற்றும் 3வது காலாண்டுகளினதும் முன்னேற்ற அறிக்கைகள் 2020 ஆம் ஆண்டில் நடைபெற்ற சபைக் கூட்டங்களில் சபை அங்கத்தவர்களால் மீளாய்வு செய்யப்பட்டன.

2020 - 2025 ஆம் ஆண்டுக்கான இலக்குகள் மற்றும் அடைவுகள் உள்ளடங்கிய மேலதிக விபரங்கள் இவ்வறிக்கையின் 11 ஆம் பக்கத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

கூட்டிணைந்த திட்டம் 2020 - 2025

''சுபீட்சத்தின் நோக்கில்'' பரிந்துரைக்கப்பட்ட, 2025 ஆம் ஆண்டளவில் முழு நாட்டினதும் மொத்த சனத்தொகைக்கும் (100%) தூய்மையானதும் பாதுகாபபானதுமாகன குடிநீர் மற்றும் குழாய்வழி நீருக்கான வாய்ப்பை வழங்குகின்ற குடிநீருக்கான அரசாங்கத்தின் தொலைநோக்கு தொடர்பில் தே.நீ.வ.வ.ச. கூட்டிணைந்த திட்டம் 2020 – 2025 ஐ தயார் செய்து 2020 நவெம்பர் 18 ஆம் திகதி அங்குரார்ப்பணம் செய்தது.

குறித்துரைக்கப்பட்ட இலக்குகள் தொடர்பிலான முன்னேற்றம்

இலக்கு	முதன்மைக் குறிக்கோள்கள்		2020 இறுதியில் இலக்கு	2020 இறுதியில் அடைவு
1. நீர் வழங்கல் மற்றும் கழிவு நீர் சேகரிப்புச் சேவை உள்ளடக்கத்தை விஸ்தரித்தல்	1.1	மொத்த குழாய் நீர் வழங்கல் உள்ளடக்கம்	55.00%*	53.10%
	1.2	குழாய் வழி கழிவு நீர் சேகரிப்பு உள்ளடக்கம்	2.27%*	2.07%
	1.3	பாதுகாப்பான குடிநீர் வழங்கலைப் பெறுவதற்கான வாய்ப்பின் உள்ளடக்கம்	91.7%	93.2%
2. தொழில்துறை வினைத்திறனை மேம்படுத்தல்	2.1	வருவாயற்ற நீர் (நாடளாவிய)	25.30%	24.63%
	2.2	1000 இணைப்புகளுக்கு மொத்த பணியாளர்கள்	4.70%	3.66%
	2.3	மொத்த மீண்டுவரும் செலவில் வலுசக்திச் செலவு	15.55%	14.57%
	2.4	மொத்த மீண்டுவரும் செலவில் பராமரிப்புச் செலவு		
	2.5	மொத்த மீண்டுவரும் செலவில் தாபனச் செலவு	6.87%	6.42%
	2.6	மொத்தக் கட்டணப் பட்டியல்களில் மதிப்பிடப்பட்ட கட்டணப் பட்டியல்கள்	12.22%	11.39%
	2.7	சேகரிப்பு வினைத்திறன்		
	2.8	பெறத்தக்க கணக்குகள் -	1.0%	7.1%
		(அ) வீட்டுப் பாவனை மற்றும் வர்த்தக நிறுவனங்கள்	100%	93%
		(ஆ) அரச நிறுவனங்கள்		
	2.9	மனித வள அபிவிருத்தி மேம்பாடு	30 நாட்கள்	48 நாட்கள்**
		(அ) உள்ளக பயிற்சி (பங்குபற்றுனர் எண்ணிக்கை)	40 நாட்கள்	37 நாட்கள்**
		(ஆ) உள்நாட்டு வெளிவாரிப் பயிற்சி (பங்குபற்றுனர் எண்ணிக்கை)	9,300	2,552
		(இ) வெளிநாட்டுப் பயிற்சி (பங்குபற்றுனர் எண்ணிக்கை)	180 120	235 10
	2.10	வாடிக்கையாளர்களுக்கான சேவை மேம்பாடு மற்றும் பொதுமக்கள் முறைப்பாடுகள் தொடர்பில் தகுந்த நடவடிக்கை எடுத்தல். நாடளாவிய ரீதியில் பொது மக்கள் விழிப்புணர்வூட்டல் நிகழ்ச்சித் திட்டங்களை நடத்துதல் (பாடசாலை/ஏனையவை)	100	37**
	2.11	சக்தி சேமிப்புக் திட்டங்களிலிருந்தான வருடாந்த சேமிப்பு	73.36m	29.7m
	2.12	வினைத்திறன்மிக்க வியாபாரத்திற்கான புதிய அறிவைப் பெறும் நோக்கத்துக்காக செயலாற்றப்படும் முறைசார்ந்த, பரிசோதனை ரிதியிலான மற்றும் பரீட்சார்த்த ரீதியிலான நடவடிக்கைகள் மற்றும் தொழிற்பாட்டு மற்றும் பாராமரிப்பு செயற்பாடுகளை தே.நீ.வ.வ.சபையின் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திப் பிரிவு தொடர்ந்து மேற்கொண்டு வருகின்றது.		
	2.13	விரிவான ICT அபிவிருத்திச் செயற்பாடுகளின் நடைமுறைப்படுத்தலின் மூலம் தனது வியாபாரத்தை மேம்படுத்துவதற்கான அரங்கமாக வலையமைப்புத் தளத்தை பயன்படுத்தி வாடிக்கையாளர் மற்றும் கூட்டிணைந்த உறவை மேம்படுத்துதல் தொடர்பில் மூலதனமிடலுக்கு தே.நீ.வ.வ.ச. தயாராக உள்ளது.		

3. உயர் பொறுப்புடைமை மற்றும் பகிரங்கத்தன்மையை உறுதி செய்தல	மனித வள அபிவிருத்தி, முகாமைத்துவ தகவல் முறைமை மற்றும் வியாபாரத் திட்டம் தொடர்பில் முகாமைத்துவம் மற்றும் வியாபாரக் கருவிகளை அபிவிருத்தி செய்வதற்கான முன்னெடுப்புகள் மேற்கொள்ளப்பட்டன.		
	▪ நிதி ரீதியான அதிகார பகிர்ந்தளிப்பு		
	▪ வரவு-செலவுத் திட்டக் கட்டுப்பாடு மற்றும் நிதி ஒழுங்குவிதிகள் தொடர்பான பயிற்சி		
	▪ சொத்துக்களின் மதிப்பிடல்		
	▪ மேம்பட்ட தகவல் முகாமைத்துவம் மற்றும் ஒருங்கிணைப்பு		
	▪ வர்த்தக தொழிற்பாடுகள் மீதான கணக்காய்வு		
	▪ களஞ்சியசாலை மற்றும் வழங்கல்கள் மீதான கணக்காய்வு	20 12	15 15
	▪ காசு/காசோலைக் கொடுப்பனவுகள் மீதான கணக்காய்வு	25	17
	▪ நிர்மாணிப்பு ஒப்பந்தங்கள் மீதான கணக்காய்வு		
	▪ மொத்தம் 14 துறைகளில் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது	5 160	2
4. கிராமிய மற்றும் குறைந்த வசதிகளைக் கொண்ட மக்களுக்கு பாதுகாப்பான குடிநீர் வழங்கல் மற்றும் சுகாதார மேம்பாட்டு வசதிகளை வழங்குதல்	4.1 தே.நீ.வ.வ.ச. தொழில்நுட்ப உதவியுடன் சமூக மைய அமைப்புகள், உள்ளூராட்சி சபைகள் மற்றும் ஏனையோர்களால் பேணிவரப்படும் கிராமிய நீர் வழங்கல் திட்டங்கள் %	10.0%	98 9.9%


* பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்துடன் இலக்குகள் திருத்தியமைக்கப்பட்டன.

** நாட்டின் தொற்றுநோய் பரவல் நிலைமையின் காரணமாக குறைந்த முன்னேற்றம் காணப்படுகின்றது.


நீர் வழங்கல் மற்றும் சுகாதார மேம்பாடு சார்ந்த பிரதானமான செயலாற்றுகை

> "ஆண்டினுள் தே.நீ.வ.வ.ச.யின் மூலம் வழங்கப்பட்ட புதிய நீர் வழங்கல் இணைப்புகளைத் தொடர்ந்து நாடளாவிய ரீதியில் மொத்தமாக சனத்தொகையில் 53.1% குழாய்வழி குடிநீர் வழங்கல் சேவையை பெறுகின்றனர்."

பாதுகாப்பான குடிநீரைப் பெறுவதற்குள்ள இயலுமை தொடர்பான உள்ளடக்கம்



கழிவு நீர் சேகரிப்பு



தே.நீ.வ.வ.ச.யின் செயலெல்லையின் கீழ் 331 பாரிய, நடுத்தர மற்றும் சிறிய நீர் வழங்கல் திட்டங்கள் இயங்குகின்றன.

ஆண்டினுள் 122,733 புதிய சேவை இணைப்புகள் வழங்கப்பட்டதன் மூலம், சனத்தொகையில் 43.2% வீதமானவர்கள் தே.நீ.வ.வ.ச.யினால் மாத்திரம் வழங்கப்படுகின்ற குழாய் மூலமான குடிநீர் வழங்கலைப் பெறுகின்ற நிலைக்குக் கொண்டுவரப்பட்டது. ஆண்டினுள் தே.நீ.வ.வ.ச.யின் மூலம் புதிய நீர் வழங்கல் இணைப்புகள் வழங்கப்பட்டதைத் தொடர்ந்து நாடளாவிய ரீதியில் மொத்தமாக சனத்தொகையில் 53.1% ஆனவர்கள் குழாய் மூலமான குடிநீர் வழங்கலைப் பெறுகின்றனர்.

ஆண்டினுள் திறைசேரியினால் கடன் பெறப்பட்ட, வெளிநாட்டு நிதியளிப்பிலான 16 பாரிய அளவிலான நீர் வழங்கல் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்ட அதேவேளை, வெளிநாட்டு/ உள்நாட்டு வங்கிகளிலிருந்து தே.நீ.வ.வ.ச.யினால் நேரடியாகக் கடன் பெறப்பட்ட ஏனைய 8 பாரிய அளவிலான வெளிநாட்டு நிதியளிப்பூடாக திட்டங்களும் நடைமுறைப்படுத்தப்பட்டன. இதற்கு மேலதிகமாக, நாட்டின் குழாய் நீர் வழங்கல் உள்ளடக்கத்தை அதிகரிக்கச் செய்வதற்காக 12 உள்நாட்டு வங்கி நிதியளிப்பிலான நீர் வழங்கல் திட்டங்கள், 03 சிறிய மற்றும் நடுத்தர அளவிலான நீர் வழங்கல் திட்டங்கள், 05 கிராமிய மற்றும் பிரதேச நீர் வழங்கல் அபிவிருத்தி திட்டங்கள் மற்றும் 01 நீர் துறை சார்ந்த சமுதாய வசதியேற்பாட்டு திட்டம் ஆகியன நடைமுறைப்படுத்தப்பட்டன. இவற்றில் நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் 02 பாரிய அளவிலான வெளிநாட்டு நிதியளிப்பூடான திட்டங்களும், 01 உள்நாட்டு வங்கி நிதியளிப்பு நீர் வழங்கல் கருத்திட்டமும் நிறைவு செய்யப்பட்டு, புதிய நீர் வழங்கல் இணைப்புகளை வழங்குவதற்கு அல்லது இருக்கின்ற வாடிக்கையாளர்களின் சேவை மட்டங்களை மேம்படுத்துவதற்கு இயலுமாயிருந்தது.

மேலும், குழாய்வழி கழிவு நீர் சேகரிப்பு மற்றும் சுத்திகரிப்பு உள்ளடக்கத்தை அதிகரிக்கச் செய்வதற்காகவும், சுகாதார மேம்பாட்டு வசதிகளை மேம்படுத்துவதற்காகவும் ஆண்டினுள் 03 வெளிநாட்டு நிதியளிப்பு சுகாதார மேம்பாட்டு திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டன.

நீர் பாதுகாப்பை உறுதி செய்வதற்காக மத்திய ஆய்வுகூடம் தே.நீ.வ.வ.ச.யின் பிராந்திய ஆய்வுகூடங்களுடன் கூட்டிணைந்து செயற்பாட்டுக் கண்காணிப்பு மற்றும் உறுதிப்படுத்தல் கண்காணிப்பையும் மேற்கொண்டது. 2020 ஆம் ஆண்டில் மொத்த பரிசோதனை மாதிரிகளின் பகுப்பாய்வுத் தரவுகள், நுண்உயிரியல் பரிசோதனைகளில் 99.2% திருப்திகரத்தன்மையையும் பௌதீக மற்றும் இரசாயன பரிசோதனைகளில் 77.3% திருப்திகரத்தன்மையையும் வெளிப்படுத்தின.

ஆண்டினுள் குறிப்பிடத்தக்க வருவாயற்ற நீர் குறைப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. கொழும்பு நகரத்தினுள் முக்கியமான பிரதேசங்கள் தெரிவு செய்யப்பட்டு, மூடப்பட்ட எல்லைகள் தாபிக்கப்பட்டதன் பின்னர், பிரதேச உட்பாய்ச்சல் அளவீடுகள் மேற்கொள்ளப்பட்டன. கட்புலனாகின்ற நீர்க் கசிவுகளை இனங்காண்பதற்காக இரவு நேர ஆய்வு, பாதாள நீர்க் குழாய்களின் ஆய்வு மற்றும் வீட்டுக்கு வீடு ஆய்வுகள் என்பன மேற்கொள்ளப்பட்டன. இதற்கிணங்க ஆண்டின் இறுதியில் மேல் மாகாணத்திலும் நாடளாவிய ரீதியிலும் வருவாயற்ற நீர் முறையே 25.86% மற்றும் 24.63% ஆக காணப்பட்டது.

2012 ஆம் ஆண்டிலிருந்து தொழிற்பாட்டுச் செலவினங்கள் அதிகரித்ததற்கு ஏற்புடையவாறு நீர்க் கட்டணத் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. எனவே அண்மிய ஆண்டுகளினுள் பணப்புழக்கத்தை முகாமைத்துவம் செய்வதில் சபை சவாலான நிலைமைகளை எதிர்நோக்கியது. சபையின் ஐந்தொகையை வலுப்படுத்துவதற்காக மொத்த வெளிநின்ற கடன்களை பங்குகளாக மாற்றுவதற்கான கொள்கைத் தீர்மானமொன்று 2014 ஆம் ஆண்டில் பொதுத் திறைசேரியினால் மேற்கொள்ளப்பட்ட போதிலும், புதிய கடன்களின் கடன் கடப்பாடுகளின் காரணமாக அது வெற்றியளிக்கவில்லை.

2020 ஆம் ஆண்டில் தே.நீ.வ.வ.ச. ரூபா 528,995,250 தொகை இலாபத்தை பதிவு செய்தது. எவ்வாறாயினும், 2018 மற்றும் 2019 ஆகிய முந்திய இரண்டு ஆண்டுகளிலும் முறையே ரூபா 568,695,429 மற்றும் 1,176,834,646 நட்டத்தைப் பதிவு செய்தது.

முக்கியமான புள்ளிவிபரங்கள்: நீர் வழங்கல்

		2019	2020	வேறுபாடு(%)
முக்கியமான புள்ளிவிபரங்கள்: நீர் வழங்கல்				
நீர் வழங்கல் திட்டங்களின் எண்ணிக்கை		348	**331**	-
குழாய் நீர் உற்பத்தி (மில்லியன் க.மீ.)		746	**782**	4.83
குழாய் நீர் நுகர்வு (மில்லியன் க.மீ.)		560	**589**	5.18
வீட்டு நீர் வழங்கல் இணைப்புகள் (எண்ணிக்கை)				
	(அ) மேல் மாகாணம்	967,594	**1,005,424**	3.91
	(ஆ) ஏனைய மாகாணங்கள்	1,273,049	**1,349,127**	5.98
மொத்த வீட்டு நீர் வழங்கல் இணைப்புகள்		2,240,643	**2,354,551**	5.08
பொது நீர்க் குழாய்கள் (எண்ணிக்கை)				
	(அ) மேல் மாகாணம்	480	**471**	1.88
	(ஆ) ஏனைய மாகாணங்கள்	865	**752**	13.06
மொத்த பொது நீர்க் குழாய்கள்		1,345	**1,223**	9.07
வீடல்லாத நீர் இணைப்புகள் (எண்ணிக்கை)				
	(அ) மேல் மாகாணம்	94,895	**97,920**	3.19
	(ஆ) ஏனைய மாகாணங்கள்	101,966	**107,766**	5.69
மொத்த வீடல்லாத நீர் இணைப்புகள்		196,861	**205,686**	4.48
(பொது நீர்க் குழாய்கள் உள்ளடங்கலாக)				
மொத்த நீர் வழங்கல் சேவை இணைப்புகள்		2,437,504	**2,560,237**	5.04
குடும்பமொன்றின் மாதாந்த சராசரி நீர் நுகர்வு				
(வீட்டு இணைப்பு/க.மீற்றர்)	(அ) மேல் மாகாணம்	17.63	**18,52**	-
	(ஆ) ஏனைய மாகாணங்கள்	13.60	**14,26**	-
நீர் உற்பத்திக்கான சராசரி மீண்டுவரும் செலவு (ரூபா/ க.மீ.)		41.20	**38.64**	-
சராசரி மொத்த செலவு/ விற்பனை அலகு (ரூபா/க.மீ.)		51.52	**49.06**	-
சராசரி அலகு வருவாய் (கட்டண பட்டியல்/நுகர்வு) (ரூபா/க.மீ.)		42.86	**42.78**	-
மாதாந்த சராசரி வீட்டு கட்டண பட்டியல் பெறுமதி (ரூபா)				
	(அ) மேல் மாகாணம்	801.57	**862.17**	7.56
	(ஆ) ஏனைய மாகாணங்கள்	491.32	**524.93**	6.84
சேகரிப்பு வினைத்திறன்		1.10	**0.93**	(15.45)
ஆழ் கிணறுகள் (எண்ணிக்கை)	(அ) துளையிடப்பட்டவை	201	**150**	-
	(ஆ) வெற்றியளித்தவை	178	**134**	-
வருவாயற்ற நீர் (%)				
	(அ) மேல் மாகாணம்	26.14	**25.86**	1.07
	(ஆ) ஏனைய மாகாணங்கள்	23.62	**23.31**	1.31
	(இ) நாடளாவிய	24.95	**24.63**	1.28
முக்கியமான புள்ளிவிபரங்கள்: கழிவுநீர் சேகரிப்பு				
வீட்டு இணைப்புகள்				
	மேல் மாகாணம்	16,849	**16,930**	0.48
	ஏனைய மாகாணங்கள்	2,168	**3,110**	43.45
வீடல்லாத இணைப்புகள்				
	மேல் மாகாணம்	1,401	**1,402**	0.07
	ஏனைய மாகாணங்கள்	410	**750**	82.93
வீட்டுத் திட்ட இணைப்புகள் (மொத்த)				
	மேல் மாகாணம்	3,666	**3,666**	-
	ஏனைய மாகாணங்கள்	-	**-**	-
மொத்த சாக்கடை இணைப்புகள்	நாடளாவிய	22,494	**25,858**	14.96
	மேல் மாகாணம்	21,916	**21,998**	0.37
	ஏனைய மாகாணங்கள்	2,578	**3,860**	49.73

குறிப்பு: "*"ம.கூ.வரி இன்றி

+ (Ve) மாற்றங்கள் சாதகமான பெறுபேறுகளை காட்டுகின்றன.

	2019	2020	மாற்றங்கள் (%)
ஏனைய முக்கியமான புள்ளிவிபரங்கள்			
மொத்த வருமானம் (ரூபா மில்லியன் - வெற் வரியின்றி)	**26,080**	**27,762**	6.45
மொத்த மீண்டுவரும் செலவினம் (ரூபா மில்லியன்)	**29,969**	**30,286**	(1.06)
செ.மே..பதவியினர்/1000 இணைப்புகள்	**3.36**	**3.07**	8.63
மொத்த பதவியினர்/1000 இணைப்புகள்	**3.99**	**3.66**	8.27
மொத்த அபிவிருத்திச் செலவினம் (ரூபா மில்லியன்)	**77.44**	**100.86**	30.24

குறிப்பு: "*" – ம.கூ.வரி இன்றி

+ (Ve) மாற்றங்கள் சாதகமான பெறுபேறுகளை காட்டுகின்றன.


"2019 ஆம் ஆண்டின் உற்பத்தியுடன் ஒப்பிடுகின்றபோது, 2020 ஆம் ஆண்டில் தே.நீ.வ.வ.சபையின் மூலம் உற்பத்தி செய்யப்பட்ட மொத்த குடிநீர் உற்பத்தியின் அளவானது 4.83% அதிகரிப்புடன் கூடியதாக 782 மில்லியன் க.மீ. களாக காணப்பட்டது."

நீர் வழங்கல்


குடிநீர் உற்பத்தி

2019 ஆம் ஆண்டின் உற்பத்தியுடன் ஒப்பிடுகின்றபோது, 2020 ஆம் ஆண்டில் தே.நீ.வ.வ.சபையின் மூலம் உற்பத்தி செய்யப்பட்ட மொத்த குடிநீர் உற்பத்தியின் அளவானது 4.83% அதிகரிப்புடன் கூடியதாக 782 மில்லியன் க.மீ. களாக காணப்பட்டது. கடந்த 10 ஆண்டுகளில் குடிநீர் உற்பத்தியின் போக்கு வரைபடத்தில் காட்டப்பட்டுள்ளது. தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையினால் உற்பத்தி செய்யப்படுகின்ற மொத்த நீரில் 51.87% வீதமான பெரும் பகுதி மேல் மாகாணத்தின் நீர் வழங்கல் முறைமைகளான அம்பத்தலே, லபுகம, கலட்டுவாவ, பியகம, பம்புகுழிய மற்றும் களுத்துறையின் கந்தன, கெத்ஹேன ஆகிய நிலையங்கள் மூலம் உற்பத்தி செய்யப்படுகின்றது.

மில்லியன் கன மீற்றர்




2020 காலத்தினுள் மாகாண ரீதியில் நீர் உற்பத்தி



உற்பத்திச் செலவு

2019 ஆம் ஆண்டுடன் ஒப்பீடு செய்கின்ற வகையில் மொத்த உற்பத்திச் செலவு (ரூபா. மில்லியன்) பற்றிய விபரம் கீழே தரப்பட்டுள்ளது.

உற்பத்திச் செலவு



உற்பத்திச் செலவு ரூபா/கன மீற்றர்

2019	2020
51.52	49.06

உற்பத்திச் செலவு = மொத்தச் செலவு/ விற்பனை செய்யப்பட்ட அலகுகள்

சேவை இணைப்புகள் பற்றிய ஒப்பீடு


மாகாணம்/ பி.சே.நி	மாகாண/ பி.சே.நி. ரீதியில் சேவை இணைப்புகளின் எண்ணிக்கை			தே.நீ.வ.வ.ச. பிரதேசம்	தே.நீ.வ.வ.ச பிரதேச ரீதியில் சேவை இணைப்புகளின் எண்ணிக்கை		
	2019 திசெம்பர் இறுதியில்	**2020 திசெம்பர் இறுதியில்**	மாற்றம் %		2019 திசெம்பர் இறுதியில்	**2020 திசெம்பர் இறுதியில்**	மாற்றம் %
மேல் - மத்திய	494,037	**515,176**	4.28	முன்னுரிமை*	**1,879**	**1,885**	0.32
				கொழும்பு நகரம் **	**145,607**	**145,130**	(0.33)
				கோட்டே	**177,054**	**181,270**	2.38
				மஹரகம	**169,497**	**186,891**	10.26
மேல் - வடக்கு	293,704	**305,299**	3.95	களனிய	**210,942**	**220,646**	4.60
				கம்பஹா	**82,762**	**84,653**	2.28
மேல் - தெற்கு	274,748	**282,869**	2.96	தெஹிவல	**111,302**	**112,796**	1.34
				களுத்துறை	**72,903**	**74,324**	1.95
				பாணந்துறை	**90,543**	**95,749**	5.75
மத்திய	282,214	**291,357**	3.24	கண்டி வடக்கு	**108,741**	**112,070**	3.06
				கண்டி தெற்கு	**91,498**	**94,122**	2.87
				கண்டி கிழக்கு	**81,975**	**85,165**	3.89
வட மேல்	87,855	**95,308**	8.48	குருணாகல்	**87,855**	**95,308**	8.48
வட மத்திய	131,995	**144,495**	9.47	அனுராதபுரம்	**131,995**	**144,495**	9.47
சப்பிரகமுவ	118,854	**127,668**	7.42	இரத்தினபுரி	**59,182**	**66,587**	12.51
				கேகாலை	**59,672**	**61,081**	2.36
தென்	330,915	**343,093**	3.68	அம்பாந்தோட்டை	**113,066**	**118,673**	4.96
				மாத்தறை	**101,954**	**103,645**	1.66
				காலி	**115,895**	**120,773**	4.21
ஊவா	109,115	**120,006**	9.98	பண்டாரவளை	**63,010**	**70,432**	11.78
				மொனறாகலை	**46,105**	**49,574**	7.52
வடக்கு	28,064	**31,575**	12.51	யாழ்ப்பாணம்			
				மன்னார்	**28,064**	**31,575**	12.51
கிழக்கு	286,003	**303,391**	6.08	வவுனியா			
				அம்பாறை	**67,459**	**71,714**	6.31
				திருகோணமலை	**81,560**	**84,768**	3.93
				அக்கரைப்பற்று	**81,752**	**86,836**	6.22
				மட்டக்களப்பு	**55,232**	**60,073**	8.76
மொத்தம்	2,437,504	**2,560,237**	**5.04**	**மொத்தம்**	**2,437,504**	**2,560,237**	**5.04**

*2020 ஆம் ஆண்டில் கொழும்பு நகரப் பிரதேசத்தின் முன்னுரிமை இணைப்புகள் மாத்திரம் உள்ளடக்கப்பட்டன.


**சபைத் தீர்மானத்திற்கு இணங்க கைவிடப்பட்ட இணைப்புகள் பற்றிய இறுதி முடிவு.

இணைப்புக்களின் அதிகரிப்பு


இணைப்புகளின் எணணிக்கை




ஆண்டுக்கான விலைப் பட்டியலிடல் மற்றும் சேகரிப்பு ஒப்பீடு (ம.கூ.வரியுடன்)



குடும்பமொன்றுக்கான சராசரி மாதாந்த நீர் பாவனை (தலா இணைப்புக்கான க.மீ.)



குடும்பமொன்றின் சராசரி மாதாந்த விலைப்பட்டியல்



பட்டியலிடலுக்குரிய புள்ளிவிபரங்கள்

விபரம்	2019 (ரூ. மில்)	2020 (ரூ. மில்)
பட்டியல் இலக்கு (ம.கூ வரியின்றி)	23,830	**25,056**
உண்மை பட்டியல் (ம.கூ வரியின்றி)	23,579	**25,218**
காசு அறவிடல் இலக்கு (ம.கூ வரியுடன்)	28,437	**28,211**
உண்மைச் சேகரிப்பு (ம.கூ வரியுடன்)	28,397	**25,424**


பாவனையாளர் வகுதிவாரியாக விற்பனையாகிய நீரின் அளவும் வருமானமும் (2020)

நுகர்வோரின் வகுதி	விற்பனையின் அளவு		வருமானம்	
	கன மீற்றர் 000	%	ரூபா மில்லியன	%
நேரடி கட்டண அறவீடுகு	452,616	75.85	18,794	66.08
பாடசாலைகள்	5,421	0.91	121	0.43
தோட்டக் குடியிருப்புகள்	2,272	0.38	101	0.35
பொது நீர்க் குழாய்கள் மூலமான நீர் வழங்கல்	373	0.06	6	0.02
அரசாங்க நிறுவனங்கள், தே.நீ.வ.வ.ச. வளவுகள்	35,516	5.95	2,368	8.32
வர்த்தக மற்றும் கைத்தொழில்	59,525	9.97	5,696	20.02
சுற்றுலா ஹோட்டல்கள்	2,552	0.43	231	0.81
கப்பல்துறை	146	0.02	76	0.27
முதலீட்டுச் சபை	8,486	1.42	570	2.00
மத வழிபாட்டுத் தலங்கள்	5,891	0.99	135	0.48
உப மொத்தம்	**572,798**	**95.98**	**28,096**	**98.78**
மொத்த வழங்கலுக்கான விலைப்பட்டியல்	18,698	3.13	328	1.15
ஏனையவை*	5,310	0.89	19	0.07
முழு மொத்தம்	**596,806**	**100.00**	**28,443**	**100.00**


\# வீடுகள், தே.நீ.வ.வ.ச. விடுதிகள், அரச விடுதிகள், கூட்டாட்சி ஆதனங்கள், வரியற்ற வீடுகள், சமுர்த்தி வீடுகள், சமுர்த்தி தோட்ட வீடுகள்

* "நேரடி கட்டண அறவீடின்" கீழ் அல்லது மேலே குறித்துரைக்கப்படாதுள்ள ஏனைய அனைத்து கட்டண அறவிடல் வகுதிகளும் "ஏனையவை" என்ற வகுதியின் கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ளன. நிதி ஏற்பாடுகளை பதிலீடு செய்தலும் இவ்வகைப்படுத்தலில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

நுகர்வோர் வகுதிவாரியாக உபயோகிக்கப்பட்ட நீரின் நூற்றுவீத அளவு



நுகர்வோர் வகுதிவாரியாக வருமான நூற்றுவீதம்



முதலீடுகள் பற்றிய பொழிப்பு

" மேற்படி நிதியியல் மூலோபாயங்களுடன் நீர் வழங்கல் மற்றும் சுகாதார மேம்பாட்டுத் துறையின் அபிவிருத்திச் செயற்பாடுகளை பொறுத்தவரை ரூபா 100.86 பில்லியன் பெறுமதியான முதலீடுகளை மேற்கொள்வதற்கு 2020 ஆம் ஆண்டினுள் தே.நீ.வ.வ.சபைக்கு இயலுமாயிருந்தது."

நிதியியல் மூலங்கள்

தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை அதனிடமுள்ள பல்வேறு விதத்திலான நிதியங்களை முதலீடு செய்து 2020 ஆம் ஆண்டு முழுவதிலும் நீர் வழங்கல் மற்றும் சுகாதார மேம்பாட்டுத் துறையில் அதன் அபிவிருத்திச் செயற்பாடுகளை தொடர்ந்தும் மேற்கொண்டது.


தே.நீ.வ.வ.ச. 2020 ஆம் ஆண்டுக்காக பாரிய அளவிலான நீர் வழங்கல் மற்றும் சுகாதார மேம்பாட்டுத் திட்டங்களின் வெளிநாட்டுக் கடன் அளிப்பாக ரூபா 62.2 பில்லியன் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. இந் நிதி ஒதுக்கீடானது 2020 ஆம் ஆண்டின் வேலைகளுக்கும் 2019 ஆம் ஆண்டின் கணகிடப்படாத கொடுப்பனவுகளை செலத்துவதற்காகும். இத்திட்டங்களுக்கான உள்நாட்டு பங்களிப்பு நிதியாக, ம.கூ.வரி மற்றும் சுங்கத் தீர்வை தொடர்பிலான செலவினங்களுக்காக ரூபா 4,589.7 மில்லியன் திறைசேரி மூலமான நிதி ஒதுக்கீடு, மிகுதியான திறைசேரியூடான தேசிய சேமிப்பு வங்கிக் கடன் பணியுடனான மீதி உள்நாட்டு ஆக்கக்கூறும், தே.நீ.வ.வ.ச.யின் சொந்த நிதியாக ரூபா 921.07 மில்லியனும் ஒதுக்கப்பட்டது. அதேவேளை பாரிய அளவிலான நீர் வழங்கல் கருத்திட்டம் ஒன்றுக்கும் பாரிய அளவிலான கழிவு நீர் சுத்திகரிப்பு திட்டம் ஒன்றுக்கும் ரூபா 101.44 மில்லியன் வெளிநாட்டு நிதி மானியமும் ஒதுக்கப்பட்டது. இதற்கு மேலதிகமாக, திறைசேரியினால் வழங்கப்பட்ட தேசிய சேமிப்பு வங்கியின் ஊடான ரூபா 30 பில்லியன் கடன் பணியிலிருந்து நீர் வழங்கல் திட்டங்களின் கடன் பணிக் கொடுப்பனவுகளுக்காக ரூபா 15.49 பில்லியன் பயன்படுத்தப்பட்ட அதேவேளை வெளிநாட்டு நிதியிடல் திட்டங்களின் உள்நாட்டு ஆக்கக்கூறுகள் தொடர்பில் ரூபா 865.48 மில்லியன் மற்றும் "அனைவருக்குமான குடிநீர்" திட்டங்களுக்காக ரூபா 69.09 மில்லியன் செலவிடப்பட்டது.

தோற்றம்பெற்றுவரும் சிறிய நகர்சார்ந்த (சிறிய மற்றும் நடுத்தர) நீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் சேகரிப்பு திட்டங்களின் கீழ், மூன்று சிறிய மற்றும் நடுத்தர அளவிலான நீர் வழங்கல் திட்டங்களின் நடைமுறைப்படுத்தலுக்காக நாடு முழுவதிலுமான பயன்பாட்டு இணைப்புகள் இடம்பெயர்த்தல் வேலைகள், அரச பாடசாலைகள் மற்றும் புனித நகர நீர் வழங்கல், காணிகள் உள்ளகப்படுத்தல் ஆகியவற்றுக்கு ரூபா 943.01 மில்லியன் உள்நாட்டு நிதி வழங்கப்பட்டது. நீர் வழங்கல் துறை சமுதாய வசதியேற்பாடுகளின் கீழான கருத்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்காக ரூபா 2.82 மில்லியன் உள்நாட்டு நிதியும் ரூபா 15.0 மில்லியன் வெளிநாட்டு நிதி மானியமும் வழங்கப்பட்டன.

மேலும், இலங்கை அரசாங்கத்தின் (GOSL) நேரடி நிதி ஒதுக்கீட்டின் மூலம், தே.நீ.வ.வ.ச.யினால் இலங்கை அரசாங்க உத்தரவாதத்துடன் கூடியதாக வெளிநாட்டு / உள்நாட்டு வங்கிகளிலிருந்து பெற்ற கடனிலிருந்து பெறப்பட்ட நிதியின் ஊடாக நீர் வழங்கல் கருத்திட்டங்கள் தொடர்பில் ரூபா 36.52 பில்லியன் செலவிடப்பட்டது. இதற்கு மேலதிகமாக, 2020 ஆம் ஆண்டினுள் உள்நாட்டு வங்கிகளிலிருந்து கடனாக பெறப்பட்ட ரூபா 3.35 பில்லியன் தொகையின் மூலம் 11 உள்நாட்டு வங்கி நிதியளிப்பிலான நீர் வழங்கல் திட்டங்களை தே.நீ.வ.வ.சபை நடைமுறைப்படுத்தியது.

மேற்படி நிதியியல் மூலோபாயங்களுடன் நீர் வழங்கல் மற்றும் கழிவு நீர் சுத்திகரிப்பு துறையின் அபிவிருத்திச் செயற்பாடுகளை பொறுத்தவரை ரூபா 100.86 பில்லியன் பெறுமதியான முதலீடுகளை மேற்கொள்வதற்கு 2020 ஆம் ஆண்டினுள் தே.நீ.வ.வ.சபைக்கு இயலுமாயிருந்தது.

2016 - 2020 ஆம் ஆண்டில் நீர் வழங்கல் மற்றும் சாக்கடைத் துறை தொடர்பிலான மொத்த முதலீடு



2019/2020 பிரதான வரவு செலவுத் திட்டத்தின் கீழ் பெறப்பட்ட மூலதன நிதியங்களின் பயன்பாடு


விபரம்	2019		2020	
வெளிநாட்டு நிதித் தொகை (ரூபா மில்லியன்)	31,551	112%	39,005	62%
வெளிநாட்டு உதவியுடன் தொடர்புடைய உள்நாட்டு நிதியத் தொகை (ரூபா மில்லியன்)	3,962	90%	2,640	59%
உள்நாட்டுக் கருத்திட்டங்களுக்கான திரண்ட நிதியங்கள் (ரூபா மில்லியன்) கடன் பணிக் கொடுப்பனவு	795	46%	1,387	50%
மொத்தம்	**45,491**	**104%**	**40,033**	**61%**

மேற்படி அபிவிருத்திப் பணிகளுக்கு மேலதிகமாக, தே.நீ.வ.வ.ச. 2020 ஆம் ஆண்டு காலத்தினுள் ஈட்டிய அதன் வருமான வருவாயிலிருந்து புனரமைப்பு நடவடிக்கைகளுக்காக ரூபா 1,152.36 மில்லியனையும், வருவாயற்ற நீர் குறைப்புக்காக ரூபா 404.69 மில்லியனையும், வலுசக்தி சேமிப்புச் செயற்பாடுகளுக்காக ரூபா 108.57 மில்லியனையும், மூலதனப் பொருட்களின் கொள்வனவுக்காக ரூபா 70.54 மில்லியனையும், கழிவுநீர் சுத்திகரிப்புத் திட்டங்களின் பராமரிப்புக்காக ரூபா 22.6 மில்லியனையும் முதலீடு செய்துள்ளது. புனரமைப்பு நடவடிக்கைகளின் கீழ், திட்டங்களின் மேம்பாட்டுக்காக நன்கொடை உதவிகளோ அல்லது விசேட நிதியங்களோ ஒதுக்கப்படாதிருந்த திட்டங்களுக்கு முன்னுரிமையளிக்கப்பட்டது.

2020 ஆம் ஆண்டினுள், ஆண்டின் ஆரம்பத்தில் முழு ஆண்டுக்குமான நிதி ஒதுக்கீடு கிடைத்திருக்கவில்லை என்பதால் வேலைகளைத் திட்டமிடுவது மிகவும் சிரமமாக இருந்தது. மூலதன வரவு செலவுத்திட்ட நிதி ஒதுக்கீடானது நான்கு கணக்கு வாக்கெடுப்பின் மூலம் வழங்கப்பட்டிருந்ததோடு 2020 நவெம்பர் இறுதியிலேயே ஆண்டு முழுவதுக்குமான நிதி வழங்கல் அறிவிக்கப்பட்டிருந்தது.

இந்நிலைமையானது குறைவான நிதி பயன்பாட்டுக்கு இட்டுச் சென்றது. மேலும், ஒதுக்கீடு செய்யப்பட்ட மூலதன நிதியின் குறை பயன்பாட்டுக்கு, கோவிட் 19 நிலைமையினால் முகம் கொடுக்க நேரிட்ட எதிர்பார்க்கப்படாத பிரச்சினைகள் மேலுமொரு பெரும் காரணியாக அமைந்தது.

நன்கொடை வழங்குனர்களால் வழங்கப்பட்ட வெளிநாட்டு நிதி உதவிகள் மற்றும் இலங்கை அரசாங்கத்தின் ஏற்புடைய நிதியங்கள்



2020 ஆம் ஆண்டில் பூர்த்தி செய்யப்பட்ட கருத்திட்டங்கள் பற்றிய விபரங்கள்

பிராந்திய உதவி நிலையம்	கருத்திட்டத்தின் பெயர்	முகவர்	மொ.ம.செ. ரூபா மில்லியன்	நலன்பெறுனர்
மேல்	கொழும்பு மாவட்ட கிழக்கு நகரங்கள் நீர் வழங்கல் திட்டம் - பொதி 1	ஊள்நாட்டு வங்கி நிதியிடல்	5,170.00	373,304
	களனி வலது கரை நீர் வழங்கல் திட்டம் - கட்டம் 11	பிரான்ஸ்	32,700.00	1,750,000
வடமேல்	உலர் வலய நீர் மற்றும் சுகாதார மேம்பாட்டுத்திட்டம்	ADB	17,196.39	453,000

ஊழியர்கள்

> “ 2019 இல் ஆயிரம் இணைப்புக்களுக்கு 3.99 ஆக இருந்த பணியாளர் வீதம் 2020 இல் 3.66 ஆக குறைக்கப்பட்டது.. ”

பதவியணியின் பலம்


பணிக்குழாம்	2019	2020
(அ) நிரந்தர	9,564	9,227
(ஆ) அமைய	0	0
(இ) ஒப்பந்த	137	132
(ஈ) பொறித்தொகுதி தெ ாழில்நுட்பவியலாளர் பயிலுனர் மற்றும் பொ.தொ.	24	24
மொத்தம்	**9,725**	**9,383**

2020 ஆம் ஆண்டின் இறுதியில் நிரந்தர பதவியினர்கள் 9,227 பேரும், 132 ஒப்பந்த ஊழியர்களும், 24 சுத்திகரிப்பு நிலைய தொழில்நுட்பவியலாளர் பயிலுனர்கள் மற்றும் பட்டதாரி பயிலுனர்களும் காணப்பட்டனர். பெரும்பாலான ஒப்பந்த அடிப்படையிலான ஊழியர்கள் வெளிநாட்டு நிதியளிப்பு திட்டங்களின் பொருட்டே ஆட்சேர்க்கப்பட்டனர்.


2020 சனவரி முதல் திசெம்பர் வரையிலான காலத்தினுள் பல்வேறான பணிக்குழாம் வகைகளின் கீழ் 296 நிரந்தர ஊழியர்களும், 01 ஒப்பந்த ஊழியரும் ஆட்சேர்க்கப்பட்டனர். இதே காலப்பகுதியில் பணியாளர்களின் பல்வேறு வகைகளிலும் 633 நிரந்தர ஊழியர்கள், 06 ஒப்பந்த ஊழியர்கள் ஓய்வுபெறுதல், பதவி விலகல், பதவி விட்டு நீங்குதல், மற்றும் இறப்புகள் என்ற வகையில் சேவை முடிவுறுத்தப்பட்டனர். இதன் பெறுபேறாக மொத்த பதவியணியினர் தொகை 2019 திசெம்பருடன் ஒப்பிடுகையில் 342 ஆல் குறைவடைந்தது.

2019 இல் ஆயிரம் இணைப்புக்களுக்கு 3.99 ஆக இருந்த பணியாளர் வீதம் 2020 இல் 3.66 ஆக குறைக்கப்பட்டது.

பிரதானமான தொழில்களின் அடிப்படையிலான பதவியணியினர் பகிர்வு



அமைவிடத்தின்படி பதவியணியினர் பகிர்வு



பதவியணிக்கான நலன்கள்

- ஆண்டினுள் உற்பத்தித் திறன் ஊக்குவிப்புக் கொடுப்பனவு உள்ளடங்கலாக வருடாந்த மிகையூதியம் ரூபா 42,000.00 செலுத்தப்பட்டது.
- முன்னைய ஆண்டுகளைப் போன்று உபயோகிக்கப்படாத மருத்துவ லீவுக்கான பணக் கொடுப்பனவு தொடர்ந்தும் வழங்கப்பட்டது.
- சலுகைக் கட்டணத்தின் கீழ் அலுவலர்களுக்கு போக்குவரத்து வசதிகள் செய்துகொடுக்கப்பட்டன.
- சேவையில் ஈடுபட்டிருந்தபோது மரணமடைந்த நிரந்த ஊழியர்களின் சார்பில் மரண உதவிக் கொடுப்பனவுகள் வழங்கப்பட்டன.
- ஊழியர்களுக்கு உள்நாட்டு/ வெளிநாட்டு பயிற்சி வசதிகள் வழங்கப்பட்டன.
- ஊழியர்களுக்கான தேனீர் கொடுப்பனவாக ஆளொருவருக்கு ரூபா 650.00 வழங்கப்பட்டது.
- அரசாங்க வங்கிகள் ஊடாக கடன் வசதிகள் (வீடமைப்புக் கடன் மற்றும் வாகனக் கடன் முறையே மக்கள் வங்கியிலிருந்தும் இலங்கை வங்கியிலிருந்தும்) வழங்கப்பட்டன.
- இதற்கு மேலதிகமாக தே.நீ.வ.வ.சபையின் மூலம் பத்து மாதக் கடன் மற்றும் ஓராண்டுக் கடன் வசதிகள் (வட்டி 4.2மூ) வழங்கப்பட்டன.
- ஊழியர்களுக்கு தலா ரூபா 10,000/- பண்டிகை முற்பணம் வழங்கப்பட்டது.
- 2020 ஆம் ஆண்டில் 45 ஊழியர்களுக்கு மத்தியில் ரூபா 22,146,770.00 பன்னிரண்டு மாதக் கடனாகவும், 1,504 ஊழியர்களுக்கு மத்தியில் ரூபா 477,775,624.00 பத்து மாதக் கடனாகவும் சலுகை வீதத்தின் கீழ் வழங்கப்பட்டது.
- ஊழியர்களின் (குடும்ப அங்கத்தவர்கள் உள்ளடங்கலாக) மருத்துவச் செலவுகளின் மீளளிப்புக்காக (ஏறத்தாழ) ரூபா 83 மில்லியன் வழங்கப்பட்டதோடு, இதற்கு மேலதிகமாக, தீவிர நோய்களுக்கான மருத்துவ செலவுகளும் மீளளிப்புச் செய்யப்பட்டது.

பதவியணியினர் ஊதியமும் நன்மைகளும்
2019 மற்றும் 2020 ஆம் ஆண்டுகளுக்கிடையிலான பதவியணியினர் ஊதிய ஒப்பீடு

விபரம்	2019 ரூபா மில்லியன்	2020 ரூபா மில்லியன்
சம்பளங்கள்	11,985	**11,522**
ஊழியர் சேம நிதியத்துக்கான பங்களிப்பு	994	**968**
ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்துக்கான பங்களிப்பு	248	**242**
மொத்தம்	**13,227**	**12,732**

மனிதவலு அபிவிருத்தி மற்றும் பயிற்சி


2020 பயிற்சித் தேவைப்பாட்டுப் பகுப்பாய்வு மற்றும் பிரிவுத் தலைவர்களிடமிருந்து கிடைக்கப்பெற்ற விஷேட பயிற்சித் தேவைப்பாடுகளை அடிப்படையாகக் கொண்டு, பல்வேறு தரங்களை சார்ந்த ஊழியர்களுக்காக ஆண்டினுள் மனிதவலு அபிவிருத்தி மற்றும் பயிற்சிப் பிரிவு 310 உள்ளக பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை திட்டமிட்டு, 131 உள்ளக பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களை நடாத்தியதோடு, மொத்த ஊழிர் பங்கேற்பு 2,552 (முகாமைத்துவம் - 158, ஏனைய நிறைவேற்றுத்தரம் - 875, மேற்பார்வைத்தரம் 680, எழுதுவினைஞர் மற்றும் சமாந்திர தரம் - 729, தொழிற்பாட்டு 110) ஆக காணப்பட்டது. 2020 ஆம் ஆண்டின் கோவிட் 19 நோய் நிலைமையின் காரணமாக, மார்ச் 13 ஆம் திகதியின் பின்னர் பௌதீகமாக பயிற்சிகளை நடத்த முடியவில்லை என்பதோடு, 2020 ஜூன் நடுப்பகுதியிலிருந்து Goole Meet ஊடாக மெய்நிகர் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை நடத்துவதற்கு மனிதவலு அபிவிருத்தி மற்றும் பயிற்சிப் (MD&T) பிரிவு ஏற்பாடுகளைச் செய்தது.

நாட்டிலுள்ள ஏனைய பயிற்சி நிறுவனங்களின் ஊடாக 235 ஊழியர்களுக்கு மனிதவலு அபிவிருத்தி மற்றும் பயிற்சிப் (MD&T) பிரிவினால் வெளிவாரிப் பயிற்சிக்கு ஏற்பாடு செய்யப்பட்டது. இதில் உள்நாட்டுப் பல்கலைக் கழகங்களின் மூலம் நடத்தப்பட்ட முதுமாணி மற்றும் பட்டப்பின் படிப்பு நிகழ்ச்சித்திட்டங்களும் NIBM, CIPM, CETRAC, ICTAD, IESL, CHPB மற்றும் SLIDA ஆகிய அங்கீகாரம் பெற்ற நிறுவனங்களால் நடத்தப்பட்ட டிப்லோமா மற்றும் சான்றிதழ் பாடநெறிகளும் உள்ளடங்குகின்றன.

வெளிநாட்டுப் பயிற்சி மற்றும் உத்தியோபூர்வ விஜயங்களின் கீழ், தே.நீ.வ.வ.சபையின் 09 ஊழியர்களுக்கு JICA மற்றும் ITEC நிதி உதவியோடு குறுகிய கால வெளிநாட்டுப் பயிற்சி வழங்கப்பட்டது. JDS புலமைப்பரிசில் நிகழ்ச்சித்திட்டத்தின் ஊடாக தே.நீ.வ.வ.ச. பொறியியலாளர் ஒருவர் முதுமானிப் பட்டப்படிப்பை மேற்கொள்வதற்கான வாய்ப்பைப் பெற்றார். இதற்கு மேலதிகமாக 2020 ஆம் ஆண்டினுள் நடைமுறைப்படுத்தப்பட்ட பல்வேறு கருத்திட்டங்கள் மற்றும் ஏனைய O&M தொழிற்பாடுகளின் ஊடாக 21 அலுவலர்களுக்கு கப்பலேற்றலுக்கு முன்னரான பரிசீலனை தொடர்பிலான உத்தியோகபூர்வ விஜயங்களுக்கு மனிதவள அபிவிருத்தி மற்றும் பயிற்சிப் பிரிவு வசதிசெய்து கொடுத்தது.


இதற்கு மேலதிகமாக, 269 பட்டப்படிப்பு மாணவர்கள், 243 தொழில்நுட்ப, கணக்கீட்டு, தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பவியல் பயிலுனர்கள் உள்ளடங்கிய 512 பயிலுனர்களுக்கு **கைத்தொழில் பயிற்சி** வழங்கப்பட்டது.

2020 முன்னேற்றம் - பங்குபற்றியோர் எண்ணிக்கை



வெளிவாரிப் பயிற்சி	180	235
வெளிநாட்டுப் பயிற்சி	120	10
உள்வாரிப் பயிற்சி	9300	2552

மனிதவலு அபிவிருத்தி மற்றும் பயிற்சிப் (MD&T) பிரிவினால் வழங்கப்பட்ட பயிற்சிகள் பற்றிய சுருக்கம்



பயிற்சிகளில் பங்குபற்றியோர் பற்றிய ஒப்பீடு (2019 மற்றும் 2020)

	2019	2020
உள்வாரிப் பயிற்சி	11,560	2,552
வெளிவாரிப் பயிற்சி	247	235
வெளிநாட்டுப் பயிற்சி	88	10
கைத்தொழில் பயிற்சி	547	512



“தூய்மையான நீர் உலகின் முதன்மையானதும் முக்கியமானதுமான மருந்தாகும்”

ஸ்லோவாக்கிய பழமொழி

நிலையான அபிவிருத்தி

களனி வலது கரை நீர் சுத்திகரிப்புப் பொறித்தொகுதி

சேவைத் திறன் மற்றும் தொழிற்பாட்டு வினைத்திறனை மேம்படுத்துவதற்கான தகவல் தொழில்நுட்பத் தீர்வுகள்

தகவல் தொழில்நுட்பம் - தொழிற்பாட்டு வினைத்திறன் மற்றும் சேவை மட்டத்தை மேம்படுத்தல்

தகவல் தொழில்நுட்பமானது அரச நிறுவனங்களின் தொழிற்பாட்டு வினைத்திறனையும் சேவை மட்டத்தையும் மேம்படுத்துவதற்கான மிக விளைவுத்தாக்கமிக்க கருவியாகக் கருதப்படுகின்றது. எனவே நிறுவன நிகழ்ச்சிநிரலில் கணணிமயமாக்கலுக்கு உயர் முன்னுரிமை அளிக்கப்பட்டுள்ளது. கணணிமயமாக்கல் தொடர்பில் நடைபெற்றுவருகின்ற நடைமுறையினை துரிதப்படுத்துவதற்காக தே.நீ.வ.வ.ச. பல நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. மேற்படி முயற்சியின்போது, தே.நீ.வ.வ.ச.யின் தகவல் தொழில்நுட்பப் பிரிவு தற்போதுள்ள தகவல் தொழில்நுட்பத் தீர்வுகள் மற்றும் தொடர்புடைய உட்கட்டமைப்பை மேம்படுத்தி வருகின்ற அதேவேளை ஆண்டு முழுவதிலும் பல புதிய மென்பொருள் தீர்வுகள் மற்றும் மேம்படுத்தப்பட்ட உட்கட்டமைப்பு வசதிகளை சேர்த்துள்ளது. அத்துடன் குழாய்கள் தொடர்பில் சில புதிய தீர்வுகளும் நடைபெற்று வருவதோடு மிக விரைவில் ஆரம்பித்து வைப்பதற்கும் எதிர்பார்க்கப்பட்டுள்ளது.

வர்த்தக செயற்பாட்டு முகாமைத்துவ முறைமைக்கான மேம்பாடுகள்

வர்த்தக செயற்பாட்டு முகாமைத்துவ முறைமையானது (COMS) 2016 இல் ஆரம்பிக்கப்பட்டு, முனைப்புடனான தொழிற்பாட்டினை 4 ஆண்டுகளுக்கு மேல் நிறைவு செய்துள்ளது. இறுதிப் பாவனையாளர் பின்னூட்டல் மற்றும் தொழிற்பாட்டு நடைமுறைகளின் மேம்பாட்டுக்கான தேவைப்பாடுகளை கவனத்திற்கொண்டு COMS மென்பொருள் முறைமைகளுக்கு பல மேம்பாடுகள் கூட்டிணைப்பட்டுள்ளன. புதிய இணைப்புகள், துண்டிப்புகள் மற்றும் மீள் இணைப்புகள் ஆகியன மற்றும் பாவனையாளர் இடத்திலேயே கொடுப்பனவுகளைச் சேகரித்தல் போன்ற கள மட்டத்திலான தொழிற்பாடுகளுக்கு வசதியேற்பாடு செய்யும் பொருட்டு களச் சேவை செல்லிடத் தொலைபேசிப் பிரயோகத்திற்கான மேலதிக மேம்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

வன்பொருள் மற்றும் தகவல் தொழில்நுட்ப உட்கட்டமைப்பு

வன்பொருள்/ உட்கட்டமைப்பு பராமரிப்பானது பொருட்கள் வழங்குனர்கள்/ சேவை வழங்குனர்களின் உதவியுடன் கூடியதாக உள்ளக வன்பொருள் குழுவின் பாரியதொரு பணியாக இருந்தது. ஆண்டினுள் வன்பொருள்/ உட்கட்டமைப்பு வசதிகளுக்கான தொடர்ச்சியான மேம்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன. தொலைவிலுள்ள அலுவலகங்கள்/ பண்டகசாலைகளுக்கான வலையமைப்பு இணைப்பின் நீடிப்பு மேற்கொள்ளப்பட்டது.

தகவல் தொழில்நுட்ப மனிதவளம்

தகவல் தொழில்நுட்ப வசதிகள் மற்றும் முறைமையின் நம்பகத்தன்மை மற்றும் முக்கியத்துவத்தைக் கருத்திற்கொண்டு, எதிர்காலத் தேவைகளுக்குப் பொருந்துகின்றவாறு தகவல் தொழில்நுட்ப பணியாட்டொகுதி கட்டமைப்பை மேம்படுத்துவதற்கும் மற்றும் உள்ளக தகவல் தொழில்நுட்ப மனித வளத்தைப் பலப்படுத்துவதற்கும் உயர் முகாமைத்துவம் நடவடிக்கை எடுத்துள்ளது. தகவல் தொழில்நுட்பக் குழுவைப் பலப்படுத்தும் பொருட்டு இப்பிரிவுக்கு புதிய ஒரு பொறியியலாளரை ஆட்சேர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. அத்துடன் இப்பிரிவிலுள்ள வெற்றிடங்களை நிரப்புவதற்கும் ஆரம்ப கட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

அலுவலக சூழலின் மேம்பாடு

தகவல் தொழில்நுட்பப் பிரிவின் அலுவலக சூழலை மீள் கட்டமைப்பதற்கும் வேலைச் சூழலை நவீனமயப்படுத்தவும் நடவடிக்கை எடுக்கப்பட்டது. திட்டமிடல் மற்றும் அபிவிருத்திப் பிரிவினால் (P&D) வழங்கப்பட்டிருந்த வடிவமைப்பை அடிப்படையாகக் கொண்டு தகவல் தொழில்நுட்பப் பிரிவை புதுப்பிப்பதற்கான ஒப்பந்தம் முறைப்படி திட்டமிடப்பட்டதோடு தலைமை அலுவலக மேம்பாட்டுக்காக ஒதுக்கப்பட்டிருந்த நிதியிலிருந்து ஒப்பந்தத்துக்கான நிதி ஒதுக்கப்பட்டது.


வலைத்தள பாதுகாப்பு மற்றும் முறைமையின் பாதுகாப்பு

நிறுவனத்தின் தகவல் தொழில்நுட்ப முறைமையின் பாதுகாப்பைப் பொறுத்தவரை கவனம் செலுத்தப்பட வேண்டிய முக்கியமானதொரு விடயப் பரப்பாக வலைத்தள பாதுகாப்பு கருதப்படுகின்றது. வலைத்தள பாதுகாப்பு நிலைமையை மேம்படுத்துவதற்காக மற்றும் முறைமையின் நம்பகத்தன்மையை மேம்படுத்துவதற்காக பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. சக்திவாய்ந்த வலைத்தள பாதுகாப்பு முறைமை (firewall) பெறுகை செய்யப்பட்டு பொருத்தப்பட்டுள்ளது.


வர்த்தக நடவடிக்கைகள்

மானி வாசிப்பின் ஊடாக பாவனையாளர்கள் நுகர்வு செய்துள்ள நீரை அளவிடுதல், உரிய கால அடிப்படையில் மாதாந்த கட்டணப் பட்டியல்களை விநியோகித்தல் மற்றும் நீர் விற்பனையிலிருந்து வருமானத்தை சேகரித்தல் ஆகியவற்றுக்கான பிரதானமான பிரிவாக வர்த்தகப் பிரிவு காணப்படுகின்றது. கோவிட் 19 நாட்டில் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ள போதிலும், நாடு முடக்கப்பட்டிருந்த காலத்தில் சிறிதளவு தாமதத்துடன் கூடியதாக நடைமுறைப்படுத்தப்பட்ட தெனினும் மாதாந்த கட்டணப் பட்டியல்களை உரிய காலத்தில் விநியோகித்தல் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டது. கட்டணப் பட்டியலிடல் இலக்கைத் தாண்டியுள்ள போதிலும், வருமான சேகரிப்பு இலக்கை அடைய முடியவில்லை.

பாவனையாளர்கள் கட்டணப் பட்டியல்களை உரிய நேரத்தில் பெறுதல்




நிலுவைத் தொகைகள்



கடன் காலகட்டத்தைக் குறைத்தல்

மாதாந்தக் கட்டணப் பட்டியல்கள் தொடர்பான கடனை அளவிடுதல் கடன் காலகட்டமாகும். இது 2019 இல் 0.67 இல் இருந்து 0.40 ஆக குறைவடைந்துள்ள போதிலும், 2020 இல் கோவிட் 19 நோய் நிலைமையின் காரணமாக சமூகக் காரணிகளைக் கவனத்திற் கொண்டு நிலுவைத் தொகைகளை அறவிடுகின்ற அணுகுமுறையில் தளர்த்தல்கள் மேற்கொள்ளப்பட்டதால் 1.73 வரை அதிகரித்தது. பிரதானமான செயலாற்றுகைச் சுட்டி (KPI) 1 ஆகும்.

கடன் காலம்



கட்டணப் பட்டியலிடல் மற்றும் சேகரிப்பு

பாவனையாளர் வசதிக்கேற்ப மாதாந்த கட்டணப் பட்டியல்களைச் செலுத்தித் தீர்ப்பதற்கு பல வசதியான முறைகள் அறிமுகப்படுத்தப்பட்டதோடு, பாவனையாளர்கள் அத்தகைய வசதிகளின்பால் ஈர்க்கப்பட்டது அவதானிக்கப்பட்டதோடு சிலர் ஒரு வசதியிலிருந்து இன்னொரு வசதிக்கு மாறுவதும் குறிப்பிடத்தக்கதாயுள்ளது. மாதாந்த கட்டணப் பட்டியல்களைச் செலுத்துதல் பின்வரும் பல காரணங்களால் தாமதமாகியுள்ளன. அவையாவன, பாவனையாளர்கள் பல கட்டணப் பட்டியல்களை ஒன்றாகச் சேர்த்துச் செலுத்துதல், கோவிட் 19 நிலைமையின் தாக்கம் மேலும் தாமதமடைவதற்குக் காரணமாக அமைந்திருத்தல், நாளாந்த துண்டிப்பு நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்தாமை. எனவே நடமாடல் சேகரிப்பு முறையின் ஊடாக பாவனையாளர் கொடுப்பனவுகளைச் செலுத்துதல் நடைமுறை அறிமுகப்படுத்தப்பட்டது. பாவனையாளர்கள் 14 நாட்களுக்குள் அவர்கள் செலுத்த வேண்டிய தொகைகளை செலுத்தித் தீர்ப்பதன் மூலம் கிடைக்கின்ற நலன்கள் பற்றியும் 30 நாட்களைத் தாண்டி கொடுப்பனவை மேற்கொள்வதன் மூலம் விதிக்கப்படும் அபராதத் தொகை தொடர்பிலும் விழிப்புணர்வூட்டப்பட்டனர்.

உள்ளக மற்றும் வெளிவாரிப் பாவனையாளர் திருப்தி

சிறந்த சேவை விநியோகத்தின் பொருட்டு பாவனையாளர்களின் தேவைகள் பகுப்பாய்வு செய்யப்பட்டு தொடர்ந்து மீளாய்வு செய்யப்பட்டது. பாவனையாளர்களை மகிழ்வூட்டுவதற்காக சுய கவனிப்பு செல்லிடத் தொலைபேசிச் செயலி, SMS ஊடான தொடர்பாடல் ஆகிய முறைகள் அபிவிருத்தி செய்யப்பட்டன. அத்துடன் உரிய நேரத்தில் மாதாந்த கட்டணப் பட்டியலை விநியோகித்தல், பணியாளர்களின் இயலுமை அபிவிருத்தி, பாவனையாளர்களுக்கான சிறந்த சேவை விநியோகத்தின் பொருட்டு அனைத்து மட்டங்களிலுமுள்ள பணியாளர்கள் தொடர்பில் விழிப்புணர்வை உருவாக்கல் ஆகியனவும் முன்னெடுக்கப்பட்டன.

கிராமிய நீர் மற்றும் சுகாதார மேம்பாடு

கிராமிய நீர் வழங்கல் மற்றும் சுகாதார மேம்பாட்டு (RWS) பிரிவானது, இப்பிரிவின் பிரதானமான வேலைகளுக்குப் புறம்பாக பல நிகழ்வுகளிலும் ஒத்துழைப்பு ரீதியிலான வகிபாகத்தை வழங்கியது.

ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் (UNDP) உதவியுடனான மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சின் (MMDE) காலநிலை நெகிழ்திறன் ஒருங்கிணைந்த நீர் முகாமைத்துவக் கருத்திட்டத்தின் (CRIWMP) கீழ் ஆக்கக்கூறு 2 – குடிநீர் வழங்கலில் கிராமிய நீர் வழங்கல் துப்புரவேற்பாட்டுப் (RWS) பிரிவு முனைப்புடன் ஈடுபட்டதோடு அதன் முழுமொத்த முன்னேற்றம் கண்காணிக்கப்பட்டது.

புதிய கிராமய நீர் வழங்கல் திட்டங்களுக்கு நீர் பிரித்தெடுக்கப்படுதல், குழாய்கள் மற்றும் வால்வுகளை பொருத்துக்கள், இயந்திரசாதன மற்றும் மின்னியல் பொருட்கள் மற்றும் நிர்மாணிப்புப் பொருட்கள், நிர்மாணிப்புச் செயற்பாடுகள், முறைமைக் கூற்றுக்களின் அங்கீகாரத்திற்கான ஆலோசனைகள், நிர்மாணிப்பு வரைதல்கள், சாத்தியவள அறிக்கைகள் மற்றும் ஏனைய தொழில்நுட்பத் தேவைப்பாடுகள், மாதாந்த கட்டணப் பட்டியல்களுக்கான அளவீடுகள் மற்றும் விதப்புரைகள், நிர்மாணிப்புப் பணிகளின்போது தொழிற்சாலையை பார்வையிடச் செல்லல் மற்றும் மேற்கொள்ளப்படுகின்ற பரிசோதனைகளுக்கான தொழில்நுட்ப உதவிகளை வழங்குதல், புத்தளம், அனுராதபுரம், வவுனியா மற்றும் குருணாகல் மாவட்டங்களில் 08 RWS திட்டங்களின் நிர்மாணிப்புகள் ஆகியற்றின் மேற்பார்வை மற்றும் கண்காணிப்பு தொடர்பில் பரிந்துரைகள் மற்றும் உதவிகள் வழங்கப்பட்டன. கூரை மேற்தள மழைநீர் சேகரிப்பு முறைமையின் செயற்பாட்டு மற்றும் பராமரிப்பு (O&M) விடயம் தொடர்பில் பயிற்சியளிப்பவர்களைப் பயிற்றுவிக்கின்ற (TOT) நிகழ்ச்சித்திட்டத்தின் மற்றும் காலநிலை நெகிழ்திறன் நீர் பேணல் மற்றும் பாதுகாப்புத் திட்டத்திற்கான இணைப்பாக்கம் மற்றும் கண்காணிப்பும் மேற்கொள்ளப்பட்டது.

கல்வி அமைச்சிலிருந்து கிடைக்கப்பெற்ற வேண்டுகோளுக்கமைய, ஒன்பது மாகாணங்களில் பாதுகாப்பான குடிநீர் கிடைக்காதுள்ள 689 பாடசாலைகளில் மதிப்பீடுகள் மற்றும் பகுப்பாய்வுகள் மேற்கொள்ளப்பட்டன. பிராந்திய சேவை நிலையங்களிலிருந்து (RSC) பாடசாலைகள் பற்றிய விபரங்களும் தகவல்களும் திரட்டப்பட்டதோடு, நீண்டகால மற்றும் குறுகியகால தீர்வுகளுக்கான மதிப்பீடுகள் தொடர்பில் இறுதி முடிவு எடுக்கப்பட்டு கல்வி அமைச்சுக்கும் தேசிய திட்டமிடல் திணைக்களத்திற்கும் சமர்ப்பிக்கப்பட்டன.

WaSSIP மேலதிக நிதியிடலின் கீழான எதிர்வருகின்ற உலக வங்கிக் கருத்திட்டத்திற்கான தேசிய திட்டமிடல் திணைக்கள (NPD) வடிவமைப்பு தயாரிக்கப்பட்டு, நகர, உப நகர, கிராமிய மற்றும் பெருந்தோட்ட பிரதேசங்களின் உத்தேசிக்கப்பட்டுள்ள உப கருத்திட்டங்களுடன் கூடியதாக தேசிய திட்டமிடல் திணைக்களத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டது.

நிர்ணயிக்கப்பட்டுள்ள பிரதேசங்களில் RSC பணியாளர்கள் மற்றும் DNCWS பணியாளர்களின் பங்கேற்புடன் அம்பாந்தோட்டை மாவட்டத்தில் தொழில்நுட்ப ரீதியில் உதவியளிக்கப்படுகின்ற அண்ணளவாக 30 சமூக மைய அமைப்புகளால் (CBO) முகாமை செய்யப்படுகின்ற நீர் வழங்கல் திட்டங்களுக்கு CBO புனரமைப்பு நிகழ்ச்சித்திட்டம் தயாரிக்கப்பட்டது. மேலும், தேவைப்படுமெனில், நடைமுறைப்படுத்துவதற்கும் புனரமைக்கப்படுவதற்கும் முடியுமாயுள்ள சிறு நகர நீர்த் திட்டங்கள் இருப்பின் அவற்றை அடையாளம் காண்பதற்கான தரவுகள் RWS அலகுகளிலிருந்து திரட்டப்பட்டன. 2021 ஆம் ஆண்டில் நிகழ்ச்சித்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கான நிதி இன்னும் கிடைக்க வேண்டியுள்ளது.

எம்பிலிபிட்டிய மற்றும் கொலொன்ன பிரதேச செயலாளர் பிரிவுகளில் உள்ள கிராமிய சுகாதார சேவை நிலையங்களின் குறைந்தளவு மரண வீதத்துடன் கூடியதாக தாய் சேய் பாதுகாப்பை மேம்படுத்துவதற்கு தரமான மற்றும் நிலைபேறான சுகாதார சேவை மற்றும் நோய்த்தொற்றுத் தடுப்புக்கு பங்களிப்புச் செய்கின்ற வகையில் நீர் வழங்கல் மற்றும் கை கழுவும் வசதிகள் உள்ளடங்கியதாக மலசல கூடங்களை நிர்மாணிப்பதற்கான பொருட்களை வழங்குவதற்கு ஐ.நா.சிறுவர் நிதியத்தில் இல் இருந்து நிதி பெறப்பட்டது. RSC இரத்தினபுரி மற்றும் RWS பிரிவின் உதவியின் கீழ் உள்ளூராட்சி அதிகாரசபைகளால் கேள்விப்பத்திரங்கள் கோரப்படவுள்ளன.

நீர் தரத்தை மேம்படுத்தும் பொருட்டு தற்போதுள்ள CBO க்களில் இருப்புத்தாதுப் பரிமாற்ற நீர் சுத்திகரிப்பு பொறித்தொகுதிகளைப் பொருத்துவதற்காக களுத்துரை மற்றும் புத்தளம் மாவட்டங்களில் CBO க்களால் முகாமை செய்யப்படுகின்ற மூன்று RWS திட்டங்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளன. நடைமுறைப்படுத்தல் நடைமுறையில் CBO க்கள் மற்றும் நிதி அளிப்பவர்களுடன் இணைப்பாக்கம் செய்யப்படுகின்ற அதேவேளை முறைமைச் செயலாற்றுகைப் பகுப்பாய்வுக்காக RSC க்கள் மற்றும் R&D பிரிவுடன் ஒருங்கிணைந்து இணைப்பாக்கம் மற்றும் தேவையான வசதியேற்பாடுகள் வழங்கப்பட்டன. தற்போது பயாகல CBO முகாமை செய்கின்ற RWS திட்டத்தில் நிர்மாணிப்புப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

RSC, WaSSIP மற்றும் DNCWS பணியாளர்களுடன் சேர்ந்து தற்போதுள்ள ST, RWS தரவுத் தளத்தின் இற்றைப்படுத்தலை துரிதப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது.

பொதுசன விழிப்புணர்வூட்டல் நிகழ்ச்சித்திட்டங்கள்

பாவனையாளர் குழுக்கள், பாடசாலை மாணவர்கள் மற்றும் நுகர்வோர் சங்கங்களை இலக்காகக் கொண்டு பல்வேறு கல்வி மற்றும் விழிப்புணர்வூட்டல் நிகழ்ச்சித்திட்டங்கள் பொதுசனத் தொடர்பு அலகினால் மேற்கொள்ளப்பட்டது. நீர் பாதுகாப்பு, சுற்றாடல் விடயங்கள் மற்றும் நீர் நிலைகளைப் பாதுகாத்தல் ஆகியன தொடர்பில் பிரதான கவனம் செலுத்தப்பட்டது. இது நாடளாவிய ரீதியில் நடத்தப்பட்டது. பாடசாலைகளில் 10 நிகழ்ச்சித்திட்டங்கள் நடத்தப்பட்ட அதேவேளை அரசாங்க நிறுவனங்கள் மற்றும் தனியார் துறையில் 07 நிகழ்ச்சித்திட்டங்கள் நடத்தப்பட்டன.

நீர் சேவையுடன் தொடர்புடைய பல்வேறு விடயங்கள் தொடர்பில் இலக்குக் குழுக்களை அறிவூட்டுவதற்காக, நீர் சஞ்சிகையான 'ஜலய' 2020 இல் மார்ச், ஜூன் மற்றும் செப்தெம்பர் மாதங்களுக்காக வெளியிடப்பட்டது.

பொதுசன தொடர்பு அலகு (PRU) பொதுசன ஊடக விளம்பரப் பணிகளிலும் ஈடுபட்டது. நீர் வெட்டு பற்றிய செய்திகள், தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபையின் திறப்பு விழாக்கள் பற்றிய விசேட அறிக்கைகள் போன்ற தகவல்கள் ஊடகத்தின் ஊடாக வழங்கப்பட்டன. மேலும், தே.நீ.வ.வ.ச. பிரதிமைக்கு பாதிப்பு ஏற்படுகின்றதான ஊடக கட்டுரைகள் இருப்பின் அவை தொடர்பில் திருத்த நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டன.

வலுசக்தி முகாமைத்துவம்

பிரதேச உதவி நிலையங்களின் குறித்த பணியாளர்களின் ஒத்துழைப்புடன் வலுசக்தி வினைத்திறனை (குறிப்பிட்ட சக்தி நுகர்வைக் குறைப்பதன் மூலம்) மேம்படுத்துவதற்காக M&E பிரிவின் மூலம் அடையாளம் காணப்பட்ட கருத்திட்டங்களைத் தயாரித்து நடைமுறைப்படுத்துவதற்காக தே.நீ.வ.வ.ச. யின் சக்திப் பயன்பாட்டுப் பகுப்பாய்வு மேற்கொள்ளப்பட்டது.

2020 இல் மின்சார நுகர்வுக்கான வருடாந்த செலவு அண்ணளவாக ரூபா 4,624 மில்லியனாகும் என்பதோடு, இதில் ரூபா 4,439 மில்லியனான 96% நீர் உற்பத்தி மற்றும் நீர் இறைத்தலுக்காக செலவிடப்பட்டுள்ளது. மேலும் கழிவுநீர் சுத்திகரிப்பு மற்றும் இறைத்தலுக்காக ரூபா 65 மில்லியன் செலவிடப்பட்டுள்ளது. அதேவேளை ரூபா 120 மில்லியன் அலுவலக இடவசதிக்காக செலவிடப்பட்டுள்ளது. 2004 ஆம் ஆண்டில் சக்தி சேமிப்பு நிகழ்ச்சித்திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டதோடு அது படிப்படியாக குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தை அடைந்துள்ளது. கடந்த தசாப்தங்களில் தர ரீதியிலும் அளவு ரீதியிலும் உயர் மட்டத்திற்கு செயற்பாடுகள் தரமுயர்த்தப்பட்டுள்ளன. 2004 தொடக்கம் 2020 வரையில் நிறைவு செய்யப்பட்ட அறவீட்டு வகை திருத்தங்கள், மின்னியல் மற்றும் இயந்திரவியல் மேம்பாட்டு வேலைகள் மற்றும் வலுசக்தி சேமிப்பு நிகழ்ச்சித்திட்டத்தின் பெறுபேறாக உயர் வலுசக்தி மற்றும் செலவுச் சேமிப்பு நடைபெற்றுள்ளது.

2020 ஆம் ஆண்டினுள் நாட்டினுள் கோவிட் 19 நிலைமையுடன் கூட RSCs க்களின் M&E பிரிவுகளின் உதவியோடு ஆறு வலுசக்திக் கணக்காய்வுகள் மற்றும் கற்கைகள் மேற்கொள்ளப்பட்டன. 2020 இல் 11 கருத்திட்டங்கள் நிறைவு செய்யப்பட்டன. நிறைவு செய்யப்பட்ட மற்றும் நடைமுறையிலுள்ள மேற்படி கருத்திட்டங்களின் 2020 ஆம் ஆண்டுக்கான செலவு ஏறத்தாழ ரூபா 108 மில்லியனாகும். இக்கருத்திட்டங்களின் மூலமான செலவின சேமிப்பு ரூபா 29.7 மில்லியனாகும். 2021 ஆம் ஆண்டில் ரூபா 490 மில்லியன் முதலீட்டுச் செலவில் நடைமுறையிலுள்ள மற்றும் புதிய 26 கருத்திட்டங்களை நடைமுறைப்படுத்த அட்டவணைப்படுத்தப்பட்டுள்ளது. (2020 இல் நடைமுறையில் உள்ள கருத்திட்டங்கள் உள்ளடங்கலாக).

நீர் வழங்கல் திட்டங்களின் எதிர்பார்க்கப்பட்ட முழுமொத்த வினைத்திறன் மற்றும் நம்பகத்தன்மையை பேணிவரும் பொருட்டு, பிராந்தியங்களிலுள்ள அனைத்து M&E கருவிகளினதும் முன்னரான தடுப்பு பராமரிப்பு நிகழ்ச்சித்திட்டங்களை M&E பிரிவு கண்காணித்த போதிலும் ஒவ்வொரு RSC யினதும் M&E பணியாளர்கள் எவ்வித தவறுகளும் இன்றித் தொழிற்படுவதை உறுதிசெய்தனர்.

இருக்கின்ற பணியாளர்களைக் கொண்டு மட்டக் கண்காணிப்பு மற்றும் தொலைவிலிருந்து இயக்குகின்ற முறைமை (SCADA) உள்நாட்டில் வடிவமைக்கப்பட்டு நிர்மாணிக்கப்பட்டதோடு, RSCs க்களின் M&E பணியாளர்களின் ஒத்துழைப்புடன் தெரிவு செய்யப்பட்ட நீர் வழங்கல் திட்டங்களுக்கு பொருத்தப்பட்டது.

வாகனங்கள், நீர் மானிகள் மற்றும் ஏனைய M&E கருவிகளுக்கான M&E கேள்விப்பத்திர ஆவணங்கள் மற்றும் விவரக்கூற்றுகள் தயாரிக்கப்பட்டன. தேவை ஏற்படும் பட்சத்தில் RSCs க்கள் மற்றும் திட்டங்களுக்கு M&E கருவிகளின் வடிவமைப்பு, நிர்மாணிப்பு, பராமரிப்பு மற்றும் ஏனைய செயற்பாடுகள் தொடர்பிலான அனைத்து உதவி ஏற்பாடுகளும் வழங்கப்பட்டன.

மேலே உள்ளவற்றுக்கு மேலதிகமாக, போக்குவரத்துப் பிரிவு, மத்திய பணிமனை மற்றும் கட்டடப் பராமரிப்பு பிரிவு ஆகியன M&E பிரிவின் மூலம் நிர்வகிக்கப்படுகின்றன.

போக்குவரத்துப் பிரிவு M&E பிரிவின் மூலம் மேற்பார்வை செய்யப்படுவதோடு, தே.நீ.வ.வ.ச. யின் அனைத்து வாகனங்கள் மற்றும் கருவிகளுக்குமான அனுமதிப் பத்திரங்கள், காப்புறுதி, புதிய பதிவுகளின் தயார்படுத்தல்கள், அலுவலகப் பணியாளர் போக்குவரத்துக்கான வாகனங்களை ஏற்பாடு செய்தல், நலன்புரிச் செயற்பாடுகள் மற்றும் அவசர வாகன வழங்கல், தரவுத் தளத்தை பேணிவருதல், செலவு விபரங்கள், விபத்துகள் பற்றிய விபரங்கள் போன்ற அறிக்கைகளை பேணிவருதல் ஆகியன மேற்கொள்ளப்பட்டன.

கட்டடப் பராமரிப்புப் பிரிவு பிரதி பொது முகாமையாளர் (DGM) (M&E) யின் கீழ் செயலாற்றுவதோடு, தே.நீ.வ.வ.ச. தலைமை அலுவலகத் தொகுதி மற்றும் சொய்சாபுர, படோவிட்ட மற்றும் ராவதாவத்தை ஆகிய இடங்களிலுள்ள சபை விடுதிகளின் அனைத்து பராமரிப்பு பணிகளையும் மேற்கொள்கின்றது.

மத்திய பணிமனையானது தே.நீ.வ.வ.ச. யின் பிரதானமான பணிமனையாகும் என்பதோடு RSCs களின் நீர் மற்றும் கழிவுநீர் சுத்திகரிப்புப் பொறித் தொகுதிகளிலுள்ள பம்பிகள் மற்றும் துணைப்பாகங்கள் உள்ளடங்கிய அனைத்து M&E கருவிகளினதும் O&M செயற்பாடுகளுக்கான உதவிகளை வழங்குகின்றது.

மத்திய ஆய்வுகூடம்

தே.நீ.வ.வ.ச.யினால் 2020 ஆம் ஆண்டில் வழங்கப்பட்ட நீரின் பகுப்பாய்வுத் தரவுகள், நுண் உயிரியல் நீர் தர பரிசோதனையில் 99.2% திருப்திகரத்தன்மையையும் பௌதீக மற்றும் இரசாயன பகுப்பாய்வில் 77.3% திருப்திகரத் தன்மையையும் வெளிப்படுத்தின.

ISO / IES 17025:2018 தரச்சான்றிதழானது மத்திய ஆய்வு, மேல்- தெற்கு, மேற்கு உற்பத்தி, யாழ்ப்பாணம், வவுனியா போன்ற ஆய்வகங்களில் நீர் மற்றும் நீர் சுத்திகரிப்பு இரசாயன ஆய்விற்காக வழங்கப்பட்டுள்ளது.

மத்திய ஆய்வுகூடத்தில் வெள்ளீயக் கலவை உலோக குழாய் முகப்புப்பூண்களுக்கான மூலக்கூறுப் பரிசோதனை ஆரம்பிக்கப்பட்டுள்ளதோடு தீப்பற்றக் கூடிய இரசாயனப் பொருட்களை பாதுகாப்பாக களஞ்சியப்படுத்தி வைப்பதற்காக இரண்டு தீ எதிர்ப்பு பேழைகள் பொருத்தப்பட்டன.

நாட்டின் பாதுகாப்பான நீர் உள்ளடக்கத்தைக் கண்டறியும் பொருட்டு தே.நீ.வ.வ.ச.யின் பிராந்திய ஆய்வுகூடங்களிலிருந்தான உதவுயுடன் நாடளாவிய ரீதியில் குழிக் கிணறுகளுக்கான நீர் தர மதிப்பீட்டுப் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது.

வருவாயற்ற நீரைக் குறைத்தல்

RSC (WC) யின் வருவாயற்ற நீர் (NRW) குறைப்புப் பிரிவானது மேல் மத்திய, மேல் தெற்கு மற்றும் மேல் வடக்கு பிராந்தியங்களில் நீர்க் கசிவுகளைக் கண்டு பிடித்தல், வால்வுகளைக் கண்டறிதல், குழாய்வழிகளைக் கண்டறிதல், நீரோட்ட மற்றும் அழுத்த அளவீடுகளைப் பெறுதல், சட்ட விரோத பயன்பாடுகளைக் கண்டுபிடித்தல், கசிவு கண்டுபிடிப்புகள், உள்ளக கசிவுகளைக் கண்டறிதல், பழுதடைந்த மானிகளைப் பதிலீடு செய்தல், கசிவுத் திருத்தங்கள் ஆகிய பல வருவாயற்ற நீர் குறைப்புச் செயற்பாடுகளை மேற்கொண்டது. இதற்கு மேலதிகமாக கொழும்பு நகர பிரதேசத்தில் கொழும்பு பெரும்பாக நீர் மற்றும் கழிவுநீர் மேம்பாட்டு நிகழ்ச்சித்திட்டத்துடன் (GCWWMIIP) சேர்ந்து வருவாயற்ற நீர் கண்காணிப்பு மற்றும் முகாமைத்துவ செற்பாடுகளை மேற்கொண்டது.

இச் சூழ்நிலையின் கீழ் கொழும்பு நகரத்தில் 39.12% வரையிலும் மேல் மத்திய பிராந்தியத்தில் 29.53% வரையிலும் வருவாயற்ற நீரைக் குறைக்க முடியுமாயிருந்தது. வருவாயற்ற நீர் குறைப்புச் செயற்பாட்டிற்கு மேலதிகமாக, வருவாயற்ற நீர் முகாமைத்துவம் தொடர்பில் தே.நீ.வ.வ.ச.யில் விழிப்புணர்வூட்டும் பயிற்சி நிகழ்ச்சித்திட்டமும் நடத்தப்பட்டது.

நிலக்கீழ் நீர்

நகர, உப நகர மற்றும் கிராமிய நீர் வழங்கல் திட்டங்களுக்கு நீர் வழங்கல் வசதிகளை வழங்குவதற்கான நிலக்கீழ் நீர் செயற்பாடுகளில் நிலக்கீழ் நீர் பிரிவு பிரதானமாக ஈடுபட்டது. 2020 ஆம் ஆண்டில் நிலக்கீழ் நீர் பிரிவின் மூலம் பல நிலக்கீழ் நீர் தொடர்பான செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன.

நீர் புவிச்சரிதவியல் பரிசோதனை, ஆழமான மற்றும் ஆழமற்ற துளையிடப்பட்ட குழிக் கிணறுகளை நிர்மாணித்தல், நீண்ட கால நிலக்கீழ் நீர் பெறுகைக்காக கிணறுகள் மற்றும் நீரோட்டங்கள் பற்றிய மதிப்பீடு ஆகியன உள்ளடங்கிய நிலக்கீழ் நீர் அபிவிருத்திச் செயற்பாடுகள் தே.நீ.வ.வ.ச. நீர் வழங்கல் பிரிவின் மூலம் ஆண்டினுள் மேற்கொள்ளப்பட்டது. மேலும், தே.நீ.வ.வ.ச. நீர் வழங்கல் திட்டங்களிலுள்ள ஆழமான மற்றும் ஆழமற்ற குழாய்க் கிணறுகளின் அபிவிருத்தி, கிணறுகளின் பிரதான பகுதியைப் பாதுகாத்தல், நிலக்கீழ் நீர் மீள்செறிவுச் செயற்பாடுகள், கைப்பம்பிக் குழாய்க் கிணறுகளை திருத்துதல் மற்றும் புனரமைத்தல், நிலக்கீழ் நீர் பற்றிய பிரச்சினைகள் தொடர்பில் கற்கைகளை மேற்கொள்ளல் ஆகியன வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்டன.

மேலும், 2020 ஆம் ஆண்டினுள் மொத்தமாக, 340 நீர்புவிச்சரிதவியல் பரிசோதனைகள், 150 ஆழமான மற்றும் ஆழமற்ற துளையிடல் கிணறுகளை நிர்மாணித்தல், 151 நீர் பாய்ச்சி சுத்தம் செய்தல் மற்றும் கிணறு அபிவிருத்திகள், 8 புதிய கைப்பம்பி பொருத்தல்கள், 221 கைப்பம்பிக் குழாய் கிணறுத் திருத்தங்கள் மற்றும் புனரமைத்தல்கள், 68 பம்பிப் பரிசோதனைகள் நிறைவு செய்யப்பட்டன.

கமத்தொழில் செயற்பாடுகளுக்காக ஹிம்பிலியகட கிராமத்தில் நாளொன்றுக்கு 1000 கன மீற்றர் வரையிலான நிழக் கீழ் நீர் அபிவிருத்திச் செயற்பாடுகள் நிறைவு செய்யப்பட்டன. நாளொன்றுக்கு 12,000 கன மீற்றர்களால் தற்போதுள்ள நீர் வழங்கல் திட்டங்கள், புதிய தே.நீ.வ.வ.ச. நீர் வழங்கல் திட்டங்கள் மற்றும் ஏனைய நிறுவனங்களின் நீர் வழங்கல் திட்டங்களின் மூலவளக் கொள்ளளவு அதிகரிக்கப்பட்டது.

நிலக்கீழ் நீர் பிரிவின் பணியாளர்கள் மற்றும் ஏனையோருக்கு நிலக்கீழ் நீர் மூலவள அபிவிருத்தி, பம்பிப் பரிசோதனைகள், துளையிடல் மற்றும் பராமரிப்பு நடவடிக்கைகள் உள்ளிட்ட நிலக்கீழ் நீர் பிரிவின் இயலளவைக் கட்டியெழுப்பல் சம்பந்தமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. நிலக்கீழ் நீர் இயக்கவியல், மாசடைதல் மாதிரியாக்கல், நிலக்கீழ் நீர் வரைபடமாக்கல், நிலக்கீழ் நீர் மீள்செறிவூட்டல் மற்றும் ஓரகத்தனிமக் கற்கை ஆகியன இப்பிரிவினால் எதிர்காலத்தில் புதிதாக கவனம் செலுத்தப்படுகின்ற விடயங்களாகும்.

வழங்கல் மற்றும் பொருட்கள் முகாமைத்துவம்

தே.நீ.வ.வ.சபையின் தொழிற்பாட்டுக்குத் தேவையான பொருட்கள் தயார் நிலையில் இருத்தல் அவசியமென்பதோடு பொருட்களின் பெறுகைகள் மற்றும் களஞ்சியப்படுத்தலைப் பொருத்தவரை சரியான கொள்வனவுக் கொள்கைகளும் நடைமுறைகளும் கடைப்பிடித்தல் அவசியமாகும். 2020 ஆம் ஆண்டில் கோவிட் 19 தொற்றுநோய் நிலைமைகளின் கீழ் கூட, வழங்கல் மற்றும் பொருட்கள் முகாமைத்துவப் பிரிவானது 342 நீர் சுத்திகரிப்புப் பொறித் தொகுதிகளுக்கும் எவ்விதத் தடையுமின்றி தேவையான இரசாயனங்களை மற்றும் இணைப்புப் பொருட்களின் வழங்குதலை ஆண்டு முழுவதிலும் மிக வெற்றிகரமாக விநியோகித்தது.

கப்பல் தாமதக் கட்டணங்கள் செலுத்தப்படுவதை தவிர்ப்பதற்காக வினைத்திறனை உறுதி செய்து உயர் தரத்திலான கப்பல் சரக்குத் தீர்ப்பனவு பேணப்பட்ட அதேவேளை பல அரச மற்றும் தனியார் நிறுவனங்களை இணைப்பாக்கம் செய்து ஆண்டினுள் 425 க்கும் அதிகமான கப்பல் சரக்குத் தீர்ப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டன. இவற்றுக்கு மேலதிகமாக, 2020 ஆம் ஆண்டில் ரூபா 270 மில்லியன் பெறுமதியுடன்கூடிய உள்ளூர் கொள்வனவுக்கான 639 கொள்வனவுக் கட்டளைகளும் 125 அளிப்புக் கடிதங்களும் வழங்கப்பட்டன. மேலும், புதிய பொருள்களை கொள்வனவு செய்யாது நாடளாவிய ரீதியிலான பிராந்திய உதவி நிலையங்களில் (RSCs) மேலதிகமாக காணப்பட்ட பொருட்கள் உள்ளக மீளவிநியோகிக்கப்பட்டதன் மூலம் ரூபா 100 மில்லியனுக்கு மேற்பட்ட தொகையை சேமிக்க முடியுமாயிருந்தது.

பொருட்பட்டியல் முகாமைத்துவ மென்பொருளின் மூலம் நாடு முழுவதிலுமுள்ள அனைத்து 327 களஞ்சியங்களையும் தொடர்புபடுத்துவதற்கான நடவடிக்கையொன்று நடைபெற்று வருகின்றது. நாடளாவிய ரீதியிலுள்ள களஞ்சியங்களுக்கு 143 கணினிகளை வழங்குவதற்கான திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டதோடு 327 களஞ்சியங்களில் 252 களஞ்சியங்கள் தகவல் தொழில்நுட்பத்துடன் (IT) முறைமைப்படுத்தப்பட்டுள்ளது. கையிருப்புப் பெறுமதியை கருதுகின்றபோது, ரூபா 9,000 மில்லியனில் ரூபா 5,200 மில்லியன் முறைமைக்கு ஏற்கனவே உள்ளீர்க்கப்பட்டுள்ளதோடு தற்போது இது தொழிற்பட்டு வருகின்றது.

ஆண்டினுள், ரூபா 1,224.21 மில்லியன் பெறுமதியான 26 ஒப்பந்த ஆவணங்கள் தயாரிக்கப்பட்டதோடு, தேவைக்கு அதிகமான மற்றும் பயன்பெறப்படாத பொருட்கள் தொடர்பில் 47 மில்லியன் மதிப்பீட்டுப் பெறுமதியைக் கொண்ட 85 சரக்குத் தொகுதிகளுக்கு விலைக் கேள்விகள் கோரப்பட்டது. 2020 ஆம் ஆண்டினுள், வரவு செலவுத்திட்ட ஒதுக்கீட்டினுள் எதிர்பார்க்கப்பட்ட குறிக்கோள்களை எய்துவதற்கு வழங்கல்கள் மற்றும் பொருட்கள் முகாமைத்துவப் பிரிவினால் இயலுமாயிருந்ததோடு, ஒட்டுமொத்த செயலாற்றுகை எதிர்பார்க்கப்பட்ட மட்டத்தில் காணப்பட்டது.

நாட்பட்ட சிறுநீரக நோய் (CKDu) நிகழ்ச்சித்திட்டம்

காரணம் அறியப்படாத நாட்பட்ட சிறுநீரக நோய் (CKDu) இலங்கையில் பாரியதொரு சுகாதாரப் பிரச்சினையாக உருவாகியுள்ளது. ஆரம்ப கட்டத்தில் இது வட மத்திய மற்றும் ஊவா மாகாணத்திற்கு மாத்திரம் மட்டுப்பட்டதாயிருந்தது. தற்போது இது வடமேற்கு, வடக்கு, மத்திய, கிழக்கு, சப்பிரமுவ மற்றும் தென் மாகாணங்களிலும் அதிகமாகக் காணப்படுகின்றது.

இதற்கிணங்க, உலக சுகாதார அமைப்பு (WHO) மற்றும் மருத்துவ தொழில்வாண்மையாளர்களால் விதந்துரைக்கப்பட்டவாறு CKDu பாதிப்புக்குள்ளாகிய பிரதேசங்களுக்கு பாதுகாப்பான குடிநீரை வழங்குவதற்கு தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை (தே.நீ.வ.வ.ச.) குறுகியகால, நடுத்தரகால மற்றும் நீண்டகால மூலோபாயங்களையும் செயற்திட்டத்தையும் அபிவிருத்தி செய்துள்ளது.

2020 ஆம் ஆண்டினுள் ரூபா 273.72 மில்லியன் நிதி முதலீடு செய்யப்பட்டு பல CKDu தடுப்புச் செயற்பாடுகள் தே.நீ.வ.வ.ச. யினால் நகர அபிவிருத்தி, நீர் வழங்கல் மற்றும் வீடமைப்பு வசதிகள் அமைச்சின் ஒத்துழைப்புடன் அமுல்படுத்தப்பட்டது. நீர் சுத்திகரிப்புப் பொறித்தொகுதிகளை வழங்கிப் பொருத்துதல், நீர்க் குழாய் நீடிப்புகள், புதிய கிராமிய நீர் வழங்கல் திட்டங்கள் அல்லது அவற்றின் மேம்பாடுகள், குழிக் கிணறுகளை நிர்மாணித்தல், சிறிய RO பொறித் தொகுதிகளை வழங்கிப் பொருத்துதல், மழை நீர் சேகரிப்புத் தாங்கிகளை பொருத்துதல், பவுசர்களின் மூலம் நீர் வழங்குதல், நீர் தரப் பரிசோதனை, RO பொறித் தொகுதிகள் மற்றும் கைப்பம்பிகளின் திருத்தம் ஆகியன பிரதானமாக இந்த நிதி ஒதுக்கீட்டின் ஊடாக மேற்கொள்ளப்பட்டது.

அபிவிருத்தி

அபிவிருத்திப் பிரிவானது பிரதானமாக நீர் வளமூலம் மற்றும் நீர் பாதுகாப்புத் திட்டமிடல் (WSP) சார்ந்த செயற்பாடுகளில் ஈடுபட்டது.

நீர் உள்ளீர்ப்பு தொடர்பில் எதிர்நோக்கிய மற்றும் அனுபவிக்க நேரிட்ட பிரச்சினைகள் தொடர்பாகவும் அதேபோன்று குறித்த நிறுவனங்களிலிருந்து நீர் உள்ளீர்ப்பு உரிமையைப் பெறாது புதிய நீர் கருத்திட்டங்களை அமுலாக்குகின்றபோது எழுகின்ற சிரமங்கள் தொடர்பாகவும் விரிவாக கலந்துரையாடுவதற்கு தரப்பினர்களுக்கு மத்தியில் நீரை பகிர்ந்துகொள்வதற்கான உயர் மட்ட வழிப்படுத்தல் குழு 2019 இல் ஆரம்பித்து வைக்கப்பட்டது. அமைச்சரவைத் தீர்மானத்தின்படி, பிரதம மந்திரியின் செயலாளரால் நியமிக்கப்பட்ட நிபுணர்கள் குழுவினால் உருவாக்கப்படவுள்ள ஒருங்கிணைந்த நீர் மூலவள முகாமைத்துவத்திற்கான பொதுவானதொரு பொறிமுறையொன்றைத் தாபிப்பதற்கு அபிவிருத்திப் பிரிவு பங்களிப்புச் செய்தது.

அனைத்து RSCs க்களிலும் 2020 – 2025 ஒருங்கிணைந்த திட்டத்துடன் தொடர்புடைய நீர் மூலவளப் பிரச்சினைகளை கண்காணித்து இணைப்பாக்கம் செய்தல், புதிய CP சார்ந்த நீர் மூலவளத் தரவுத் தளத்தை தயாரித்தல், பராமரித்தல் மற்றும் இற்றைப்படுத்தல், நீர் உள்ளீர்ப்புத் தேவைப்பாட்டுடன் தொடர்புடைய புரிந்துணர்வு உடன்படிக்கை (MOU) பற்றிய இறுதி முடிவு எடுத்தல், உள்வாங்கு நிலைய வடிவமைப்புக்கான அங்கீகாரத்தைப் பெறுவதற்கான ஏற்பாடுகளைச் செய்தல் ஆகியவற்றின் பொருட்டு மகாவலி அதிகாரசபை மற்றும் நீர்ப்பாசத் திணைக்களத்துடன் இணைந்து செயலாற்றியது.

மேலும், வீட்டு மற்றும் கைத்தொழில் துறையில் நீர் பயன்படுத்தப்படுதல் படிப்படியாக அதிகரித்து வருவதைத் தொடர்ந்து மற்றும் காலநிலை மாற்றத்தின் பெறுபேறாக குறிப்பாக, குடிநீர் நோக்கத்திற்காக மூடிய நீர்த் தேக்கங்கள் அறிமுகப்படுத்தப்பட வேண்டியுள்ளன. உத்தேச நீர்த் தேக்கங்களுக்காக வீஓயா, யட்டிமஹன மற்றும் வந்துருபீனுஎல்லவுக்கான சாத்தியவளக் கற்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதோடு, யட்டிமஹன சாத்தியவளக் கற்கை நிறைவு செய்யப்பட்டுள்ள அதேவேளை EIA நடைபெற்று வருகின்றது.

RSCs க்களில் WSP பற்றிய கண்காணிப்பு மற்றும் நடைமுறைப்படுத்தலுக்கான வழிகாட்டல்கள் வழங்கப்பட்டமை, WSP மதியுரை அலகுடன் பிரச்சினைத் தீர்வு தொடர்பில் யோசனை தெரிவிக்கும் அமர்வுகளை நடத்துதல், குறித்த பிராந்தியங்களில் WSP பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை நடத்துவதன் மூலம் உள்ளக முறைசாரா கணக்காய்வு மற்றும் உள்ளக முறைசார் கணக்காய்வுகளை நடத்துதல் ஆகியன ஆண்டினுள் மேற்கொள்ளப்பட்ட ஒருசில ஏனைய பணிகளாகும்.

வெளிவாரி முறைசார் கணக்காய்வுப் பெறுபேறுகள் மற்றும் WSP நடைமுறைகளின் முன்னெடுப்புகளை முகாமைத்துவத்திற்குப் பகிர்ந்கொள்ளும் பொருட்டு 2020 ஜூலை மாதத்தில் WSP மதியுரை செயலமர்வொன்றை WSR மதியுரை அலகு, WSP அலகு மற்றும் அபிவிருத்திப் பிரிவு நடாத்தியது. செயலமர்வு நடைபெற்ற அதே தினத்தில் "அனைவருக்கும் பாதுகாப்பான குடிநீரை முன்னிட்டான பயணம்" பற்றிய WSP சுதேச அறிக்கை ஆரம்பித்து வைக்கப்பட்டது.



WSP தொடர்பில் ஆதரவு திரட்டும் செயலமர்வு

ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி

2020 ஆம் ஆண்டினுள் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திப் பிரிவின் மூலம் பல ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திச் செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன. விளிம்புப் பாதுகாப்பு மரக்கசிவுப் பிசின் பொருட்களுக்கும் (Mastic Material) துருப்பிடிக்காத ஆணிகள் மற்றும் ஆணிப் பொருத்திகளுக்கும் இடையிலான ஒப்பீடு உள்ளடங்கிய விளிம்புப் பாதுகாப்பு மரக்கசிவுப் பிசின் பொருட்கள் தொடர்பிலான கற்கை, களுபோவிலையில் உள்ள கொழும்பு தெற்கு போதனா வைத்தியசாலை குடிநீரின் உள்வாங்கும் தரம் மற்றும் டிரை ஆறு நீர் சுத்திகரிப்புப் பெரித்தொகுதியின் பாசிவகைகளின் மட்டத்தைக் குறைத்தல் ஆகியன தொடர்பிலான கற்கைகள் ஆண்டினுள் மேற்கொள்ளப்பட்டன. மேலும், கொத்தலாவல பல்கலைக் கழக மாணவர் ஒருவருடன் சேர்ந்து மீரிகம நீர் சுத்திகரிப்புப் பொறித்தொகுதியில் நிலக்கீழ் நீரிலுள்ள இரும்புத்தாதை வினைத்திறன்மிக்க விதத்தில் நீக்குவதற்கான ஆராய்ச்சிக் கற்கையொன்றும் மேற்கொள்ளப்பட்டது.

உண்ணிச்சை, பூகொட, மாவத்தகம, கொக்கரெல்ல ஆகிய இடங்களிலுள்ள பொதிய நீர் சுத்திகரிப்புப் பொறித்தொகுதி சம்பந்தப்பட்ட சில விடயங்களுக்கான தீர்வுகளை வழங்குவதற்கான ஆலோசனை, நீர்கொழும்பிலுள்ள RO வடிகட்டலுக்கான விவரக்கூற்றைத் தயாரித்தல், வடிவமைப்பு மீளாய்வின் மூலம் பொதியப் நீர் சுத்திகரிப்புத் தொகுதிகளின் மேம்பாடு மற்றும் O&M பிரச்சினைகளை கையாளுதல் மற்றும் தேவையான தரவுத் தளங்களை உருவாக்குதல் ஆகியன ஆண்டினுள் மேற்கொள்ளப்பட்ட ஏனைய சில பணிகளாகும்.

மேலும், ION Exchange இந்தியா நிறுவனத்துடன் சேர்ந்து கிராமிய சூழமைவில் ION Exchange நீர் சுத்திகரிப்பு முறைமையின் நிலைபேறான தன்மையை மதிப்பீடு செய்வதற்கும் JRDC உடன் குறைந்த கொள்ளளவு நீர் சுத்திகரிப்பு முறைமைக்கான (நெனோ வடிகட்டல், புளோரைட் நீக்கம் மற்றும் EDR) உயர் நீர் சுத்திகரிப்பின் நிலைபேறான தன்மையை மதிப்பீடு செய்வதற்குமான ஒன்றிணைந்த கற்கை மேற்கொள்ளப்பட்டது.

மேற்படி விடயங்களைத் தவிர, நிலக்கீழ் நீர், தன்னியக்க முறைமை, நீர் சுத்திகரிப்பு ஆகிய விடயங்களில் தே.நீ.வ.வ.ச.யின் பணியாளர்களால் வேறு சில கற்கைகள் மேற்கொள்ளப்பட்டதோடு, R&D பிரிவின் மூலம் இவற்றிற்கு வசதியேற்பாடு செய்யப்பட்டது.

புவித் தகவல் முறைமை (GIS) மற்றும் வரைபடமாக்கல்

அம்பலாந்தோட்ட, வீரகெட்டிய மற்றும் கதிர்காமம் நீர் வழங்கல் திட்டங்களுக்கான (முறையே 75, 176 மற்றும் 144 கி.மீ. நீளமான குழாய்கள் மற்றும் 75, 105 மற்றும் 120 வால்வுத் தலங்கள்) GPS கள மதிப்பீடுகள் நிறைவு செய்யப்பட்டு வரைபடங்கள் RSC தெற்குக்கு கையளிக்கப்பட்டதோடு, லபுகம - கலட்டுவாவ பிரதான விநியோக குழாய்களுக்கான (19 பாலங்கள்) மதிப்பீடுகள் நிறைவு செய்யப்பட்டு தலைமை அலுவலகம், P&D பிரிவுக்கு வரைபடங்கள் கையளிக்கப்பட்டன.

ஊவா RSCயில் புத்தள, செவனகல, கிழக்கு RSCயில் லிஹினியாகம மற்றும் சதுன்புர தெற்கு RSCயில் அம்பலாந்தோட்ட மற்றும் வடமேற்கு RSCயில் கல்கமுவவின் மூல வபைடங்கள் மற்றும் நீர் பயன்பாடுகளின் எண்முறையாக்கல் மேற்கொள்ளப்பட்டு அனைத்துத் தரவுகளும் குறித்த RSCs க்களுக்கு கையளிக்கப்பட்டன.

தற்போதுள்ள கிராம அலுவலர் பிரிவு (GND) ரீதியிலான தே.நீ.வ.வ.ச. நீர் வழங்கல் உள்ளடக்கம், நடைமுறையிலுள்ள கருத்திட்டங்கள், உத்தேச கருத்திட்டங்கள், RWS திட்டங்கள், 2020, 2025, 2030 மற்றும் 2050 ஆம் ஆண்டுகளுக்கான எதிர்வுகூறப்பட்ட சனத்தொகை அடர்த்தி வரைபடங்கள், நீர் உள்வாங்கு நிலையங்களுடன் கூடிய பிரதான ஆற்றுப் படுகைகள் ஆகியன உள்ளடங்கிய விரிவான வீச்சிடையிலான தகவல்களைக் கொண்ட வரைபடங்கள் நீர் வழங்கல் மற்றும் துப்புரவேற்பாட்டுத்துறைக்கான அனைத்தும் உள்ளடங்கிய மூலோபாய முதலீட்டுத் திட்டத்திற்காகப் (பிரதான திட்டம்) பயன்படுத்தப்படும் பொருட்டு ஒவ்வொரு மாவத்திற்குமாக தயாரிக்கப்பட்டன.

தே.நீ.வ.வ.ச.க்காக ஏனைய முக்கியமான வரைபடங்களான களஞ்சியங்களின் அமைவிடம், ஆறுகள் மற்றும் குளங்களிலிருந்து நீர் உள்ளீர்க்கப்படும் அமைவிடங்கள் நீர் சுத்திகரிப்புப் பொறித்தொகுதி மற்றும் ஆற்றுப் படுகைகள் ரீதியில் தயாரிக்கப்பட்டன. இலங்கை மின்சார சபை, இலங்கை பெற்றோலியம் கூட்டுத்தாபனம் மற்றும் நகர அபிவிருத்தி அதிகாரசபை ஆகியவற்றுக்கு முறையே பத்தரமுல்ல, கொழும்பு நகர மற்றும் கெஸ்பேவ நீர் பயன்பாட்டு வரைபடம், பரந்தன் இரசாயனக் கம்பனிக்காக தே.நீ.வ.வ.ச. நீர் சுத்திகரிப்புப் பொறித்தொகுதி வரைபடங்கள் மற்றும் சுற்றாடல் அமைச்சு மற்றும் மத்திய சுற்றாடல் அதிகாரசபைக்காக தே.நீ.வ.வ.ச. நீர் உள்வாங்கு நிலைய வரைபடங்கள் (தற்போதுள்ள மற்றும் உத்தேச) ஆகியன வெளிவாரி நிறுவனங்களின் வேண்டுகோளுக்கமைய தயாரிக்கப்பட்டு கையளிக்கப்பட்டன.

அத்துடன், நீர் பயன்பாட்டு தொடர்பிலான GIS இன் நிறைவு செய்தலைத் துரிதப்படுத்தல் மற்றும் நிலைபேறான தன்மை தொடர்பிலும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. GIS வடிவத்தில் நீர் பயன்பாடுகளின் வலையமைப்பை வரைதல்களைக் கட்டியெழுப்புகின்றவாறு தயாரிப்பதற்கான விவரக்கூற்று குறித்த கேள்விப்பத்திர ஆவணங்களில் சேர்க்கப்படுவதற்காக ஆவணப்படுத்தல் பிரிவுக்கு கையளிக்கப்பட்டது. முறைமைக் கூற்றுடனான மீதி குழாய் வலையமைப்பின் டிஜிட்டல் மயப்படுத்தல் தொடர்பில் பொது முகாமையாளரின் (GM) சுற்றறிக்கை RSCs க்களுக்கு சமர்ப்பிக்கப்பட்டது.

நீர் பாதுகாப்புத் திட்டங்கள் (WSPs)

தொடர்ச்சியாக பாதுகாப்பான குடிநீர் வழங்கலை உறுதிசெய்வதற்கான மிகவும் பயனுள்ள வழிமுறையாக நீர் பாதுகாப்புத் திட்டத்தை (WSP) உலக சுகாதார நிறுவனத்தின் (WHO) குடிநீர் தரத்துக்கான வழிகாட்டல்கள் சிபாரிசு செய்கின்றன.

இதன் நன்மைகளைப் புரிந்துகொண்டு, தே.நீ.வ.வ.சபையின் கீழ் பராமரிக்கப்படுகின்ற மொத்த நீர் வழங்கல் திட்டங்களில் ஏறத்தாழ 82% ஆன 281 நகர நீர் வழங்கல் திட்டங்களில் (2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு) WSPs கள் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன. இதற்கு மேலதிகமாக, அடுத்துவரும் 05 ஆண்டுகளுக்காக WSP நடைமுறைப்படுத்தல் மட்டத்தை கண்காணிக்கும் பொருட்டு பாதுகாப்பான குடிநீரின் பிரதானமான பெறுபேறுகளைக் கொண்ட பிரதேசங்களின் கீழ் மூன்று பிரதானமான செயலாற்றுகைச் சுட்டிகள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.

மேலும், நில மட்டப் பிரயோகங்களின் விளைதிறனை உறுதிப்படுத்துவதற்காக 29 உள்ளக முறைசார்ந்த கணக்காய்வுகளும் 34 உள்ளக முறைசாரா கணக்காய்வுகளும் மேற்கொள்ளப்பட்டன. இதற்கு மேலதிகமாக, தே.நீ.வ.வ.சபையானது இலங்கை பொறியியலாளர்கள் நிறுவனம் (IESL), மற்றும் WHO உள்நாட்டு அலுவலகம் ஆகியவற்றுடன் இணைந்து முதற் தடவையாக தென் கிழக்கு மற்றும் தென் ஆசிய பிராந்தியத்தில் 14 வெளிவாரியான முறைசார்ந்த கணக்காய்வை மேற்கொண்டது.

அவற்றைத் தவிர, நாட்டின் 7 மாவட்டங்களில் WSPs க்களின் அமுலாக்கல் நடவடிக்கைகளை பலப்படுத்தும் பொருட்டு உலக வங்கி உதவியுடனான நீர் வழங்கல் மற்றும் துப்புரவேற்பாட்டு மேம்பாட்டுக் கருத்திட்டம் (WaSSIP) கைகொடுத்துள்ளது. மேலும், நாடு முழுவதிலும் அனைத்து பிராந்திய சமூக மைய அமைப்புக்களிலும் WSPs ஐ பிரயோகிப்பதில் தேசிய சமுதாய நீர் வழங்கல் திணைக்களம் (DoNCWS) முன்னிலை எடுத்துள்ளது.

இலங்கை அரசாங்கத்தின் "அனைவருக்கும் நீர்" மற்றும் தே.நீ.வ.வ.சபையின் "சுபீட்சமான வாழ்க்கைக்கு பாதுகாப்பான நீர்" என்ற நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் நிலைபேறான அணுகுமுறை மேற்கொள்ளப்படுதை WSPs களின் நடைமுறைப்படுத்தல் உறுதிப்படுத்தும்.



“நீர் இன்றேல், வாழ்க்கை நிலைகுலையும்.”

அந்தனி ரீ. ஹின்க்ஸ்




உட்கட்டமைப்பு அபிவிருத்தி

ருகுணுபுர நீர் வழங்கல் திட்டம்

பிராந்திய உதவி நிலையங்கள்

மாகாணம்/பி.உ.நி.	இணைப்புகள்
மத்திய	291,357
கிழக்கு	303,391
வட மத்திய	144,495
வடமேல்	95,308
வடக்கு	31,575
சப்பிரகமுவ	127,668
தென்	343,093
ஊவா	120,006
மேல் - மத்திய	515,176
மேல் - வடக்கு	305,299
மேல் - தெற்கு	282,869
மொத்தம்	2,560,237



பிராந்திய உதவி நிலையங்கள்

மேல் - மத்திய

மேல் மத்திய பிரதேச உதவி நிலையமானது (RSC-WC) கொழும்பு நகரம் வடக்கு (CCN), கொழும்பு நகரம் தெற்கு (CCS), கோட்டை மற்றும் மஹரகம முகாமையாளர் பிராந்தியங்களை உள்ளடக்குகின்றது.

RSC (WC) யின் வருவாயற்ற நீர் (NRW) பிரிவானது இரவுகால கசிவு ஆய்வு, கசிவு கண்டுபிடிப்பு, சட்டவிரோத பயன்பாடுகளைக் கண்டுபிடித்தல், பழுதடைந்த மானிகளை மாற்றீடு செய்தல், கசிவுத் திருத்தங்கள் மற்றும் DMA வலயங்களைத் தனிமைப்படுத்தல் ஆகிய பல NRW குறைப்புச் செயற்பாடுகளை மேற்கொண்டது. GCWWMIIP மூலம் NRW கண்காணிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதோடு, பயிற்சிப் பிரிவுடன் இணைந்து தே.நீ.வ.வ.ச. பிராந்திய பணியாளர்களுக்கு NRW முகாமைத்துவம் தொடர்பில் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களும் நடத்தப்பட்டன. குறித்த ஆண்டினுள் கொழும்பு நகரத்தின் NRW ஐ 40.2% இல் இருந்து 39.12% ஆகவும் NRW (WC) ஐ 30.7% இல் இருந்து 29.53% ஆகவும் குறைக்க முடியுமாயிருந்தது.

மஹரகம மற்றும் கோட்டை முகாமையாளர் பிரதேசங்களில் நடைபெறுகின்ற துரித உட்கட்டமைப்பு அபிவிருத்திகளின் காரணமாக மஹரகம மற்றும் கலவிலவத்த பம்பி நிலையங்களில் நெருக்கடியான நிலைமையொன்று அடையாளம் காணப்பட்டது. புதிய பம்பிகளின் வழங்கல் மற்றும் பொருத்துதல் தொடர்பில், பல மாதங்கள் எடுக்கக்கூடிய பெறுகைகள் நடைமுறை தேவைப்பட்டிருந்ததோடு, கூறப்பட்ட இரண்டு இடங்களுக்கும் பொருத்தமான, ஏனைய இடங்களிலிருந்து இடமாற்றம் செய்யப்பட்ட பம்பிகளைக் கொண்டு தே.நீ.வ.வ.ச.யில் கிடைக்கத்தக்கதாயுள்ள மனித வலுவைப் பயன்படுத்துவதன் மூலம் முதலீடுகள் இல்லாத கருத்திட்டங்களின் இயலளவை மேம்படுத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டு கருத்திட்டங்கள் 2020 ஆகஸ்ட்டுக்கு முன்னர் நிறைவு செய்யப்பட்டன.

மஹரகம பம்பி நிலையத்தில் தற்போதுள்ள 1,580 க.மீ./மணி. பம்பி, 1,770 க.மீ./மணி. கொள்ளளவு கொண்ட பம்பியின் பதிலீடு செய்யப்பட்டதோடு, இது எதிர்காலத்தில் பதிலீடு செய்யப்படும் வரை 190 க.மீ./மணி. கொள்ளளவு மேம்பாட்டுடன், 4 கடமை நேர நிலைமையை முறியடித்து 3 கடமை நேரங்களும் 1 தயார்நிலை வசதியுடனும் கூடிய நிலையை உருவாக்கியுள்ளது.

அத்துடன், கலவிலவத்தவில் தற்போதுள்ள 190 க.மீ./மணி. பம்பி, 370 க.மீ./மணி. பம்பியின் மூலம் பதிலீடு செய்யப்பட்டதோடு, இது எதிர்காலத்தில் பதிலீடு செய்யப்படும் வரை, 180 க.மீ./மணி.கொள்ளளவு மேம்பாட்டுடன், 3 கடமை நேர நிலைமையை முறியடித்து 1 கடமை நேரமும் 2 தயார்நிலை வசதியுடனும் கூடிய நிலையை உருவாக்கியுள்ளது.

RH வரவு செலவுத்திட்டத்தின் ஊடாக, ஜுபிலி பம்பி நிலையத்திற்காக, உச்ச பயன்பாட்டு நேரங்களில் ஏற்படுகின்ற கேள்வியை நிறைவு செய்வதற்காக தற்போதுள்ள இரண்டு 200 க.மீ./மணி. பம்பிகள் மற்றும் 300 க.மீ./மணி. கொள்ளளவு கொண்ட பம்பிகளைக் கொண்டு பதிலீடு செய்தல், மற்றும் தயார்நிலை வசதிகளை வழங்குவதன் மூலம் தற்போதுள்ள 800 க.மீ./ம. ஜுபிலி விநியோக பம்பியை 1,300 க.மீ./மணி. கொள்ளளவு கொண்ட பம்பியைக் கொண்டு பதிலீடு செய்தல் ஆகியன விலைக்கேள்வி அளிப்புக் கட்டத்தில் உள்ளன.

RH வரவு செலவுத்திட்டத்தின் கீழ் வலுசக்திச் சேமிப்புச் செயற்பாடு என்ற வகையில், மாளிகாகந்த புதிய கட்டடத்தில் மின் தூக்கிகள் மற்றும் வளிச் சீராக்கிகள் இயங்க எடுக்கும் மணித்தியாலங்களை கட்டுப்படுத்தப்பட்டதன் மூலம் மாதாந்தம் ரூபா 40,000 மற்றும் நாகஸ்வத்த பம்பி நிலையத்தில் தன்னியக்க பம்பி முறைமை பிரயோகிக்கப்பட்டதன் மூலம் மாதாந்தம் ரூபா 8,000 சேமிக்க முடியுமாயிருந்தது.

2020 ஆம் ஆண்டு காலத்தினுள், வழமையான குழாய் நீட்டிப்பு நிகழ்ச்சித்திட்டத்தின் ஊடாக பிராந்தியத்தில் 41 கி.மீ. (90 மி.மீ. – 225மி.மீ.) விநியோக நீடிப்பு மேற்கொள்ளப்பட்ட அதேவேளை, மஹரகமவில் விரைவுபடுத்தல் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் O&M வரவு செலவுத்திட்டத்தின் ஊடாக ஆதன அபிவிருத்திக் காணிகளுக்கு 198 கி.மீ. (63மி.மீ. – 90 மி.மீ.) குழாய் நீடிப்பு.'. பொது குழாய்/ நீர் வழங்கல் மேற்கொள்ளப்பட்டது.

முழுமொத்த RSC (WC) க்கான ஆண்டுக்கான கட்டணப் பட்டியலிடல் இலக்கு ரூபா 8,890 மில்லியன் (106% அடைவு) ஆகின்ற அதேவேளை, 87% சேகரிப்பு வினைத்திறனுடன், ரூபா 7,725 மில்லியன் சேகரிப்பு காணப்பட்டதோடு, ஆண்டின் இறுதியாகின்றபோது கடன் காலகட்டம் 2.2 மாதங்களாகும்.

பென்ரித்வத்த, அவிசாவலை நீர் வழங்கல் திட்டத்தில் நீர் சுத்திகரிப்புப் பொறித்தொகுதியின் விரிவாக்கம் விலைக்கேள்வி கோரல் கட்டத்தில் உள்ளதோடு, அவிசாவலை – ஹெல்தொட்டவத்த உள்வாங்கு நிலைய மேம்பாடு ஆவணங்கள் தயாரிப்புக் கட்டத்தில் உள்ளது.

மேல் - தெற்கு

RSC (WS) அலுவலகம் மற்றும் முகாமையாளர் (தெஹிவல) பிராந்தியம், முகாமையாளர் (பாணந்துறை-ஹொரனை) பிராந்தியம், முகாமையாளர் (களுத்துறை) பிராந்தியம் ஆகிய 03 பிராந்திய முகாமையாளர் அலுவலகங்களை பிராந்திய உதவி நிலையம் (மேல் தெற்கு) RSC (WS) உள்ளடக்குகின்றது.

2020 ஆம் ஆண்டு காலத்தினுள் RSC யினுள் பல விசேட நிகழ்வுகள் நடைபெற்றதோடு 2020 ஆம் ஆண்டுக்காக அட்டவணைப்படுத்தப்பட்டிருந்த சில விசேட நிகழ்ச்சித்திட்டங்கள் கோவிட் - 19 தொற்றுநோய் நிலைமையின் காரணமாக பிற்போடப்பட்டன. RSC (WS) அலுவலகமானது தேசிய உற்பத்தித்திறன் விருது – 2018/2019 மற்றும் 5S சான்றிதழ் போட்டிக்கு விண்ணப்பித்தது. RSC (WS) அலுவலகம் மூன்று முகாமையாளர் அலுவலகங்களுடன் சேர்ந்து களுத்துறை பிராந்தியத்தில் தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகளில் சித்திரப் போட்டி, சில நீர் பாதுகாப்பு விழிப்புணர்வூட்டல் நிகழ்ச்சித்திட்டங்கள் ஆகியவற்றை ஏற்பாடு செய்ததோடு, உற்பத்தித்திறன் மேம்பாட்டை இலக்காகக் கொண்டு RSC (WS) அலுவலகத்தில் 17 பௌதீக மற்றும் இணையவழி பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை ஏற்பாடு செய்தது.

RSC (WS) வளவில் வாகனத்தைச் ஓட்டிச் செல்கின்றபோதே கட்டணப் பட்டியல்களைச் செலுத்துகின்ற முறைமை பூர்த்தியடைந்துள்ளதோடு நுகர்வோருக்கு திறந்து வைக்கப்பட்டுள்ளது.

அனைத்து பிராந்தியங்களிலும் மொத்த மானிகளை திருத்தல் மற்றும் பதிலீடு செய்தல், பேருவளை மற்றும் தெஹிவல/ மொரட்டுவ பிரதேசங்களில் AC குழாய்களை பதிலீடு செய்தல் அல்விஸ் பிளேஸ் நீர்த் தேக்கத்தில் கசிவுத் திருத்தங்கள் ஆகியன மூலம் வருவாயற்ற நீர் பெறுமானத்தைக் குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. பாணந்துறையின் தெரிவு செய்யப்பட்ட முன்னோடி வலயங்களில் தீவிர கசிவுக் கட்டுப்பாடு தொடர்பில் கவனம் செலுத்தி பாணந்துறை பிரதேசத்தில் "தே. நீ.வ.வ.ச., RSC (WS) இன் தொழிற்பாட்டு வினைத்திறன் மற்றும் ஆதன முகாமைத்துவத்துவ கொள்ளளவு மேம்பாடு" தொடர்பில் விசேட JICA நிதியளிப்புக் கருத்திட்டம் நடைபெற்று வருகின்றது.

பேருவளை மற்றும் சொய்சாபுர பம்பி நிலையங்களில் உயர் உயர்த்திப் பம்பித் தொகுதிகளை பொருத்துதல் போன்ற சக்திச் சேமிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. அதற்குறிய நிதி மூலங்கள் முறையே சக்தி மற்றும் புனரமைப்பு நிதியங்களாகும்.

சில கிராமிய நீர் வழங்கல் திட்டங்கள் (RWS) உள்ளிட்ட பல

பிரதேசங்களில் நீர் தர கண்காணிப்பு மற்றும் நீர் பாதுகாப்பு செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன. 76,500 நலன்பெறுனர் குடும்பங்களுக்கு 17,000 இணைப்புகள் வழங்கும் 132 CBO திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டு 20 திட்டங்கள் நடைபெற்று வருகின்றன. பிராந்தியத்தின் அனைத்து பத்து நீர் பாதுகாப்புத் திட்டங்களும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன. அவற்றில் ஐந்து நீர் பாதுகாப்புத் திட்டங்கள் திருத்தியமைக்கப்பட்டன.

இவற்றிற்கு மேலதிகமாக, மொத்தம் 57.9 கி.மீ. நீளத்திற்கான குழாய் நீட்டிப்புகள் (களுத்துறை பிராந்தியத்தில் 20.17 கி.மீ., பாணந்துறை-ஹொரண பிராந்தியத்தில் 35.16 கி.மீ., தெஹிவளை பிராந்தியத்தில் 2.57 கி.மீ.) பூர்த்தி செய்யப்பட்டுள்ளது. ஆண்டு முழுவதிலும் அனைத்து பிராந்தியங்களிலும் பல மீள்செறிவூட்டல் மற்றும் புனரமைப்பு நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டன.

வரட்சிக் காலநிலைமையின் காரணமாக களுத்துறை முகாமையாளர் பிரதேசம் உவர் நீர் ஊடுருவுகின்ற தீவிர பிரச்சினையை எதிர்நோக்கியது. தற்காலிக தீர்வாக, முழுதாக (களுத்துறை) முகாமையாளர் பிரதேசத்தையும் உள்ளடக்குகின்றவாறு பவுசர் மூலம் நீர் வழங்கல் ஏற்பாடு செய்யப்பட்டது. நடுத்தரகாலத் தீர்வாக வரட்சிக் காலத்தில் கெத்ஹேன சுத்திகரிப்புப் பொறித்தொகுதிக்கு மூல நீர் அனுப்பப்படுவதை இலக்காகக் கொண்டு கொலமோதரவில் உள்வாங்கு நிலையமொன்றை நிர்மாணித்தல் ஆரம்பிக்கப்பட்டது. இதற்கு மேலதிகமாக, களுகங்கையின் நதி முகத்துவாரத்திற்கு அண்மித்ததாக ஒரு உவர்ப்பு நீர்த் தடையை அமைப்பதற்கு நீர்ப்பாசனத் திணைக்களத்தின் மூலம் சாத்தியவளக் கற்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

2020 – 2025 கூட்டிணைந்த திட்டத்தில் பின்வரும் பாரிய கருத்திட்டங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன. இங்கிரிய நீர் வழங்கல் திட்ட மேம்பாடு, கந்தானை நீர் சுத்திகரிப்புப் பொறித்தொகுதியின் கொள்ளளவு மேம்பாடு, அல்விஸ் பிளேஸில் இருந்து வாத்துவ வரையிலான பிரதான அனுப்பல் குழாயை இடுதல் மற்றும் கெத்ஹேன நீர் சுத்திகரிப்புப் பொறித்தொகுதியில் இருந்து சென்றல் சந்தி வரை 500மி.மீ. விட்டத்தைக் கொண்ட DI குழாய்களை இடுதல் ஆகியன 2020 ஆம் ஆண்டில் வடிவமைப்புகள் நிறைவு செய்யப்பட்ட கருத்திட்டங்களாகும். இதற்கு மேலதிகமாக, களுத்துறை மாவட்டத்தில் மத்துகம/ அகலவத்தை பிரதேசத்தின் விநியோக விஸ்தரிப்பு தொடர்பிலான வடிவமைப்புகள் மற்றும் கெத்ஹேன மேம்பாட்டின் முன்-சாத்தியவளக் கற்கை மற்றும் கருத்திட்ட விஸ்தரிப்பு ஆகியன முன்னெடுக்கப்பட்டன. களுகங்கை நீரேந்து பிரதேச பாதுகாப்புக்கான பல்தரப்பு பங்காண்மை அணுகுமுறையின் முன்-சாத்தியவளக் கற்கை நிறைவு செய்யப்பட்டது.

முகாமையாளர் (பாணந்துறை – ஹொரனை) பிராந்தியத்தின் உள்ளடக்க மேம்பாட்டுக்கு இங்கிரிய - ஹந்தபான்கொட நீர் வழங்கல் கருத்திட்டம் முன்மொழியப்பட்டுள்ளது.

அனைத்து மூன்று பிராந்தியங்களும் மானி வாசிப்புப் பிரயோக மென்பொருளைப் பயன்படுத்தி அவர்களது மானி வாசிப்பை 100% மேற்கொண்டுள்ளது. 2020 ஆம் ஆண்டினுள் தே.நீ.வ.வ.ச. யின் விசேட புலனாய்வுப் பிரிவு 26 சட்ட விரோத இணைப்புகளை RSC (WS) பிராந்தியத்தினுள் உறுதிசெய்துள்ளது.

மேல் - வடக்கு

பிராந்திய உதவி நிலையமானது (மேல் - வடக்கு), கடவத்தையில் RSC (WN) அலுவலகத்தையும் முகாமையாளர் (களனி) மற்றும் முகாமையாளர் (கம்பஹா) ஆகிய 02 பிராந்திய முகாமையாளர் அலுவலகங்களை உள்ளடக்கியுள்ளது.

RSC (WN) மற்றும் இரண்டு முகாமையாளர் அலுவலகங்களும் 2020 இல் 2018/2020 உற்பத்தித்திறன் விருதுக்கும் மற்றும் 5S சான்றிதழ் போட்டிக்கும் விண்ணப்பித்தது. நீர்கொழும்பு ஆய்வுகூடம் தேசிய உற்பத்தித்திறன் நிறுவனத்திலிருந்து "5S" சான்றிதழை பெற்றுள்ளது. RSC (WN) தகவல் தொழில்நுட்பப் (IT) பிரயோகம் மற்றும் உற்பத்தித்திறன் மேம்பாட்டை இலக்காகக் கொண்டு 12 பௌதீக மற்றும் இணையவழி பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை ஏற்பாடு செய்தது. தொழிற்பாட்டு மற்றும் பராமரிப்பு நடவடிக்கைகளுக்கு வசதிசெய்து கொடுக்கும் பொருட்டு ஒருசில IT சார்ந்த பிரயோகங்கள் அறிமுகப்படுத்தப்பட்டதுடன், மற்றும் வாடிக்கையாளர் அமைவிடங்களில் 90% மற்றும் குழாய் வலையமைப்பில் 85% எண்முறைப்படுத்தப்பட்டுள்ளது.

RSC (WN) ரூபா 19.9 மில்லியனை NRW செயற்பாடுகளுக்காக பெற்றுள்ளதோடு, இந்நிதி ஒதுக்கீடானது மேற்படி பகுதிகளில் NRW குறைப்பை இலக்காகக் கொண்டு நீர் கோபுரங்களின் திருத்தம் மற்றும் பராமரிப்பு அதேபோன்று ரன்பொகுனுகம நீர் வழங்கல் திட்டத்துக்கான DMA முறைமையை ஸ்தாபித்தல் மற்றும் AC குழாய்களை பதிலீடு செய்தல் ஆகியவற்றுக்காக பயன்படுத்தப்பட்டது.

2020 ஆம் ஆண்டில் சக்தி சேமிப்புச் செயற்பாடுகளின் கீழ், பம்பிப் பயன்பாடுகளை உச்சப்படுத்தல் மற்றும் சூரிய சக்திப் படலங்களைப் பொருத்துதல் ஆகியன முன்னெடுக்கப்பட்டன.

கையிருப்பு மட்டத்தைக் குறைக்கும் பொருட்டு, சிறிய களஞ்சியங்கள் ஒன்றிணைக்கப்பட்டு பத்து ஆண்டுகளுக்கு மேல் விநியோகிக்கப்படாதுள்ள பொருட்கள் அடையாளம் காணப்பட்டு தெலவல பிரதான களஞ்சியத்துக்கு கையளிக்கப்பட்டது. களஞ்சிய செயற்பாடுகளுக்கு வசதிசெய்து கொடுக்கும் பொருட்டு பொருட்பட்டியல் முகாமைத்துவ முறைமை (IMS) அறிமுகப்படுத்தப்பட்டது.

கம்பஹா மற்றும் களனி பிரதேசங்களில் அரச நிறுவனங்கள், சமுதாய நீர் வழங்கல் திட்டங்கள், தனியார் நிறுவனங்கள் மற்றும் தனியார் கிணறுகள் உள்ளடங்கியவாறு நீர் தர கண்காணிப்பு மற்றும் நீர் பாதுகாப்புச் செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன. 2020 ஆம் ஆண்டில் கிராமிய நீர் வழங்கல் திட்ட செயற்பாடுகள் என்ற வகையில் ஏறத்தாழ ரூபா 14 மில்லியன் பெறுமதியான வேலைகள் நிறைவு செய்யப்பட்டுள்ளன. 06 நீர் வழங்கல் திட்டங்களுக்கான WSP உள்ளக முறைசார் கணக்காய்வு நிறைவு செய்யப்பட்டதோடு, இதில் பியகம AE விநியோக முறைமை 107 புள்ளிகளைப் பெற்றது, இது இலங்கையில் பதிவு செய்யப்பட்ட அதிஉயர் புள்ளிகளாகும்.

மேலும், ஏறத்தாழ 50 கி.மீ. மொத்த நீளத்தைக் கொண்ட குழாய் நீட்டிப்புகள் நிறைவு செய்யப்பட்டன. ஆண்டு முழுவதிலும் பிராந்தியத்தினுள் ரூபா 115 மில்லியன் பெறுமதியான மீள்செறிவூட்டல் மற்றும் புனரமைப்புச் செயற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டன.

வரண்ட காலநிலைக் காலகட்டத்தில் நீர் பற்றாக்குறையை கட்டுப்படுத்தும் பொருட்டு பவுசர் மூலம் நீர் வழங்கல் மற்றும் வால்வுக் கட்டுப்பாடுகள் போன்ற முறைகள் பயன்படுத்தப்பட்டதோடு, நீர் பிரச்சினைகள் தொடர்பிலான பல்வேறு பொதுமக்கள் வேண்டுகோள்களுக்கும் பதிலிறுப்புக் காட்டப்பட்டு குறுகிய கால தீர்வுகள் வழங்கப்பட்டன.

மீரிகம மற்றும் படலீய நீர் வழங்கல் திட்டங்களில் மேலதிக இரும்புத்தாது உள்ளடக்கத்தை நீக்கி நீர் தரத்தை மேம்படுத்துவதற்கு ஆராய்ச்சிக் கற்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

திட்டமிடல் மற்றும் வடிவமைப்புப் பிரிவு தே.நீ.வ.வ.ச.யின் 2020 – 2025 கூட்டிணைந்த திட்டத்துக்கான உள்ளீடுகளைத் தயார் செய்து, மீரிகம மற்றும் திவுலபிட்டிய ஆகிய பிராந்தியங்களில் இரண்டு பாரிய அளவிலான கருத்திட்டங்களின் விபரமான வடிவமைப்பை ஆரம்பித்துள்ளதோடு, ஆறு நடுத்தர கால மூலோபாயக் கருத்திட்டங்களுக்கான விபரமான வடிவமைப்பு வேலைகளைத் தயாரித்தல் உள்ளடங்கலாக பெறுகைகளுக்குத் தேவையான அனைத்து வேலைகளும் நிறைவு செய்யப்பட்டன.

2020 ஆம் ஆண்டில், RDA பணியாளர்களுடன் நெருக்கமாக இணைந்து RDA 100,000 கி.மீ. நிகழ்ச்சித்திட்டத்துக்கான பெறுகைகள் மற்றும் குழாய் நீடிப்பு வேலைகள் ஆரம்பிக்கப்பட்டன. முன்னேற்றத்தை மீளாய்வு செய்வதற்காகவும் பிரச்சினைகள் பற்றி கலந்துரையாடுவதற்காகவும் RDA அலுவலகர்களுடன் ஒருசில கூட்டங்கள் நடத்தப்பட்டன.

தெற்கு

தென் மாகாணத்தில், ருகுணுபுர மற்றும் முருதவெல நீர் வழங்கல் திட்டங்களின் நீர் பாதுகாப்புத் திட்டங்கள உள்ளக முறைசார் கணக்காய்வில் 100 க்கு மேற்பட்ட புள்ளிகளைப் பெற்று ''சிறந்த'' இடத்தைப் பெற்றது.

வலுசக்தி சேமிப்பு நிதியத்தின் கீழ், காலி பெரும்பாக உள்வாங்கு நிலையத்துக்கான கட்டுப்பாட்டுப் பலகையுடன் கூடிய 03 செங்குத்தான டர்பைன் பம்பிகள் மற்றும் திக்வெல்ல, அராஹேன நீர் வழங்கல் திட்டத்துக்கான விரிமையப் போக்குடைய பம்பித் தொகுதி பதிலீடு செய்யப்பட்டுள்ளது.

ஆண்டினுள் புனரமைப்பு நிதியின் கீழ் பல செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன. பத்தேகம மற்றும் வக்வெல்லவுக்கான இரசாயன அளவு இடும் பம்பிகள், வெவஹமண்டுவ பம்பி நிலையத்துக்கான மேல் உயர்த்திப் பம்பி, நடுகல நீர் சுத்திகரிப்புப் பொறித்தொகுதிக்கான பின்னோக்கிச் செலுத்தும் காற்றோட்ட இயக்கப் பொறி, RSC (S) க்கான மின் தாக்க பாதுகாப்பு முறைமை மற்றும் திஹகொட நீர் வழங்கல் திட்டத்தில் புதிய மின் பிறப்பாக்கி ஆகியன பொருத்தப்பட்டுள்ளன. வக்வெல்ல நீர் சுத்திகரிப்புப் பொறித் தொகுதியின் துணிக்கையாக்கல்/ கட்டமைப்புகள் மற்றும் கட்டடங்கள், பதீகம மற்றும் குடாவெல்ல பாலங்களுக்கான உருக்கு ஆதாரக்கட்டுமானம், கச்சேரியக் கந்தவில் நீர்க் கோபுரம் ஆகியன புனரமைக்கப்பட்டுள்ளன. வெவஹமண்டுவ பம்பி நிலையம் மற்றும் பிரவேசப் பாதை மற்றும் ருவன்வெல்லவில் நீர்க் கோபுரம் ஆகியன நிர்மானிக்கப்பட்டுள்ளன. ஊராபிலிஸ்ஸ" வீதியில் (குடாவெல்ல நீர் வழங்கல் திட்டம்) பிரதான பம்பிக் குழாய் மீள இடப்பட்டது. முருதவெல நீர் வழங்கல் திட்டத்துக்கான வடிகட்டல் ஊடகம் மற்றும் கிரிந்தி ஓயா படிகாரம் அளவிட்டு வழங்கும் தாங்கி ஆகியன பதிலீடு செய்யப்பட்டன.

பழைய நீர் மானிகளைப் பதிலீடு செய்தல், சட்டவிரோத இணைப்புகளைப் பரிசோதித்தல், பழுதடைந்த மானிகளைப் பதிலீடு செய்தல், பூச்சிய கட்டணப் பட்டியல்கள் மற்றும் மதிப்பீட்டுக் கட்டணப் பட்டியல்களைப் பரிசோதித்தல், இரவு காலத்தில் கசிவு ஆய்வுகளை மேற்கொள்ளல் ஆகியன மூலம் NRW பெறுமானத்தைக் குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது.

ஒரு சில RWS திட்டங்கள் உட்பட சில பிரதேசங்களில் நீர் தரக் கண்காணிப்பு மற்றும் நீர் பாதுகாப்புச் செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன. பாதுகாப்பான நீர் வழங்கலை உறுதி செய்யும் பொருட்டு மாத்தறையில் 3,108 நீர் மாதிரிகளும் அம்பாந்தோட்டையில் 5,583 நீர் மாதிரிகளும் காலி பிராந்தியத்தில் 2,123 நீர் மாதிரிகளும் பரிசோதிக்கப்பட்டன.

வரைபடத் தயாரிப்பு வேலைகள் அம்பாந்தோட்டை மற்றும் மாத்தறையில் 100% மற்றும் காலி பிராந்தியத்தில் 85% நிறைவு செய்யப்பட்டது.

முதலுதவி, நிலையான சொத்துக்களின் சரிபார்த்தல், ஆரம்ப MS Excel – Word, புதிய இணைப்புகள் மதிப்பீட்டு முறைமை, பொருட் பட்டியல் முகாமைத்துவ முறைமை, NRW முகாமைத்துவம் மற்றும் GIS அடிப்படையிலான நீர் ஆதன முகாமைத்துவம், வடிகட்டல் நடைமுறை, இணையவழி களஞ்சிய முகாமைத்துவ முறைமை மற்றும் அளவீட்டுக் கருவிகளின் அளவு திருத்தம் ஆகியன மேற்கொள்ளப்பட்டன.

காலி பிராந்தியத்தினுள் குறைந்தளவு கையிருப்பு மட்டத்தைப் பேணும் பொருட்டு பயன்பாட்டுக்கு எடுக்கப்படாத மற்றும் குறைந்தளவு பயன்படுத்தப்படுகின்ற பொருட்கள் அடையாளம் காணப்பட்டு தேவையான இடங்களுக்கு இடமாற்றப்பட்டன.

பிராந்தியம் முழுவதிலும் 50 கி.மீ. குழாய் நீட்டிப்பு மேற்கொள்ளப்பட்டது. மீள் செறிவூட்டல் நிதியத்தின் கீழ் ஹக்மன வீதியில் புதிய குழாய் இடல் (4.0 கி.மீ.) 100%, அங்குனுகொலபெலஸ்ஸ நீர் வழங்கல் திட்ட பிரதான குழாய் இடல் 95% நிறைவடைந்துள்ளதோடு, உபரி நிலையின் கீழ் அம்பாந்தோட்டை நீர் வழங்கல் திட்டத்தின் மேம்பாடு, உடமலலவில் 1.5 கி.மீ. குழாய் இடல் ஆகியன மேற்கொள்ளப்பட்டன. கொன்னோருவ, சூரியவெவ மற்றும் மவுசிரிகம, CKDu மேலோங்கியுள்ள பிரதேசங்களில் குழாய் இடல் வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

2020 – 2025 கூட்டிணைந்த திட்டத்தில், மாத்தறை பிராந்தியத்தில் ஏழு நீர் வழங்கல் திட்டங்களிலும், காலி பிராந்தியத்தில் நான்கு நீர் வழங்கல் திட்டங்களிலும் மற்றும் அம்பாந்தோட்டை பிராந்தியத்தில் பதினொரு நீர் வழங்கல் திட்டங்களிலும் மேம்பாட்டுக்கான பாரிய கருத்திட்டங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

மேற்படி கருத்திட்டங்களில் ஒருசிலவற்றின் வடிவமைப்பு மற்றும் ஆவணப்படுத்தல் வேலைகள் நிறைவடைந்துள்ள அதேவேளை ஏனைய கருத்திட்டங்களில் சாத்தியவளக் கற்கைகள் நிறைவடைந்து அல்லது நடைபெற்று வருகின்றன.

பல பிரதேசங்களில் நீர் வழங்கல் போதியதாயில்லாமையின் காரணமாக RSC (தெற்கு) பல பிரச்சினைகளை எதிர்நோக்கியது. நடுகல மற்றும் கனங்க உள்வாங்கு நிலையங்களுக்கு உவர் நீர் ஊடுறுவுவதை தடுப்பதற்காக நில்வலா மற்றும் பொல்வத்துமோதர ஆறுகளுக்கு குறுக்காக தற்காலிக உவர்நீர் தடுப்பு அணைகள் நிர்மாணிக்கப்பட வேண்டியுள்ளன. சில பிரதேசங்களில் நீர் தரப் பிரச்சினைகள் காணப்படுகின்றன. மாத்தறை கட்டம் iv கருத்திட்டம் நிறைவடைந்ததன் பின்னர் சில பிரச்சினைகளை தீர்க்க முடியுமானதாக இருக்கும்.

வட மத்திய

அனுராதபுரம் பிராந்தியத்தில் மொத்தம் 20 நீர் வழங்கல் திட்டங்கள் தொழிற்பட்டு வருகின்றன. 2020 ஆம் ஆண்டுக்கான கட்டணப் பட்டியலிடல் இலக்கு ரூபா 843.83 என்பதோடு அடைவு ரூபா 940.16 மில்லியன் ஆகும், இது 111.42% அடைவாகும். 2020 ஆம் ஆண்டுக்கான சேகரிப்பு இலக்கு ரூபா 871.18 மில்லியன் மற்றும் அடைவு ரூபா 889.95 மில்லியனாகும் என்பதோடு இது 102.15% அடைவாகும்.

பொலனறுவை பிராந்தியத்தில் மொத்தம் 12 நீர் வழங்கல் திட்டங்கள் தொழிற்பட்டு வருகின்றன. 2020 டிசெம்பர் இறுதியில் கட்டணப் பட்டியலிடல் இலக்கு மற்றும் அடைவு முறையே ரூபா 395.33 மில்லியன் மற்றும் ரூபா 482.91 மில்லியன் ஆகும். இது 122.15% அடைவாகும். திசெம்பர் இறுதியில் சேகரிப்பு இலக்கு மற்றும் அடைவு முறையே ரூபா 410.44 மில்லியன் மற்றும் ரூபா 445.65 மில்லியனாகும் என்பதோடு இது 108.51% அடைவாகும்.

பயன்பாடுகளின் இடமாற்றம், CKDu, புனரமைப்பு, மீள்செறிவூட்டல், O&M மற்றும் RWS நிதியங்களுக்கான 22 கேள்விப் பத்திர ஆவணங்கள் தயாரிக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டன. மேற்படி வேலைகளுக்கான பணத் தொகை ரூபா 144.44 மில்லியனாகும். கல்னேவ, துருவில, நுவரவெவ, திசாவெவ, மின்னேரிய மற்றும் கல்லேல்ல நீர் வழங்கல் திட்டங்களின் பிரதான வேலை மேம்பாடுகள் சார்ந்த வடிவமைப்புகள் தலைமை அலுவலத்தின், P&D பிரிவின் உதவியோடு RSC (NC) P&D பிரிவின் மூலம் மேற்கொள்ளப்பட்டது.

22 நீர் வழங்கல் திட்டங்களில் நீர் பாதுகாப்புத் திட்டம்

முன்னெடுக்கப்பட்டுள்ளது. 12 நீர் பாதுகாப்புத் திட்டங்களில் 11 மொடியுல்கள் வரை நிறைவடைந்துள்ளதோடு 04 முறைசாரா உள்ளக கணக்காய்வுகள் மேற்கொள்ளப்பட்டன. அநுராதபுரம் வடக்கு கருத்திட்ட பிரதேசத்தில் CBO கையளிப்பு நிகழ்ச்சித்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டது.

RH நிதி ஒதுக்கீடு மற்றும் NRW நிதி ஒதுக்கீடின் நிதிசார் முன்னேற்றம் முறையே 84%, 8.6%, ஆக காணப்பட்டது. 'பிபிதெமு பொலனறுவை' அபிவிருத்திக் கருத்திட்டத்தின் பௌதீக முன்னேற்றம் 96.23% மற்றும் நிதிசார் முன்னேற்றம் 71.08% ஆகும். மெதிரிகிரிய நீர் வழங்கல் கருத்திட்டம் கட்டம் 11 இன் பௌதீக முன்னேற்றம் 99% ஆகுமென்பதோடு நிதிசார் முன்னேற்றம் 86% ஆகும்.

2020 ஆம் ஆண்டு காலத்தில் 35 உற்பத்திக் கிணறுகளில் துளையிடல் செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன. இதில், நான்கு நீர் வழங்கல் திட்டங்களில் 40 புதிய கிணறுகள் துளையிடப்பட்டன. இதற்கு மேலதிகமாக 34 கிணறுகள் நீர் பாய்ச்சி இறைக்கப்பட்டு அபிவிருத்தி செய்யப்பட்டதுடன் அதேவேளை 30 கைப்பம்பிகள் திருத்தப்பட்டன. மேலும், இவ் ஆண்டினுள் 35 நீரியல் கற்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

இவ் ஆண்டில் அனுராதபுரம் வடக்கு நீர் வழங்கல் கருத்திட்டம் கட்டம் 1 மற்றும் தம்புத்தேகம நீர் வழங்கல் கருத்திட்டம் முன்னேற்றம் கண்டு வந்தன. அனுராதபுரம் வடக்கு நீர் வழங்கல் கருத்திட்டம் கட்டம் 11 இன் மதியுரை ஒப்பந்தத்தின் முன்னேற்றம் 90% ஆகுமென்பதோடு 2021 இல் கட்டுமானப் பணிகள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

அனுராதபுரம் மற்றும் பொலனறுவையின் உத்தேச கருத்திட்டத்திற்கான காணி கொள்ளல் (68 துண்டுகள்) முன்னேற்றம் கண்டு வருகின்றன. வருடாந்த ஆதன சரிபார்த்தல் நிறைவடைந்துள்ளதோடு RSC (NC) யின் கீழ் மொத்த ஆதனங்களின் பெறுமதி ரூபா 1,718.9 மில்லியனாகும். தயட்ட கிருள, மின்னேரிய, மொதிரிகிய, கலாவெவ மற்றும் ரணவிருகம நீர் வழங்கல் திட்டங்களின் மூலதனமிடல் நிறைவடைந்துள்ளது.

ISO-17025 ஐ பெறுவதற்காக ஆய்வுகூட வசதிகள் மற்றும் நீர் தர செயற்பாடுகள் மேம்படுத்தப்பட்டன. PTB கருத்திட்டத்தின் ஊடாக தேவையான பயிற்சிகள் வழங்கப்பட்டன.

நீர் வழங்கல் திட்டங்கள் மற்றும் நீர் சுத்திகரிப்புப் பொறித்தொகுதிகளில் உற்பத்தித்திறன் மேம்பாட்டுச் செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன. அனுராதபுரத்தில் டிசெம்பர் மாதமளவில் 10,568 கசிவுகள் கண்டுபிடிக்கப்பட்டு திருத்தியமைக்கப்பட்டதன் பெறுபேறாக வருவாயற்ற நீர் 15.6% வரை குறைக்கப்பட்டது. பொலனறுவையில் டிசெம்பர் மாதமளவில் 5,418 கசிவுகள் கண்டுபிடிக்கப்பட்டு திருத்தியமைக்கப்பட்டதன் பெறுபேறாக வருவாயற்ற நீர் 22.8% வரை குறைக்கப்பட்டது.

இவ் ஆண்டில் ஊழியர்களுக்காக ரூபா 41,398.00 செலவிடப்பட்டு 04 பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் நடத்தப்பட்டன.

வடமேல்

2020 ஆம் ஆண்டுக்காக குருநாகல் பெரும்பாக நீர் மறுசீராக்கல் முறைமைக்கு (GKWRS) சுற்றாடல் பாதுகாப்பு உரிமப்பத்திரம் (EPL) பெறப்பட்டது. 45 புதிய கழிவுநீர் இணைப்புகள் வழங்கப்பட்டு தே.நீ.வ.வ.ச. க்கு ரூபா 9 மில்லியன் ஈட்டப்பட்டது. GKWRS இல் புதிய சூரிய சகதி முறைமை (130KW) பொருத்தப்பட்டது. வடமேல் பல்கலைக்கழகம் (மாகந்துர), தங்கொட்டுவ மீன் சந்தை ஆகியவற்றுக்கான சில வடிவமைப்பு மற்றும் மதியுரை வேலைகளும் மாவத்தகம BOI க்கான சாத்தியவளக் கற்கையும் மேற்கொள்ளப்பட்டது.

அரசாங்கத்தின் இலக்கைப் புரிந்துகொண்டு, GKWRS இல் துப்புரவேற்பாட்டு பிரதான திட்டத்தைத் தயாரித்தல் முன்னெடுக்கப்பட்டது. 2020 ஆம் ஆண்டினுள் உத்தேச குருணாகல் பெரும்பாக கழிவுநீர் சுத்திகரிப்புப் பொறித்தொகுதிக்காக 13 ஏக்கர் காணியொன்று பெற்றுக் கொள்ளப்பட்டது.

GKWRS இல் புதிய கழிவுநீர் சுத்திகரிப்புப் பொறித்தொகுதியின் வடிவமைப்பு வேலைகள் மேற்கொள்ளப்பட்டன.

இவ் ஆண்டில் 14 கி.மீ. குழாய் நீட்டிப்புக்கான வடிவமைப்பு மற்றும் மதிப்பீட்டைத் தயாரித்தல் மேற்கொள்ளப்பட்டதோடு, 4.5 கி.மீ. எளிமைப்படுத்தப்பட்ட குழாய் நீட்டிப்பு முன்மொழிவு பெறுகைகள் கட்டத்தில் உள்ளது.

புத்தளம் மாவட்டத்தில் உள்ள நாத்தாண்டிய, காக்கபள்ளி, ரஹமத் நகரிலுள்ள பழைய சுத்திகரிப்புப் பொறித்தொகுதி மற்றும் புத்தளம் நீர் வழங்கல் திட்டம் ஆகியவற்றின் விரிவாக்கத்துக்காக RH நிதி ஒதுக்கீட்டில் 69% சமவீதமான ரூபா 83.73 மில்லியன் செலவிடப்பட்டது.

தம்பதெனியவில் பழைய ஆழ்துளைக் கிணறுக்கு இணைக்கப்பட்டதன் மூலம் கிரியுல்ல நீர் வழங்கல் திட்டத்தின் உற்பத்தி அதிகரிக்கப்பட்டது. NRW நிதி ஒதுக்கீட்டுத் தொகையில் 27.14% ஆன ரூபா 24.42 மில்லியன் தொகை தம்பதெனிய, நிக்கவெரட்டிய, வாரியபொல மற்றும் கிரியுல்ல திட்டங்களின் மின்காந்த நீரோட்ட மானிகளைப் பொருத்துவதற்காகவும் வால்வு அறைகளை நிர்மாணித்தல் விநியோக முறைமை மேம்பாட்டுக்காகவும் மற்றும் எழுவான்குளத்தில் உள்வாங்கு நிலைய அணைக்கட்டின் அழிவினால் உருவாகிய பாரிய பிரச்சினையை தற்காலிகமாக தீர்ப்பதற்கும் செலவிடப்பட்டது. எழுவான்குளத்தில் அணைக்கட்டு மேம்பாட்டுக்காக நீர்ப்பாசனத் திணைக்களத்திற்கு ரூபா 3.4 மில்லியன் செலுத்தப்பட்டது.

பிங்கிரிய பிரதேசத்தில் ADB 5வது கருத்திட்டத்திலிருந்து 52 கி.மீ. நீள நீட்டிப்பு பொறுப்பேற்கப்பட்டது. புத்தளம் விநியோக முறைமைக்கு மதுரங்குளிய ஸ்வசக்தி CBO இணைக்கப்பட்டு 1,600 இணைப்புகள் சேர்த்துக்கொள்ளப்பட்டன.

இலக்கின் 136% அடைவுடன், 7,455 புதிய இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளன. கட்டணப் பட்டியலிடல் முன்னேற்றம் ரூபா 788.81 மில்லியனாகும் என்பதோடு இது இலக்கில் 105% ஆகும். 93% சேகரிப்பு இலக்குடன் ரூபா 711.38 மில்லியன் திரட்டப்பட்ட அதேவேளை நீர் விற்பனையில் 93% அடைவை அடைந்துள்ளது.

வலுசக்தி சேமிப்பு நிதி ஒதுக்கீட்டிலிருந்து வாரியபொலவில் பம்பிகளைப் பதிலீடு செய்தல், குருநாகல் பெரும்பாக நீர் வழங்கல் கருத்திட்டம், நாத்தாண்டிய நீர் வழங்கல் திட்டம் மற்றும் வென்னப்புவவில் சூரிய சக்தி முறைமை ஆகியவற்றுக்காக ரூபா 65 மில்லியன் முதலீடு செய்யப்பட்டதோடு, இது வருடாந்தம் ரூபா 8.5 மில்லியன் தொகையை சேமிக்கும். பாதுகாப்பு மேம்பாட்டின் பொருட்டு 8 நீர் வழங்கல் திட்டங்களுக்கு CCTV கெமராக்கள் பொருத்தப்பட்டன. AIWSSP நிதியத்தில் புதிய பணிமனைக் கட்டட நிர்மாணிப்பு நிறைவடைந்துள்ளது.

CKD நிதி ஒதுக்கீட்டிலிருந்து ஹெட்டியாரச்சிகம (95% நிறைவு செய்யப்பட்டுள்ளது) மற்றும் அபுக்ககம (100% நிறைவு செய்யப்பட்டுள்ளது) RWS திட்டங்களுக்கு ரூபா 13.76 மில்லியன் செலவிடப்பட்டது. கிராமிய நீர் வழங்கல் திட்ட நிதி ஒதுக்கீட்டிலிருந்து ரூபா 35.77 மில்லியன் செலவிடப்பட்டு மாரகம மற்றும் தித்தெனியவத்த நீர் வழங்கல் கருத்திட்டங்களில் 100% நிறைவையும், முசல்பிட்டிய நீர் வழங்கல் கருத்திட்டத்தில் 85% நிறைவையும் மற்றும் தொரனெகெதர கிராமிய நீர் வழங்கல் திட்டத்தில் 50% நிறைவையும் அடையப்பெற்றுள்ளது.

மாகந்துர, பன்னல, பிங்கிரிய, உடுபத்தாவ IWSP க்களுக்கான சாத்தியவளக் கற்கை PAC அங்கீகாரத்திற்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

இரசாயன, பௌதீக, மற்றும் நுண்ணுயிரியல் தரத்தின்

பொருட்டு விநியோக முறைமையிலிருந்து மாதாந்தம் 250 நீர் மாதிரிகள் பரிசோதிக்கப்பட்டன. மொத்த பிராந்தியத்தையும் உள்ளடக்குகின்றவாறு 11 நீர் பாதுகாப்புத் திட்டங்கள் அமுலாக்கப்பட்டன. நாரம்மல, பிங்கிரிய மற்றும் தங்கொட்டுவவுக்கான அனைத்து நீர் பாதுகாப்புத் திட்ட மொடியுல்களும் நிறைவு செய்யப்பட்டதோடு, ஏனையவை பகுதியளவு நிறைவு செய்யப்பட்டன.

வடமேல் அபிவிருத்தி நிதியத்தின் மூலம் RC நிதியத்தினால் நிர்மாணிக்கப்பட்ட 20 கிராமிய நீர் வழங்கல் திட்டங்களில் 7 நிறைவு செய்யப்பட்டுள்ளதோடு 5 திட்டங்கள் பகுதியளவு நிர்மாணிப்பட்டுள்ளன. RC நிதி ஒதுக்கீட்டின் கீழ் பிங்கிரிய EPZ க்கான குழாய் நீட்டிப்பு, NHDA இல் இருந்தான RWS திட்டங்கள் மற்றும் பெருநகர திட்டத்தில் இருந்தான அருவக்காரு கருத்திட்டம் ஆகியவற்றுக்கு ரூபா 69.5 மில்லியன் செலவிடப்பட்டது.

பிராந்தியத்தினுள் 170 கி.மீ. குழாய் நீட்டிப்பு (63 மி.மீ., 90 மி.மீ., 160 மி.மீ. விட்டம்) மேற்கொள்ளப்பட்டது.

நிலக்கீழ் நீர் பிரிவின் மூலம் ரூபா 15.14 மில்லியன் தொகையில் குழாய்க் கிணறுகளுக்கான 64 பரிசோதனைகள், 13 துளையிடல்கள், 14 குழாய்க் கிணறுகளுக்கான நீர் பாய்ச்சி துப்புரவு செய்தல், 21 பம்பிப் பரிசோதனைகள் ஆகியன மேற்கொள்ளப்பட்டன.

மத்திய

ஆண்டினுள், இலக்கிடப்பட்டதில் 109% சதவீதமான 57 மில்லியன் கன மீற்றர் விற்பனைக்கான ரூபா 2,066 மில்லியன் சேகரிப்புடன் சேகரிப்பு இலக்கிடலில் 102% அடையப்பெற்றுள்ளது.

பிரதான அனுப்பல் குழாயில் மூன்று பிரதான கசிவுகளும் 73 கட்புலனாகாத கசிவுகளும் கண்டுபிடிக்கப்பட்டன. ஒதுக்கீட்டுத் தொகையான ரூபா 100 மில்லியனில் ரூபா 21 மில்லியன் பயன்படுத்தப்பட்டதன் மூலம் 2020 NRW நிதி ஒதுக்கீட்டின் கீழ் மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுகள் வெற்றிகரமாக நிறைவு செய்யப்பட்டன. இதைத் தவிர, RSC பணியாளர்களின் மூலம் 4,570 பாரிய மற்றும் சிறிய கசிவுகள் கையாளப்பட்டன.

ரூபா 94 மில்லியன் தொகையில், யட்டிவாவல மேல் உயர்த்திப் பம்பி முறைமை, அங்குனாவல மற்றும் மெததும்பர பம்பி முறைமை பொருத்தப்பட்டன. மேலும், ரூபா 11.45 மில்லியன் ஈட்டப்பட்டு, 24 நீரியல் பரிசோதனைகள், 22 ஆழ்துளைக் கிணறு துளையிடல்கள், 10 தடவை ஆழ்துளைக் கிணறுகள் நீர் பாய்ச்சி துப்புரவு செய்யப்படல், 2 தடவை கைப்பம்பி புனரமைப்பு வேலைகள் ஆகியனவும் மேற்கொள்ளப்பட்டன.

பிராந்தியத்தில் முழுமொத்த நீர் பாதுகாப்புத் திட்ட (WSP) நடைமுறைப்படுத்தலின் அடைவு 90% ஆகுமென்பதோடு 7 திட்டங்களில் WSP சரிபார்த்தல்கள் மேற்கொள்ளப்பட்டன.

ஆய்வுகூடங்கள் இரசாயன அளவீடுகளுக்கான தே.நீ.வ.வ.ச.யின் 6,195 நீர் மாதிரிகளும், வெளித் தரப்பினர்களின் 5,307 மாதிரிகளும் மற்றும் நுண்ணுயிரியலுக்கான தே.நீ.வ.வ.ச.யின் 6,203 மாதிரிகளும், வெளித் தரப்பினரின் 4,810 மாதிரிகளும் உள்ளடங்கியதாக மொத்தம் 22,515 பரிசோதனைகளை மேற்கொண்டது. CBO நீர் தர கண்காணிப்பு நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 240 நுண்ணுயிரியல் மாதிரிகள் பரிசோதிக்கப்பட்டதோடு 53 மாதிரிகள் மட்டும் திருப்திகரமாக காணப்பட்டது.

மத்திய – கிழக்கு பிராந்திய முகாமையாளர் பிரிவில், மாளிகாதென்ன பம்பி நிலையத்தில் சூரிய சக்தி முறைமையை பொருத்துதல், WaSSIP யின் மூலம் வழங்கப்பட்ட ரூபா 3.3 மில்லியன் பெறுமதியான புதிய உபகரணங்களுடன் ஆய்வுகூடத்தை தரம் உயர்த்துதல், மஸ்கெலியா மற்றும் ராகல நீர் சுத்திகரிப்புப் பொறித்தொகுதிகளில் தடுப்புப் பலகையை பதிலீடு செய்தல், ஹரகம நீர் வழங்கல் திட்டத்தில் அலுவலகக் கட்டடத்தை நிர்மாணித்தல், மெததும்பர நீர் வழங்கல் திட்டத்தில் குழாய் பதிலீடுகள் மற்றும் ஸ்ரீ பாதவில் புதிய நீர் உள்வாங்கு பம்பியைப் பொருத்துதல் ஆகியன மேற்கொள்ளப்பட்டன. அத்துடன் நிலையான ஆதனங்கள் மற்றும் 230 இணைப்புகளுடன் புஸ்ஸதென்ன CBO பொறுப்பேற்கப்பட்டு முறைமைக்கு சேர்க்கப்பட்டது.

மத்திய - வடக்கு முகாமையாளர் பிராந்தியத்தில், கலகெதர, உடதென்ன மற்றும் மாத்தளை நீர் சுத்திகரிப்புப் பொறித்தொகுதிகளின் புனரமைப்பு, தம்புள்ள பொருளாதார மத்திய நிலைய பிரதேசத்தில் குழாய் இடல், மாத்தளை நீர் வழங்கல் திட்டத்தில் குழாய் நிறுத்திகளை பதிலீடு செய்தல் ஆகியன மேற்கொள்ளப்பட்டன. மேலதிகமாக, மேலும் 8.8 கி.மீ. புதிய குழாய் இடலும் 2.86 கி.மீ. குழாய் பதிலீடும் நிறைவு செய்யப்பட்டன.

மத்திய - தெற்கு முகாமையாளர் பிராந்தியத்தில், ஹந்தான நீர் வழங்கல் திட்டத்தின் வடிகட்டல் ஊடகத்தின் பதிலீடு, கம்பொலவத்த மற்றும் பாரதெக நீர் சுத்திகரிப்புப் பொறித்தொகுதிகளில் நீர் உள்வாங்கு நிலைய மேம்பாடுகள், ஹந்தான கழிவுநீர் பொறித்தொகுதியின் புனரமைப்பு மற்றும் எல்பிட்டிய நீர் சுத்திகரிப்புப் பொறித்தொகுதிக்கான பாதுகாப்புக் கூடத்தை நிர்மாணித்தல் ஆகிய புனரமைப்பு வேலைகள் மேற்கொள்ளப்பட்டன. மேலும், கம்பொல தொலஸ்பாகே வீதியில் குழாய் இடல் மற்றும் மவுன்ட் ரெம்பல் - சக்கரங்கொட்டுவ அனுப்பல் குழாய்களின் காலம் கடந்த குழாய்களை பதிலீடு செய்தல் ஆகியன நிறைவு செய்யப்பட்டன. இவ்வாண்டு காலத்தினுள், மீவதுர பொறித்தொகுதியில் SCADA மென்பொருள்களைப் பொருத்துதல், உடு யட்டி நுவர பிரதேசத்தில் மூன்று ரேடியோ அலகுகளை வழங்கி விநியோகித்தல் ஆகியன மேற்கொள்ளப்பட்டன. அக்குரண நீர் வழங்கல் திட்டத்தின் விநியோக குழாய் பதிலீடு மற்றும் தற்போதுள்ள உள்ளடக்கத்தை கண்டி மாவட்டத்தில் 63% - 77% வரை, மாத்தளை மாவட்டத்தில் 30% - 85% வரை மற்றும் நுவரெலியா மாவட்டத்தில் 10% - 14% வரை மேம்படுத்தும் பொருட்டு அபிவிருத்திக் கற்கைகள் மேற்கொள்ளப்பட்டன. 2020 – 2025 கூட்டிணைந்த திட்டத்தில் பதினான்கு புதிய நீர் வழங்கல் கருத்திட்டங்கள் ஒருங்கிணைத்துக்கொள்ளப்பட்டதோடு அவை நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன.

இரண்டு பொதிப் பொறித்தொகுதிகள், ஒரு புதிய பொறித்தொகுதி, CBO உள்ளடங்கலாக 3 பொறித்தொகுதிகளின் விரிவாக்கம், குழாய் இடலுடன் கூடியதாக பல்கலைக்கழக நீர் சுத்திகரிப்புப் பொறித்தொகுதியின் புனரமைப்பு, 2 அனுப்பல் குழாய்களின் மேம்பாடுகள் மற்றும் 10 நீர் வழங்கல் திட்டங்களில் மேம்பாடுகள் ஆகியவற்றுக்கு P&D பிரிவின் மூலம் கேள்விப் பத்திரங்கள் கோரப்பட்டன. 'புரநெகும' கருத்திட்டத்தின் கீழ் விநியோக மாதிரியாக்கல் மற்றும் பகுப்பாய்வு அத்துடன் RSC – மத்திய அலுவலக கட்டடத்தின் புதுப்பித்தல் ஆகியனவும் மேற்கொள்ளப்பட்டன.

நிலையான சொத்துக்கள் சரிபார்த்தல் அறிக்கை - 2019 ஐ நிறைவு செய்தல், கண்டி பெரும்பாக கட்டம் 11 கருத்திட்ட, தம்புள்ள பெரும்பாக கருத்திட்ட மூலதனமிடல் மற்றும் நிலையான சொத்துக்கள் தரவுத்தளத்தில் பிராந்திய தரவுகளை பதிதல் ஆகியன இவ் ஆண்டினுள் மேற்கொள்ளப்பட்டதோடு, நிலையான சொத்துக்கள் பதிவேடு – 2020 இன் 90% பூர்த்திநிலை பதியப்பட்டது.

RSC பயிற்சிப் பிரிவு 06 – உள்ளக பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை நடத்தியதோடு, RSC யில் முன்னேற்றகரமான நடைமுறைகளுக்கு மேலதிகமாக முகாமையாளர் பிராந்தியங்களுக்கு உற்பத்தித்திறன் எண்ணக்கரு அறிமுகப்படுத்தப்பட்டது.

சப்பிரகமுவ

2020 ஆம் ஆண்டுக்காக பிராந்தியத்தினுள் புதிய வருவாயற்ற நீர் (NRW) செயற்பாடுகளுக்காக ரூபா 10.00 மில்லியன் ஒதுக்கப்பட்ட அதேவேளை RSC யினுள் நடைமுறையிலுள்ள NRW குறைப்பு செயற்பாடுகளுக்கு ரூபா 8.2 மில்லியன் செலவு மேற்கொள்ளப்பட்டது.

கருத்திட்டத்தின் கிராமிய நீர் வழங்கல் ஆக்கக்கூறின் கீழ் ஏறத்தாழ ரூபா 22 மில்லியன் செலவில் முறையே 221, 185 மற்றும் 113 வீடுகளுக்கு சேவையாற்றுகின்ற வகையில் முறையே வராகெட்டியார, கல் அமுன மற்றும் ரன்தொல நீர் வழங்கல் திட்டங்கள் நிறைவு செய்யப்பட்டன. அத்துடன் நீர் வழங்கல் மற்றும் துப்புரவேற்பாட்டு மேம்பாட்டுக் (WaSSIP) கருத்திட்டத்தின் நகர நீர் வழங்கல் ஆக்கக்கூறின் கீழ் பம்பஹின்ன நீர் வழங்கல் திட்டத்தில் 62% ஒட்டு மொத்த பௌதீக முன்னேற்றம் அடையப்பெற்றுள்ளது. கருத்திட்டமானது, நாளொன்றுக்கு 4,500 க.மீ. கொள்ளவு கொண்ட நீர் சுத்திகரிப்புப் பொறித்தொகுதியை நிர்மாணித்தல், நீர் உள்வாங்கு நிலையம், 05 கிராம அலுவலர் பிரிவுகளை உள்ளடக்கியவாறு 6,312 மக்களுக்கும் சப்பிரகமுவ பல்கலைக் கழகத்திற்கும் சேவையாற்றுகின்ற வகையில் சேவை நீர்த் தேக்கங்களுடனான கூடியதாக அனுப்பல் மற்றும் விநியோக முறைமையை நிர்மாணித்தல் ஆகிய ஆக்கக்கூறுகளை உள்ளடக்கியுள்ளது. கருத்திட்டத்தின் மொத்தச் செலவு ரூபா 1,100 மில்லியனாகும்.

WaSSIP கருத்திட்டத்தின் நகர நீர் வழங்கல் ஆக்கக்கூறின் கீழ் கலிகமுவ நீர் வழங்கல் திட்டத்தில் 88% பௌதீக முன்னேற்றம் அடையப்பெற்றுள்ளது. கருத்திட்டத்தின் மொத்தச் செலவு ரூபா 2,300 மில்லியனாகும்.

எம்பிலிபிட்டிய நீர் சுத்திகரிப்புப் பொறித் தொகுதியிலிருந்து பதலங்கல பிரதேசத்திற்கு நாளொன்றுக்கு 5,000 க.மீ. குடிநீரை வழங்குவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளதோடு, உத்தேச திட்டத்திற்கான நிதி WaSSIP கருத்திட்டம் மற்றும் CKD நிதியத்தின் கீழ் வழங்கப்படவுள்ளது. CKD நிதியத்தின் கீழ் பதலங்கலவில் உள்ள முன்மொழியப்பட்ட நீர் கோபுரத்திற்கு எம்பிலிபிட்டிய நீர் சுத்திகரிப்புப் பொறித்தொகுதியிலிருந்து 4.5 கி.மீ. நீளத்தையும் 400 மி.மீ. விட்டத்தையும் கொண்டதான பிரதான பம்பிக் குழாயை வழங்குதல் மற்றும் இடுதல் தே.நீ.வ.வ.ச.யினால் நிறைவு செய்யப்பட்டது. அளிக்கப்பட்ட ஒப்பந்தத் தொகை ரூபா 92.97 மில்லியனாகும். ரூபா 3.5 மில்லியன் மதிப்பீட்டுத் தொகையில் CKDu நிதியத்தின் கீழ் RSC யின் மூலம் பதலங்கல பிரதான பம்பிக் குழாய்க்கு நீர் அனுப்புவதற்காக எம்பிலிபிட்டிய நீர் சுத்திகரிப்புப் பொறித் தொகுதி வளவில் சுத்திகரிக்கப்பட்ட நீர் பம்பி நிலையத்தை நிர்மாணித்தலும் மேற்கொள்ளப்பட்டது.

புனரமைப்பு நிதியத்தின் கீழ் உடவலவ நீர் சுத்திகரிப்புப் பொறித்தொகுதியின் புனரமைப்பு மேற்கொள்ளப்படவுள்ளது. கருத்திட்டத்துக்கான மதிப்பீட்டுச் செலவு ரூபா 9.0 மில்லியனாகும் என்பதோடு நிர்மாணிப்பு வேலைகள் நடைபெற்று வருகின்றன.

மீள்செறிவூட்டல் நிதியத்தின் கீழ் அண்ணளவாக ரூபா 160 மில்லியன் கருத்திட்ட செலவுடன் பெல்மடுல்லவில் படலந்த சந்தி வரை கஹவத்த நீர் சுத்திகரிப்புப் பொறித்தொகுதியிலிருந்து 280 மி.மீ. விட்டத்தைக் கொண்ட பிரதான PVC அனுப்பல் குழாய் (7கி.மீ.) இடும் கஹவத்த – பெல்மடுல்ல பிரதான அனுப்பல் குழாய் கருத்திட்டம் நடைபெற்று வருகின்றதோடு ஒட்டு மொத்த பௌதீக முன்னேற்றம் 10% ஆகும்.

மூலதன நிதி ஒதுக்கீட்டின் கீழ் ரூபா 19.0 மில்லியன் செலவில் எஹலியகொட சுத்திகரிப்புப் பொறித்தொகுதி வளவில் கைவிடப்பட்ட பொதிச் சுத்திகரிப்புப் பொறித்தொகுதியைப் பொருத்துதல் மேற்கொள்ளப்பட்டது.

இரத்தினபுரி மற்றும் கேகாலை பிராந்தியங்களில் நீர் பாதுகாப்புத் திட்டத்தை (WSP) நடைமுறைப்படுத்தல் 2020 ஆம் ஆண்டிலும் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டது. பங்குதாரர் விழிப்புணர்வூட்டல் நிகழ்ச்சித்திட்டங்கள் இரண்டு பிராந்தியங்களிலும் நடத்தப்பட்டன. நீர் பாதுகாப்புத் திட்ட மொடியுல்களின் பூர்த்திநிலை இரத்தினபுரி பிராந்தியத்தில் 50% ஆகும் என்பதோடு உடவலவ WSP மற்றும் கஹவத்த WSP க்களுக்கான உள்ளக முறைசாரா கணக்காய்வு நிறைவு செய்யப்பட்டது. கேகாலை பிராந்தியத்தில் மொடியுல்களின் பூர்த்திநிலை ஏறத்தாழ 40% ஆகும்.

2020 ஆம் ஆண்டு காலத்தினுள் பிரதேச சபைகள் மற்றும் பிரதேச செயலகங்களின் ஊடாக கேகாலை மற்றும் இரத்தினபுரி மாவட்டங்களில் ஏறத்தாழ 6,000 கன்றுகள் விநியோகிக்கப்பட்டதோடு, இரத்தினபுரி மாவட்டத்தில் 3,000 க்கு மேற்பட்ட கன்றுகள் விநியோகிக்கப்பட்டன. CBOs களின் நீரேந்து பிரதேசங்களில் தே.நீ.வ.வ.ச. மற்றும் தேசிய சமுதாய நீர் வழங்கல் திணைக்களம் சேர்ந்து மேலும் 3,000 மரக் கன்றுகளை நட்டது.

மீள் குடியமர்த்துகை மற்றும் பயன்பாடுகள் இடம்பெயர்வு நிதியத்தின் கீழ் கேகாலை பிராந்தியத்தில் பல நிர்மாணிப்புச் செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன.

ஊவா

RSC – ஊவா, பண்டாரவளை மற்றும் மொனராகல ஆகிய இரண்டு பிராந்தியங்களை உள்ளடக்கியுள்ளது. 2020 ஆம் ஆண்டில் ஊவா RSC பதுளை அலுவலகம் மற்றும் தெமோதர நீர் சுத்திகரிப்புப் பொறித்தொகுதி ISO 9001:2015 QMS சான்றிதழைப் பெற்று பாரியதொரு அடைவை அடைந்தது.

NRW பிரிவு பண்டாரவளை மற்றும் மொனராகல ஆகிய இரண்டு பிராந்தியங்களிலும் NRW கண்காணிப்பு மற்றும் குறைப்பு நிகழ்ச்சித்திட்டத்தை பொறுப்பேற்கும் பொருட்டு CE (நிர்மாணிப்பு) இன் கீழ் உருவாக்கப்பட்டது. இப்பிரிவின் மூலம் இரவுகால கசிவு ஆய்வு மற்றும் கண்காணிப்பு, இணைப்புத் துண்டிப்புகள் மற்றும் சட்டவிரோத இணைப்புகள் தொடர்பில் செயலாற்றப்பட்டது. தற்போதுள்ள சேவை இணைப்புகளை திருத்தியமைத்தல், குறைந்த அழுத்த வீதத்தைக் கொண்ட குழாய்கள் மற்றும் பழைய குழாய்களை பதிலீடு செய்தல், ஆகியன 2020 ஆம் ஆண்டினுள் NRW நிதி ஒதுக்கீட்டின் கீழ் மேற்கொள்ளப்பட்டன. இதன் மூலம் 2019 ஆம் ஆண்டின் 27% இல் இருந்து 2020 இல் 26% வரை வருவாயற்ற நீரைக் குறைக்க இயலுமாயிருந்தது.

வினைத்திறனற்ற பம்பிகளை மாற்றீடு செய்தல் மற்றும் உச்சக்கட்ட நேரங்களில் பம்பிகள் இயக்கப்படுவதைத் தவிர்த்தல் ஆகியன ஆண்டினுள் மேற்கொள்ளப்பட்ட சில சக்தி சேமிப்புச் செயற்பாடுகளாகும். மின்சாரச் செலவைக் குறைப்பதற்கு மேலதிகமாக அனைத்து பம்பி நிலையங்களிலும் தடுப்புப் பராமரிப்பு நடைமுறைப்படுத்தல் மூலம் பராமரிப்புச் செலவுகள் மற்றும் பம்பிகள் செயலிழக்கும் தடவைகள் குறைக்கப்பட்டன.

RSC க்களிலுள்ள கையிருப்பை பராமரிக்கும் பொருட்டு, அநேகமான பொருட்கள் IMS முறைமையில் பதியப்பட்டன. RSC க்களில் கையிருப்பு மட்டத்தைக் குறைக்கும் பொருட்டு பிராந்தியத்தினுள் இருப்பிலுள்ள குழாய்கள் மற்றும் பொருத்துகளைப் பயன்படுத்தி ஏறத்தாழ 35 கி.மீ. நீளத்துக்கு குழாய்கள் இடப்பட்டன. இவ் ஆண்டில், பயிற்சி நிதி ஒதுக்கீடு போன்று வேறு சில அணுசரணைகளைப் பயன்படுத்தி zoom ஊடான பயிற்சிகள் உள்ளடங்கலாக 30 பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்டன.

நீரேந்து பிரதேசப் பாதுகாப்பு நிகழ்ச்சித்திட்டங்களின் கீழ் கஹகொல்ல நீரேந்து பிரதேசத்துக்கான சிரமதான இயக்கம், தெமோதர நீர் வழங்கல் திட்டத்துக்கான மர நடுகை நிகழ்ச்சித்திட்டம் மற்றும் இரண்டு பாடசாலை பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்டன. அநேகமாக அனைத்துத் திட்டங்களுக்குமான நீர் பாதுகாப்புத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டதோடு, மாகாணத்தின்

பதினேழு திட்டங்களிலும் அனைத்து மொடியுல்களும் நிறைவு செய்யப்பட்டன. 2020 ஆம் ஆண்டு காலத்தினுள் மொனராகல, புத்தள, தெமோதர, மஹியங்கன மற்றும் கெப்படிபொல நீர் வழங்கல் திட்டங்களுக்கான உள்ளகக் கணக்காய்வு நிறைவு செய்யப்பட்டது.

பதுளை மாவட்டத்தில் பண்டாரவளை, பதுளை, தெமோதர மற்றும் ஹாலிஎல நீர் வழங்கல் திட்டங்களில் 40 கி.மீ. நீளத்துக்கு மற்றும் மஹியங்கன நீர் வழங்கல் திட்டத்தில் 54 கி.மீ. நீளத்திற்கு குழாய் நீட்டிப்பு வேலைகள் மேற்கொள்ளப்பட்டன. மொனராகலையில் மொனராகல, வெல்லவாய மற்றும் ஒக்கம்பிட்டிய நீர் வழங்கல் திட்டங்களில் 21 கி.மீ. நீட்டிப்பு மேற்கொள்ளப்பட்டது. அத்துடன், WaSSIP கருத்திட்டத்தின் கீழ் மடுல்ல நீர் வழங்கல் திட்டத்தில் 76 கி.மீ. நீட்டிப்பு நிறைவு செய்யப்பட்டு தே.நீ.வ.வ.ச.க்கு கையளிக்கப்பட்டது.

பதுளை மற்றும் மொனராகலை ஆகிய இரண்டு மாவட்டங்களிலும் மீள்செறிவூட்டல் செயற்பாடுகளாக A5 வீதியில் ஏறத்தாழ 43 கி.மீ. நீளத்துக்கு குழாய் இடுவதற்கு முன்மொழியப்பட்டு, 30 கி.மீ. பூர்த்தி செய்ய இயலுமாயிருந்தது. மாகாணத்தின் RWS பிரிவின் மூலம் மாகாணத்திலுள்ள பாடசாலைகளின் நீர் வழங்கல் நிலைமைகள் பற்றிய விபரங்கள் திரட்டப்பட்டு மதிப்பிடல் வேலைகள் மேற்கொள்ளப்பட்டன. CKD நிதி ஒதுக்கீட்டின் கீழ் ரிதீமாலியத்த பிரதேசத்துக்கான பிரதான பம்பிக் குழாயின் நீட்டிப்பு நடைபெற்று வருகின்றது.

புனரமைப்பு மற்றும் NRW நிதி ஒதுக்கீட்டின் கீழ் ரூபா 244 மில்லியன் மொத்த ஒப்பந்தத் தொகையுடன் 100 க்கு மேற்பட்ட ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட்டன. பிராந்தியத்தின் நீர் வழங்கல் திட்டங்களின் புனரமைப்பு, OIC அலுவலகம் மற்றும் விடுதிகளுக்கான மேம்பாடு, அனுப்பல் மற்றும் விநியோக முறைமையை இடுதல் மற்றும் M&E மேம்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன. இவ் ஆண்டில் கோவிட் - 19 தொற்றுநோய் நிலைமைகளால் மேம்பாட்டு வேலைகள் பாதிக்கப்பட்ட போதிலும், RH நிதி ஒதுக்கீட்டில் ஒதுக்கீடு செய்யப்பட்டதை விட கூடுதலாக பயன்படுத்தப்பட்டுள்ளமை பாரியதொரு அடைவாகும்.

இவ் ஆண்டில் ஹம்பெகமுவ WSP, பதுளை மாவட்டத்தில் நீர் சுத்திகரிப்பு மேம்பாடு, தெமோதர நீர் வழங்கல் திட்டத்தில் விநியோக மேம்பாடு மற்றும் மொனறாகலை மாவட்டத்தில் நீர் சுத்திகரிப்பு மேம்பாடு ஆகியவற்றுக்கு PAC அங்கீகாரம் பெறப்பட்டது.

வடக்கு

பிராந்திய முகாமையாளர் (யாழ்ப்பாணம்) மற்றும் பிராந்திய முகாமையாளர் (வவுனியா) இன் கீழ், வட மாகாணத்தில் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா மற்றும் மன்னார் ஆகிய 5 மாவட்டங்களை உள்ளடக்குகின்றவாறு குடிநீர் வழங்கல் வசதிகளையும் பொதுமக்கள் மற்றும் நிறுவனங்களுக்குமான அறிவுரைகளையும் பிராந்திய உதவி நிலையம் (RSC) (வடக்கு) வழங்குகின்றது.

இப்பிராந்தியத்தில் தே.நீ.வ.வ.சபையின் ஊடான மொத்த குழாய்வழி நீர் வழங்கல் சனத்தொகையில் 10.12% ஆகின்ற அதேவேளை கிராமிய நீர் வழங்கல் உள்ளடக்கம் 1.73% ஆகும்.

மேற்படி RSC யின் கீழ் 33 நீர் வழங்கல் திட்டங்கள் காணப்படுகின்றன. தே.நீ.வ.வ.ச.யின் மூலம் நைனாதீவு மற்றும் கைதடி புதிய திட்டங்கள் பொறுப்பேற்கப்பட்டன. ஆண்டினுள் 51.4 கி.மீ. குழாய் நீட்டிப்பு வேலைகள் மேற்கொள்ளப்பட்டன. வருவாயற்ற நீரைக் குறைக்கும் நடவடிக்கையாக 2.77 கி.மீ. AC குழாய்கள், 12 வால்வுகள், 1,843 பழுதடைந்த மானிகளை பதிலீடு செய்தல் உள்ளடங்கிய விநியோக மேம்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன. மேலும், 81 புதிய வால்வுகள் பொருத்தப்பட்டன. வால்வு அறைகள் நிர்மாணிக்கப்பட்டதோடு சில நடைபெற்று வருகின்றன. மடு WSP உள்ளடக்கலாக ரூபா 274 மில்லியன் பெறுமதியான விநியோக முறைமையின் குழாய் நீடிப்புகளை இடுதல் நிறைவடைந்துள்ளது. நிக்கவெவ நீர் வழங்கல் திட்டம் நிறைவு செய்யப்பட்டு சமுதாயத்திற்கு கையளிக்கப்பட்டது.

ArcGIS ஐ பயன்படுத்தி WAMS இன் கீழ் ஏழு நீர் வழங்கல் திட்டங்களின் எண்மயப்படுத்தல் நிறைவு செய்யப்பட்டுள்ளது.

இரண்டு பிராந்திய ஆய்வுகூடங்களும் இரசாயன பரிசோதனைக்கான ISO 17025:2017 க்கான தரமுயர்த்தல் மற்றும் தராதரத்தை பெற்றுள்ளதோடு, நுண்ணுயிரியல் பரிசோதனைக்கான தராதரத்தைப் பெறுவதற்கான நடவடிக்கைகள் நடைபெற்று வருகின்றன. பல்வேறு தரப்பினர்களுக்கான ஆய்வுகூடச் சேவைகள் மூலம் ரூபா 3.5 மில்லியன் ஈட்டப்பட்டது. 5 நீர் வழங்கல் திட்டங்களுக்கான நீர் பாதுகாப்புத் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டது. நெடுந்தீவு நீர் வழங்கல் திட்டத்திற்கான WSP கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டதோடு 120 புள்ளிகளில் மொத்தம் 82 புள்ளிகள் கிடைத்ததோடு தரம் பற்றிய மதிப்பீடு "சராசரி" ஆகும். கிளிநொச்சி நீர் வழங்கல் திட்டத்துக்கான WSP ஆவணங்கள் WSP மதியுரை அலகுக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

பம்பி நிலையத்தை நிர்மாணித்தல், நீர் கோபுரங்களை புதுப்பித்தல், நில நீர்த் தேக்கம் மற்றும் வால்வு அறைகளை நிர்மாணித்தல் மேற்கொள்ளப்பட்டன. புனித மடு தேவாலயம் மற்றும் சிவ தெய்வத்திற்கான திருக்கேதீஸ்வரம் கோயில் ஆகியவற்றில் வர்த்தமானி அறிவித்தலின் மூலம் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள திருவிழாக்களின்போது ஒன்றுகூடுகின்ற 500,000 பக்தர்களுக்கு குடிநீர் வழங்கல் மற்றும் ஏனைய இரண்டாம்நிலை நீர் வழங்கலுக்கு RSC (வடக்கு) அதன் ஒத்துழைப்பை வழங்கியது.

2020 பிந்திய சரிபாத்தலின்போது பட்டியலிடப்பட்ட பயன்படுத்த முடியாத மற்றும் பயன்பாட்டுக்கு எடுக்கப்படாத பொருட்கள் பட்டியல் (மொத்த பெறுமதி ரூபா 1.54 மில்லியன்) நீக்குவதற்கான அனுமதியைப் பெறும் பொருட்டு தலைமை அலுவலகத்திற்கு அனுப்பப்பட்டது. பருத்தித்துறை நீர் வழங்கல் திட்டம் மற்றும் கிளிநொச்சி நீர் வழங்கல் திட்டத்தின் பம்பி நிலையத்தில் சூரிய சக்தி முறைமையை பொருத்துதல் நிறைவு செய்யப்பட்டது.

அனைத்து மாவட்டங்களிலும் ரூபா 38 மில்லியனுக்கான M&E வேலைகள் மேற்கொள்ளப்பட்டதோடு, ரூபா 200 மில்லியன் பெறுமதியான M&E கருவிகளின் பெறுகைகளுக்கான கேள்விப்பத்திர ஆவணங்கள் தயாரிக்கப்பட்டன.

மன்னார் பெரும்பாக நீர் வழங்கல் கருத்திட்டத்துக்கான கல் ஆறுக்கு குறுக்காக நீர்த் தேக்கத்தை நிர்மாணிப்பதற்காக மாகாண நீர்ப்பாசன திணைக்களத்திலிருந்து எழுத்துமூல அனுமதி பெறப்பட்டது. வவுனியா பெரும்பாக நீர் வழங்கல் திட்டத்துக்கான வடிவமைத்து - கட்டியெழுப்பும் விலைக் கேள்வி ஆவணங்கள் தயாரிக்கப்பட்டு தலைமை அலுவலக, P&D பிரிவின் மூலம் மீளாய்வு செய்யப்பட்டது. 2020 – 2025 கூட்டிணைந்த திட்டத்தின் கீழ் நடைமுறைப்படுத்தப்படுவதற்கு 21 கருத்திட்டங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன.

3 நீர் வழங்கல் கருத்திட்டங்களுக்கான ரூபா 1,127 மில்லியன் பெறுமதியான வடிவமைப்பு வேலைகள் நிறைவு செய்யப்பட்டன. வடிவமைப்பு மற்றும் நிர்மாணிப்பு தொடர்பில் பொறியியலாளர்களுக்கு IESL கூட்டிணைந்த அங்கத்துவத்தை வழங்குவதற்கான பயிற்சியளிப்பு அலுவலகமாக RSC (வடக்கு) அலுவலகம் அங்கீகாரம் பெற்றுள்ளது.

ஆழ்துளைக் கிணறுகள் நிர்மாணிக்கப்பட்டதன் மூலம் நாளொன்றுக்கு 828 க.மீ. நிலநீர் உள்வாங்கலின் கொள்ளளவு மேம்பாடு நிறைவு செய்யப்பட்டது. கிணறு அபிவிருத்திச் செயற்பாடுகள் மூலம் நீர் உள்வாங்கல் கிணறுகளில் நிலவிய தொழிற்பாட்டுப் பிரச்சினைகள் தீர்க்கப்பட்டன.

கிழக்கு

பிராந்திய உதவி நிலைய (RSC) (கிழக்கு) தொழிற்பாட்டு மற்றும் பராமரிப்பு (O&M) செயற்பாடுகள் திருகோணமலை, அம்பாறை, மட்டக்களப்பு மற்றும் அக்கரைப்பற்று ஆகிய நான்கு பிராந்திய முகாமையாளர்களால் முகாமை செய்யப்படுகின்றது.

இவ் ஆண்டில் வருவாயற்ற நீர் குறைப்பு நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் பல வருவாயற்ற நீர் குறைப்புச் செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன. தற்போதுள்ள PVC சேவை இணைப்புகளை PE க்கு மாற்றுதல் நடைபெற்று வருகின்றது. திருகோணமலை, அம்பாறை மற்றும் மட்டக்களப்பு பிராந்தியங்களில் PE குழாய்கள் மற்றும் பொருத்துக்களுடன் புதிய இணைப்புகள் வழங்கப்பட்டன. இதற்கு மேலதிகமாக, பணியாளர்களின் வினைத்திறனை மேம்படுத்துவதற்காக சில பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் நடத்தப்பட்டன.

சக்தி சேமிப்பின் கீழ் 2020 ஆம் ஆண்டினுள், பம்பிகள் மற்றும் கருவிகளின் வழமையான தடுப்புப் பராமரிப்புகள், சக்திக் கணக்காய்வு மற்றும் வினைத்திறன்/ செயலாற்றுகைப் பரிசோதனைகள், பம்பித் தரவுத் தளத்தை தாபித்தல் மற்றும் குறைந்த செயலாற்றுகைக் கருவிகளைப் பதிலீடு செய்தல் ஆகியன மேற்கொள்ளப்பட்டன. அத்துடன் திருகோணமலை (80 KW) மற்றும் மட்டக்களப்பு (40 KW) பிராந்திய முகாமையாளர் அலுவலகங்களுக்கான சூரிய சக்தி முறைமையின் பெறுகை நடவடிக்கைகள் நடைபெற்று வருகின்றன.

கிராமிய நீர் வழங்கல் (RWS) செயற்பாடுகள் என்ற வகையில், திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை மற்றும் அக்கரைப்பற்றில் உள்ள பாடசாலைகளின் தற்போதைய துப்புரவேற்பாட்டு நிலைமைகள் பற்றிய தரவுகள் திரட்டப்பட்டு தலைமை அலுவலகத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டது.

கையிருப்பு மட்டப் பராமரிப்பின் பொருட்டு, ரூபா 46 மில்லியன் பெறுமதியான பயன்படுத்தப்படாத மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்படுகின்ற பொருட்கள் வேறு கருத்திட்டங்களுக்கு மாற்றப்பட்டதோடு இற்றைப்படுத்தப்பட்ட பொருட் கையிருப்புப் பட்டியல் ஏனைய பிராந்திய அலுவலகங்களுக்கு மத்தியில் விநியோகிக்கப்பட்டது.

இவ் ஆண்டில் ரூபா 2,082 மில்லியன் கட்டணப் பட்டியல்களுக்கு எதிராக ரூபா 1,902 மில்லியன் திரட்டப்பட்டுள்ளதாக அறிக்கையிடப்பட்டுள்ளது. மேலும், 2020 ஆம் ஆண்டினுள் RSC யின் வருமானம் ரூபா 2,286.05 மில்லியனாக காணப்பட்ட அதேவேளை செலவு ரூபா 3,491.73 மில்லியனாக காணப்பட்டது. ஆண்டினுள் 120 கேள்விப்பத்திரங்கள் கையாளப்பட்டுள்ளதோடு, ரூபா 261 மில்லியன் பெறுமதியான 49 ஒப்பந்தங்கள் வழங்கப்பட்டன.

2020 ஆம் ஆண்டு காலத்தினுள் மொத்தம் 6,000 இரசாயன மற்றும் நுண்ணுயிர்க் கிருமி பற்றிய ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டன. நீர்ப் பாதுகாப்புத் திட்ட நடைமுறைப்படுத்தலை முன்னிட்டு பிராந்திய அலுவலகங்களுக்கு இலக்கிடப்பட்ட திகதிகள் வழங்கப்பட்டன. நீர்ப் பாதுகாப்புத் திட்ட மொடியுல்களின் நடைமுறைப்படுத்தலை முன்னிட்டு அனைத்து பிராந்திய அலுவலகங்களின் மூலமும் குறிப்பிடத்தக்க அடைவுகள் அடையப்பெற்றுள்ளன. 2020 ஆம் ஆண்டு காலத்தினுள் மொத்தம் 90 கி.மீ. குழாய்கள் இடப்பட்டுள்ளன.

2020 இல் ஆதன முகாமைத்துவத்தின் கீழ், நிலையான ஆதனங்களின் சரிபார்த்தல் மேற்கொள்ளப்பட்டமை, பிராந்திய அலுவலகங்களின் நிலையான ஆதனப் பதிவேடு இற்றைப்படுத்தப்பட்டமை மற்றும் பிராந்திய ரீதியில் வாகனங்கள், உட்கட்டமைப்புகள், பொறித்தொகுதி இயந்திர சாதனங்கள், ஏனைய கருவிகள், இடத்துக்கிடம் கொண்டு செல்லும் கருவிகள், கணனிகள் மற்றும் காணிகள் பற்றிய விபரங்கள் தயாரிக்கப்பட்டமை போன்ற செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டது..

புனரமைப்பு நிதி ஒதுக்கீட்டின் கீழ் ரூபா 120 மில்லியன் மற்றும் ரூபா 80 மில்லியன் முறையே புனரமைப்பு வேலைகளுக்காகவும், NRW செயற்பாடுகளுக்கும் ஒதுக்கப்பட்டுள்ளதோடு, இதில் ரூபா 73.3 மில்லியன் செலவிடப்பட்டுள்ளதோடு, ரூபா 35.49 மில்லியன் பெறுமதியான கட்டணப் பட்டியல்கள் கைவசமுள்ளன. பிராந்தியத்தில் பல்வேறு நிறுவனங்களிலிருந்து வழங்கப்பட்ட நிதியங்களிலிருந்து மீள்செறிவூட்டல் வேலைகளின் கீழ் மட்டக்களப்பு பிராந்தியத்தில் ரூபா 19 மில்லியன் பெறுமதியான நீர் வழங்கல் வேலைகள், அக்கரைப்பற்று பிராந்தியத்தில் ரூபா 8 மில்லியன் பெறுமதியான நீர் வழங்கல் வேலைகள், திருகோணமலை பிராந்தியத்தில் ரூபா 17 மில்லியன் பெறுமதியான நீர் வழங்கல் வேலைகள் மேற்கொள்ளப்பட்டன.

CKDu நிகழ்ச்சித்திட்டங்களின் கீழ் திருகோணமலையில் கோமரங்கடவல DS பிரிவில் மற்றும் மொரவெவ DS பிரிவில் ரூபா 7 மில்லியன் பெறுமதியான நீர் வழங்கல் மேம்பாட்டு வேலைகள் நிறைவு செய்யப்பட்டன.

வரட்சியின் போது பொத்துவில் பிரதேசத்தில் நீர் பற்றாக்குறை, திருக்கோவில் பிரதேசத்தில் நீர் பற்றாக்குறை, வரட்சிப் பருவத்தினுள் வெருகல் ஆற்றில் உவர் நீர் ஊடுருவல், புல்மோடை நீர் சுத்திகரிப்புப் பொறித்தொகுதியின் நீர் வளம் (நிலக்கீழ் நீர்) உவர்ப்புத்தன்மை அடைதல், வரட்சிப் பருவத்தில் மகாவலி ஆற்றில் நீர் ஓட்டம் குறைவடைதல், கந்தளாய் நீர்ப்பாசனக் குளத்திலிருந்து நீர் உள்ளீர்க்கப்படுதல் நீர்ப்பாசனத் திணைக்களத்தின் மூலம் வரையறுக்கப்பட்டமை போன்ற பிரச்சினைகளை எதிர்நோக்கிய அதேவேளை கோவிட் - 19 தொற்றுநோய் நிலைமை காலத்தினுள் அனைத்து பிராந்திய செயற்பாடுகளும் நடைபெற்றன.

மேற்கு உற்பத்தி

RSC மேற்கு உற்பத்தி (RSC-WP) தற்போது அம்பதலே, லபுகம, கலட்டுவாவ, பியகம, பம்புகுளிய, கந்தான, கெத்ஹேன மற்றும் நவகமுவ ஆகிய இடங்களில் 8 குடிநீர் சுத்திகரிப்புப் பொறித் தொகுதிகளை தொழிற்படுத்தி பராமரித்து வருவதோடு, இதில் நாளொன்றுக்கு ஏறத்தாழ 550,000 க.மீ. உற்பத்தி செய்கின்ற மிகப் பாரிய வசதியை அம்பத்தலே நீர் சுத்திகரிப்புப் பொறித் தொகுதி கொண்டுள்ளது. RSC – WP யின் மொத்த உற்பத்தியில் ஏறத்தாழ 45% ஐ அம்பத்தலே நீர் சுத்திகரிப்புப் பொறித் தொகுதி தனியாக உற்பத்தி செய்கின்றது. நாளொன்றுக்கு 180,000 க.மீ. கொள்ளளவைக் கொண்ட KRB 11 கருத்திட்டம் 2020 நவெம்பர் தொடக்கம் ஆரம்பித்து வைக்கப்பட்டதைத் தொடர்ந்து RSC – WP யின் மொத்த உற்பத்தி நாளொன்றுக்கு 1.27 மில்லியன் கன மீற்றர் குடிநீராக அதிகரிக்கப்பட்டுள்ளது. தே.நீ.வ.வ.ச. யின் நாளாந்த மொத்த உற்பத்தியில் 50% க்கு அதிகமானதை RSC – WP உற்பத்தி செய்கின்றது. கெத்ஹேன நீர் சுத்திகரிப்புப் பொறித்தொகுதியின் கொள்ளளவை நாளொன்றுக்கு 72,000 க.மீ.களாக அதிகரிக்கச் செய்வதற்காக நடைபெற்று வருகின்ற விரிவாக்கத்தை 2021 மார்ச் மாதமளவில் நிறைவு செய்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. மேல் மாகாணத்தில் வளர்ச்சியடைந்து வருகின்ற கேள்வியை நிறைவு செய்யும் பொருட்டு அண்மிய எதிர்காலத்தில் அம்பத்தலே கொள்ளளவு மேம்பாட்டை நாளொன்றுக்கு 50,000 க.மீ. மூலமும் வெலிவிட்ட நீர் சுத்திகரிப்புப் பொறித் தொகுதியின் கொள்ளளவை நாளொன்றுக்கு 180,000 க.மீ. ஆகவும் உற்பத்திக் கொள்ளளவை அதிகரிக்கச் செய்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

கொழும்பு, கம்பஹா மற்றும் களுத்துறை மாவட்டத்தின் ஒரு பகுதியின் குடிநீர் தேவையை RSC – WP நிறைவு செய்கின்றது. மேற்கு – மத்திய, மேற்கு – வடக்கு மற்றும் மேற்கு – தெற்கு ஆகிய 3 RSCs க்களின் ஊடாக நீர் விநியோகிக்கப்படுகின்றது. பாதுகாப்பானதும் இடையூறுகள் அற்றதுமான நீர் வழங்கலை உறுதி செய்யும் பொருட்டு RSC – WP யின் தொழிற்பாடு மற்றும் பராமரிப்பு நான்கு முகாமையளர்களுக்கு (முகாமையாளர்

– தொழிற்பாடு, முகாமையாளர் – கந்தான, முகாமையாளர் – பியகம, முகாமையாளர் – பராமரிப்பு) மத்தியில் பிரிக்கப்பட்டுள்ளது.

கொலொன்னாவ நீர்த் தேக்கத்திலிருந்து 24 மணி நேர நீர் வழங்கலை உறுதி செய்யும் பொருட்டு 2020 இல் கொலொன்னாவ நீர்த் தேக்க பிரதான பம்பிக் குழாய்கள் OLD 30" – OLD 20" இடையிலான புதிய இணைப்புகளுடன் கூடிய கொலொன்னாவ நீர்த் தேக்கத்துக்கான நீர் வழங்கல் மேம்படுத்தப்பட்டது. அம்பதலே கொள்ளளவு மேம்பாடு நடைபெறும் வரை 2 ஆண்டுகளுக்கு புதிதாக ஆரம்பித்து வைக்கப்பட்ட பியகம கட்டம் 11 பொறித்தொகுதியிலிருந்து அம்பத்தலே நீர்த் தேக்கத்துக்கு மேலதிக நீரைப் பெறுவதற்காக 258 மீற்றர் நீளத்திற்கு 800 மி.மீ. விட்டத்தைக் கொண்ட DI குழாய் இடப்பட்டது.

அம்பத்தலே, பியகம மற்றும் பம்புகுளிய ஆகிய மூன்று நீர் சுத்திகரிப்புப் பொறித் தொகுதிகளும் ISO 9001 – 2015 தரநியம முகாமைத்துவ முறைமைச் சான்றிதழைப் பெற்றுள்ளது. அம்பத்தலே ஆய்வுகூடம் 2020 டிசெம்பரில் இலங்கை தராதரச் சபையின் (SLAB) மூலம் நடத்தப்பட்ட மீள்சான்றுப்படுத்தல் கணக்காய்வைத் தொடர்ந்து ISO 17025-2005 தராதரத்திலிருந்து ISO 17021-2017 தராதரத்திற்கு தரமுயர்த்தப்பட்டது. இதன் மூலம் அம்பத்தலே ஆய்வுகூடத்திற்கு மக்னீசியம் ஒக்சைட்டு உள்ளிட்ட புதிய சுண்ணாம்புத் தராதரம் SLS1577-2017 ஐ அடைவதற்கு இயலுமாயுள்ளது. இதற்கு மேலதிகமாக, மேலும் நான்கு நீர் தர அளவுகோள்களுக்கான தராதரம் (இரும்புத் தாது, புளோரைட், பொஸ்பேட் மற்றும் நைட்ரேட்) APHA 23வது பதிப்பை பயன்படுத்தி தற்போதுள்ள நீர் தர அளவுகோள்களுக்கான தராதரப் பட்டியலுடன் (pH, கலங்கல் நிலை, மின்கடத்தும் திறன், குளோரைட், வன்தன்மை, காரத்தன்மை) சேர்க்கப்பட்டது. தற்போது அம்பத்தலே ஆய்வுகூடம் படிகத்திலுள்ள (காடியம், ஈயம், குரோமியம் மங்கனீசு மற்றும் இரும்புத் தாது) கன உலோகங்கள் உள்ளிட்ட 25 அளவுகோல்களுக்கான தராதரத்தைக் கொண்டுள்ளது. அதேபோன்று பியகம மற்றும் கந்தான ஆய்வுகூடங்களுக்கு 17025-2017 சான்றிதழுக்காக இலங்கை தராதரச் சபைக்கு (SLAB) 2020 இல் விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.


நாள் முழுவதிலும் பாதுகாப்பான நீர் வழங்கலைத் தொடர்ச்சியாகப் பேணிவரும் நோக்கத்துடன் 7 சுத்திகரிப்புப் பொறித்தொகுதிகளிலும் நீர் பாதுகாப்புத் திட்டம் அமுல்படுத்தப்பட்டதோடு, 3 நீர் பாதுகாப்புத் திட்டங்களில் 2019 இல் நடத்தப்பட்ட வெளிவாரி முறைசார்ந்த கணக்காய்வின்போது "சிறந்த" தரப்படுத்தலைப் பெற்றது. லுகம நீர் பாதுகாப்புத் திட்டத்துக்கான உள்ளக முறைசார்ந்த கணக்காய்வு 2020 இல் நடத்தப்பட்டதோடு, மீதி நீர் பாதுகாப்புத் திட்டங்கள் கணக்காய்வுக்காகத் தயார் நிலையில் உள்ளன. 2018 ஆம் ஆண்டில் நடுத்தர அளவிலான கைத்தொழில்களில் உற்பத்திறன் தொடர்பில் பியகம நீர் சுத்திகரிப்புப் பொறித்தொகுதி 2வது இடத்தை பெற்றது. அனைத்து சுத்திகரிப்புப் பொறித் தொகுதித் தலங்களிலும் "உற்பத்தித்திறன்" மற்றும் "5S" மேம்பாட்டுச் செயற்பாடுகளாக பயிற்சியளிப்புகள் மற்றும் செயலமர்வுகள் நடத்தப்பட்டன.

அம்பத்தலே முறைமையின் நம்பகத்தன்மையை மேம்படுத்தும் நோக்கத்துடன் அம்பத்தலே நீர் வழங்கல் முறைமை மேம்பாடு மற்றும் வலுசக்திச் சேமிப்புக் கருத்திட்டம் (AWSSIESP) அதன் பணிகளைத் தொடங்கியுள்ளது. SCADA ஊடாக தொழிற்படுத்தும் பொருட்டு வினைத்திறனை மேம்படுத்தல், சக்தி சேமிப்பு மற்றும் முறைமையின் மேம்பாட்டிற்காக முறைமையில் பல பழைய பம்பிகள் மற்றும் வால்வுகள் பதிலீடு செய்யப்படும். இக்கருத்திட்டம் நாளொன்றுக்கு 8,000 க.மீ. கொள்ளளவு கொண்ட கழிவுநீர் சுத்திகரிப்புப் பொறித் தொகுதியையும் ஆரம்பித்து வைக்கும் என்பதோடு, இது சுற்றாடல் பாதுகாப்பை முன்னிட்டான ஈடுபாட்டை மேம்படுத்தும். மேற்கு உற்பத்தியில் நீர் தரக் கண்காணிப்பு ஒரு வழக்கமான செயற்பாடாகும். SLS 614:2013 தரக்கட்டளைக்கு இணங்கிச் செல்வதை உறுதிப்படுத்தும் பொருட்டு நுகர்வோர் விநியோக இடம் வரை குழாய் வழியிலான குடிநீர் கண்காணிக்கப்பட்டு வருகின்றது. இருப்பிலுள்ள கையிருப்புகளில் பயன்படுத்த முடியாத மற்றும் பயன்பாட்டுக்கு எடுக்கப்படாத பொருட்களை அடையாளம் காணும் பொருட்டு வருடாந்த கையிருப்பு சரிபார்த்தல் மற்றும் நிலையான சொத்துக்களின் சரிபார்த்தல் மேற்கொள்ளப்பட்டது. கையிருப்பு சரிபார்த்தல்களின் பெறுபேறுகள், கையிருப்பு மட்டத்தைக் குறைக்கும் பொருட்டும் ஆதன முகாமைத்துவச் செயற்பாடுகளை மேம்படுத்தும் பொருட்டும் பகுப்பாய்வு செய்யப்படுகின்றன.

நடைமுறையிலுள்ள வெளிநாட்டு/உள்நாட்டு வங்கி நிதியளிப்பிலான நீர் வழங்கல் கருத்திட்டங்கள்

நீர் வழங்கல் அமைச்சின் கீழ் நிறைவேற்றப்படுகின்ற பாரிய நீர் வழங்கல் கருத்திட்டங்கள்

2020 ஆம் ஆண்டினுள் வெளிநாட்டு நிதியளிப்பில் / உள்நாட்டு வங்கி நிதியளிப்பில் நிர்மாணிக்கப்பட்டு / விரிவாக்கப்பட்டு வருகின்ற கருத்திட்டங்களின் அமைவிட வரைபடம்



வெளிநாட்டு நிதியளிப்பிலான கருத்திட்டங்கள்

	கருத்திட்டத்தின் பெயர்	நிதியளிப்பு நிறுவனம்
1	அனுராதபுரம் வடக்கு நீ.வ. கட்டம் 1	ஜ.ச.கூ.மு
2.	அனுராதபுரம் வடக்கு நீ.வ. கட்டம் 11	ஜ.ச.கூ.மு
3	உலர் வலய நீர் மற்றும் துப்புரவேற்பாடு	ஆ..அ.வ.
4.	யாழ்ப்பாணம் - கிளிநொச்சி நீர் வழங்கல் மற்றும் துப்புரவேற்பாடு	ஆ..அ.வ.
5.	கொழும்பு பெரும்பாக நீர், கழிவுநீர் முகாமைத்துவ மேம்பாட்டு முதலீடு	ஆ..அ.வ.
6.	அம்பாறை மாவட்டத்தில் சேவை வழங்கப்படாத பகுதிகளுக்கான ஒருங்கிணைந்த நீர் வழங்கல் திட்டம் - கட்டம் 111	ஆ..அ.வ.
7.	கம்பஹா, அத்தனகல்ல மற்றும் மினுவன்கொட நீர் வழங்கல்	CDBC - சீனா
8.	அம்பதலே நீர் வழங்கல் முறைமையின் மேம்பாடு மற்றும் வலுசக்தி சேமிப்புக் கருத்திட்டம்	AFD
9.	ஆணமடுவ ஒருங்கிணைந்த நீர் வழங்கல் கருத்திட்டம்	ICO - ஸ்பெயின்
10.	களனி வலது கரை நீர் வழங்கல் கருத்திட்டம் - கட்டம் 11	CACIB - பிரான்ஸ்
11.	அலுத்கம, மத்துகம, அகலவத்தை ஒருங்கிணைந்த நீர் வழங்கல் கருத்திட்டம்	எக்சிம் வங்கி இந்தியா & BOC
12.	பொல்கஹவெல, பொத்துஹெர, அலவ்வ ஒருங்கிணைந்த நீர் வழங்கல் கருத்திட்டம்	எக்சிம் வங்கி இந்தியா
13.	மாத்தளை பெரும்பாக நீர் வழங்கல் கருத்திட்டம்	CACIB - பிரான்ஸ்
14.	கண்டி வடக்கு பாததும்பர நீர் வழங்கல் கருத்திட்டம்	எக்சிம் வங்கி - சீனா
15.	ஒருகொடவத்தை தொடக்கம் கடுவலை வரையிலான அனுப்பல் மற்றும் விநியோக பிரதான குழாய்களை பதிலீடு செய்தல்	Unicredit Bank ஆஸ்திரியா மற்றும் மக்கள் வங்கி
16.	கட்டான நீர் வழங்கல் கருத்திட்டம்	EDFC – கொரியா
17.	தம்புத்தேகம நீர் வழங்கல் கருத்திட்டம்	சீன அபிவிருத்தி வங்கி
18.	கிரம கட்டுவன ஒருங்கிணைந்த நீர் வழங்கல் கருத்திட்டம்	Unicredit Bank ஆஸ்திரியா
19.	ஹெம்மாதகம நீர் வழங்கல் கருத்திட்டம்	ING வங்கி – நெதர்லாந்து
20.	ருவன்வெல்ல நீர் வழங்கல் கருத்திட்டம்	எக்சிம் வங்கி, கொரியா
21.	மாத்தறை கட்டம் IV	NDB - இலங்கை
22.	தேதுரு ஓயா நீர் வழங்கல் கருத்திட்டம்	EDCF – கொரியா
23.	களு கங்கை நீர் வழங்கல் கருத்திட்டம்	ஜ.ச.கூ.மு.

உள்நாட்டு வங்கி நிதியளிப்புக் கருத்திட்டங்கள்

அ.	எட்டம்பிட்டிய நீ.வ.க.	People's bank
ஆ.	லக்கல புதிய நகர நீ.வ.க.	HNB
இ.	கலகெதர/மாவத்தகம நீ.வ.க.	DFCC
ஈ.	காலி கொத்தணி நீ.வ.க.	People's/BOC
உ.	கிரிதர நீ.வ.க.	People's bank
ஊ.	இரத்தினபுரி பெரும்பாக நீ.வ.க.	BOC
எ.	வில்கமுவ நீ.வ.க.	NDB
ஏ.	மெதிரிகிரிய விநியோகம் கட்டம் 11	BOC
ஐ.	கொழும்பு மாவட்ட கிழக்கு நகர நீ.வ.க.	BOC
ஒ.	3.5 பில்லியன் கருத்திட்டம் (22 கருத்திட்டங்கள்)	BOC

வெளிநாட்டு நிதியளிப்பிலான நீர் வழங்கல் கருத்திட்டங்கள்

1. அனுராதபுரம் வடக்கு நீர் வழங்கல் கருத்திட்டம் (கட்டம் I)

அனுராதபுரம் வடக்கு நீர் வழங்கல் கருத்திட்டம் கட்டம் 1, 2013 ஜூலை மாதம் ஆரம்பிக்கப்பட்டதோடு, JICA (யப்பான் யென் 5,166 மில்லியன்) மற்றும் இலங்கை அரசாங்கத்தின் (ரூபா 2,789 மில்லியன்) மூலம் நிதியளிக்கப்பட்டது. மொத்த கருத்திட்ட செலவு ரூபா 11,515 மில்லியன் ஆகும்.

2034 ஆம் ஆண்டளவில் அனுராதபுரம் மாவட்டத்தின் மதவாச்சி மற்றும் ரம்பாவ பிரதேச செயலாளர் பிரிவுகளிலுள்ள 115,600 சனத்தொகையினருக்கு பாதுகாப்பான குடிநீரை வழங்குதல் கருத்திட்டத்தின் குறிக்கோளாகும்.

நாளொன்றுக்கு 39,600 க.மீ. கொள்ளளவைக் கொண்ட உள்வாங்கு நிலையம், நாளொன்றுக்கு 9.900 கன மீற்றர் கொள்ளளவைக் கொண்ட நீர் சுத்திகரிப்புப் பொறித்தொகுதி, மொத்தம் 7,000 க.மீ. கொள்ளளவைக் கொண்ட 4 உயர்த்தப்பட்ட நீர் கோபுரங்கள் மற்றும் 3 நில நீர்த் தேக்கங்கள், 89 கி.மீ. நீளமான அனுப்பல் பிரதான குழாய்கள், 520 கி.மீ. நீளமான விநியோக முறைமை மற்றும் தொழிற்படுத்தல் கட்டடங்கள் (OIC அலுவலகம், பொறுப்பாளர் விடுதி, பிரதேச பொறியியலாளர் விடுதிகள்) ஆகியன கருத்திட்ட ஆக்கக்கூறுகளாகும்.

2020 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு கருத்திட்டத்தின் ஒட்டு மொத்த பௌதீக முன்னேற்றம் 57% ஆகுமென்பதோடு கருத்திட்டத்தை 2020 டிசெம்பரில் பூர்த்தி செய்து இயங்கவைப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.



நீர் சுத்திகரிப்புப் பொறித்தொகுதித் தளம் - உள்வாங்கு நிலையம்

2. அனுராதபுரம் வடக்கு நீர் வழங்கல் கருத்திட்டம் (கட்டம் II)

அனுராதபுரம் மாவட்டத்தின் பதவிய, ஹொரவப்பொத்தானை, கஹட்டகஸ்திகிலிய, கெப்பித்திகொல்லாவ பிரதேச செயலாளர் பிரிவுகளிலும் ரம்பாவ பிரதேச செயலாளர் பிரிவின் ஒரு பகுதியிலும் வசிக்கின்ற மக்களுக்கு பாதுகாப்பான குழாய்வழி குடிநீர் வழங்கப்படுவதை உறுதிப்படுத்துதல் அனுராதபுரம் வடக்கு நீர் வழங்கல் கருத்திட்டம் - கட்டம் 11 இன் பிரதானமான விடயப்பரப்பாகும்.

அனுராதபுரம் வடக்கு நீர் வழங்கல் கருத்திட்டம் - கட்டம் 11 க்காக யப்பான் யென் 23,137 மில்லியன் தொகைக்கான கடன் உடன்படிக்கையில் 2016 நவெம்பர் 17 ஆம் திகதி யப்பான் சர்வதேச கூட்டுறவு முகவராண்மை (JICA) மற்றும் இலங்கை அரசாங்கம் கைச்சாத்திட்டுள்ளது. இலங்கை அரசாங்கம் ரூபா 4,732 மில்லியனை இக்கருத்திட்டத்திற்கு பங்களிப்புச் செய்கின்றது. 2017 ஜூன் 14 ஆம் திகதியிலிருந்து கடன் செல்லுபடியாகின்றதோடு விபரமான வடிவமைப்பு மற்றும் விலைக் கேள்வி உதவிக்கான மதியுரை ஒப்பந்தம் 2018 மே மாதம் 1 ஆம் திகதி ஆரம்பமாகியது.

நாளொன்றுக்கு 34,800 க.மீ. கொள்ளளவைக் கொண்ட (யான்ஓயா நீர்த்தேக்கம்) உள்வாங்கு நிலையம், நாளொன்றுக்கு 16,500 கன மீற்றர் கொள்ளளவைக் கொண்ட நீர் சுத்திகரிப்புப் பொறித்தொகுதி, உள்வாங்கு நிலையம் மற்றும் சுத்திகரிப்புப் பொறித்தொகுதிக்கான மின்னியல் மற்றும் எந்திரவியல் கருவிகள் மற்றும் தன்னியக்கமாக்கல் முறைமை, 10 நில நீர் தேக்கங்கள், 9 உயர்த்தப்பட்ட நீர் கோபுரங்கள், 147 கி.மீ. நீளமான அனுப்பல் குழாய் மற்றும் 1,050 கி.மீ. நீளமான விநியோக வலையமைப்பு ஆகியன கருத்திட்ட ஆக்கக்கூறுகளாகும்.

கருத்திட்டம் 12 பொதிகளாக பிரிக்கப்பட்டுள்ளது. வடிவமைப்பு மற்றும் விலைக்கேள்வி உதவிக்கான மதியுரை ஒப்பந்தம் நடைமுறையில் உள்ளது. விபரமான வடிவமைப்பு நிறைவடைந்துள்ளதோடு, விலைக் கேள்வி உதவி தற்போது 99% பௌதீக முன்னேற்றம் மற்றும் 54.54% நிதியியல் முன்னேற்றத்துடன் கூடிய கட்டத்தில் உள்ளது. 2020 இறுதியில் உள்ளவாறு ஒட்டு மொத்த பௌதீக மற்றும் நிதியியல் முன்னேற்றம் முறையே 10.3% மற்றும் 0.73% ஆகும்.

03. உலர் வலய நீர் வழங்கல் மற்றும் துப்புரவேற்பாட்டுக் கருத்திட்டம் (ஆ.அ.வ. 5 வது கருத்திட்டம்)

வடமேல் மற்றும் வடக்கு மாகாணங்களில் உலர் வலய நீர் வழங்கல் மற்றும் துப்புரவேற்பாட்டுக்கான மேம்பாட்டுக் கருத்திட்டத்தை (DZUWSP) தே.நீ.வ.வ.ச. நடைமுறைப்படுத்துகின்றது. இக் கருத்திட்டத்தின் கீழ் வவுனியா, மன்னார், சிலாபம் மற்றும் புத்தளம் ஆகிய நகரங்களுக்கு மேம்படுத்தப்பட்ட நீர் வழங்கல் மற்றும் துப்புரவேற்பாட்டு வசதிகள் வழங்கப்படவுள்ளன. கருத்திட்டத்தின் மொத்த மதிப்பீட்டுச் செலவினம் அமெரிக்க டொலர் 163.33 மில்லியனாகும் (ஏறத்தாழ உண்மைச் செலவு ரூபா 18,400 மில்லியன்). 2020 டிசெம்பர் இறுதியில் உள்ளவாறு ஒட்டு மொத்த பௌதீக மற்றும் நிதிசார் முன்னேற்றம் 98% ஆகும்.

அனைத்து நான்கு பிராந்தியங்களிலும் கருத்திட்ட ஆக்கக்கூறுகள் நிறைவு செய்யப்பட்டு தொழிற்பாட்டு மற்றும் பராமரிப்புக்காக உரிய அதிகார நிறுவனங்களுக்கு கையளிக்கப்பட்டுள்ளன.



சிலாபம் நீர் சுத்திகரிப்புப் பொறித்தொகுதி

4. யாழ்ப்பாணம், கிளிநொச்சி நீர் வழங்கல் மற்றும் துப்புரவேற்பாட்டு கருத்திட்டம் (ADB வது)

இக்கருத்திட்டம், நாளொன்றுக்கு ஏறத்தாழ 24,000 க.மீ. நன்நீரை உற்பத்தி செய்வதற்கான கடல் நீர் மீள் ஊடுகலப்புப் (SWRO) பொறித் தொகுதியின் அபிவிருத்தியின் ஊடாக யாழ்ப்பாண

தீபகற்பத்தினுள் யாழ்ப்பாண நகரம், சுற்றயல் மற்றும் ஒருசில நகரங்களிலுள்ள ஏறத்தாழ 300,000 மக்களின் குடிநீர் வழங்கல் வசதியை மேம்படுத்தும். உத்தேசிக்கப்பட்டுள்ள மீள்கட்டமைப்பின் காரணமாக மதிப்பீட்டுச் செலவு திருத்தப்பட்டதோடு, அம்மதிப்பீடு ரூபா 23,256.00 மில்லியன் மேலதிக நிதியிடல் உள்ளடங்கியதாக ரூபா 35,881.49 மில்லியன் ஆகும்.

15 உயர்த்தப்பட்ட நீர் கோபுரங்கள் நிறைவு செய்யப்பட்டதோடு, மீதி 05 நடைபெற்று வருகின்றன. சுத்திகரிக்கப்பட்ட பிரதான அனுப்பல் குழாயின் 143.5 கி.மீ. நிறைவு செய்யப்பட்டுள்ளதோடு, காற்று வால்வுகள் மற்றும் துணைப்பாகங்களைப் பொருத்துதல் தவிர்ந்த 42.4 கி.மீ. நிறைவு செய்யப்பட்டுள்ளது. விநியோக வலையமைப்புக் குழாய் இடலில் 79.4 கி.மீ. நிறைவடைந்துள்ள அதேவேளை 247 கி.மீ. நடைபெற்று வருகின்றது. SWRO, யாழ்ப்பாண நகர விநியோக பொதி (283 கி.மீ.) மற்றும் தீவக விநியோக பொதி (25 கி.மீ.) தொடர்பில் இறுதி முடிவு எடுக்கப்பட்டுள்ளதோடு ஒப்பந்தத்தை வழங்குதல் நடைபெற்று வருகின்றது. சுன்னாகம் நீர் வழங்கல் ஒப்பந்தம் மற்றும் மீதி விநியோகம் வடிவமைப்புக் கட்டத்தில் உள்ளது. கடல் நீர் உவர்ப்பு நீக்கல் பொறித் தொகுதிக்கான கருத்திட்ட கண்காணிப்பு மேற்பார்வை மதியுரை ஒப்பந்தம் மற்றும் சுற்றாடல் கண்காணிப்புக் குழு ஒப்பந்தம் கையளிப்புக் கட்டத்தில் உள்ளது.

2020 ஆம் ஆண்டின் இறுதியில் உள்ளவாறு மேலதிக நிதியிடல் உள்ளடங்கியதாக பௌதீக மற்றும் நிதிசார் முன்னேற்றம் முறையே 47.37% மற்றும் 46.41% ஐ அடைந்திருந்தது (மூலக் கடனுக்கான செலாவணி வீதம் 1US$ = ரூபா 111.73 என்பதுடன் மேலதிகக் கடனுக்கான செலாவணி வீதம் 1US$ = ரூபா 152.00 ஆகும்).



நிறைவுசெய்யப்பட்ட தெளிந்த நீர்த் தேக்கம் மற்றும் பம்பி நிலையம்

5. கொழும்பு பெரும்பாக நீர் மற்றும் கழிவுநீர் முகாமைத்துவ மேம்பாட்டு முதலீட்டு திட்டம் (GCWWMIIP) - கருத்திட்டம் 01 மற்றும் கருத்திட்டம் 02

GCWWMIIP கருத்திட்டமானது DMA களில் குழாய்களை பதிலீடு செய்தல், சேவை இணைப்பு இடமாற்றங்கள்/ திருத்தங்கள் மற்றும் தாபித்தல் ஊடாக CMC பிரதேசத்தின் நீர் வழங்கல் வலையமைப்பு புனரமைப்பை இலக்காகக் கொண்டுள்ளது. மேற்படி நோக்கத்திற்காக வேலைகள் நான்கு ஒப்பந்தப் பொதிகளுக்கு பிரிக்கப்பட்டுள்ளதோடு, வேலைகளை நிறைவேற்றும் பொருட்டு சர்வதேச சிவில் வேலை ஒப்பந்தகாரர்கள் பெறப்பட்டுள்ளனர். கருத்திட்டத்தின் பிரதானமான ஒப்படைகளாக, 766 கி.மீ. நீளமான குழாய்களை பதிலீடு செய்தல், கொழும்பு நகர எல்லையில் 17 முறைமை உள்ளீட்டு மானிகளை (SIV) பொருத்துதல், 140,000 சேவை இணைப்பு நீர் மானிகளை மீள்இடம்பெறச் செய்தல் மற்றும் பழுதடைந்த நீர் மானிகளை பதிலீடு செய்தல், GIS வலையமைப்பை அளவீடு செய்தல் மற்றும் இற்றைப்படுத்தல் அத்துடன் ஒத்துழைப்புச் செயற்பாடுகளுக்காக கட்டடங்கள் மற்றும் பயிற்சி நிலையங்களை நிர்மாணித்தல் ஆகியன காணப்படுகின்றன.

கருத்திட்டம் 01 மற்றும் கருத்திட்டம் 02 இன் ஒட்டு மொத்த பௌதீக முன்னேற்றம் முறையே 84% மற்றும் 61% ஆகின்ற அதேவேளை கருத்திட்டம் 01 மற்றும் கருத்திட்டம் 02 க்கான நிதிசார் முன்னேற்றம் முறையே 82% மற்றும் 48% ஆகும்.

2020 இல் கோவிட் - 19 தொற்றுநோய் நிலைமைக்கு மத்தியில் கூட கருத்திட்டம் ஏறத்தாழ 126 கி.மீ. (முழுமொத்தமாக 640 கி.மீ. நிறைவு செய்யப்பட்டது) குழாய் இடுதல் மற்றும் 10 DMA களின் நிர்மாணிப்புகளை நிறைவு செய்துள்ளது. 45 DMA க்களில் குழாய் இடுதல் வேலைகள் நடைபெற்று வருவதோடு அதில் 17 DMA க்களில் நிறைவடையும் நிலையை அண்மித்துள்ளது. 20 DMA க்களில் NRW குறைப்புச் செயற்பாடுகள் மதிப்பீடு செய்யப்பட்டுள்ளதோடு, இதில் 26 நிறைவு செய்யப்பட்ட DMA க்களாகும்.

பெறுபேறுகளின்படி, நிறைவு செய்யப்பட்ட அநேகமான DMA க்கள் வருவாயற்ற நீரை 18% க்கு கீழ் சுட்டிக்காட்டுகின்றது. அநேகமாக கோவிட் - 19 தொற்றுநோய் நிலைமையின் காரணமாக NRW கணிப்பீடுகளின்போது மதிப்பிடப்பட்ட நுகர்வு பயன்படுத்தப்பட்டதோடு, நிறைவடையும் கட்டத்தை அண்மித்திருந்த 17 DMA க்களில், கொழும்பு நகரத்தின் ஒருசில பிரதேசங்கள் மூடப்பட்டிருந்ததன் காரணமாக நிறைவு செய்ய முடியாமல் இருந்தது. எனவே, கொழும்பு நகர NRW குறைப்பில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் காணப்படவில்லை.

கருத்திட்ட குறிக்கோள்களை அடைவதற்கான ஒத்துழைப்புச் செயற்பாடுகளின் கீழ், எளீ ஹவுஸ் பிரதேச பொறியியலாளர் அலுவலக நிர்மாணிப்பு பூர்த்தி செய்யப்பட்டு O&M க்கு கையளிக்கப்பட்டுள்ளது. எளீ ஹவுஸில் ஊக்குவிப்புப் பம்பி நிலையம் பூர்த்தி செய்யப்பட்டதோடு தொழிற்பாடு ஆரம்பிக்கப்பட வேண்டியுள்ளது. மாளிகாகந்தவிலுள்ள NRW கட்டடத்தின் மற்றும் தெலவலவிலுள்ள புதிய பயிற்சி நிலையம் மற்றும் தங்குமிட வசதிகளின் நிறைவாக்க வேலைகள் நடைபெற்று வருகின்றன.



புதிய பயிற்சி நிலையம் மற்றும் தங்குமிட வசதிகள்

6. அம்பாறை மாவட்டத்தின் சேவை வழங்கப்படாத பிரதேசங்களுக்கான ஒருங்கிணைந்த நீர் வழங்கல் திட்டம் - கட்டம் 111 கருத்திட்டம்

இக் கருத்திட்டம் அம்பாறை மாவட்டத்தின் சேவை வழங்கப்படாத பிரதேசத்தில் வசிக்கும் ஏறத்தாழ 200,000 மக்களுக்கும் அதேபோன்று மொனராகலை மற்றும் மட்டக்களப்பு மாவட்டங்களின் ஒருசில பகுதிகளுக்கும் சேவையாற்றுகின்றது. கருத்திட்டத்தின் மொத்த மதிப்பீட்டுச் செலவு ரூபா 20,825 மில்லியனாகும். உள்ளடக்கப் பிரதேசத்தை அதிகரிக்கச் செய்தல் மற்றும் உள்ளடக்கப் பிரதேசத்தினுள் வசிக்கும் தேவையுடைய மக்களுக்கு 40,000 புதிய நீர் சேவை இணைப்புகளை வழங்குல் இக்கருத்திட்டத்தின் குறிக்கோளாகும்.

கருத்திட்ட ஆக்கக்கூறு 1 - வெளிநாட்டு மற்றும் இலங்கை அரசாங்கத்தின் பகுதியளவிலான நிதி அளிப்பின் கீழ் நாளொன்றுக்கு 27,000 க.மீ. கொள்ளளவு கொண்ட நீர் சுத்திகரிப்புப் பொறித் தொகுதி மற்றும் நீர் உள்வாங்கு நிலையம், அனுப்பல் குழாய்கள், நில நீர் தேக்கங்கள் மற்றும் பம்பி நிலையங்கள் மற்றும் 698 கி.மீ. விநியோகக் குழாய்களை வழங்கல் ஆகியவற்றை உள்ளடக்குகின்றதோடு, இவை வெளிநாட்டு ஒப்பந்தகாரர்களால் நிறைவு செய்யப்பட்டு O&M க்கு கையளிக்கப்பட்டுள்ளது.

கருத்திட்ட ஆக்கக்கூறு 2 - 6 உயர்த்தப்பட்ட நீர் தாங்கிகளை நிர்மாணிப்பதற்கு இலங்கை அரசாங்க ஆக்கக்கூறுகளின் கீழ் உள்நாட்டு ஒப்பந்தகாரர் ஒருவருக்கு இரண்டு வெவ்வேறான ஒப்பந்தங்களின் கீழ் வழங்கப்பட்டதோடு, பாவனையாளர் பிரச்சினைகளைத் தீர்த்து வைத்தல் தொடர்பில் நீர்க் கோபுரங்களின் அவசர தேவை கருத்திற்கொள்ளப்பட்டு, ஒப்பந்ததாரரின் குறைந்த செயலாற்றுகையின் காரணமாக 2020 ஆகஸ்ட் 24 ஆம் திகதி ஒப்பந்த நிபந்தனைகளின்படி செயலாற்றி இரண்டு ஒப்பந்தங்களும் முடிவுறுத்தப்பட்டன. முடிவுறுத்தப்படுகின்ற சந்தர்ப்பத்தில் பௌதீக முன்னேற்றம் 59% ஆகவும் நிதிசார் முன்னேற்றம் 58% ஆகவும் காணப்பட்டது. தற்போது மீதி வேலைகளுக்கான கேள்விப்பத்திரம் கோரல் நடைபெற்று வருகின்றது.

கருத்திட்ட ஆக்கக்கூறு 3 - 6 நீர்க் கோபுர வளாகங்களிலும் முற்றக் குழாய்களுக்கு உள்நாட்டு ஒப்பந்தகாரர் ஒருவருக்கு வழங்கப்பட்டதோடு, 80மூ பௌதீக முன்னேற்றத்துடன் வேலைகள் நடைபெற்று வருகின்றன.



நீர் உள்வாங்கு நிலையம் - ஹிமிதுராவ

7. கம்பஹா, அத்தனகல்ல மற்றும் மினுவன்கொட ஒருங்கிணைந்த நீர் வழங்கல் திட்டம்

கம்பஹா, அத்தனகல்ல மற்றும் மினுவன்கொட ஒருங்கிணைந்த நீர் வழங்கல் திட்டமானது, கம்பஹா மாவட்டத்தில் உள்ள 443 கிராம அலுவலர் பிரிவுகளில் 88,000 புதிய இணைப்புகளை வழங்குவதற்கும் மற்றும் தற்போதுள்ள 22,000 சேவை இணைப்புகளின் சேவை மேம்பாட்டுக்குமானதாகும்.

நாளொன்றுக்கு 54,000 கன மீற்றர் கொள்ளளவைக் கொண்ட நீர் சுத்திகரிப்புப் பொறித்தொகுதி, 1,500 க.மீ. கொள்ளளவைக் கொண்ட 5 உயர்த்தப்பட்ட நீர் கோபுரங்கள், 10,000 க.மீ. கொள்ளளவு கொண்ட நில நீர்த் தேக்கம், 90 கி.மீ. நீளத்திற்கு அனுப்பல் குழாய் மற்றும் 630 கி.மீ. நீளத்திற்கு விநியோக குழாய்கள் ஆகியன நிர்மாணிக்கப்படவுள்ளன. பிரதான நீர் வளமூலம் என்ற வகையில் பஸ்னாகொடவில், 3.5 மில்லியன் க.மீ. கொள்ளளவைக் கொண்ட நீர்த் தேக்கத்தைக் கட்டுவதற்கான அணைக்கட்டு ஒன்றும் நிர்மாணிக்கப்படும்.

சுவீகரிப்பு மற்றும் இழப்பீடு வழங்கல் தாமதமானதன் காரணமாக அணைக்கட்டு மற்றும் உள்வாங்கு நிலைய நிர்மாணிப்பு தாமதமடைந்ததோடு தற்போது ஆரம்பிக்கப்படும் நிலையில் உள்ளது. சுத்திகரிப்புப் பொறித் தொகுதி, 04 உயர்த்தப்பட்ட நீர் கோபுரங்கள் மற்றும் நிர்த் தேக்க நிர்மாணிப்பு நடைபெற்று வருகின்றது. பஸ்யால, நைவல, மினுவன்கொட, பலும்மஹர மற்றும் அத்தனகல்லயில் 35 கி.மீ. அனுப்பல் குழாய்கள் மற்றும் 335 கி.மீ. விநியோக குழாய்கள் பூர்த்தி செய்யப்பட்டுள்ள போதிலும் நிட்டம்புவ மற்றும் கம்பஹாவுக்கான ஒப்பந்தப் பொதிகள் இதுவரை அளிக்கப்படவில்லை.

ஒட்டுமொத்த பௌதீக முன்னேற்றம் ஏறத்தாழ 63% ஆகுமென்பதோடு, நிதியியல் முன்னேற்றம் ரூபா 31,000 மில்லியனாகும்.

8. அம்பத்தலே நீர் வழங்கல் திட்ட மேம்பாடு மற்றும் வலுசக்தி சேமிப்புக் கருத்திட்டம்

அம்பத்தலே நீர் வழங்கல் முறைமையின் மேம்பாடு மற்றும் சக்தி சேமிப்புக் கருத்திட்டத்தை கொழும்பு பிரதான திட்ட கருத்திட்டத்தின் (2012/2013) சிபாரிசுக்கமைய தே.நீ.வ.வ.ச. அமுல்படுத்தியது. அம்பத்தலே நீர் வழங்கல் முறைமையில் உற்பத்தியின் நம்பகத்தன்மையை மேம்படுத்தல், வலுசக்தி சேமிப்பு நடவடிக்கைகளை அறிமுகப்படுத்தல் மற்றும் அனுப்பல் வசதிகளின் வினைத்திறனை மேம்படுத்தல் ஆகியன இக்கருத்திட்டத்தின் நோக்கமாகும். கருத்திட்டத்தின் இணை-நிதியிடலாளர்களான ஆசிய அபிவிருத்தி வங்கி (ADB) மற்றும் அபிவிருத்திக்கான பிரான்ஸ் முகவராண்மை (AFD) யின் உதவியோடு, இலங்கை அரசாங்கம் (GoSL) அம்பத்தலே நீர் வழங்கல் திட்ட மேம்பாடு மற்றும் வலுசக்தி சேமிப்புக் கருத்திட்டத்தை (AWSSIESP) பொறுப்பேற்றுள்ளது. கருத்திட்ட மொத்த மதிப்பீட்டுச் செலவு அமெரிக்க டொலர் 100 மில்லியனாகும். 2020 இறுதியில் உள்ளவாறு கருத்திட்டத்தின் பௌதீக முன்னேற்றம் 38.46% ஆகின்ற அதேவேளை நிதிசார் முன்னேற்றம் 25.95% ஆகும்.

நிர்மாணிப்பு ஒப்பந்தமும் மதியுரை ஒப்பந்தமும் தே.நீ.வ.வ.ச.யின் கட்டுப்பாட்டுக்கு அப்பாட்பட்ட ஒருசில காரணங்களினால், குறிப்பாக கோவிட் - 19 தொற்றுநோய் நிலைமை காரணமாக தாமதமடைந்துள்ளது. எனினும், ஒப்பந்தகாரரும் மதியுரையாளரும் கால நீடிப்புக்கு வேண்டுகோள் விடுத்துள்ளதோடு, மேற்படி கால நீடிப்பானது உரிய மீளாய்வு மற்றும் பொறியியலாளரின் அங்கீகாரத்துடன் வழங்கப்படும் என்பதோடு 2020.08.04 ஆம் திகதி ICB ஒப்பந்தப் பொதியை அளித்தலும் நடைபெறும். ஆதலால், AFD கடன் வசதி உடன்படிக்கைக்கான கால நீடிப்புடன் மேலும் கருத்திட்டத்தை நிறைவு செய்வதற்கான கால நீடிப்பும் தேவைப்படும்.

கருத்திட்டத்தை நிறைவு செய்து கையளிக்கும் பொருட்டு PMU வின் மூலம் நிர்மாணிப்பு ஒப்பந்தப் பொதியின் முன்னேற்றம் அண்மித்திருந்து கண்காணிக்கப்படுகின்றது.

9. ஆனமடுவ ஒருங்கிணைந்த நீர் வழங்கல் கருத்திட்டம்

ஆனமடுவ ஒருங்கிணைந்த நீர் வழங்கல் கருத்திட்டத்திற்கு ஸ்பெயினின் அரசாங்கத்தினாலும் இலங்கையின் ஹட்டன் நெஷனல் வங்கியினாலும் நிதியளிக்கப்படுகிறது. கருத்திட்டமானது ஆனமடுவ, கொட்டவெஹர, நவகத்தேகம மற்றும் புத்தளத்தின் ஒரு பகுதி, கல்கமுவ, முந்தலம் மற்றும் மஹகும்புக்கடவல பிரதேச செயலாளர் பிரிவுகளின் குடிநீர் பிரச்சினைக்கு நிரந்தரமான தீர்வாக அமையும். இக்கருத்திட்டமானது, இன்கிமிட்டிய நீர்த்தேக்கத்தில் நாளொன்றுக்கு 12,500 க.மீ. கொள்ளளவைக் கொண்ட ஒரு புதிய உள்வாங்கு நிலையம், 1 கி.மீ. நீளமான பிரதானமான மூல நீர் குழாயுடன் நாளொன்றுக்கு 11,000 க.மீ. கொள்ளளவைக் கொண்ட முழுச் சுத்திகரிப்புப் பொறித்தொகுதி ஆகியவற்றை நிர்மாணிக்கும். 61 கி.மீ. நீளமுள்ள தெளிவான நீர் அனுப்பல் குழாய் நான்கு நீர் கோபுரங்களுக்கு 1,500 க.மீ., 1,000 க.மீ. மற்றும் 300 க.மீ. கொள்ளளவுடன் சேவையாற்றுவதோடு,

அனைத்து மின் - இயந்திர உபகரணங்கள் உட்பட 328 கி.மீ. நீளமுள்ள விநியோக முறைமை ஆகியவற்றையும் நிறுவன அபிவிருத்தியையும் கருத்திட்டம் உள்ளடக்குகின்றது.

கோவிட் - 19 காரணமாக ஏற்பட்ட சிரமங்கள் மற்றும் இடையூறுகளுக்கு மத்தியில் கூட, குழாய் இடுதல் மற்றும் நீர் கோபுர நிர்மாணிப்பை குறிப்பிடத்தக்கதொரு மட்டத்தில் தொடர்வதற்கு இக்கருத்திட்டத்தினால் இயலுமாயிருந்ததோடு, 2021 ஜனவரி நடுப்பகுதியில் நீர் சுத்திகரிப்புப் பொறித்தொகுதியின் நிர்மாணிப்பை ஆரம்பிப்பதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. மேலும், 2020 டிசெம்பர் இறுதியில் கருத்திட்டம் 55% பௌதீக முன்னேற்றத்தையும் 43.24% நிதியியல் முன்னேற்றத்தையும் அடைந்திருந்தது.

10. களனி வலது கரை நீர் வழங்கல் கருத்திட்டம் - கட்டம் 11

களனி வலது கரை நீர் வழங்கல் திட்டம் கட்டம் - 11, பியகம நீர் சுத்திகரிப்புப் பொறித் தொகுதிக்கு அருகாமையில் நாளொன்றுக்கு 180,000 க.மீ. கொள்ளளவு கொண்ட புதிய குடிநீர் சுத்திகரிப்புப் பொறித்தொகுதியை நிர்மாணிப்பதன் மூலம், அதிகரித்து வருகின்ற கேள்வியைக் கொண்ட கொழும்பு வடக்கு நகருக்கான பாதுகாப்பான குடிநீர் வழங்கலை உறுதி செய்யும் முதன்மையான குறிக்கோளுடன் நடைமுறைப்படுத்தப்படுகின்றது.

கருத்திட்டத்தின் கீழ், பியகம, களனி, மஹர, ஜா-எல, வத்தள மற்றும் கடான கிராம அலுவலர் பிரிவுகளின் குடிநீர் தேவையை நிறைவு செய்யும் பொருட்டு அண்ணளவாக 24 கி.மீ. DI குழாய்களை இடுவதன் மூலம் பிரதான அனுப்பல் குழாய் வலையமைப்புக்கான மேம்பாடு மேற்கொள்ளப்படுகின்றது. இக்கருத்திட்டமானது 120,000 புதிய நீர் இணைப்புகளுடன் கூடியதாக 1,750,000 மக்கள் தொகைக்கு சேவை வழங்கும்.

கருத்திட்டத்திற்கு கிரடிற் எக்ரிகோல் கோபரேட் மற்றும் சர்வதேச பிரான்ஸ் வங்கி, ஹட்டன் நெஷனல் வங்கி, இலங்கை வங்கி மற்றும் இலங்கை அரசாங்கம் நிதியிடுகின்றன. கருத்திட்ட செலவு ஏறத்தாழ ரூபா 32,700 மில்லியனாகும். கருத்திட்டம் 2017 ஜனவரி மாதத்தில் ஆரம்பிக்கப்பட்டதோடு, 2020 நவெம்பர் மாதம் 18 ஆம் திகதி பிரதம அமைச்சர் கௌரவ மஹிந்த ராஜபக்ஷ அவர்களால் புதிய பொறித்தொகுதி உத்தியோகபூர்வ ரீதியாக திறந்து வைக்கப்பட்டு மக்களுக்கு பொறுப்பளிக்கப்பட்டது.

2020 டிசெம்பர் இறுதியளவில் கருத்திட்டத்தின் ஒட்டுமொத்த பௌதீக மற்றும் நிதிசார் முன்னேற்றம் முறையே 97% மற்றும் 84%



பம்பி நிலையம்

11. அளுத்கம, மத்துகம, அகலவத்த ஒருங்கிணைந்த நீர் வழங்கல் கருத்திட்டம்

இந்த கருத்திட்டத்தின் குறிக்கோள்கள் யாவையெனில், கெத்ஹேன நீர் சுத்திகரிப்புப் பொறித்தொகுதியின் உற்பத்திக் கொள்ளளவை விஸ்தரிப்பதன் மூலம் மத்துகம, தொடங்கொட, களுத்துறை, பேருவளை, அகலவத்த மற்றும் மதுராவல பிரதேச செயலாளர் பிரிவுகளின் 269 கிராம அலுவலர் பிரிவுகளில் அதிகரித்து வருகின்ற நீருக்கான கேள்வியை நிறைவு செய்யும் பொருட்டு பாதுகாப்பான குடிநீர் வசதிகளை வழங்குதலும் மற்றும் கொலமோதரவில் புதிய நீர் உள்வாங்கு நிலையமொன்றை நிர்மாணிப்பதன் மூலமும் குடா கங்கவில் இருந்து மூல நீரை அனுப்புவதன் மூலமும் தற்போதைய உவர்ப்புத்தன்மை ஊடுருவல் பிரச்சினையைத் தணிப்பதுமாகும்.

இக் கருத்திட்டம் 32,000 புதிய நீர் வழங்கல் இணைப்புகளை வழங்குவதற்கும் தற்போதுள்ள பாவனையாளர்களின் சேவை மட்டத்தை மேம்படுத்துவதற்குமாக வடிவமைக்கப்பட்டுள்ளது. இக்கருத்திட்டத்திலிருந்து மொத்தம் 300,000 மக்கள் (60,000 குடும்பங்கள்) பயனடைவார்கள்.

மொத்த மதிப்பீட்டு செலவு ரூபா 32,278 மில்லியனாகும் என்பதோடு, கருத்திட்டத்திற்கு இந்தியாவின் எக்சீம் வங்கி, இலங்கை வங்கி மற்றும் இலங்கை அரசாங்கம் நிதியிடுகின்றது. கருத்திட்டம் 2017.05.15 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டதோடு 2021 மார்ச் 31 ஆம் திகதி நிறைவு செய்வதற்கு திட்டமிடப்பட்டுள்ளது (கால நீடிப்பு வழங்கப்படவுள்ளது).

கொலமோதர புதிய உள்வாங்கு நிலையம், கெத்ஹேன நீர் சுத்திகரிப்புப் பொறித் தொகுதி, பிரதான அனுப்பல் குழாய்களை இடுதல் மற்றும் விநியோக முறைமையை இடுதல் ஆகியன நடைபெற்று வருகின்றன. தொடங்கொட நில நீர்த் தேக்கம் நிறைவு செய்யப்பட்டுள்ளதோடு மத்துகம, மத்துகம கந்த, அகலவத்த மற்றும் நேபொட வில் குழாய் இடல் தவிர நீர்க் கோபுரங்கள் நிறைவு செய்யப்பட்டுள்ளன. 2020 இறுதியில் உள்ளவாறு ஒட்டுமொத்த பௌதீக மற்றும் நிதிசார் முன்னேற்றம் முறையே 70.55% மற்றும் 70.52% ஆகும்.



கொலமோதரவில் புதிய உள்வாங்கு நிலையத்தின் நிர்மாணிப்பு

12. பொல்கஹவெல, பொத்துஹர மற்றும் அலவ்வ ஒருங்கிணைந்த நீர் வழங்கல் கருத்திட்டம்

பொல்கஹவெல, பொத்துஹர மற்றும் அலவ்வ ஒருங்கிணைந்த நீர் வழங்கல் கருத்திட்டமானது, கருத்திட்ட பிரதேசத்தின் 167 கிராம அலுவலகர் பிரிவுகளிலுள்ள 162,725 மக்களுக்கு பாதுகாப்பான குடிநீரை வழங்குவதற்கும் விநியோகிப்பதற்குமான திட்டமிடப்பட்டு, வடிவமைத்து கட்டியெழுப்பப்படும் ஒப்பந்தமாகும். இதற்கு இந்தியாவின் எக்சீம் வங்கி (85%) மற்றும் இலங்கை வங்கி (15%) நிதியிடுகின்றது. கருத்திட்ட மொத்த மதிப்பீட்டு செலவு அமெரிக்க டொலர் 108 மில்லியனாகும்.

2020 இறுதியில் ஒட்டுமொத்த பௌதீக மற்றும் நிதிசார் முன்னேற்றம் முறையே 81.1% மற்றும் 79.0% ஆகும். கருத்திட்டத்தை 2021 மார்ச் மாதத்தில் நிறைவு செய்ய எதிர்பார்க்கப்படுகிறது.

அமுல்படுத்தலின்போது, பல சவால்களை வெற்றிகொள்ள நேரிட்டது. வீதி நெடுகிலும் குழாய் இடுவதற்கு RDA அனுமதி

அளிக்கவில்லை. அனைத்து அனுப்பல் குழாய்களையும் புகையிரதப் பாதை ஒதுக்கங்களுக்கு மாற்ற வேண்டி நேரிட்டதோடு, புகையிரக் கடவைகளையும் அமைக்க வேண்டி நேரிட்டது. திறந்த அடிப்படையிலான வீதிக் கடவைகளுக்கு அனுமதி அளிக்கப்படவில்லை என்பதோடு, 60 வீதிக் கடவைகளுக்கு HDD அமைக்க வேண்டியிருந்தது. மேலும், கடுகதிப் பாதை நுழைவாயில்களில் மண் நிரப்பல் நிறைவடையும் வரை 06 கடவைகளின் பணிகளை நிறைவேற்ற முடியாமல் இருந்ததோடு, பருவக்காற்று மழையின்போது ஆற்றுப் பெருக்கெடுப்பின் ஏற்ற இறக்கம் உள்வாங்கு நிலைய நிர்மாணிப்பை பாதித்தது.

13. மாத்தளை பெரும்பாக நீர் வழங்கல் கருத்திட்டம்

மாத்தளை பெரும்பாக நீர் வழங்கல் கருத்திட்டம் (GMWSP) 05 சுத்திகரிப்புப் பொறித்தொகுதிகள் (ஒட்டு மொத்தக் கொள்ளளவு நாளொன்றுக்கு 75,000 க.மீ.), 05 உள்வாங்கு நிலையங்கள், 10 சேவை நீர்த் தேக்கங்களின் நிர்மாணிப்பையும் மற்றும் 433 கி.மீ. குழாய் இடலையும் உள்ளடக்குகின்றது. ஒப்பந்தமானது வடிவமைத்து கட்டியெழுப்பும் வகை ஒப்பந்தமாகும் என்பதோடு, யூரோ 105,645,791 + ரூபா 8,210,959 மில்லியன் தொகைக்கு கையளிக்கப்பட்டுள்ளது. ஒப்பந்த காலம் 36 மாதங்கள் ஆகுமென்பதோடு, 2017 ஏப்ரல் இல் ஆரம்பிக்கப்பட்டது.

2020 இறுதியில் உள்ளவாறு, சுத்திகரிப்புப் பொறித்தொகுதிகள் 91%, நீர்த் தேக்கங்கள் 94%, உள்வாங்கு நிலையங்கள் 85% மற்றும் குழாய் இடல் வேலைகள் 66% பூர்த்தியடைந்திருந்ததோடு 90% இயந்திர சாதனங்கள் வழங்கப்பட்டிருந்த அதேவேளை பொருத்துதல் வேலைகள் நடைபெற்று வருகின்றன. 80% நிதிசார் முன்னேற்றம் அடையப்பெற்றுள்ளது.

கருத்திட்டம் சில பிரச்சினைகளை எதிர்நோக்கியதால் கருத்திட்ட முன்னேற்றம் அட்டவணைப்படுத்தப்பட்டதை விட பிந்தங்கிய நிலையில் உள்ளது. ரத்தொட்டவுக்கான உத்தேச நீர் மூலமான வெரலுகஸ்தென்ன கிளை ஆற்றிலிருந்து நீர் உள்ளீர்க்கப்படுவதற்கு விவசாயிகள் எதிர்ப்புத் தெரிவித்தமை தொடர்பான பிரச்சினை இதுவரை தீர்க்கப்படவில்லை. காணி கொள்ளல் நடவடிக்கைகள் தாமதமாயுள்ளதோடு 09 காணிகள் இன்னும் கொள்ளப்பட வேண்டிய நிலையில் உள்ளன.

நிறைவு செய்யப்பட்ட 4 சுத்திகரிப்புப் பொறித்தொகுதிகள் மற்றும் விநியோக முறைமையின் 72% உள்ளடங்கியதாக பகுதியளவு பூர்த்தி நிலையுடன் கூடிய கருத்திட்டத்தை 2021 ஏப்பிரல் மாதத்தில் ஆரம்பிப்பதற்கு எதிர்பார்த்துள்ளது. மீதி 2021 ஆகஸ்ட் மாதமளவில் நிறைவு செய்யப்படும்.



அம்பன் கங்கை நீர் சுத்திகரிப்புப் பொறித்தொகுதி

14. கண்டி வடக்கு - பாததும்பர ஒருங்கிணைந்த நீர் வழங்கல் கருத்திட்டம்

கண்டி வடக்கு – பாததும்பர ஒருங்கிணைந்த நீர் வழங்கல் கருத்திட்டமானது கண்டி மாவட்டத்தின் பாததும்பர, அக்குரண, ஹாரிஸ்பத்துவ, பூஜாபிட்டிய, கண்டி நகர் மற்றும் சுற்றயல் அத்துடன் தும்பனே ஆகிய 6 பிரதேச செயலாளர் பிரிவுகளை உள்ளடக்குகின்றதோடு, தற்போதுள்ள நீர் சுத்திகரிப்புப் பொறித் தொகுதியின் உற்பத்திக் கொள்ளளவை நாளொன்றுக்கு 100,000 க.மீ. வரை அதிகரிக்கச் செய்வதன் மூலம் 470,000 சனத்தொகையினர் நன்மை பெறுவார்கள்.

சீன எக்சிம் வங்கி மற்றும் இலங்கை அரசாங்கம் நிதியிடும் மூலமாகும். ஒப்பந்தத் தொகையான அமெரிக்க டொலர் 194.83 மில்லியன் மற்றும் ரூபா 8,356.25 அத்துடன் இலங்கை அரசாங்கத்தின் தொகையான ரூபா 7,313.94 மில்லியன் ஆகும். ஒப்பந்தம் 2019 ஆகஸ்ட் 21 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டதோடு, 2022 ஆகஸ்ட் 20 ஆம் திகதி நிறைவு செய்யப்படவுள்ளது.

KNPIWSP பிரதானமாக, நீர் சுத்திகரிப்புப் பொறித் தொகுதி மற்றும் உள்வாங்கு நிலையத்தின் மேம்பாடு, 27 சேவை நீர்த் தேக்கங்கள், 17 புதிய பம்பி நிலையங்கள், 570 கி.மீ. நீளமான விநியோக குழாய் மற்றும் 83 கி.மீ. நீளமான அனுப்பல் குழாய்களை வழங்குதல் மற்றும் இடுதல் ஆகியவற்றையும் கிராமிய நீர் வழங்கல் (RWS) மற்றும் NRW தடுப்பு மற்றும் குறைப்பு நிகழ்ச்சித்திட்டத்துக்கான ஏற்பாடுகளையும் உள்ளடக்குகின்றது. 2020 டிசெம்பர் இறுதியில் மொத்த பௌதீக முன்னேற்றம் 28.5% ஆகுமென்பதோடு, நிதிசார் முன்னேற்றம் 24.5% ஆகும்.

15. ஒருகொடவத்தை தொடக்கம் கருவெல வரையிலுள்ள அனுப்பல் மற்றும் விநியோக பிரதான குழாய்களை மாற்றீடு செய்தல்

இக்கருத்திட்டத்தின் கீழ், லபுகம, கலட்டுவாவ மற்றும் அம்பத்தலே நீர் சுத்திகரிப்புப் பொறித்தொகுதியிலிருந்தான அனுப்பல் குழாய்கள் ஒருகொடவத்த மேம்பாலத்திலிருந்து கடுவெல கடுகதி நெடுஞ்சாலை இடமாற்றல் வரை லோ லெவல் வீதி நெடுகிலும் 1,200 மி.மீ. மற்றும் 1,000 மி.மீ. DI குழாய்களின் மூலம் மாற்றீடு செய்யப்படும். இதற்கு மேலதிகமாக இப்பிரிவில் 355 மி.மீ. விட்டம் மற்றும் 160 மி.மீ. விட்டம் கொண்ட HDPE குழாய்களும் இடப்படும்.

இவ் ஆண்டின் இறுதியில் உள்ளவாறு பௌதீக மற்றும் நிதிசார் முன்னேற்றம் முறையே 62.09% மற்றும் 59.85% ஆகும்.

இக் கருத்திட்டமானது RDA வீதி விஸ்தரிப்புக் கருத்திட்டத்திற்கு சமாந்திரமாக அமுலாக்கப்பட்டு வருகின்றது. வீதியின் சில பகுதிகளில் காணி கொள்ளல் மற்றும் வரப்பு நிரப்பல் வேலைகள் நிறைவடையாமையின் காரணமாக குழாய் இடலை மேற்கொள்ள முடியாதுள்ளது. RDA பிரச்சினைகளுக்கு மேலதிகமாக சில அமைவிடங்களில் பயன்பாட்டுக் கம்பிகள் மற்றும் தூண்கள் (CEB, LECO மற்றும் ரெலிகொம்) இடம்பெயரச் செய்யப்பட வேண்டியும் உள்ளன.



DI - குழாய் இடுதல்

16. கட்டான நீர் வழங்கல் கருத்திட்டம்

இக் கருத்திட்டத்தின் கீழ், கட்டான பிரதேச செயலாளர் பிரிவின் 46 கிராம அலுவலர் பிரிவுகளை உள்ளடக்குகின்ற மூன்று வலயங்களில் (கட்டான தெற்கு, கட்டான மத்திய மற்றும் கட்டான வடக்கு) வசிக்கின்ற மக்களுக்கு பாதுகாப்பான குடிநீர் வழங்கப்பட உள்ளதோடு, நலன்பெறுனர்களின் மொத்த எண்ணிக்கை 156,000 ஆகும்.

இக்கருத்திட்டமானது, 2,000 கி.மீ. கொள்ளளவுடன் கூடிய 3 உயர்த்தப்பட்ட நீர் கோபுரங்கள், 12 கி.மீ. நீளத்துக்கான பிரதான அனுப்பல் குழாய்கள், 240 கி.மீ. நீளத்துக்கான பிரதான விநியோக முறைமை, SCADA முறைமை உள்ளடங்கிய M&E வேலைகள் மற்றும் கட்டடங்கள் (2 OIC அலுவலகங்கள், 1 தனியாள் வதிவிடங்கள் மற்றும் 2 பம்பி நிலையங்கள்) ஆகியவற்றை உள்ளடக்குகின்ற வடிவமைத்து கட்டியெழுப்பப்படுகின்ற ஒரு கருத்திட்டமாகும்.

2020 டிசெம்பர் இறுதி வரை பௌதீக முன்னேற்றம் 96.76% ஆகுமென்பதோடு, நிதிசார் முன்னேற்றம் 85.3% ஆகும். குழாய்களின் நீர்பாய்சிக் கழுவுகின்ற வேலைகள் மற்றும் M&E பொருத்துதல் வேலைகள் நடைபெற்று வருகின்றன. இக்கருத்திட்டம் 2021 பெப்ருவரி மாதம் இறுதியளவில் நிறைவு செய்யப்படவுள்ளது.



வடக்கு நீர் கோபுரம் - பம்புகுளிய

17. தம்புத்தேகம நீர் வழங்கல் கருத்திட்டம்

இக் கருத்திட்டம் தம்புத்தேகம, தலாவ மற்றும் கல்னேவ பிரதேச செயலாளர் பிரிவுகளிலுள்ள 42 கிராம உத்தியோகத்தர் பிரிவுகளுக்கு பாதுகாப்பானதும் நம்பத்தகுந்ததுமான குழாய் நீரை வழங்குவதற்காகும். கருத்திட்ட காலகட்டம் 2018 ஜுலை 01 ஆம் திகதி தொடக்கம் 2021 டிசெம்பர் 31 ஆம் திகதி வரையிலாகும்.

கோவிட் - 19 தொற்றுநோய் நிலைமை மற்றும் ராஜாங்கனய குளத்தின் ஒருங்கிணைந்த விவசாயிகள் அமைப்புக்களின் மூலம் மேற்கொள்ளப்பட்ட எதிர்ப்பின் காரணமாக கருத்திட்டத்தின் முன்னேற்றம் பெரிதும் பாதிக்கப்பட்டது. இதற்கு மேலதிகமாக, உள்வாங்கு நிலையத்துக்காக நீர்ப்பாசனத் திணைக்களம் காணியை விடுவிக்காமையினாலும் முன்னேற்றம் பாதிக்கப்பட்டுள்ளது. 2021.12.31 வரை கால நீடிப்பு வழங்குவதற்கு தே.நீ.வ.வ.ச. ஏற்கனவே இணங்கியுள்ளது.

ராஜாங்கனய குளத்திலிருந்து நீர் உள்ளீர்க்கப்படுவதற்கும் நீர் உள்வாங்கு நிலைய கட்டமைப்புக்கான காணி கொள்ளலுக்குமாக அங்கீகாரம் பெறுதல் இன்னும் நடைபெற வேண்டிய நிலையில் உள்ளது. எவ்வாறாயினும், மாற்று நீர் வளமூலமாக அங்கமுவ நீர்த் தேக்கம் தற்போது முன்மொழியப்பட்டு உள்ளதோடு கற்கைகள் நடைபெற்று வருகின்றன.

18. கிரம – கட்டுவன ஒருங்கிணைந்த நீர் வழங்கல் கருத்திட்டம்

கட்டுவன மற்றும் வலஸ்முல்ல பிரதேச செயலாளர் பிரிவில் 34 கிராம அலுவலர் பிரிவுகளை உள்ளடக்குகின்றவாறு நம்பத்தகுந்த குடிநீர் வழங்கலை பெற்றுக்கொடுப்பதற்கு கிரம - கட்டுவன ஒருங்கிணைந்த நீர் வழங்கல் திட்டம் திட்டமிட்டுள்ளது.

ஆஸ்திரியா UNI CREDIT வங்கி மூலமான யூரோ 10,485,611 மில்லியன் வெளிநாட்டு நிதி மற்றும் இலங்கை அரசாங்கத்தின் மூலமான ரூபா 700 மில்லியன் உள்நாட்டு நிதிக்கு கருத்திட்டம் கையளிக்கப்பட்டது. கருத்திட்டம் 2019 ஜனவரி 31 இல் ஆரம்பிக்கப்பட்டது. உள்வாங்கு நிலையத்தின் மாற்றம் மற்றும் எதிர்பார்க்கப்படாத கோவிட் - 19 பிரச்சினைகள் காரணமாக கருத்திட்ட கால கட்டத்தை 2021 ஆகஸ்ட் 31 ஆம் திகதி வரை நீடிக்கப்பட வேண்டியுள்ளது.

கருத்திட்டமானது, கிரம மற்றும் கட்டுவன ஆகிய இரண்டு பிரதேசங்களலும் 7.5 கி.மீ. அனுப்பல் குழாய் வலையமைப்பு மற்றும் 45 கி.மீ. விநியோக வலையமைப்பு ஆகியவற்றுடன் நாளொன்றுக்கு 3,500 க.மீ. கொள்ளளவு கொண்ட சுத்திகரிப்புப் பொறித்தொகுதியை உள்ளடக்குகின்றது. மொத்த நலன்பெறுனர்கள் எண்ணிக்கை 26,000 ஆகுமென்பதோடு, இதன் மூலம் 3,200 புதிய இணைப்புகளுடன் 2,000 சேவை இணைப்புகளின் மேம்பாடு வழங்கப்படும்.

2020 ஆம் ஆண்டின் இறுதியில் நீர் சுத்திகரிப்புப் பொறித்தொகுதியில் 76%, விநியோக மற்றும் அனுப்பல் குழாய் வலையமைப்பில் 85%, நீர்த் தேக்கத்தில் 79% மற்றும் உள்வாங்கு நிலையத்தில் 14% பிரதான செயற்பாடுகளுடன் கருத்திட்டத்தின் பௌதீக முன்னேற்றம் 73% ஐ அடைந்திருந்தது. நிதிசார் முன்னேற்றம் 82.36 ஆக காணப்பட்டது. இதைத்தவிர, கிரம நீர்த் தேக்கம் நீர்ப் பாசனத் திணைக்களத்தின் வேண்டுகோளின் படி புதிய மூல நீர் வளமூலமாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

19. ஹெம்மாதகம நீர் வழங்கல் கருத்திட்டம்

சப்பிரகமுவ மாகாணத்தில், கேகாலை மாவட்டத்தினுள் மாவனெல்ல, அரநாயக்க மற்றும் ரம்புக்கன பிரதேச செயலாளர் பிரிவுகளில் 135 கிராம அலுவலர் பிரிவுகளை உள்ளடக்குகின்றவாறு, (2042 ஆம் ஆண்டளவில்) 169,000 சனத்தொகையினருக்கு குழாய்வழி நீரை வழங்குவதற்கான புதிய நீர் வழங்கல் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காக ஹெம்மாதகம நீர் வழங்கல் கருத்திட்டம் அமுலாக்கப்படுகின்றது. மொத்த கருத்திட்ட செலவு ரூபா 17,422.29 மில்லியனாகும் என்பதோடு, கருத்திட்ட காலம் 44 மாதங்களாகும் (2018 – 2020 ஆகஸ்ட்).

நாளொன்றுக்கு 21,000 க.மீ. கொள்ளளவு கொண்ட நீர் சுத்திகரிப்புப் பொறித் தொகுதி, நாளொன்றுக்கு 24,000 க.மீ. கொள்ளளவு கொண்ட உள்வாங்கு நிலையம், 07 நில நீர்த் தேக்கங்கள், 0.63 கி.மீ. நீளமான மூல நீர் பிரதான குழாய், 37 கி.மீ. நீளமான அனுப்பல் குழாய் வலையமைப்பு மற்றும் 74 கி.மீ. நீளமான விநியோக முறைமை ஆகியன கருத்திட்டத்தின் பிரதானமான ஆக்கக்கூறுகளாகும்.

2020 ஆம் ஆண்டின் இறுதியில் பௌதீக மற்றும் நிதிசார் முன்னேற்றம் முறையே 26.35% மற்றும் 35.99% ஆகும். தற்போது, கருத்திட்டத்தின் பாரியதொரு பிரச்சினையாக பெருந்தோட்டத் துறையிலிருந்து காணி கொள்ளல் அடையாளம் காணப்பட்டுள்ளதோடு, இழப்பீடு இன்னும் வழங்கப்பட வேண்டியுள்ளது. நீர் சுத்திகரிப்புப் பொறித்தொகுதியின் நிர்மாணிப்பு ஆரம்பிக்கப்பட்டுள்ளதோடு நீர்த் தேக்க நிர்மாணிப்பின் முன்னேற்றம் 44% ஆகும்.

20. ருவன்வெல்ல நீர் வழங்கல் கருத்திட்டம்

கருத்திட்டமானது, நாளொன்றுக்கு 4,400 க.மீ. கொள்ளளவு கொண்ட உள்வாங்கு நிலையம் மற்றும் மூல நீர் பிரதான குழாய், நாளொன்றுக்கு 4,000 க.மீ. கொள்ளளவு கொண்ட சுத்திகரிப்புப் பொறித்தொகுதி மற்றும் ஐந்து களஞ்சிய நீர்த் தேக்கங்கள் ஆகியவற்றின் நிர்மாணிப்பை உள்ளடக்குகின்றது. அனுப்பல் மற்றும் விநியோக குழாய்கள் முறையே ஏறத்தாழ 20 கி.மீ. மற்றும் 90 கி.மீ. நீளத்தைக் கொண்டுள்ளன. கருத்திட்ட செயற்பாடுகள் 2020 ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் ஆரம்பிக்கப்பட்டன. முதலாவது கோவிட் தொற்றுநோய் பரவல் கால கட்டத்தில் கள வேலைகள் தொடர்பில் விதிக்கப்பட்ட கட்டுப்பாடுகள் மற்றும் திருத்தப்பட்ட வடிவமைப்பு பரப்பெல்லையுடன் கொள்ளளவு அதிகரிப்பினால் ஏற்பட்ட வடிவமைப்பு மாற்றம் ஆகியவற்றின் காரணமாக எதிர்பார்க்கப்பட்ட இலக்கை அடைய முடியவில்லை.

தற்போது அனேகமான வடிவமைப்பு வேலைகள் நிறைவடைந்துள்ளதோடு, நிர்மாணிப்புச் செயற்பாடுகளை ஆரம்பிப்பதற்குத் தயார் நிலையில் உள்ளது. நீர் சுத்திகரிப்புப் பொறித்தொகுதியின் வடிவமைப்புகள், காணி கொள்ளல் மற்றும் கல் வெடிவைத்துத் தகர்த்தல் மேற்கொள்ளப்பட்டன. விடயப்பரப்பு மாற்றம் தொடர்பில் மாற்றல் குழுவின் அங்கீகாரம் மற்றும் PAC அங்கீகாரம் பெறப்பட்டது. கன்னத்தொட்ட மற்றும் மஹல்ல இரண்டு நீர்த் தேக்கங்களினதும் உயர்வு குறைக்கப்பட்டதன் மூலம் கருத்திட்டத்துக்கு சக்தி சேமிப்பு மேற்கொள்ளப்பட்டது. அத்துடன் உந்துவிசைப் பம்பி நிலையம் மற்றும் சிறிய கொள்ளளவு நீர்த் தேக்கம் அறிமுகப்படுத்தப்பட்டது. 2020 ஆம் ஆண்டின் இறுதியில் கருத்திட்டத்தின் பௌதீக முன்னேற்றம் 8.02% ஆகவும் நிதிசார் முன்னேற்றம் 19.44% ஆகவும் காணப்பட்டது.

21. மாத்தறை கட்டம் IV நீர் வழங்கல் கருத்திட்டம்

மாத்தறை கட்டம் IV நீர் வழங்கல் கருத்திட்டத்தின் பிரதானமான குறிக்கோள், மாத்தறை மாவட்டத்தின் தற்போதுள்ள முறைமையின் நீரின் தரத்தை மற்றும் அளவை மேம்படுத்தல் மற்றும் புதிய பிரதேசங்களுக்கு குழாய்வழி நீர் சேவையை வழங்குதல் ஆகும். கருத்திட்டமானது, 05 வாயில்களுடன் கூடிய உவர்நீர்த் தடை, நாளொன்றுக்கு 60,000 க.மீ. கொள்ளளவு கொண்ட உள்வாங்கு நிலையம், நாளொன்றுக்கு 30,000 க.மீ. கொள்ளளவு கொண்ட நீர் சுத்திகரிப்புப் பொறித்தொகுதி, 05 சேவை நீர்த் தேக்கங்கள், 04 மேல் உயர்த்தப்பட்ட நீர்க் கோபுரங்கள், 75 கி.மீ. நீளமான அனுப்பல் குழாய் முறைமை, 105 கி.மீ. நீளமான விநியோக முறைமை, பிரதான ஆய்வுகூடம், 02 OIC அலுவலகங்கள் மற்றும் 08 பணியாளர் விடுதிகள் ஆகியவற்றை உள்ளடக்குகின்றது. மாத்தறை மாவட்டம் மற்றும் அம்பாந்தோட்டை மாவட்டத்தின் ஒரு பகுதியில் 12 பிரதேச செயலாளர் பிரிவுகளின் 236 கிராம அலுவலர் பிரிவுகளை உள்ளடக்கியதாக கருத்திட்ட உள்ளடக்க பிரதேசம் அமைந்துள்ளது. நிதியிடல் முகவர் இலங்கை அரசாங்கம் மற்றும் தேசிய அபிவிருத்தி வங்கி (NDB) ஆகும். கருத்திட்டம் ஆரம்பிக்கப்பட்ட திகதி 2017.10.10 ஆகுமென்பதோடு, காணி கொள்ளல் தாமதம் காரணமாக திருத்தப்பட்ட நிறைவு செய்யும் திகதி 2021.10.02 ஆகும். கருத்திட்டத்தின் மொத்த மதிப்பீட்டுச் செலவு அமெரிக்க டொலருக்கான ரூபாவின் அதிகரிப்புக்கமைய ஏறத்தாழ ரூபா 20,700 மில்லியன் (உள்நாட்டு வங்கி நிதி) + ரூபா 4,000 மில்லியன் (இலங்கை அரசாங்க) ஆகும். 2020 ஆம் ஆண்டின் திசெம்பர் மாத இறுதியில் பௌதீக முன்னேற்றம் 65% ஆகவும் நிதிசார் முன்னேற்றம் (மூல ஒப்பந்தத் தொகையின் படி) 56.3% ஆகவும் (திருத்தப்பட்ட ஒப்பந்தத் தொகையின் படி) 47.9% ஆகவும் உள்ளது.

22. தெதுரு ஓயா நீர் வழங்கல் கருத்திட்டம்

தெதுரு ஓயா நீர் வழங்கல் கருத்திட்டம் 2016 டிசெம்பர் மாதம் 22 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டதோடு, 2019 மார்ச் 21 ஆம் திகதி தொடக்கத்தில் நிறைவு செய்யப்படும் திகதியாக இருந்தது. பல்வேறு காரணிகள் காரணமாக கால நீடிப்புகள் பல வழங்கப்பட்டதன் பின்னர் கருத்திட்டம் 2021 பெப்ரவரி மாதம் 28 ஆம் திகதி நிறைவு செய்யப்படவுள்ளது. கருத்திட்ட ஆக்கக்கூறுகள், நாளொன்றுக்கு 34,500 க.மீ. கொள்ளளவு கொண்ட உள்வாங்கு நிலையம், நாளொன்றுக்கு 15,000 க.மீ. கொள்ளளவு கொண்ட நீர் சுத்திகரிப்புப் பொறித்தொகுதி, 3 உயர்த்தப்பட்ட நீர் கோபுரங்கள் மற்றும் 3,750 க.மீ. களஞ்சியப்படுத்தலுக்கான நீர்த்தொட்டி, 39 கி.மீ. நீளமான பிரதான அனுப்பல் குழாய், 266 கி.மீ. நீளமான விநியோக முறைமை மற்றும் தொழிற்பாட்டுக் கட்டடங்கள் (OIC அலுவலகம் மற்றும் 3 விடுதிகள்) ஆகும். 2020 ஆம் ஆண்டின் இறுதியில் கருத்திட்டத்தின் பௌதீக முன்னேற்றம் 99% ஆகுமென்பதோடு, நிதியியல் முன்னேற்றம் 84.5% ஆகும்.

மஹவ, மற்றும் பொல்பித்திகம பிரதேச செயலாளர் பிரிவுகளில் வசிக்கும் 25,000 குடும்பங்களுக்கு பாதுகாப்பான குடிநீரை வழங்குவதற்கு கருத்திட்டம் இலக்கிட்டுள்ளது. கருத்திட்டத்தை நிறைவு செய்தலானது CKDu வினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு பெருமளவு நன்மை அளிக்கக்கூடியதாக இருக்கும்.

2020 ஆம் ஆண்டு காலத்தினுள் அனைத்து நிர்மாணிப்புச் செயற்பாடுகள் மற்றும் செயலாற்றுகைப் பரிசோதனைகள் நிறைவு செய்யப்பட்டுள்ளன. ஆரம்பத்தில் மஹவ நீர் வழங்கல் திட்டத்தில் தற்போதுள்ள பாவனையாளர்களுக்கு நீர் விநியோகிக்கப்படும் என்பதோடு, 2021 இன் முதலாவது காலாண்டினுள் புதிய இணைப்புகள் வழங்கப்படுவதை ஆரம்பிக்க முடியுமாக இருக்கும்.

நீர் வள மூலத்தில் (தெதுரு ஓயா நீர்த் தேக்கத்தில்) பருவகால பாசி இனங்களின் விரைவான வளர்ச்சியைக் கையாள்வதற்காக நீர் சுத்திகரிப்பு வசதி மேம்படுத்தப்பட உள்ளதோடு, கருத்திட்ட பிரதேசத்தில் உள்ள அனைத்து மக்களுக்கும் நீரைப் பெறக்கூடிய தன்மையை உறுதி செய்யும் பொருட்டு விநியோக நிரப்பல்கள் மேற்கொள்ளப்பட உள்ளன.

23. களு கங்கை நீர் வழங்கல் கருத்திட்டம்

களு கங்கை நீர் வழங்கல் கருத்திட்டம் (KGWSP) கட்டம்-1 இன் சேவை வழங்கப்படாத பிரதேசங்களுக்கு குழாய் நீர் வழங்கல் உள்ளடக்கத்தை நீடிப்பதன் மூலம் பொதுமக்களுக்கு பாதுகாப்பான குடிநீரை வழங்குதல் மற்றும் களு கங்கை நீர் வழங்கல் வசதிகளின் பிரதான வேலைகள் மற்றும் நீர் அனுப்பலை விஸ்தரித்தல் மற்றும் நீர் விநியோக வலையமைப்பை மீளமைத்தல் மூலம் களுத்துறை மற்றும் கொழும்பு மாவட்டங்களின் தற்போதுள்ள நீர் வழங்கல் வலையமைப்புகளின் வினைத்திறனை மேம்படுத்தல் ஆகியன கருத்திட்டத்தின் குறிக்கோள்கள் ஆகும். இதன் மூலம், கருத்திட்ட பெறுபேறுகளின் விளைவாக தற்போதுள்ள சேவை இணைப்புகளை குறைந்தபட்சம் 75,000 ஆல் அதிகரிக்கலாம் என்பதோடு, ஏறத்தாழ 200,000 சேவை இணைப்புகளின் சேவை மேம்பாடு உள்ளடங்கலாக கருத்திட்டம் 1 மற்றும் 2 இன் விஸ்தரிப்பு நிறைவடைவதைத் தொடர்ந்து மொத்தம் 500,994 குடும்பங்கள் நன்மை அடைவார்கள் என மதிப்பிடப்பட்டுள்ளது.

கந்தானவில் முறையே நாளொன்றுக்கு 294,000 க.மீ. மற்றும் நாளொன்றுக்கு 140,000 க.மீ. கொள்ளளவு கொண்ட உள்வாங்கு நிலையம் மற்றும் நீர் சுத்திகரிப்புப் பொறித்தொகுதியை நிர்மாணிப்பதன் மூலமான பிரதான வேலைகளின் மேம்பாட்டை கருத்திட்டம் உள்ளடக்கியுள்ளது. இதற்கு மேலதிகமாக, ஏறத்தாழ 38 கி.மீ. நீளமான பிரதான அனுப்பல் குழாய், ஏறத்தாழ 100 கி.மீ. நீளமான விநியோக பிரதான ஊட்டல் குழாய்கள், 6 நில நீர்த் தேக்கங்களின் நிர்மாணிப்பு, தெஹிவலவில் குழாய் பதிலீடுகள் மற்றும் புதிய பொருத்தல்கள், O&M கட்டடங்கள் மற்றும் கருவிகளுக்கான பெறுகை நடவடிக்கைகள் ஆகியனவும் கருத்திட்டத்தின் கீழ் வரையறுக்கப்பட்டுள்ளன.

2020 டிசெம்பர் 04 ஆம் திகதி மதியுரை வேலைகள் உத்தியோகபூர்வ ரீதியில் ஆரம்பிக்கப்பட்டன. காணி கொள்ளல் நடைபெற்று வருவதோடு, தளத்தின் பெரும்பாலான பகுதிகளுக்கு பிரவேசிப்பதற்கான இயலுமை ஏற்கனவே உருவாக்கப்பட்டுள்ளது. எனவே, விபரமான வடிவமைப்பு வேலைகளுக்கான ஆரம்ப கட்டத்தில் தேவைப்பட்ட காணி அளவை மற்றும் மண் பரிசோதனை நிறைவு செய்யப்பட்டது. கருத்திட்ட நிறைவு தினம் 2026 மே மாதமாகும்.

உள்நாட்டு வங்கி நிதியளிப்பிலான நீர் வழங்கல் கருத்திட்டங்கள்

940,000 சனத்தொகையினருக்கு நன்மைபயக்கக் கூடிய வகையில் நீர் வழங்கல் வசதிகளை மேம்படுத்துவதற்காக 16 பாரிய கருத்திட்டங்கள் உட்பட ரூபா 3.5 பில்லியன் உள்நாட்டு வங்கி நிதியளிப்புக் (LBF) கருத்திட்டங்களும் ரூபா 53 பில்லியன் உள்நாட்டு வங்கி நிதியளிப்புக் கருத்திட்டங்களும் தொழிற்படுத்தப்படுகின்றன. பெந்தோட்ட நீர் வழங்கல் கருத்திட்டம், ருகுணுபுர நீர் வழங்கல் திட்டம், கொழும்பு நகர நீர் வழங்கல் கருத்திட்டம், அம்பாறை நீர் வழங்கல் திட்டம், அவிசாவலை மற்றும் கொஸ்கம ஒருங்கிணைந்த நீர் வழங்கல் கருத்திட்டம், கலகெதர மாவத்தகம நீர் வழங்கல் கருத்திட்டம், கொழும்பு மாவட்ட கிழக்கு நகர நீர் வழங்கல் கருத்திட்டம் பொதி I மற்றும் பொதி II ஆகிய கருத்திட்டங்கள் நிறைவு செய்யப்பட்டுள்ளதோடு, ஏனைய அனேகமான கருத்திட்டங்கள் 2021 இல் நிறைவு செய்யப்படவுள்ளன.

அ). எட்டம்பிட்டிய நீர் வழங்கல் கருத்திட்டம்

பதுளை மாவட்டத்தின் 13 கிராம அலுவலர் பிரிவுகளில் ரூபா 2.2 பில்லியன் தொகையின் நன்மைகள் பகிரப்படுகின்றன. 4,000 மீற்றர் நீளமான குழாயின் ஊடாக உமா ஓயா நீர்த் தேக்கத்திலிருந்து மூல நீர் பிரித்தெடுக்கப்படுகிறது. கருத்திட்டத்தின் நீர் சுத்திகரிப்புப் பொறித் தொகுதி நாளொன்றுக்கு 3,000 க.மீ. கொள்ளளவு கொண்டது. 225 க.மீ. கொண்ட இரண்டு தொட்டிகள், 80 க.மீ. கொண்ட இரும்பு உட்காப்புக் கொண்ட சீமெந்துத் தொட்டி மற்றும் 800 க.மீ. கொண்ட தொட்டி ஆகியவற்றை உள்ளடக்கியதாக 7,000 மீ. நீளமான பிரதான பம்பிக் குழாய் காணப்படுகின்றது. விநியோக வலையமைப்பு 120 கி.மீ. நீளத்தை விட அதிகமாகும். 2020 ஆம் ஆண்டில் முழுமொத்த பௌதீக முன்னேற்றம், மொத்தம் 3,000 இல் 1,890 பாவணையாளர் இணைப்புகளுடன் (திட்டமிடப்பட்ட கொள்ளளவில் அரைவாசிக்கு மேல் அடைந்துள்ளது) 95% ஆகுமென்பதோடு, மொத்த நிதியியல் முன்னேற்றம் ரூபா 1,688 மில்லியன் (ஏறத்தாழ 77%) ஆகும். 2020 பெப்ரவரி நடுப்பகுதியில் கௌரவ பிரதம அமைச்சர் மஹிந்த ராஜபக்ஷ அவர்களால் சுத்திகரிப்புப் பொறித்தொகுதி திறந்து வைக்கப்பட்டதோடு, அன்று தொடக்கம் பொறித்தொகுதி தொழிற்பட்டு வருகின்றது. பொதுமக்கள் வேண்டுகோளின் காரணமாக தற்போது நாளொன்றுக்கு 1,000 க.மீ. மேம்பாட்டுக்கு திட்டமிடப்பட்டு வருகின்றது. பொதுமக்கள் வேண்டுகோளைத் தொடர்ந்து குழாய் இடலுடன் மீதியுள்ள இணைப்புகளை வழங்குதல் மீதமுள்ள பணியாகும்.



எட்டம்பிட்டிய நீர் சுத்திகரிப்புப் பொறித்தொகுதி

ஆ). லக்கல புதிய நகர நீர் வழங்கல் கருத்திட்டம்

மாத்தளை மாவட்டத்தில் மொரகஹகந்த - களுகங்கை அபிவிருத்திக் கருத்திட்டத்தின் காரணமாக இடம்பெயர்ந்துள்ள மக்கள் மீளக்குடியமர்த்தப்பட்டுள்ள பிரதேசங்களுக்கு குடிநீர் வசதியை வழங்கும் பொருட்டு லக்கல புதிய நகர நீர் வழங்கல் கருத்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

திட்டமிடப்பட்டுள்ளவாறு 2036 ஆம் ஆண்டளவில் 24,438 நலன்பெறுனர்களைக் கொண்டிருக்கும். கருத்திட்ட செலவு ரூபா 4,496 மில்லியன் என்பதோடு, HNB / மக்கள் வங்கி மூலம் நிதியளிக்கப்படுகிறது. 2016 ஜூலை மாதம் வேலைகள் ஆரம்பிக்கப்பட்டதோடு, 2018 ஜூலை மாதமளவில் நிறைவு செய்வதற்கு எதிர்பார்க்கப்பட்டது. ஒப்பந்த காலம் 2021.10.14 வரை நீடிக்கப்பட்டுள்ளது.

களுகங்கை நீர் மூலமாகும். பொதுமக்களின் எதிர்ப்பு காரணமாக உள்வாங்கு நிலைய அமைவிடம் மாற்றப்பட்டதால், பிரதான மூல நீர் குழாய் (RWM) மற்றும் பிரதான சுத்திகரிக்கப்பட்ட நீர்க் குழாய்களின் (TWM) பாதைகள், நீர் சுத்திகரிப்புப் பொறித்தொகுதியின் அமைவிடத்தில் மாற்றமடைந்துள்ளது. திருத்தப்பட்ட விடயப்பரப்பானது, நாளொன்றுக்கு 4,250 க.மீ. கொள்ளளவைக் கொண்ட உள்வாங்கு நிலையம், நாளொன்றுக்கு 4,000 க.மீ. கொள்ளளவைக் கொண்ட சுத்திகரிப்புப் பொறித்தொகுதி, 03 சேவை நீர்த் தேக்கங்கள், RWM, TWM மற்றும் முறையே ஏறத்தாழ 6.4 கி.மீ., 29 கி.மீ. மற்றும் 190 கி.மீ. நீளமான விநியோக முறைமை மற்றும் துணைக் கட்டடங்களையும் உள்ளடக்கியுள்ளது.

2019 ஜூலை தொடக்கம் நிதியிடல் வங்கியின் (HNB) மூலம் கொடுப்பனவுகளை விடுவிப்பதில் தாமதம் ஏற்பட்டதன் காரணமாக வேலைகளின் முன்னேற்றம் தாமதமடைந்தது. ஆதலால், மக்கள் வங்கியுடன் புதிய கடன் உடன்படிக்கை ஒன்று கைச்சாத்திடப்பட்டதோடு, 2020 ஆகஸ்டில் நிலுவைக் கொடுப்பனவுகள் விடுவிக்கப்பட்டன. கருத்திட்டத்தின் தாமதத்திற்கு நிலவி வருகின்ற கோவிட் 19 தொற்றுநோய் நிலைமையும் தாக்கம் ஆகும்.

2020 டிசெம்பர் இறுதியில் கருத்திட்டத்தின் திரண்ட செலவு ரூபா 2,081.3 மில்லியனாகின்ற அதேவேளை ஒட்டுமொத்த பௌதீக முன்னேற்றம் மற்றும் நிதிசார் முன்னேற்றம் முறையே 55.93% மற்றும் 46.3% ஆகும்.



உள்வாங்கு நிலையம்

இ). கலகெதர மாவத்தகம நீர் வழங்கல் கருத்திட்டம்

கலகெதர மாவத்தகம நீர் வழங்கல் கருத்திட்டமானது வடமேல் மாகாணத்தில், குருணாகல் மாவட்டத்தின் மாவத்தகம மற்றும் மல்லவபிட்டிய பிரதேச செயலாளர் பிரிவுகளில் அமைந்துள்ளது. இக்கருத்திட்டத்தின் மூலம் 29 கிராம அலுவலர் பிரிவுகளை உள்ளடக்கியவாறு ஏறத்தாழ 33,000 மக்களுக்கு சேவையாற்றத் திட்டமிடப்பட்டுள்ளது.

இக் கருத்திட்டமானது, 27 கி.மீ. நீளமான HDPE/DI பிரதான அனுப்பல் குழாய், மாவத்தகம மற்றும் பில்லஸ்ஸவில் 1,000 க.மீ. நீர் கோபுரம், 450 க.மீ. நில நீர்த்தேக்கம், 146 கி.மீ. நீளம் கொண்ட விநியோக முறைமை, இரசாயன கட்டடங்கள் (02), சமநிலைப்படுத்தல் நீர்த் தேக்கம் மற்றும் OIC அலுவலகக் கட்டடம் ஆகியனவற்றின் நிர்மாணித்தலை உள்ளடக்குகின்றது. RSC (மத்திய), கட்டுகஸ்தொட்டவிலுள்ள நீர் சுத்திகரிப்புப் பொறித்தொகுதியின் நீர் வளமூலமாகும். கலகெதர நீர் வழங்கல் திட்டத்துக்கு நாளொன்றுக்கு 2,000 க.மீ. மற்றும் மாவத்தகம நீர் வழங்கல் திட்டத்துக்கு நாளொன்றுக்கு 3,000 க.மீ. நீரை வழங்குவதற்கு கருத்திட்டத்தின் மூலம் கருதப்பட்டுள்ளது.

கருத்திட்டம் 2019 மே மாதம் 31 ஆம் திகதி ஓரளவுக்கு நிறைவு செய்யப்பட்டது. இரண்டு நீடிப்புகள் மற்றும் OIC கட்டடத்தின் இறுதிக் கட்டம் உள்ளடங்கிய அடையாளம் காணப்பட்டுள்ள மீதி வேலைகள் கைவிடப்பட்ட பொறுப்புக் காலத்தினுள் நிறைவு செய்யப்பட்டன. கருத்திட்ட செயலாற்றுகை நிறைவுச் சான்றிதழ் 2020.08.07 ஆம் திகதி வழங்கப்பட்டது. கருத்திட்ட வேலைகள் நிறைவு செய்யப்பட்டு இறுதிக் கட்டணப் பட்டியல்கள் செலுத்தப்பட்டன.

கண்டி வடக்கு கருத்திட்டத்தின் ஆக்கக்கூறுகள் நிறைவடைந்து RSC (மத்தி) யில் இருந்து நாளொன்றுக்கு 5,000 க.மீ. நீர் கிடைக்காமையின் காரணமாக கருத்திட்டத்தை பொறுப்பளிக்க முடியாதுள்ளது.



குழாய் இடுதல்

ஈ). காலி கொத்தணி நீர் வழங்கல் கருத்திட்டம்

இக் கருத்திட்டம் வெலிகம, ஊரகஸ்மன்சந்தி, கோனபீனுவல மற்றும் திக்கும்புர நீர் வழங்கல் திட்டங்களை உள்ளடக்குகின்றதோடு மொத்தம் 56 கிராம அலுவலர் பிரிவுகளை உள்ளடக்கியுள்ளது. கருத்திட்ட செலவு ரூபா 1,755 மில்லியனாகும். நிதியிடல் இலங்கை வங்கி (ரூபா 754 மில்லியன்) மற்றும் மக்கள் வங்கி (ரூபா 1000 மில்லியன்) நிதியிட்டுள்ளது. எதிர்பார்க்கப்படுகின்ற இணைப்புகளின் எண்ணிக்கை 13,900 மற்றும், நலன்பெறுனர்களின் எண்ணிக்கை 55,600 ஆகும். கருத்திட்டத்தின் பிரதானமான ஆக்கக்கூறுகள்: 85 கி.மீ. நீளத்துக்கான PVC/DI குழாய்கள், வால்வுகள் மற்றும் துணைப்பாகங்களை வழங்குதல், மொத்தம் 109 கி.மீ. நீளத்துக்கு PVC/DI குழாய்கள் மற்றும் துணைப்பாகங்களை இடுதல், ஊரகஸ்மன்சந்தி, பத்தேகம, கொவுல்ஹேன, வக்வெல்ல மற்றும் வெலிகமவில் பம்பிகளை பொருத்துதல் ஆகியனவாகும். மேலும், ஊரகஸ்மன்சந்தியில் 100 க.மீ. கொள்ளளவு கொண்ட நில நீர்த் தேக்கம் மற்றும் மேலுயர்த்தப்பட்ட பம்பி நிலையம், வெலிகமவில் 225 க.மீ. கொள்ளளவு கொண்ட நில நீர்த்தேக்கம், பொறுப்பாளர் விடுதி மற்றும் பம்பி நிலையம் ஆகியன கருத்திட்ட விடயப்பரப்பின் கீழ் மேற்கொள்ளப்படவுள்ளன. கருத்திட்டம் 2017 மார்ச் மாதத்தில் ஆரம்பிக்கப்பட்டதோடு, 2020 ஆம் ஆண்டு இறுதியில் கருத்திட்டத்தின் பௌதீக மற்றும் நிதிசார் முன்னேற்றம முறையே 70.6% மற்றும் 53.5% ஆகும். கோணபீனுவல, திக்கும்புர மற்றும் வெலிகம நீர் வழங்கல் திட்டங்கள் 2021 ஜனவரி 29 ஆம் திகதியளவில் நிறைவு செய்யப்படுவதற்கு எதிர்ப்பார்க்கப்பட்டதோடு, 2021 ஜனவரி இறுதியளவில் ஒப்பந்தகாரரின் மூலம் ஆற்றப்படுகின்ற வேலைகள் நிறைவு செய்யப்படுவதற்கமைய தே.நீ.வ.வ.ச.யின் முகாமைத்துவத்தின் மூலம் ஊரகஸ்மன்ஹந்திய நீர் வழங்கல் திட்டத்தை ஆரம்பித்து வைப்பதற்கான தீர்மானம் மேற்கொள்ளப்படும்.



உ). கிரிதர நீர் வழங்கல் கருத்திட்டம்

கருத்திட்டச் செலவு ரூபா 513.28 மில்லியனாகும் என்பதோடு, 63 - 225 மி.மீ. விட்ட வீச்சினை கொண்ட PVC குழாய்கள் மற்றும் 250 - 350 மி.மீ. விட்ட வீச்சினை கொண்ட DI குழாய்கள் என்றவாறு மொத்தம் 100 கி.மீ. நீளமான குழாய் இடுதலை கருத்திட்டம் உள்ளடக்குகின்றதால் இக்கருத்திட்டச் செலவு 531.28 மில்லியனாகும்.

இது தொம்பே பிரதேச செயலாளர் பிரிவின் 18 கிராம அலுவலர் பிரிவுகளை உள்ளடக்கியதாக உள்ளது. ஹன்வெல்ல பாலத்திற்கு அண்மித்ததாக லபுகம - கலட்டுவாவ D20 அனுப்பல் குழாய் ஒட்டப்பட்டு தற்போதுள்ள பாலத்தின் செல்குழல் ஊடாக 350 மி.மீ. விட்டத்தைக் கொண்ட DI குழாய் இடப்படுவதன் மூலம் களனி ஆற்றிலிருந்து ஹன்வெல்ல பாலத்தைக் கடந்து நீரை எடுத்துச் செல்ல வேண்டியுள்ளது. இக்கருத்திட்டம் நிறைவடைந்ததன் பின்னர் 4,500 வீடுகள் மற்றும் 500 வர்த்தக நிலையங்களுக்கு நீர் வழங்கல் இணைப்புகளை வழங்குவதற்கு வசதி செய்யப்படும்.

கருத்திட்டத்தின் தற்போதைய பௌதீக மற்றும் நிதியியல் முன்னேற்றம் முறையே 38% மற்றும் 31% ஆகும். கருத்திட்ட வேலைகள் தொடர்ந்து நடைபெற்று வருவதாக இருந்த போதிலும் கோவிட் - 19 தொற்றுநோய் நிலைமை சார்ந்த பின்னடைவுகள்

மற்றும் ஒப்பந்ததாரரின் நிதியியல் முகாமைத்துவப் பிரச்சினை காரணமாக தாமதமடைந்துள்ளது.



குழாய் பதித்தல்

ஊ). இரத்தினபுரி பெரும்பாக நீர் வழங்கல் கருத்திட்டம் (விநியோகம்)

இரத்தினபுரி பெரும்பாக நீர் வழங்கல் திட்டம் சம்பிரகமுவ மாகாணத்தில் இரத்தினபுரி மாவட்டத்தின் இரத்தினபுரி பிரதேச செயலாளர் பிரிவில் அமைந்துள்ளது. இக்கருத்திட்டத்திலிருந்து 24 கிராம அலுவலர் பிரிவுகளை உள்ளடக்கியதாக 35,000 மக்களுக்கு சேவையாற்றுவதற்கு திட்டமிட்டுள்ளது. 15,000 புதிய நீர் இணைப்புகளை உள்ளடக்குவதற்கும் 80,000 நலன்பெறுனர்களுக்கு சேவையாற்றுவதற்கும் திட்டமிட்டுள்ளது.

கருத்திட்ட ஆக்கக்கூறானது விநியோக வலையமைப்பு என்ற வகையில், 178 கி.மீ. நீளத்திற்கு HDPE/ uPVC/ DI குழாய்கள் இடுதலை உள்ளடக்குகின்றது. குழாய் விட்டம் 450 மி.மீ. தொடக்கம் 63 மி.மீ. வரையிலாகும். இரத்தினபுரி மாவட்டத்தின் 7,000 வீடுகளுக்கு நீரை விநியோகிப்பதற்கு கருத்திட்டம் கருதியுள்ளது.

கருத்திட்டம் 2019 ஜனவரி மாதத்தில் ஆரம்பிக்கப்பட்டதோடு, 2020.06.02 ஆம் திகதி தொடக்கத்தில் நிறைவு செய்யப்படும் என எதிர்பார்க்கப்பட்டது. எனினும், பல்வேறு காரணங்களால் கருத்திட்டம் 2021.06.30 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டது. 2020 திசெம்பர் 31 ஆம் திகதியில் பௌதீக முன்னேற்றம் 40% ஆகவும் நிதியியல் முன்னேற்றம் 30% ஆகவும் இருந்தது.

தேவையான DI பொருள்களின் வழங்கலிலான தாமதத்தின் காரணமாக கருத்திட்ட முன்னேற்றம் மிகவும் தாமதமாக காணப்பட்டது.

எ). வில்கமுவ நீர் வழங்கல் கருத்திட்டம்

வில்கமுவ நீர் வழங்கல் கருத்திட்டமானது மாத்தளை மாவட்டத்தில் வில்கமுவ பிரதேச செயலாளர் பிரிவினுள் அமைந்துள்ளதோடு, 39 கிராம அலுவலர் பிரிவுகளை உள்ளடக்குகின்றவாறு ஏறத்தாழ 35,000 மக்களுக்கு சேவையாற்றுவதற்கு திட்டமிட்டுள்ளது.

நாளொன்றுக்கு 6,000 க.மீ. கொள்ளளவைக் கொண்ட உள்வாங்கு நிலையம், நாளொன்றுக்கு 5,500 க.மீ. கொள்ளளவைக் கொண்ட நீர் சுத்திகரிப்புப் பொறித்தொகுதி, பிரதான மூல நீர்க் குழாய் (1,000 மீ.), சுத்திகரிக்கப்பட்ட நீர் அனுப்பல் பிரதான குழாய் (26 கி.மீ.), நீர் கோபுரங்கள் (225 க.மீ. மற்றும் 300 க.மீ.), பிரதான விநியோக குழாய்கள் (115 கி.மீ.), நிலையப் பொறுப்பதிகாரி அலுவலகம், மூன்று விடுதிகள் ஆகிவற்றின் வடிவமைப்பு மற்றும் நிர்மாணிப்பை வேலைகளின் விடயப்பரப்பு உள்ளடக்குகின்றது.

ஒப்பந்தகாரரின் நிதிப் பிரச்சினை காரணமாக 2020 முதல் ஏழு மாத காலத்தில் செயலாற்றுகை மிகவும் குறைவாகவே காணப்பட்டது. எவ்வாறாயினும், ஒப்பந்தகாரர் 2019 ஆகஸ்டில் வேலைகளை மீள ஆரம்பித்தார். 2021 செப்தெம்பர் 30 ஆம் திகதியளவில் நிர்மாணிப்பு வேலைகள் நிறைவு செய்யப்பட உள்ளன.

2020 டிசெம்பர் 31 இல் பௌதீக முன்னேற்றம் 54.88% ஆகவும் நிதியியல் முன்னேற்றம் 34.36% ஆகவும் காணப்படுகின்றது.



ஏ). மெதிரிகிரிய நீர் வழங்கல் கருத்திட்டம் கட்டம் 11

மெதிரிகிரிய பிரதேச செயலாளர் பிரிவில் 31 கிராம அலுவலர் பிரிவுகளுக்கு uPVC குழாய்கள் மற்றும் பொருத்துகளை வழங்குதல் மற்றும் பதித்தல் இக்கருத்திட்டத்தில் உள்ளடக்குகின்றது. uPVC/DI குழாய்களை வழங்கி இடுதல், பழைய நகர கோபுர பிரதான விநியோக குழாய் மற்றும் புதிய நகர / பழைய நகர கோபுர உள்ளக பிதான விநியோக குழாய்களுக்கான பொருத்தல்கள் மற்றும் துணைப்பாகங்கள், கவுடுல்ல ஓயாவுக்கு குறுக்காக குழாய் பாலத்தை நிர்மாணித்தல், அலுவலகம் மற்றும் விடுதிகளின் வடிவமைப்பு மற்றும் நிர்மாணிப்பு அத்துடன் 5,000 நீர் இணைப்புகளை வழங்குதல் ஆகிய வேலைகள் உள்ளடக்குகின்றன.

அனைத்து வழங்கல் பொருட்களும் நிறைவு செய்யப்பட்டன. தொடக்க விடயப்பரப்பு (230 கி.மீ.) மற்றும் மேலதிக 63 மி.மீ. விட்டத்தைக் கொண்ட குழாய் பதித்தல் வேலைகள் (VO 25) (141 கி.மீ.) நிறைவு செய்யப்பட்டு O&M க்கு கையளிக்கப்பட்டது. நிர்மாணிப்புகள் நிறைவு செய்யப்பட்டன. மேலதிக 63 மி.மீ. விட்டம் கொண்ட குழாய் பதித்தல் வேலைகள் (VO 42) (42 கி.மீ.) 20 கி.மீ. நிறைவு செய்யப்பட்டது. 3,395 வீட்டு இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளன.

2020 இறுதியில் உள்ளவாறு கருத்திட்டத்தின் பௌதீக மற்றும் நிதியியல் முன்னேற்றம் முறையே 99.78% மற்றும் 86.75% ஆகும்.



ஐ). கொழும்பு மாவட்டத்தின் கிழக்கு நகர நீர் வழங்கல் கருத்திட்டம்

கொழும்பு மாவட்டத்தின் கிழக்குப் பகுதியிலுள்ள மக்களுக்கு பாதுகாப்பான குழாய்வழி குடிநீரை வழங்குவதற்காக கொழும்பு மாவட்டத்தின் கிழக்கு நகர நீர் வழங்கல் கருத்திட்டம் அமுலாக்கப்பட்டது. சீதாவக்க, கடுவெல, பாதுக்க, ஹோமாகம மற்றும் ஹொரண பிரதேச செயலாளர் பிரிவுகளில் 118 கிராம அலுவலர் பிரிவுகளை கருத்திட்டம் உள்ளடக்குகின்றது.

லபுகம மற்றும் கலட்டுவாவ நீர் சுத்திகரிப்புப் பொறித்தொகுதிகள் கொழும்பு மாவட்டத்தின் கிழக்கு நகர நீர் வழங்கல் திட்டத்துக்கான அடையாளமான நீர் வளமூலமாகும். 91,000 க்கு மேற்பட்ட நீர் வழங்கல் இணைப்புகளின் ஊடாக 2040 ஆம் ஆண்டில் இக்கருத்திட்டத்தின் மூலம் நலன் பெறுவதற்கு மதிப்பிடப்பட்டுள்ள மொத்த சனத்தொகை 373,304 ஆகும்.

கருத்திட்டமானது 03 ஒப்பந்தப் பொதிகளைக் கொண்டுள்ளதோடு, அவற்றின் நிலைமைகள் பின்வருமாறு.

பொதி I - 07 நீர்ப் பாய்ச்சல் மானி இணைப்புகள் நிறைவு செய்யப்பட்டன. 2020 ஆம் ஆண்டு இறுதியில் பௌதீக மற்றும் நிதிசார் முன்னேற்றம் முறையே 100% மற்றும் 74.8% ஆகும்.

பொதி II - கட்டிட பதிகால் வேலைகள் நிறைவு செய்யப்பட்டன. அடித்தள கொன்கிறீட் பலகைகளின் 6 பகுதிகளில் பகுதி 1, பகுதி 2 மற்றும் பகுதி 3 நிறைவு செய்யப்பட்டன. உள்ளக தூண்கள் மற்றும் தடைச் சுவர்களில் ஏறத்தாழ 5% வேலைகள் நிறைவு செய்யப்பட்டுள்ளன. 2020 ஆம் ஆண்டின் இறுதியில் உள்ளவாறு பௌதீக மற்றும் நிதிசார் முன்னேற்றம் முறையே 74.10% மற்றும் 50.11% ஆகும்.

பொதி 111 - 26 நீர்ப் பாய்ச்சல் மானி இணைப்புகள் நிறைவு செய்யப்பட்டன. 2020 ஆம் ஆண்டு இறுதியில் பௌதீக மற்றும் நிதிசார் முன்னேற்றம் முறையே 99.43% மற்றும் 79.33% ஆகும்.

ஒப்பந்தம் சார்ந்த பிணக்குகள் காணப்படுவதோடு (பொதி 01 மற்றும் 11) பிணக்குத் தீர்ப்புக்கு ஆற்றுப்படுத்தப்பட்டுள்ளது.



1000 மி.மீ. விட்டம் கொண்ட DI பிரதான அனுப்பல் குழாய் நெடுகிலும் வளி வால்வுகளைப் பொருத்துதல்

ஒ). உள்நாட்டு வங்கி நிதியிடப்பட்ட 3.5 பில்லியன் கருத்திட்டம்

இக்கருத்திட்டத்தின் குறிக்கோள் யாதெனில், தற்போதுள்ள விநியோக முறைமைக்கு நீடிப்புகளை வழங்குதல் மற்றும் நிரப்பல்களை மேற்கொள்வதன் மூலம் 11 RSC க்களில் (ஊவா, தெற்கு, வடக்கு, மேல் மத்தி, மேல் வடக்கு, மேல் தெற்கு, கிழக்கு, வடமேல், வடமத்திய, மத்திய மற்றும் சப்பிரகமுவ) உள்ள இணைப்புகளின் எண்ணிக்கையை மேம்படுத்துவதாகும். கருத்திட்டத்தின் மொத்த மதிப்பீட்டுச் செலவு ரூபா 3.5 பில்லியனாகும் என்பதோடு, கருத்திட்டத்தின் இறுதியில் எதிர்பார்க்கப்படும் இணைப்புகளின் எண்ணிக்கை 33,250 ஆகும். 10 RSCs களின் நீடிப்பு மற்றும் நிரப்பல் நிறைவு செய்யப்பட்டுள்ளதோடு, RSC கிழக்கின் வேலைகள் நடைபெற்று வருகின்றன. கருத்திட்டம் 2014 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டதோடு, 2021 ஆம் ஆண்டு வரை நீடிக்கப்பட்டது. 2020 திசெம்பரில் உள்ளவாறு ஒட்டுமொத்த பௌதீக முன்னேற்றம் 98.5% ஆகுமென்பதோடு நிதியியல் முன்னேற்றம் 72.4% ஆகும்.



இலங்கை அரசாங்கத்தினால் நிதியிடப்பட்ட சிறிய மற்றும் நடுத்தர அளவிலான நீர் வழங்கல் கருத்திட்டங்கள்

மாத்தறை குறுகியகால மேம்பாட்டுக் கருத்திட்டம்

மாத்தறை குறுகியகால மேம்பாட்டுக் கருத்திட்டத்துக்கான மொத்த மதிப்பீட்டுச் செலவு ரூபா 300 மில்லியனாகும். மாத்தறை குழும நீர் வழங்கல் திட்டத்தில் நீர் வழங்கல் கொள்ளளவை நாளொன்றுக்கு 6,000 க.மீ.களால் மேம்படுத்துவதற்கான அமுலாக்கல் வேலைகள் ஆரம்பிக்கப்பட்டது. இதன் பெறுபேறாக நீர் வழங்கலில் மேம்பாடு ஏற்படுமென்பதோடு, பிரதேசத்தில் நீர் வெட்டு நேரம் குறைக்கப்படும். அத்துடன் இக்கருத்திட்டத்தின் கீழ் திஹகொட பிரதேசத்தின் பின்தங்கிய கிராமப் புறங்களிலுள்ள 100 குடும்பங்களுக்கு பாதுகாப்பான நீர் வழங்கலும் எதிர்பார்க்கப்படுகின்றது. 2020 ஆம் ஆண்டு இறுதியில் பௌதீக மற்றும் நிதியியல் முன்னேற்றம் முறையே 53% மற்றும் ரூபா 164.47 மில்லியன் ஆகும்.

அந்தரகஸ்யாய நிலக் கீழ் நீர்த் தாங்கியிலிருந்து கொன்னோருவ வரை குழாய் இடுதல்

அந்தரகஸ்யாய மற்றும் பந்தகிரிய பிரதேசங்களுக்கு சேவை வழங்குதல் அந்தரகஸ்யாய நீர் வழங்கல் திட்டத்தின் குறிக்கோளாகும் என்பதோடு, எதிர்பார்க்கப்படும் நலன்பெறுனர்களின் எண்ணிக்கை 12,000 ஆகும். சேவை மேம்பாட்டை மேற்கொள்ளும் பொருட்டு இத்திட்டத்தின் கீழ் ஒருசில ஒப்பந்தங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. கருத்திட்டத்தின் முழுமொத்தப் பௌதீக முன்னேற்றம் 93% ஆகுமென்பதோடு, கருத்திட்டத்தின் நிதிசார் முன்னேற்றம் ரூபா 68.47 மில்லியன் ஆகும்.

திஸ்ஸமகாராம நீர் வழங்கல் திட்டம்

இக்கருத்திட்டத்தின் குறிக்கோள் திஸ்ஸமகாராம நீர் சுத்திகரிப்புப் பொறித் தொகுதியின் விரிவாக்கத்தால் நீர் தரத்தை மேம்படுத்துவதாகும். கருத்திட்டத்தின் மொத்த மதிப்பீட்டுச் செலவு ரூபா 393 மில்லியனாகும் என்பதோடு, எதிர்பார்க்கப்படும் நலன்பெறுனர்களின் எண்ணிக்கை ஏறத்தாழ 10,000 ஆகும். இக்கருத்திட்டத்தின் கீழ், காற்றூட்டல் சாதனம், வண்டல் படிவ தாங்கி, இரசாயன அறை மற்றும் தொழிற்பாட்டுக் கட்டடத்தை நிர்மாணித்தல் உள்ளடங்கிய ஒப்பந்தம் கையளிக்கப்பட்டுள்ளது. 2020 ஆம் ஆண்டு இறுதியில் கருத்திட்டத்தின் ஒட்டு மொத்தப் பௌதீக முன்னேற்றம் 37% ஆகுமென்பதோடு, நிதிசார் முன்னேற்றம் ரூபா 54.5 மில்லியன் ஆகும்.

ரூபா 600 மில்லியன் நிதி ஒதுக்கீட்டின் கீழான திருகோணமலை விரிவாக்கக் கருத்திட்டம்

திருகோணமலை விரிவாக்க கருத்திட்டத்தின் கீழ் திருகோணமலை பிராந்தியத்துக்கு ரூபா 600 மில்லியன் ஒதுக்கப்பட்டுள்ளது. 2020 ஆம் ஆண்டு இறுதியில் உள்ளவாறு கருத்திட்டத்தின் பௌதீக முன்னேற்றம் 77% ஆகுமென்பதோடு, கருத்திட்டத்தின் நிதிசார் முன்னேற்றம் ரூபா 291.67 மில்லியன் ஆகும்.

கேகாலை மீள்குடியமர்த்தல்

2016 ஆம் ஆண்டு காலத்தினுள், கேகாலை நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை, மண் சரிவினால் பாதிக்கப்பட்ட ஏறத்தாழ 2,000 குடும்பங்களுக்கு நீர் வழங்குகின்ற பாரிய ஒரு சவாலை எதிர்நோக்கியது. 2016 ஆம் ஆண்டின் நடுப் பகுதியில் கேகாலை மாவட்டத்தின் 11 க்கு மேற்பட்ட பிரதேச செயலாளர் பிரிவுகளில் அக்குடும்பங்கள் மீள் குடியமர்த்தப்பட்டன. UNICEF இன் நிதி உதவியின் கீழ் தீவிர மீள்குடியமர்த்தல் நிகழ்ச்சித்திட்டம் நிறைவு செய்யப்பட்டது. அமைச்சரவை அங்கீகாரத்தின் பிரகாரம் கேகாலை மாவட்டத்தில் மண் சரிவினால் பாதிக்கப்பட்டவர்களின் மீள்குடியமர்த்தல் கிராமங்களுக்கு நீர் வழங்கல் வசதிகளை வழங்குவதற்காக ரூபா 455 மில்லியன் அளிக்கப்பட்டுள்ளது. 2020 ஆம் ஆண்டு இறுதியில் பௌதீக மற்றும் நிதியியல் முன்னேற்றம் முறையே 90% மற்றும் ரூபா 82.34 மில்லியன் ஆகும்.

தங்கொட்டுவ நீர் வழங்கல் கருத்திட்டம்

தங்கொட்டுவ நீர் வழங்கல் திட்டமானது 6,000 இணைப்புகளுக்கு வசதியேற்பாடு செய்யும் பொருட்டு நாளொன்று 4,000 க.மீ. சுத்திகரிக்கப்பட்ட நீரை உற்பத்தி செய்கின்ற தற்போதுள்ள ஒரு நீர் வழங்கல் திட்டமாகும். புதிய கருத்திட்டமானது, 500 புதிய இணைப்புகளை உருவாக்குகின்ற சாக்கடை சுத்திகரிப்புடன் கூடியதாக நீர் வழங்கல் திட்டத்தின் கொள்ளளவை மேம்படுத்தும். இக்கருத்திட்டத்துக்கான நீர் மூலமாக தற்போதுள்ள மாஓயா உள்வாங்கு நிலையம் பயன்படுத்தப்படும். 450 க.மீ. கொள்ளளவைக் கொண்ட ஒரு நில நீர்த் தடாகம், பின்னடைவு நீரோட்ட மீட்புத் தாங்கி, சாக்கடை தேக்கிவைப்புத் தாங்கி மற்றும் சாக்கடை நீரேரி ஆகியன நிர்மாணிக்கப்பட உள்ளன. விநியோக விஸ்தரிப்புக்கு வசதி செய்யும் பொருட்டு குழாய்கள் இடப்பட வேண்டியுள்ளதோடு பம்பிகள் பொருத்தப்பட வேண்டியுள்ளன. கருத்திட்டத்தின் மொத்தச் செலவு ரூபா 200 மில்லியனாகும். 2020 இறுதியில் பௌதீக முன்னேற்றம் 32% ஆக காணப்பட்ட அதேவேளை நிதிசார் முன்னேற்றம் ரூபா 14.72 மில்லியன் ஆக காணப்பட்டது.

RSC (W-S) இன் தொழிற்பாட்டு வினைத்திறன் மற்றும் ஆதன முகாமைத்துவக் கொள்ளளவை மேம்படுத்தல்

இக்கருத்திட்டம் RSC – மேல் தெற்கின் கீழ் மேற்கொள்ளப்படுகின்றது. கருத்திட்டமானது ரூபா 527 மில்லியன் நன்கொடை (JICA) மற்றும் ரூபா 40 மில்லியன் உள்நாட்டு நிதி ஆகும். கருத்திட்ட காலம் 2018 செப்தெம்பர் தொடக்கம் 2020 ஆகஸ்ட் வரையிலாகும்.

கருத்திட்டம் பிரதானமான மூன்று பகுதிகளை உள்ளடக்கியுள்ளது. குழாய்களின் ஆதன முகாமைத்துவத்தை அறிமுகப்படுத்தல் (வெளியீடு – 1), முடிவுறுத்தப்பட்டுள்ளது: கசிவுக் கட்டுப்பாட்டை மேம்படுத்தல் (வெளியீடு – 2) மற்றும் கசிவுக் கட்டுப்பாட்டுக்கான நடைமுறைப் பயிற்சிக்கான பயிற்சி அளிப்பவர்களை பயிற்றுவித்தல் (TOT) (வெளியீடு – 3).

வெளியீடு 2 இல் எதிர்பார்க்கப்படும் பெறுபேறுகள் யாவையெனில், முன்னோடி வலயத்தில் கசிவுக் கட்டுப்பாட்டுக்கான கொள்ளளவை மேம்படுத்தல், புதிய தொழில்நுட்பம் மற்றும் கருவிகளை உள்வாங்குதல் உள்ளிட்ட அறிவுப் பரிமாற்றம், மற்றும் தேவையான வழிகாட்டல்களை இணைத்து நீர் இழப்பு முகாமைத்துவக் கைநூலைத் தயாரிப்பதன் ஊடாக தே.நீ.வ.வ.ச.க்கான ஒழுங்கான வருவாயற்ற நீர் (NRW) முகாமைத்துவ முறைமையை அறிமுகப்படுத்தல் ஆகியனவாகும்.

கருத்திட்டத்தின் ஒட்டுமொத்த நிதிசார் மற்றும் பௌதீக முன்னேற்றம் முறையே ரூபா 279.70 மில்லியன் மற்றும் 69% ஆகும்.

பண்டாரவளை நீர் வழங்கல் மேம்பாட்டுக் கருத்திட்டம்

உமா ஓயா பலநோக்கு அபிவிருத்திக் கருத்திட்டத்தின் சுரங்க நிர்மாணிப்பின் போது, பிரதான சுரங்க நீர்ப் பாதையில் நீர் உட்புகுதல் ஏற்பட்டதோடு, பண்டாரவளை மற்றும் எல்ல பிரதேச செயலாளர் பிரிவுகளின் பல கிராமங்களில் பல கிணறுகளில் நீர் மட்டம் குறைவடைந்துள்ளதோடு சில முற்றாக வற்றியுள்ளன. இங்கு ஏறத்தாழ 2000 குடும்பங்கள் குடிநீர் பற்றாக்குறையினால் பாதிக்கப்பட்டுள்ளன. அத்தகைய பாதிக்கப்பட்ட சமுதாயத்தின் நீர் வழங்கல் வசதிகளை அதிகரிக்கச் செய்வதற்காக இக்கருத்திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது. கருத்திட்டத்தின் பிரதானமான ஆக்கக்கூறுகள், தியதலாவுக்கான மேலதிக உள்வாங்கு பம்பிகள் மற்றும் ஊக்குவிப்புப் பம்பிகளை வழங்குதல் மற்றும் பண்டாரவளை நீர் வழங்கல் திட்டத்தின் தற்போதுள்ள அனுப்பல் மற்றும் விநியோக முறைமையை மேம்படுத்தல் ஆகியனவாகும். 2020 ஆம் ஆண்டின் இறுதியில் கருத்திட்டத்தின் பௌதீக முன்னேற்றம் 100% ஆகின்ற அதேவேளை நிதிசார் முன்னேற்றம் ரூபா 32.60 மில்லியன் ஆக காணப்பட்டது.

மடு தேவாலயத்தில் பக்கதர்களுக்கு குடிநீர் வழங்குவதற்கான நீர் வழங்கல் திட்டம்

மடு தேவாலயம் மற்றும் பக்கத்திலுள்ள கிராமங்களுக்கு நீர் வழங்குவதற்காக இக்கருத்திட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது. இலங்கை அரசாங்கத்தின் மூலம் நிதியிடப்படுகின்ற, மொத்த மதிப்பீட்டுச் செலவு ரூபா 790.62 மில்லியனாகும். நலன்பெறுனர்களின் மதிப்பிடப்பட்ட எண்ணிக்கை 12,600 ஆகும். 2020 ஆம் ஆண்டின் இறுதியில் உள்ளவாறு கருத்திட்டத்தின் பௌதீக மற்றும் நிதிசார் முன்னேற்றம் முறையே 15% மற்றும் ரூபா 64.65 மில்லியன் ஆகும்.

குழாய்வழிக் கருத்திட்டங்கள்

2025 ஆம் ஆண்டளவில் நாட்டின் முழு சனத்தொகைக்கும் (100%) தூய்மையானதும் பாதுகாப்பானதுமான குடிநீர் மற்றும் குழாய்வழி நீருக்கான அணுகுதலை வழங்குகின்ற அரசாங்கத்தின் அபிலாஷையை நிறைவேற்றுவதற்கான முழுமையான அர்ப்பணிப்பு மற்றும் இயக்குதலை தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை (தே.நீ.வ.வ.ச.) கொண்டுள்ளது. ''சுபீட்சத்தின் நோக்கில்'' கொடுக்கப்பட்டுள்ள குடிநீருக்கான அரசாங்கத்தின் தொலைநோக்கு தொடர்பிலான வாக்குறுதியை நிறைவேற்றும் பொருட்டு கூட்டிணைந்த திட்டம் 2020 – 2025 ஐ தே.நீ.வ.வ.ச.அபிவிருத்தி செய்து, 2020 நவம்பர் 18 ஆம் திகதி அங்குரார்ப்பணம் செய்தது. மேற்படி ஆவணம் தே.நீ.வ.வ.ச. யின் தற்போதைய நிலைமையை மற்றும் 1 தொடக்கம் 6 வரையிலான கூட்டிணைந்த இலக்குகளை அடைவதற்கான இலக்குகளை சுருக்கமாக எடுத்துரைக்கின்றது.

நீர் வழங்கல் மற்றும் துப்புரவேற்பாட்டுத் துறையிலுள்ள இடைவெளிகளை நிரப்புவதற்கான கருத்திட்டம் ஐந்து பிரதான வகைகளின் கீழ் அடையாளம் காணப்பட்டு வடிவமைக்கப்பட்டுள்ளது: (i) தற்போதுள்ள நீர் வழங்கல் முறைமைகளின் நீர் தரத்தையும் அளவையும் விஸ்தரித்தல். (ii) நிதி ஒதுக்கீட்டுக் கட்டுப்பாடுகள் காரணமாக பொதுமக்களுக்கு நீர் விநியோகிப்பதற்கு மூல ஒப்பந்தத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள குழாய்களின் எண்ணிக்கை போதியதாக இல்லாததால், ஏற்கனவே நிர்மாணிக்கப்பட்டுள்ள அல்லது நடைமுறையிலுள்ள பாரிய அளவிலான மற்றும் நடுத்தர அளவிலான கருத்திட்டங்களின் விநியோக முறைமையை நிரப்பல் (iii) நீர் மற்றும் துப்புரவேற்பாட்டுக்கான (NRW குறைப்பு மற்றும் சக்தி சேமிப்பு கருத்திட்டங்கள்) வியாபார வினைத்திறன் மேம்பாடு கருத்திட்டங்கள். (iv) சேவை வழங்கப்படாத பிரதேசங்களுக்கான புதிய நீர் வழங்கல் மற்றும் சாக்கடைத் திட்டங்கள் (v) 1, 2 மற்றும் 4 வகைகளின் கீழ் உள்ளடக்கப்படாத பிரதேசங்களுக்கான உள்ளூராட்சி சபை மற்றும் சமுதாய அடிப்படையிலான நீர் வழங்கல் திட்டங்கள். ஒன்று தொடக்கம் நான்கு வரையிலான வகைகள் தே.நீ.வ.வ.ச.யின் மூலம் நடைமுறைப்படுத்தப்படும்.

சேவை மட்ட மேம்பாட்டுக்கான தேவை, குறிப்பாக விஸ்தரிப்பு மற்றும் கொள்ளளவு மேம்பாடு தொடர்பில் பிரதானமான இரண்டு திட்டங்களின் கீழ் நாடளாவிய நீர் வழங்கல் மற்றும் துப்புரவேற்பாட்டு உள்ளடக்கத்தை விஸ்தரிப்படுவதற்கு முன்மொழியப்பட்டுள்ளது. (i) குறுகிய கால: நடைமுறையிலுள்ள 47 நீர் வழங்கல் மற்றும் சாக்கடைக் கருத்திட்டங்களை நிறைவு செய்தல் மற்றும் தற்போதுள்ள 95 நீர் வழங்கல் திட்டங்களின் கொள்ளளவு மற்றும் தர மேம்பாடு. (ii) நடுத்தர கால: தற்போதுள்ள 81 நீர் வழங்கல் மற்றும் சாக்கடைத் திட்டங்களின் முழுக் கொள்ளளவையும் பயன்படுத்தும் வசதியேற்பாட்டுக்கான மேம்பாடுகள் மற்றும் 9 சாக்கடைத் திட்டங்களின் வினைத்திறன் மேம்பாடுகள். அத்துடன் வீட்டு மற்றும் வர்த்தக ரீதியிலான கேள்வியை நிறைவு செய்வதற்காக, புதிய பிரதேசங்களுக்கான உள்ளடக்க நீடிப்புக்கான 102 புதிய நீர் வழங்கல் மற்றும் சாக்கடைக் கருத்திட்டங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன.

2021 ஆம் ஆண்டு தொடக்கம் கூட்டிணைந்த திட்டக் கற்கையின் பெறுபேறாக புதிய நீர் வழங்கல் மற்றும் துப்புரவேற்பாட்டு கருத்திட்டங்களின் மேற்படி அனைத்து பட்டியலும் அமுல்படுத்தப்படும்.

திட்டமிடல் மற்றும் வடிவமைத்தல்

எதிர்வரும் ஆண்டுகளிலிருந்து முன்னோக்கியதாக 100% குழாய்வழி நீர் உள்ளடக்கத்தை அடையும் நோக்கத்துடன் நாடு முழுவதிலும் குழாய்வழி நீர் உள்ளடக்கத்தை விஸ்தரிக்கின்ற அரசாங்க அக்கறைக்கு ஒத்துழைப்பு வழங்கி நடைமுறைப்படுத்தும் பொருட்டு முன்கூட்டி அடையாளம் காணப்பட்ட சிறிய, நடுத்தர மற்றும் பாரிய அளவிலான நீர் வழங்கல் கருத்திட்டங்களின் திட்டமிடல் மற்றும் வடிவமைப்பு, தற்போதுள்ள நீர் வழங்கல் திட்டங்களின் விரிவாக்கம், தற்போதுள்ள நீர் வழங்கல் திட்டங்களின் விநியோக மற்றும் அனுப்பல் மேம்பாடுகள் ஆகியவற்றை துரிதப்படுத்துவத்கு 2020 ஆம் ஆண்டில் தே.நீ.வ.வ.ச.யின் திட்டமிடல் மற்றும் வடிவமைப்புப் பிரிவின் மூலம் ஏற்கனவே முன்னெடுப்புகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

திட்டமிடல் மற்றும் வடிவமைப்புப் பிரிவானது 2020 - 2025 கூட்டிணைந்த திட்டத்தின் தொகுதி 01 இன் கீழ் கருதப்பட்டுள்ள அனைத்து சம்பந்தப்பட்ட திட்டமிடல் மற்றும் வடிவமைப்பு செயற்பாடுகள், ஆரம்ப மற்றும் விபரமான வரைதல்களைத் தயார்படுத்தல், அளவைப் பத்திரங்கள் மற்றும் பொறியியலாளர் மதிப்பீடுகளைத் தயாரித்தல் மற்றும் கருத்திட்டங்களின் கேள்விப் பத்திர ஆவணங்களைத் தயாரித்தல் ஆகியவற்றில் ஈடுபட்டது. (''கருத்திட்டங்களின் வடிவமைப்புக் கட்டங்களின் விபரங்கள்'' பற்றிய அட்டவணையை தயவுசெய்து பார்க்கவும்).


திட்டமிடல் மற்றும் வடிவமைப்பு (நீ.வ.க)

				கருத்திட்ட விடயப்பரப்பு	
இல.	கருத்திட்டம்	மாவட்டம்	உள்ளடக்குகின்ற பிரதேசம்	பிரதான வேலைகளின் கொள்ளளவு (நாள்/க.மீ.	அனுப்பலுடன் கூடிய விநியோக வலையமைப்பு (கி.மீ.)
01	அம்பத்தலே நீர் சுத்திகரிப்புப் பொறித்தொகுதி விஸ்தரிப்பு	கொழும்பு	-	50,000	-
02	அவிசாவலை புதிய நீர் சுத்திகரிப்புப் பொறித்தொகுதி	கொழும்பு	அவிசாவலை பிரதேச செயலாளர் பிரிவு	5,000	-
03	மீரிகம நீர் வழங்கல் கருத்திட்டம் - கட்டம் 1	கம்பஹ	மீரிகம பி.செ.பி. இல் 115 கி.அ.பி.	20,000	779
04	திவுலபிட்டிய நீர் வழங்கல் கருத்திட்டம் - கட்டம் 1	கம்பஹ	திவுலபிட்டிய பிரதேசத்தில் 123 கி.அ.பி.	20,000	851
05	கட்டுபொத்த – பமுனகொட்டுவ – பண்டுவஸ்நுவர நீ.வ.க.	குருணாகல்	குருணாகல் மாவட்டத்தில் 249 கி.அ.பி.	20,000	722
06	பிங்கிரிய – உடுபத்தாவ மற்றும் மாகந்துர – பன்னல – குளியாப்பிட்டி ஒருங்கிணைந்த நீ.வ.க. – கட்டம் 1	குருணாகல்		40,000	1010
07	தங்கொட்டுவ நீ.வ.க. – படிநிலை 1	புத்தளம்	புத்தளத்தில் தங்கொட்டுவ, நாத்தண்டிய, வென்னப்புவ பி.செ.பி.	20,000	231
08	சிலாபம் நீ.வ.க. – கட்டம் 11	புத்தளம்	சிலாபம், பிங்கிரிய, மஹவெவ பி.செ.பி. உள்ளடங்கியதாக 25 கி.அ.பி.	12,000	267
09	புத்தளம் நீர் வழங்கல் கருத்திட்டம் - கட்டம் 11	புத்தளம்	புத்தளம், வனாத்தவில்லுவ பி.செ.பி. உள்ளடங்கியதாக 39 கி.அ.பி.	12,000	533
10	குருணாகல், குண்டசாலை – கண்டி கிழக்கு பிரதேசத்திற்கு நீர் வழங்கல் (KEWSP)	கண்டி/ குருணாகல்	மெததும்பர பி.செ.பி., குண்டசாலை பி.செ.பி., கங்கவத்த கோரள பி.செ.பி., பாததும்பர பி.செ.பி., பன்வில பி.செ.பி., பஹதஹேவாஹெட்ட பி.செ.பி. உள்ளடங்கியதாக 167 கி.அ.பி.	50,000	40 (அனுப்பல்)
11	நானுஓயா நீர் வழங்கல் கருத்திட்டம்	நுவரெலியா	நுவரெலியா பி.செ.பி. இல் 06 கி.அ.பி.	2,000	70.5
12	ஹப்புகஸ்தலாவ நீர் வழங்கல் கருத்திட்டம்	நுவரெலியா	கொத்மலே பி.செ.பி. இல் 17 கி.அ.பி.	7,500	128
13	தெல்தோட்ட நீர் வழங்கல் கருத்திட்டம்	கண்டி	தெல்தோட்ட பி.செ.பி. இல் 23 கி.அ.பி.	5,000	84
14	மெததும்பர பன்வில நீர் வழங்கல் கருத்திட்டம்	கண்டி	மெததும்பர மற்றும் பன்வில பி.செ.பி. இல் 88 கி.அ.பி.	10,000	295
15	காலி பெரும்பாக கட்டம் 111 நீர் வழங்கல் கருத்திட்டம்	காலி	அக்மீமன, போப்பே - போத்தல, ஹிக்கடுவ, ஹபராதுவ, பத்தேகம, இமதுவ, காலி நகர்சார் பிரதேசங்கள், யக்கலமுல்ல பி.செ.பி. உள்ளடங்கியதாக 221 கி.அ.பி.	50,000	384
16	பத்தேகம ஒருங்கிணைந்த நீர் வழங்கல் கருத்திட்டம் - கட்டம் 1	காலி	பத்தேகம, கோனபீனுவல, அம்பலாங்கொட, வெலிவிட்டிய – திவிதுர, நியாகம, கரந்தெனிய, எல்பிட்டிய, பலப்பிட்டி, ஹிக்கடுவ மற்றும் பெந்தோட்ட பி.செ.பி.	30,000	217
17	லுனுகம்வெஹர ஒருங்கிணைந்த நீர் வழங்கல் கருத்திட்டம் - படிநிலை 1 & 11	அம்பாந்தோட்ட	அம்பாந்தோட்ட மாவட்டத்தின் லுனுகம்வெஹர, அம்பாந்தோட்ட, திஸ்ஸமகாராம பி.செ.பி. மற்றும் மொனறாகலையில் தனமல்வில பி.செ.பி. உள்ளடங்கியதாக 83 கி.அ.பி.	25,000	334
18	எஹலியகொட நீர் வழங்கல் கருத்திட்டம்	இரத்தினபுரி	இரத்தினபுரி மாவட்டத்தில் 37 கி.அ.பி. மற்றும் கேகாலை மாவட்டத்தில் 7 கி.அ.பி. உள்ளடங்கியதாக 44 கி.அ.பி.	15,000	118

தற்போதுள்ள கழிவுநீர் திட்டங்கள்

மாகாணம்/பி.சே.நி.	சாக்கடைத் திட்டங்களின் எண்ணிக்கை
மத்திய	01
கிழக்கு	00
வட மத்திய	00
வட மேல்	01
வடக்கு	00
சப்பிரகமுவ	00
தென்	01
ஊவா	01
மேல் மத்திய	07
மேல் வடக்கு	03
மேல் தெற்கு	01
மொத்தம்	**15***


* இது கொழும்பு மாநகர சபையினால் கையாளப்படுகின்ற கழிவுநீர் திட்டத்தையும் தே.நீ.வ.வ.ச.யினால் கையாளப்படுகின்ற திட்டங்களையும் உள்ளடக்குகின்றது.



நடைமுறையிலுள்ள கழிவுநீர் கருத்திட்டங்கள்

நீர் வழங்கல் அமைச்சின் கீழ் நிறைவேற்றப்படும் பாரிய கழிவுநீர் கருத்திட்டங்கள்

2020 ஆம் ஆண்டில் நிர்மாணிப்பு/ விரிவாக்கத்தின் கீழ் இருந்த வெளிநாட்டு நிதியளிப்பிலான கருத்திட்டங்களின் அமைவிட வரைபடம்



	கருத்திட்டத்தின் பெயர்	நிதியளிப்பு முகவராண்மை
1.	இரத்மலான.்மொரட்டுவை கழிவுநீர் அகற்றல் கருத்திட்டம் கட்டம் 1 படிமுறை 2	AFD
2.	கண்டி நகர கழிவுநீர் முகாமைத்துவம்	JICA
3.	நகரங்களுக்கான துப்புரவேற்பாடு மற்றும் சுகாதார முன்னெடுப்பு (SHIFT) கருத்திட்டம்	AFD

வெளிநாட்டு நிதியளிப்புச் கழிவுநீர் கருத்திட்டங்கள்

1.) இரத்மலானை / மொரட்டுவ கழிவு நீர் அகற்றல் கருத்திட்டம் - கட்டம் 1 படிநிலை 2

இரத்மலானை/ மொரட்டுவ பிரதேசத்தில் தற்போதுள்ள சேகரிப்பு வலையமைப்பு உள்ளடக்கத்தை விஸ்தரிப்பதற்கு இரத்மலானை.'. மொரட்டுவ கழிவு நீர் அகற்றல் கருத்திட்டம் - கட்டம் 1, படிநிலை 2 திட்டமிட்டுள்ளது. கருத்திட்ட விடயப்பரப்பானது, 128 கி.மீ. (ஏறத்தாழ 24 கி.மீ. கொண்ட பிரதான பின் இணைப்புக் குழாயுடன்) கொண்ட புதிய கழிவுநீர் சேகரிப்பு வலையமைப்பு உள்ளடங்கிய 06 பம்பி நிலையங்களையும், தற்போதுள்ள பம்பி நிலையங்கள் மற்றும் கழிவுநீர் சுத்திகரிப்புப் பொறித்தொகுதியின் மேம்பாட்டையும் உள்ளடக்குகின்றது. கருத்திட்டம் முன் ஒப்பந்த கட்டத்தில் உள்ளது. கழிவுநீர் சேகரிப்பு வலையமைப்புக்கான விலைக் கேள்வி ஆவணங்கள் நிதியளிப்பு நிறுவனமான AFD க்கு அவர்களது "மறுப்பு இல்லை" என்ற இணக்கத்தைப் பெறுவதற்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ள அதேவேளை, பம்பி நிலையங்கள் மற்றும் புதுப்பித்தல்களுக்கான விலைக் கேள்வி ஆவண நடவடிக்கைகள் நடைபெற்று வருகின்றன. பம்பி நிலையங்களுக்கான காணி கொள்ளல் / கொள்வனவு நடைபெற்று வருகின்றது. தற்காலிக செலவு மதிப்பீடு ரூபா 16,073 மில்லியனாகும் என்பதோடு, கருத்திட்டத்தின் இறுதியில் நலன்பெறுனர்கள் எண்ணிக்கை 45,500 ஆகும். 2050 இல் 170,890 நலன்பெறுனர்களை இணைத்துக்கொள்வதற்கு (திட்டமிடப்பட்ட எல்லை) திட்டமிடப்பட்டுள்ளது. நிர்மாணிப்பு மேற்பார்வை மதியுரை ஒப்பந்தத்தின் EOI ஆவணத்திற்கான AFD "மறுப்பு இல்லை" இணக்கம் கிடைத்துள்ளது. 2020 டிசெம்பரில் உள்ளவாறு பௌதீக மற்றும் நிதிசார் முன்னேற்றம் முறையே 4.35% மற்றும் 0.86% ஆகும். இலங்கை அரசாங்கத்திற்கும் பிரான்ஸ் அபிவிருத்தி முகவராண்மைக்கும் (AFD) இடையிலான கடன் வசதி உடன்படிக்கை 2019 பெப்ரவரி மாதம் 18 ஆம் திகதி கைச்சாத்திடப்பட்டது.



பம்பி நிலையக் காணியில் மண் பரிசோதனை வேலைகள்

2.) கண்டி நகர கழிவுநீர் முகாமைத்துவக் கருத்திட்டம்

கண்டி நகர கழிவுநீர் முகாமைத்துவக் கருத்திட்டம் (KCWMP) 2030 ஆம் ஆண்டில் 55,000 சனத்தொகையினருக்கு சேவையாற்றுகின்ற மொத்தம் 733 ஹெக்டேயர் உள்ளடக்கத்தைக் கொண்டதாகும். கருத்திட்ட விடயப்பரப்பானது, கண்டி வாவி, மகாவலி ஆறு மற்றும் கண்டி நகரிலுள்ள நீரூற்றுக்களின் நீர் தரத்தை மேம்படுத்துதலும், இதன் மூலம் அதிக மக்கள் தொகையைக் கொண்ட பிரதேசங்களிலுள்ள மக்களின் துப்புரவேற்பாட்டு நிலைமையை மேம்படுத்துதலுமாகும். இதனை அடைவதற்காக கருத்திட்டமானது, கழிவு நீர் சேகரிப்பு முறைமை, நாளொன்றுக்கு 14,000 க.மீ. கொள்ளளவைக் கொண்ட கழிவு நீர் சுத்திகரிப்புப் பொறித் தொகுதி, கழிவு அகற்றல் முறைமை ஆகியவற்றை நிர்மாணிக்கும் என்பதோடு, குறைந்த வருமானம் பெறும் பிரதேசங்களுக்கான துப்புரவேற்பாட்டு வசதிகள் அபிவிருத்தி செய்யப்படுவதை தொடர்ந்து வீட்டு இணைப்புகள் வழங்கப்படும். JICA பிரதானமான நிதியிடும் முகவர் என்பதோடு, மொத்த கருத்திட்ட செலவு ரூபா 22,588 மில்லியனாகும். 2020 டிசெம்பரில் உள்ளவாறு 78% நிதிசார் முன்னேற்றம் மற்றும் 83% பௌதீக முன்னேற்றம் அடையப்பெற்றுள்ளது. கழிவுநீர் சுத்திகரிப்புப் பொறித்தொகுதி 2020 மார்ச் மாதத்தில் பொறுப்பளிக்கப்பட்டதோடு தற்போது நாளொன்றுக்கு 1,850 க.மீ. கொண்ட சராசரி கழிவுநீர் ஓட்டத்துடன் இயங்கி வருகின்றது. நிலப்பகுதி சார்ந்த சிரமங்கள், நாட்டில் நிலவி வருகின்ற நிலைமைகள் மற்றும் பாதகமான காலநிலை ஆகியன வேலைகள் தாமதமடைவதற்குக் காரணமாக அமைந்தன. எவ்வாறாயினும் மீதி பொறுப்பளித்தல் வேலைகள் நடைபெற்று வருவதோடு, 2021 ஆம் ஆண்டின் இறுதியளவில் குழாய் இடல் மற்றும் ஆதனங்களுக்கான இணைப்புகளை முழுமையாக நிறைவு செய்வதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளது.



மைக்ரோ சுரங்க அமைப்பு

3). நகரங்களுக்கான துப்புரவேற்பாடு மற்றும் சுகாதார முன்னெடுப்பு (SHIFT) கருத்திட்டம்

நீர்கொழும்பு, காலி – உனவட்டுன மற்றும் களனிய – பேளியகொட பிரதேசங்களில் வசிக்கும் 200,000 மக்களுக்கு கழிவுநீர் அகற்றல் உட்கட்டமைப்பு வசதிகளை வழங்குதல் SHIFT கருத்திட்டத்தின் நோக்கமாகும். நீர்கொழும்பு நகரத்திற்கான கழிவுநீர் அகற்றல் உட்கட்டமைப்பு வசதியை வழங்குதல், சாத்தியவளக் கற்கைகள், காலி – உனவட்டுன மற்றும் களனிய – பேளியகொட பிரதேசங்களுக்கான விபரமான வடிவமைப்பு மற்றும் கேள்விப்பத்திர ஆவணங்களை செய்தல், கருத்திட்ட பிரதேசத்திலுள்ள குறைந்த வருமானம் பெறும் மக்களுக்கு துப்புரவேற்பாட்டு வசதிகளை வழங்குவதற்கான வறியோர் சார்பான நிதியம் ஆகியவற்றை SHIFT இன் முதலாவது கட்டம் உள்ளடக்குகின்றது. இதற்கு மேலதிகமாக, நீர் மற்றும் துப்புரவேற்பாட்டுத் துறைசார் நிறுவன வரைச்சட்டகத்தை மேம்படுத்துவதற்கான சிபாரிசுகளை வழங்குவதற்கான தொழில்நுட்ப உதவி (TA) நிகழ்ச்சித்திட்டத்தை வழங்குதல், அதன் நிலைபேறான நிதியிடலை உறுதிசெய்தல் மற்றும் கழிவுநீர் முகாமைத்துவத் திறன் அபிவிருத்தித் திட்டத்தை நடைமுறைப்படுத்தல் ஆகியவற்றையும் இது வழங்கும். SHIFT முதலீட்டு நிகழ்ச்சித்திட்டத்தின் முதலாவது கட்டத்துக்கான நிதியிடல் அபிவிருத்திக்கு பிரான்ஸ் முகவராண்மையின் (AFD) ஊடாக உறுதி செய்யப்பட்டுள்ளதோடு, AFD ஊடாக ஐரோப்பிய சங்கத்தினால் TA ஆக்கக்கூறுகளுக்கு நிதியிடப்படும். முதலாவது கட்டத்துக்கான மொத்த கருத்திட்ட செலவு ரூபா 17,665 மில்லியன் (யூரோ 107.7 மில்லியன்) ஆகும். மேற்படி மூன்று பிரதேசங்களுக்குமான சாத்தியவளக் கற்கை (FS) அறிக்கையும் நீர்கொழும்பு மற்றும் காலி – உனவட்டுனவுக்கான ஆரம்ப வடிவமைப்பு அறிக்கையும் வடிவமைப்பு மற்றும் மேற்பார்வை மதியுரையாளர் நிறைவு செய்துள்ளார். நீர்கொழும்புக்கான விபரமான வடிவமைப்பு அநேகமாக நிறைவடைந்துள்ளது.

களனிய – பேலியகொடவுக்கான ஆரம்ப வடிவமைப்பு மற்றும் விபரமான வடிவமைப்பு சாத்தியவள கற்கையின் மதியுரையாளரது கண்டுபிடிப்புகளை அடிப்படையாகக் கொண்டு நீக்கப்பட்டுள்ளது. தே.நீ.வ.வ.ச.யின் உள்ளக வடிவமைப்பைப் பயன்படுத்தி களனிய – பேலியகொடவுக்கான கழிவுநீர் சுத்திகரிப்புப் (தளத்திலான துப்புரவேற்பாடு) பொறித்தொகுதி வடிவமைக்கப்படும். 2020 டிசெம்பரில் உள்ளவாறு 6.52% பௌதீக மற்றும் 4.94% நிதிசார் முன்னேற்றம் அடையப்பெற்றுள்ளது. 2021 ஆம் ஆண்டின் இறுதியில் நீர்கொழும்பின் பெறுகைகள் செயற்பாட்டை நிறைவு செய்வதற்காக 2021 ஏப்பிரல் மாதமளவில் நீர்கொழும்பு மற்றும் காலி – உனவட்டுன நகரங்களுக்கான வடிவமைப்பை மற்றும் விலைக் கேள்வி ஆவணங்கள் தயார் நிறைவு செய்வதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

திட்டமிடல் மற்றும் வடிவமைப்பு (சாக்கடை)

கழிவுநீர் கருத்திட்டங்களின் முன்னுரிமைப் பட்டியலிற்கிணங்க நகர கழிவு நீர் முகாமைத்துவ முறைமைக்கான சாத்தியவளக் கற்கைகளை மேற்கொள்ளல், கழிவுநீர் சுத்திகரிப்புப் பொறித்தொகுதிகளின் திட்டமிடல் மற்றும் வடிவமைப்பு, நடைமுறையிலுள்ள கழிவுநீர் முகாமைத்துவ கருத்திட்டங்களின் வடிவமைப்பு மீளாய்வு, நகரங்களுக்கான கழிவு நீர் முகாமைத்துவ முறைமைகளுக்கான திட்டமிடல் மற்றும் விபரமான வடிவமைப்புகள், உத்தேச கழிவு நீர் முகாமைத்துவ கருத்திட்டத்தின் வெளிவாரி மதியுரையாளர்களால் மேற்கொள்ளப்படும் EIA மற்றும் IEE கற்கைகளின் செலவினம், நிருவாகம் மற்றும் கண்காணிப்பு தொடர்பிலான வெளிவாரி ஒப்படைகளை பொறுப்பேற்றல் ஆகியன திட்டமிடல் மற்றும் வடிவமைப்பு (கழிவுநீர்) பிரிவின் முதனிலைத் தொழிற்பாடுகளாகும்.

2020 ஆம் ஆண்டு காலத்தினுள், கடந்த ஆண்டு ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்ட களுத்துறை நகர பிரதேசத்துக்கான குழாய் கழிவுநீர் உட்கட்டமைப்பு வசதிகளை வழங்குவதற்கான சாத்திய வளக் கற்கைகள் நிறைவு செய்யப்பட்டன என்பதோடு, மேற்குக் கரையோரப் பகுதியின் அளுத்கம/ பேருவளை நகர பிரதேசங்களான குழாய் கழிவுநீர் உட்கட்டமைப்புக்கான சாத்திய வளக் கற்கைகள் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மேலும், வத்தளை, கொலொன்னாவ மற்றும் திருகோணமலைக்கான கருத்திட்ட பிரதேசத்தில் கழிவுநீர் சுத்திகரிப்புப் பொறித்தொகுதிக்கான காணிகளை அடையாளம் காணலுடன் சாத்தியவளக் கற்கைகளுக்கான பணியகக் கற்கைகள் ஆரம்பிக்கட்டுள்ளன. ஆண்டினுள் பெரும் நகர அமைச்சின் மூலோபாய நகர அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் முன்னெடுக்கப்பட்ட, அனுராதபுரம் நகரத்தில் கழிவுநீர் முகாமைத்துவத்துக்கான AFD யினால் நிதியிடப்பட்ட சாத்தியவளக் கற்கை நிறைவு செய்யப்பட்டது. மேற்படி சாத்தியவளக் கற்கை மதியுறை நிறுவனமொன்றினால் மேற்கொள்ளப்பட்டதோடு P&D (கழிவுநீர்) பிரிவினால் மேற்பார்வை செய்யப்பட்டது. பதுளை மாவட்டத்துக்கான உலக வங்கியின் மூலம் நிதியளிக்கப்பட்ட துப்புரவேற்பாட்டு மேம்பாட்டுக் (SEP) கருத்திட்டத்தின் திட்டமிடல் தற்போது நடைபெற்று வருகின்றது. இதற்கிணங்க, பதுளை நகர் பிரதேச கழிவு நீர் முகாமைத்துவ முறைமை மற்றும் மாவட்ட ஆகக்கூறுகளுக்கான விபரமான சாத்தியவளக் கற்கைக்கான மதியுறையாளர் ஒருவருக்கான பெறுகை நடவடிக்கைகளுக்காக TOR தயாரிக்கப்பட்டு WaSSIP க்கு அனுப்பப்பட்டது.

2020 ஆம் ஆண்டினுள், WaSSIP கருத்திட்டத்தின் கீழ் அமுல்படுத்தப்பட வேண்டிய கழிவுநீர் சுத்திகரிப்புப் பொறித்தொகுதியின் திட்டமிடல் மற்றும் வடிவமைப்பு தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டது. இக்கருத்திட்டத்தின் கீழ் மொனறாகல, கொடகவெல, வெலிகெபொல, பதுளை மற்றும் எல்ல பிரதேச சபைகளுக்கான இயந்திரமய கழிவுநீர் சுத்திகரிப்புப் பொறித்தொகுதி (STP) வடிவமைக்கப்பட்டது. மேலும், கொழும்பு வடக்கு – களனிய, கொழும்பு தெற்கு – பாணந்துறை, கொழும்பு கிழக்கு – கெஸ்பாவ, ஹிக்கடுவ, வெலிகம மற்றும் குருணாகல் ஆகிய உயர் கேள்வியைக் கொண்ட பிரதேசங்களுக்காக ஆறு STPs களின் திட்டமிடல் ஆரம்பிக்கப்பட்டது. இதற்கிணங்க 6 STPs களுக்கான சாத்தியவள அறிக்கை 2020 ஆண்டு காலத்தினுள் அநேகமாக நிறைவு செய்யப்பட்டதோடு, 2021 ஆரம்பப் பகுதியில் PAC அங்கீகாரத்திற்காக சமர்ப்பிக்கப்பட உள்ளது.

BOI யின் மீரிகம ஏற்றுமதி தயாரிப்பு வலையத்துக்கான (EPZ) கழிவு நீர் சேகரிப்பு முறைமையின் வடிவமைப்பு நிறைவு செய்யப்பட்டதோடு, தற்போதுள்ள கழிவு நீர் சுத்திகரிப்புப் பொறித் தொகுதியின் (WWTP) திருத்த வேலைகளுக்கான கேள்விப் பத்திர ஆவணங்கள் தயாரிக்கப்பட்டன. BOI யின் பியகம EPZ இல் உள்ள WWTP யின் UV தொற்று நீக்க முறைமைக்கான கேள்விப் பத்திர ஆவணமும் தயாரிக்கப்பட்டதோடு, ஏறாவூர் BOI துணிகள் வலயத்துக்கான WWTP யின் திட்டமிடல் ஆரம்பிக்கப்பட்டது.

தெஹிவலை – உயர் தொழில்நுட்பவியல் நிறுவனத்தின் (ATI) கழிவுநீர் முறைமைக்கான விபரமான வடிவமைப்பு வேலைகள் நடைபெற்று வருகின்றன. அத்துல்கோட்டே - இலங்கை மின்சார சபை (CEB) கழிவுநீர் பம்பி முறைமை வடிவமைப்பு நிறைவு செய்யப்பட்டு வரைதல்கள் CEB க்கு கையளிக்கப்பட்டன. கல்கிசை கழிவுநீர் பம்பி நிலையத்தில் MLP2 நிலையத்தில் சாக்கடை இறக்கத்துக்கான மணல்துகள் அகற்றல் முறைமையின் நிர்மாணிப்புக்கான கேள்விப் பத்திர ஆவணங்களைத் தயாரித்தல் நிறைவடைந்தது. மத்தெகொட தடாக முறைமையின் புனரமைப்புக்கான வடிவமைப்பு 2020 ஆண்டு காலத்தினுள் ஆரம்பிக்கப்பட்டது. நீர் வழங்கல் அமைச்சுக் கட்டத்திற்கான கழிவு நீர் சுத்திகரிப்பு மற்றும் மீள் பயன்பாட்டு முறைமையின் நிர்மாணிப்புக்கான தொழில்நுட்ப முன்மொழிவு மற்றும் மதிப்பீட்டுடன் கூடிய கேள்விப் பத்திர ஆவணங்கள் தயாரிக்கப்பட்டன. மஹரகம அபேக்ஷா ஆஸ்பத்திரியின் கழிவுநீர் அகற்றல் மேம்பாட்டின் கீழ், புதிய அயடின் சிகிச்சை பிரிவின் கழிவு நீர் சுத்திகரிப்புக்கான கருத்திட்ட முன்மொழிவு தயாரிக்கப்பட்டு அனுப்பப்பட்டது.

குழாய்வழியிலான பாரிய கழிவுநீர் கருத்திட்டங்களுக்கான EIA/ IEE கற்கைகளின் ஆவணப்படுத்தல், கேள்விப்பத்திரம் கோரல் மற்றும் நிறைவேற்றல் ஆகியன P&D (சாக்கடை) பிரிவினால் மேற்கொள்ளப்பட்டன. இதன் கீழ், தெஹிவளை – கல்கிசை, மஹரகம – பொரலஸ்கமுவ, சிலாபம் - புத்தளம் மற்றும் ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டே கழிவுநீர் அகற்றல் கருத்திட்டங்களுக்கான சுற்றாடல் தாக்க மதிப்பீடு (EIA) 2020 ஆம் ஆண்டினுள் நிறைவு செய்யப்பட்டது.

குழாய்வழி கழிவுநீர் முகாமைத்துவ கருத்திட்டங்களின் காணி கொள்ளல் வேலைகளின் கீழ் தெஹிவளை – கல்கிசை, ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டே, மாத்தறை, சிலாபம் - புத்தளம், மஹரகம – பொரலஸ்கமுவ, பதுளை, கம்பஹா, அழுத்கம/ பேருவளை, களுத்துறை, பொலனறுவை, காத்தன்குடி, மட்டக்களப்பு, கல்முனை மற்றும் ஏறாவூர் கழிவுநீர் அகற்றல் கருத்திட்டங்களுக்கான அடையாளம்காணல் மற்றும் காணி கொள்ளல் வேலைகள் மற்றும் கழிவுநீர் சுத்திகரிப்புப் பொறித்தொகுதி மற்றும் பம்பி நிலையத்துக்கான காணி கொள்ளல் நடவடிக்கைகள் தொடர்ந்தும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மேலும், WasSSIP கருத்திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்ட விரிவான மூலோபாய முதலீட்டு நிகழ்ச்சித்திட்டத்தின் (CSIP) பிரதான திட்டக் கற்கையின் துப்புரவேற்பாட்டு ஆகக்கூறுகளை P&D (கழிவுநீர்) பிரிவு மேற்பார்வை செய்து நிறைவு செய்தது. சேதவத்த, கொலொன்னாவ, எல்ல, நீர் வழங்கல் அமைச்சு மற்றும் வேரஹெரவில் உள்ள கொத்தலாவல பாதுகாப்புப் பல்கலைக்கழகம் (KDU) ஆகியவற்றுக்கான கருத்திட்ட இனங்காணல் அறிக்கை தயாரிக்கப்பட்டது.

எதிர்பார்க்கப்பட்ட முக்கியமான செயலாற்றுகை

2018 தொடக்கம் 2020 காலகட்டத்துக்கான எதிர்பார்க்கப்பட்ட முக்கியமான செயலாற்றுகை

நீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் உள்ளடக்கம்

	உண்மை		
	2018	2019	2020
சனத்தொகை (மதிப்பிடப்பட்ட)	21,670,000	21,886,700	22,105,567
குழாய் மூலமான நீர் வழங்கல் உள்ளடக்கம் (சனத்தொகை)	10,943,950	11,337,311	12,162,465
தே.நீ.வ.வ.ச. குழாய் மூலமான நீர் வழங்கல் இணைப்புகளின் உள்ளடக்கம் (%)	40.1	41.5	44.8
முழுமொத்தமான குழாய் மூலமான நீர் வழங்கல் இணைப்புகளின் உள்ளடக்கம் (%)	50.5	51.8	53.1
குழாய் மூலமான கழிவுநீர் உள்ளடக்கம் (சனத்தொகை)	447,503	453,055	496,669
குழாய் மூலமான கழிவுநீர் உள்ளடக்கம் (%)	2.06	2.07	2.05

எதிர்பார்க்கப்பட்ட பாதுகாப்பான நீர் வழங்கல் உள்ளடக்கத்துக்கான அணுகுதல்

	உண்மை%		
	2018	2019	2020
மொத்த குழாய் மூலம்	50.5	51.8	53.1
தே.நீ.வ.வ.ச. குழாய் மூலம்	40.1	41.5	43.2
பாதுகாக்கப்பட்ட குழிக் கிணறுகள்	36.4	36.4	36.4
குழாய்க் கிணறுகள் / கைப்பம்பிகள்	3.2	3.2	3.2
மழை நீர் சேரிப்பு மற்றும் ஏனையவை	0.5	0.5	0.5
பாதுகாப்பான நீருக்கான அணுகுதல் முழுமொத்தம்	90.6	91.9	93.2

நிலைபேறானதன்மை மற்றும் அவசரநிலை பதிலிறுப்பு

தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபையின் நாளாந்த செயற்பாடுகள் இயல்பாகவே நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளின் (SDG) 6வது இலக்கான "அனைவருக்கும் நீர் மற்றும் துப்புரவேற்பாட்டின் கிடைப்பனவு மற்றும் நிலைபேறான முகாமைத்துவத்தை உறுதி செய்தல்" ஐ யதார்த்தமாக்குவதனை திசைமுகப்படுத்தியிருந்த அதேவேளை இலங்கையினுள் நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை நடைமுறைப்படுத்துவதற்காக தே.நீ.வ.வ.ச. தேசிய மட்ட செயற்பாடுகளில் முனைப்புடன் ஈடுபட்டது. மிலேனியம் அபிவிருத்தி இலக்குகளிலிருந்து நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளுக்கு மாற்றமடைகின்ற வகையில் தே.நீ.வ.வ.ச. அப்போதைய நகர திட்டமிடல், நீர் வழங்கல் மற்றும் உயர் கல்வி அமைச்சின் வழிகாட்டலின் கீழ், 2030 ஆம் ஆண்டாகின்றபோது அனைவருக்கும் பாதுகாப்பானதும் மலிவானதுமான குடிநீருக்கான உலகளாவியதும் நியாயமானதுமான அணுகுதலை அடையப்பெறுதல் எனும் இலக்கு 6.1: அனைவருக்கும் போதியளவானதும் நியாயமானதுமான துப்புரவேற்பாடு மற்றும் ஆரோக்கியத்துக்கான அணுகுதலை அடையப்பெறுதல் எனும் இலக்கு 6.2: மற்றும் திறந்த கழிப்பிடங்களை முடிவுறுத்தல் மற்றும் பெண்கள், சிறுமிகள் மற்றும் ஆபத்துக்கு உள்ளாகக் கூடிய நிலையிலுள்ளவர்கள் தொடர்பில் விசேட கவனம் செலுத்துதல் ஆகியவற்றை கண்காணித்தல் மற்றும் அடைவுகள் பற்றி அறிக்கையிடும் பொருட்டான தேசிய சுட்டிகளை அபிவிருத்தி செய்வதிலும் இலக்குகளை அமைப்பதிலும் ஈடுபட்டிருந்தது.

குறிப்பிட்ட SDG ஐ நோக்கியதாக தே.நீ.வ.வ.ச. யின் கூட்டிணைந்த செயற்பாட்டுத் திட்டம் திசைமுகப்படுத்தப்பட்டிருந்தது. அத்துடன், அடிப்படை மற்றும் இலக்குகளைத் தாபித்தல் தொடர்பில் நகர திட்டமிடல், நீர் வழங்கல் மற்றும் உயர் கல்வி அமைச்சின் செயலாளரால் குழுவொன்று நியமிக்கப்பட்டது. மேற்படி விசேட குழுவின் மூலம் சிபாரிசு செய்யப்பட்ட குறிக்கோள்கள் மற்றும் இலக்குகள் தொடர்பில் இறுதி முடிவெடுக்கப்பட்டதோடு, 2019 ஜூன் மாதத்தில் தரப்பினர்களால் செல்லுபடியாக்கப்பட்டது. எதிர்கால தொழிற்பாட்டு மற்றும் அபிவிருத்தித் திட்டங்களின் குறித்த செயற்பாடுகளைக் கூட்டிணைத்தல் தொடர்பிலும் அதில் பரிந்துரைக்கப்பட்ட இலக்குகளை அடைவதற்கான உரிய நிதி ஒதுக்கீடுகள் தொடர்பிலும் தே.நீ.வ.வ.ச. தொடர்ந்து நடவடிக்கை எடுத்து வருகின்றது.

2019 ஆம் ஆண்டு காலத்தினுள், தே.நீ.வ.வ.ச. அமைச்சின் வழிகாட்டலின் கீழ் தொகை மதிப்பீடு மற்றும் புள்ளிவிபரவியல் திணைக்களத்துடன் சேர்ந்து மேற்படி நோக்கத்துக்காக தரவுகளைச் சேகரிப்பதற்கான ஒரு வினாக்கொத்தை அபிவிருத்தி செய்தல் தொடர்பில் சில பேச்சுவார்த்தைகளையும் நடத்தியது.

2020 ஆம் ஆண்டில் அரசாங்க நிறுவனங்கள் தொடர்பிலான நிலைபேறானதன்மை மற்றும் அவசரநிலை பதிலிறுப்புகளில் முனைப்புடன் ஈடுபடுவதை தே.நீ.வ.வ.ச. தொடர்ந்தும் மேற்கொண்டதோடு, அரசாங்க நிறுவனங்களின் மூலம் நடத்தப்பட்ட பல செயலமர்வுகளுக்கும் பங்களிப்புச் செய்தது. அவை பற்றிய விபரங்கள் வருமாறு.

i. இலங்கை தன்னார்வ தேசிய மீளாய்வுக்கான தேசிய பல்தரப்பினர் ஆலோசனைச் செயலமர்வு - இலங்கை மன்றக் கல்லூரி கேட்போர் கூடம், 2018.04.24

ii. நிலைபேறான அபிவிருத்தி இலக்கு (SDG) 6 மேற்பார்வை – தரப்பினர்கள் ஆலோசனைச் செயலமர்வு – நகர திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சு – நகர திட்டமிடல், நீர் வழங்கல் அமைச்சின் கேட்போர்கூடம், 2018.04.26

iii. தொகை மதிப்பு புள்ளிவிபரத் திணைக்களத்தின் மூலம் நடத்தப்படவுள்ள குடும்ப மதிப்பீட்டுக்கான நீர் தரப் பரிசோதனை தேவைப்பாடுகள் - SDG 6 இலக்கு 6.1 - நகர திட்டமிடல், நீர் வழங்கல் அமைச்சின் கேட்போர்கூடம், 2018.10.23

iv. SDG 6 சுட்டி குழுக் கூட்டம் - நகர திட்டமிடல், நீர் வழங்கல் அமைச்சு, 2018.08.17

v. SDG க்கான நீர் வழங்கல் மற்றும் துப்புரவேற்பாட்டுத் துறை தயார்நிலை, பிரதான தரப்பினர்களுடனான கூட்டம் - அப்போதைய நகர திட்டமிடல், நீர் வழங்கல் அமைச்சு, 2018.03.28

vi. SDG 6.1 மற்றும் 6.2 இலக்குகளை அடைவதற்கான பாதுகாப்பாக முகாமைசெய்யப்பட்ட நீர் மற்றும் துப்புரவேற்பாடு தொடர்பிலான உலக கண்காணிப்பு முறைமை பற்றிய WHO மற்றும் UNICEF இன் இணைந்த கண்காணிப்பு நிகழ்ச்சித்திட்டத்தின் மூலம் நடத்தப்பட்ட இணையத்தின் ஊடான கருத்தரங்கு - நகர திட்டமிடல், நீர் வழங்கல் மற்றும் உயர் கல்வி அமைச்சின் கேட்போர்கூடம், 2019.05.28

vii. SDG 6 இலக்குகள் - நீர் மற்றும் துப்புரவேற்பாட்டில் நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை அடைவதற்கான தேசிய இலக்குகளை அமைத்தல் - நகர திட்டமிடல், நீர் வழங்கல் மற்றும் உயர் கல்வி அமைச்சின் கேட்போர்கூடம், 2019.06.26

viii. SDG – 6 சுட்டிகள் - தொடர்பில் WHO / UNICEF இணைந்த கண்காணிப்பு நிகழ்ச்சித்திட்ட உதவியுடனான செயலமர்வு – வோட்டர்ஸ் எட்ஜ் ஹோட்டல், 2019.07.23

ix. அமைச்சுகள், திணைக்களங்கள் மற்றும் நியதிச்சட்ட சபைகளுக்கான பொதுசன சேவை விநியோக SDG பிரதானபோக்கினைத் தயாரித்தல் மற்றும் தேசிய கொள்கை தொடர்பிலான ஆலோசனை மற்றும் நிலைபேறான அபிவிருத்தி தொடர்பிலான மூலோபாயங்கள் செயலமர்வு - மூவென்பிக் ஹோட்டல், 2019.09.20

x. இணைந்த மேற்பார்வை நிகழ்ச்சித்திட்ட (JMP) அறிக்கை 2020 – 2021 தொடர்பிலான மீளாய்வுக் கூட்டம் - நகர அபிவிருத்தி, நீர் வழங்கல் மற்றும் வீடமைப்பு வசதிகள் அமைச்சின் கேட்போர்கூடம், 2020.03.05

xi. நிலைபேறான அபிவிருத்தி தொடர்பிலான தேசிய கொள்கை மற்றும் மூலோபாயத்துக்கான (NPSSD) செல்லுபடியாக்கல் செயமர்வு - JAIC Hilton Jetwing Blue, 12.03.2020.14.03.2021

xii. நிலைபேறான அபிவிருத்தி தொடர்பிலான தேசிய கொள்கை மற்றும் மூலோபாய (NPSSD) வரைவு தொடர்பிலான மீளாய்வு – நீர் வழங்கல் அமைச்சின் கேட்போர் கூடம், 2020.06.22

இலங்கை அரசாங்கத்தின் மனித உரிமைகள் செயற்பாட்டுத் திட்டத்திற்கமைய, 2018 ஆம் ஆண்டில் தே.நீ.வ.வ.ச. "அவசரநிலை பதிலிறுப்புத் திட்டம்" ஒன்றை அபிவிருத்தி செய்தது. அவசரநிலைப் பதிலிறுப்புத் திட்டமானது, பல்வேறான அவசரநிலை காலகட்டத்தின்போது வாடிக்கையாளர்கள் மற்றும் பொதுமக்களுக்கு பொதுவான நீர் வழங்கல் சேவையில் ஏற்படுகின்ற தடைகளைக் குறைப்பதற்கும் பொதுச் சுகாதார பாதுகாப்பு மற்றும் பாதுகாப்பு தொடர்பில் தீர்வுகளை வழங்குவதற்கும் தொழிற்படுத்துனர்கள் மற்றும் நிர்வாகத்தினருக்கான வழிகாட்டல்களாக அவசரநிலை பதிலிறுப்புத் திட்டம் வடிவமைக்கப்பட்டுள்ளது. 2020 ஆம் ஆண்டிலும் மேற்படி அவசரநிலை பதிலிறுப்புத் திட்டத்தில் தே.நீ.வ.வ.ச. இற்றைப்படுத்தல்களை மேற்கொண்டது. தொடர்புடைய புதிய அபிவிருத்திகளைக் கவனத்திற்கொண்டு 2020 ஆம் ஆண்டிலும் மேற்படி குடிநீர் கொள்கையை மீளாய்வு செய்தல் தொடர்ந்தும் மேற்கொள்ளப்பட்டது.

ஆண்டறிக்கை - 2020

கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு (AMC) அறிக்கை

1999 நவெம்பர் 19 ஆம் திகதிய பீஎப்/பீ.ஈ/3 ஆம் இலக்க சுற்றறிக்கைக்கு அமைவாக, 590 ஆம் இலக்க சபைக் கூட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட 2965(பீ) இலக்க சபைத் தீர்மானத்தின் ஊடாக தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் பணிப்பாளர் சபையின் இணக்கப்பாடு பெறப்பட்டு, கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு தாபிக்கப்பட்டது.

2020 ஆம் ஆண்டு காலத்தினுள் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவானது, கணக்காய்வு அறிக்கைகளை மீளாய்வு செய்தல் (உள்ளக மற்றும் அரசாங்க), நிதியியல் அறிக்கையிடல், உள்ளக கட்டுப்பாட்டு முறைமை மற்றும் கருத்திட்ட செயலாற்றுகையின் விளைதிறன் (கூட்டிணைந்த செயற்பாட்டுத் திட்டத்தின் நியதிகளுக்கமைந்ததான செயலாற்றுகை), சபையின் மற்றும் அரசாங்க சுற்றறிக்கைகளுக்கு இணங்கல், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பிலான அதன் மேற்பார்வைப் பொறுப்புகளை நிறைவேற்றுவதில் சபைக்கு தொடர்ந்தும் உதவி செய்தது.

கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவின் உள்ளடக்கம்

குழுவானது மூன்று நிறைவேற்றல்லாத பணிப்பாளர்களை உள்ளடக்கியுள்ளதோடு, அதில் இரண்டு பேர் PED 55 சுற்றறிக்கையின் 01 ஆம் இலக்கத்துக்கு அமைவாக உரிய நிறுவனத்தினால் பெயரிடப்பட்ட சுயாதீனமான நிறைவேற்றல்லாத பணிப்பாளர்கள் ஆவார்கள்.

குழுவின் உறுப்பினர்கள் பின்வருமாறு:

- செல்வி ஏ.ஆர். விக்கிரமசிங்க - கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவின் தவிசாளர்
- திரு. ரீ.எம்.ஆர்.பீ. தென்னகோன் - நிறைவேற்றல்லாத சபை உறுப்பினர்
- திரு. பி.என். தமிந்த குமார - நிறைவேற்றல்லாத சபை உறுப்பினர்

குழுக் கூட்டத்தின்போது சமுகமளிக்கின்ற ஏனையவர்கள்

- திரு. ஆர்.எச். ருவினிஸ் - பொது முகாமையாளர்
  திரு. ரீ.எஸ். விஜேதுங்க
- திருமதி ஐ.எம்.டபிள்யு.கே. இலங்கசிங்க - மேலதிக பொ.மு. (CS)
  திரு. எஸ்.ஜீ.ஜீ. ராஜ்குமார் அழைக்கப்படுவோர்
- திரு. ஜீ.கே. இத்தமல்கொட - மேலதிக பொ.மு. (ம.வ.மு.)
- திரு. ஆர்.எம்.ஏ.எஸ். வீரசேன - பிரதி பொ.மு. (நிதி)
- செல்வி ஏ. சிறியலதா - பதில் பிரதி பொ.மு. (உ.க.)
- திரு. நிமல் ஆர். ரணவக்க - உப தலைவர்
- செல்வி டீ.என். பீரிஸ் - கணக்காய்வு அத்தியட்சகர் அரசாங்க கணக்காய்வு
- திருமதி எஸ்.டபிள்யு. குணவர்தன - பிரதம உள்ளக கணக்காய்வாளர் நகர அபிவிருத்தி, நீர் வழங்கல் மற்றும் வீடமைப்பு வசதிகள் அமைச்சு அவதானிப்பாளர்
- செல்வி டபிள்யு.பி. சந்தமாலி த சில்வா - சபையின் செயலாளர் - கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுவின் செயலாளர்

குழுவின் வகிபாகம்

குழுவின் பொறுப்புகள் பின்வரும் விடயங்களுக்கு மட்டும் வரையறுக்கப்பட்டதாகவன்றி எந்தவொரு ஏற்புடைய பிரச்சினை தொடர்பிலும் சபையின் கவனத்திற்குக் கொண்டுவருவதை உள்ளடக்கி உள்ளது.

- சபையின் நிதிக் கூற்றுக்களின் நேர்மைத்தன்மையை மேற்பார்வை செய்தல்.
- சபையின் அங்கீகாரத்திற்கான அதன் விதப்புரைகளுடன் காலாண்டு மற்றும் ஆண்டு நிதிக் கூற்றுக்களை மீளாய்வு செய்தல்.
- உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமைகள் மற்றும் நடைமுறைகளின் மேற்பார்வை.
- சட்ட மற்றும் ஒழுங்குமுறையாக்கல் தேவைப்பாடுகளுடனான அதன் இணங்கியொழுகுதலை மேற்பார்வை செய்தல்.
- சபையின் அங்கீகாரத்திற்காக வெளிவாரிக் கணக்காய்வாளர்களின் சுயாதீனம் மற்றும் அவர்களின் கட்டணங்களுக்கான விதப்புரைகளை மேற்பார்வை செய்தல். மற்றும்
- உள்ளக கணக்காய்வுத் தொழிற்பாடுகள் மற்றும் பக்கச்சார்பின்மையின் வினைதிறனை மேற்பார்வை செய்தல்.

மீளாய்வுக்குட்பட்ட ஆண்டினுள் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு மூன்று தடவைகள் கூடியதோடு கலந்துரையாடப்பட்ட முக்கியமான மற்றும் குறிப்பிடத்தக்க விடயங்கள் பின்வருமாறு.

கணக்காய்வு மற்றும் விசாரணை

குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட 2020 கணக்காய்வுத் திட்டமானது, செயலாற்றுகைக் கணக்காய்வு, நிதியியல் கணக்காய்வு மற்றும் விசாரணை தொடர்பில் விசேட கவனம் செலுத்தப்பட்டு ஆண்டினுள் அமுல்படுத்தப்பட்டது. ஆண்டுக்கான திட்டமிடப்பட்ட பிரதானமான வகைகளின் கீழ் மனித வள கணக்காய்வு, பெறுகை மற்றும் களஞ்சிய முகாமைத்துவம், ஆதன முகாமைத்துவம், உள்ளக கட்டுப்பாடு மற்றும் இணங்கியொழுகல், கூட்டிணைந்த திட்ட அமுலாக்கல் மற்றும் முறைமைக் கணக்காய்வு ஆகியன குழுவினால் அடைப்படையாக மீளாய்வு செய்யப்பட்டது. ''கோவிட்'' தொற்றுநோய் நிலைமையினால் வருடாந்தத் திட்டம் பாதிக்கப்பட்டதால் கணக்காய்வுத் திட்டம் மீண்டும் திருத்தப்பட்டது.

வருவாயற்ற நீர் மற்றும் கசிவுகளை அளவிடுவதன் துல்லியத்தன்மை தொடர்பில் வருவாயற்ற நீருக்கான நாடளாவிய ரீதியிலான செயலாற்றுகைக் கணக்காய்வு, வருகைப் பதிவு முறைமை, பொருட் பட்டியல் முறைமை தொடர்பில் முறைமைக் கணக்காய்வு ஆகியன மேற்கொள்ளப்பட்டதோடு, GIS மற்றும் Dash Board ஆகியன மீளாய்வு செய்யப்பட்டன.

KPIs களை அமைப்பதன் மூலம் கருத்திட்டங்களின் செயலாற்றுகையை கண்காணிப்பதற்கான வழிகாட்டல்களை குழு சிபாரிசு செய்தது. கருத்திட்ட மூலதனமிடல் பிரச்சினைகள் மற்றும் தாமதங்கள், மாற்றங்கள் மற்றும் ஒப்பந்த பிணக்குகள், தெரிவு செய்யப்பட்ட சில கருத்திட்டங்களின் நிதிச் செயலாற்றுகை மற்றும் பௌதீகச் செயலாற்றுகை ஆகியன விரிவாக மீளாய்வு செய்யப்பட்டன.

கையிருப்புப் பெறுமதிகள் மற்றும் கையிருப்பு சரிபார்த்தல், வாகனங்களை வாடகைக்கு அமர்த்துதலுடன் தொடர்புடைய முறைகேடுகள், ஒழுக்காற்று விசாரணைகளின் சில பெறுபேறுகள் மற்றும் நடைமுறையிலுள்ள விடயங்கள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டன.

முக்கியமான விடயங்கள் தொடர்பில் உள்ளக மற்றும் அரசாங்கக் கணக்காய்வின் மூலம் எழுப்பப்பட்ட ஐயவினாக்களுக்கான பதிலிருப்புகள் கண்காணிக்கப்பட்டு மீளாய்வு செய்யப்பட்டன.

தே.நீ.வ.வ.ச. சொந்தமாகக் கொண்டுள்ள சுற்றுலா விடுதிகள் தொடர்பிலான அமைச்சுக் கணக்காய்வு அவதானிப்புகள் குறிப்பாக கலந்தாலோசனைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டதோடு குறித்த விடயங்களைத் தணிப்பதற்கான சிபாரிசுகள் பரிந்துரைக்கப்பட்டன.

நிதிக் கூற்றுக்கள்

2020 மார்கழி 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கானது

15.2 பெறுமானத் தேய்வு	மீண்டும் கூறப்பட்ட 2020.01.01 இல் உள்ளவாறான மீதி	இக்காலப் பகுதிக்கான சாட்டுதல்	மாற்றங்கள்	நீக்கல்	2020.12.31 இல் உள்ளவாறான மீதி
	ரூபா	ரூபா	ரூபா	ரூபா	ரூபா
பெறுமானத்தேய்வு					
இறையில் சொத்துக்கள்					
இறையில் காணி	-	-	-	-	**-**
குத்தகையுடமைக் காணி	-	-	-	-	**-**
உட்கட்டமைப்பு	961,390,924	175,917,217	-	-	**1,137,308,141**
கட்டிடம்- இறையில்	1,946,829,047	350,126,563	(212,194)	(111,253)	**2,296,632,162**
கட்டமைப்பு	6,147,383,008	1,027,352,123	-	(1,604,038)	**7,173,131,092**
பொறி மற்றும் உபகரணம்-சுத்திகரிப்பு	10,738,281,293	2,303,591,386	-	(71,335,341)	**12,970,537,339**
பராமரிப்பு மீற்றர்	18,568,187	465,109	(15,723,838)	-	**3,309,458**
மொத்த தண்ணீர் மீற்றர்	297,130,723	53,792,990	15,723,838	-	**366,647,551**
பரிமாற்றமும் விநியோகமும்	10,840,733,187	2,158,197,344	183,997	-	**12,999,114,528**
நடமாடும் உபகரணம்	355,781,032	103,633,075	-	(8,797,594)	**450,616,514**
அளவீட்டு உபகரணம்	18,720,780	3,927,447	-	-	**22,648,228**
ஆய்வுகூட உபகரணம்	428,051,251	58,933,339	-	-	**486,984,590**
ஏனைய உபகரணங்கள்	1,354,687,892	249,956,548	-	(367,067)	**1,604,277,373**
தளபாடமும் பொருத்திகளும்-கணனிகள்	342,584,684	48,094,980	(844,517)	(8,922)	**389,826,225**
கணனிகள் மற்றும் உபபாகங்கள்	570,941,439	106,921,778	11,998	(9,775)	**677,865,440**
மோட்டார் வாகனங்கள் கார்கள்	141,810,922	24,335,070	12,651,777	(1,141,140)	**177,656,629**
வான், பஸ் மற்றும் ஜீப்	421,030,273	25,631,859	(2,435,447)	(8,540,690)	**435,685,995**
லொறிகள் மற்றும் டிரக்	713,238,570	121,317,099	-	(8,661,255)	**825,894,414**
உழவு இயந்திரம் மற்றும் பெட்டிகள்	50,117,123	4,347,466	-	(2,066,250)	**52,398,339**
தண்ணீர் பவுசர் மற்றும் பார ஊர்திகள்	386,527,042	76,713,415	-	(1,071,719)	**462,168,738**
மோட்டார் சைக்கிள்	12,442,725	828,032	-	(53,200)	**13,217,557**
முச்சக்கர வண்டிகள்	2,888,294	811,463	-	-	**3,699,757**
குத்தகையுடமை வாகனங்கள்	10,216,329	-	(10,216,329)	-	**-**
மொத்தம்	35,759,354,725	6,894,894,304	(860,715)	(103,768,244)	**42,549,620,070**

நிதிக் கூற்றுக்களிற்கான குறிப்புகள்

2020 மார்கழி 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கானது

15 ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள் (தொடர்ச்சி)

15.3 தேறிய புத்தகப் பெறுமதிகள்	2020 ரூபா	2019 ரூபா
கிரயத்தில்		
இறையில் காணி	**8,692,307,065**	8,642,267,971
குத்தகையுடமைக் காணி	**599,500,254**	626,761,182
உட்கட்டமைப்பு	**7,951,199,516**	7,816,871,579
கட்டிடம்- இறையில்	**17,004,532,696**	15,465,935,213
கட்டமைப்பு	**52,748,248,627**	55,330,842,040
பொறி மற்றும் உபகரணம்- சுத்திகரிப்பு	**35,641,804,681**	36,800,730,780
பராமரிப்பு மீற்றர்	**480,360**	945,468
மொத்த தண்ணீர் மீற்றர்	**299,244,802**	326,869,958
பரிமாற்றமும் விநியோகமும்	**122,099,830,796**	114,727,687,921
நடமாடும் உபகரணம்	**797,662,033**	844,773,399
அளவீட்டு உபகரணம்	**77,083,302**	32,917,750
ஆய்வுகூடம்	**457,319,235**	469,768,341
ஏனைய உபகரணங்கள்	**1,917,066,984**	1,530,330,406
தளபாடமும் பொருத்திகளும்- கணனிகள்	**307,426,888**	317,926,548
கணனிகள் மற்றும் உபபாகங்கள்	**157,439,068**	122,899,695
மோட்டார் வாகனங்கள் கார்கள்	**533,409,679**	69,301,482
வான், பஸ் மற்றும் ஜீப்	**67,400,357**	110,551,064
லொறிகள் மற்றும் டிரக்	**1,347,578,725**	1,809,080,551
உழவு இயந்திரம் மற்றும் பெட்டிகள்	**3,171,852**	10,228,068
தண்ணீர் பவுசர் மற்றும் பார ஊர்திகள்	**1,238,665,600**	1,190,924,854
மோட்டார் சைக்கிள்	**13,952,927**	13,583,488
முச்சக்கர வண்டிகள்	**42,270,762**	4,771,681
குத்தகையுடமை வாகனங்கள்	**-**	12,963,671
ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் மொத்த முற்கொண்டுவரும் தொகை	**251,997,596,210**	246,278,933,112

நிதிக் கூற்றுக்களிற்கான குறிப்புகள்

2020 மார்கழி 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கானது

		உள்ளபடியானது	மீண்டும் கூறப்பட்ட மீதி
		2020	2019
		ரூபா	ரூபா
16 கற்பனைச் சொத்துக்கள்			
கணனி மென்பொருள்		**14,122,453**	4,176,328
		14,122,453	4,176,328

ஆண்டினுள் மேற்குறித்த மென்பொருளிற்கான கடனளிப்பிற்காக 3,374,221 ரூபா வழங்கப்பட்டுள்ளதுடன், மேலும், புதிய மென்பொருளின் பொருட்டு 13,320,346 ரூபா செலவிடப்பட்டுள்ளது.

17 மூலதன நடைபெறும் வேலைகள்			
நிர்மாண வேலைகள்	35.2	**366,959,156,027**	285,664,819,677
புனரமைப்பு		**6,503,499,543**	5,850,574,775
		373,462,655,570	291,515,394,453
18 ஏனைய நிதிச் சொத்துக்கள்			
உத்தியோகத்தர் வீடமைப்புக் கடன்களிற்கான HDFC முதலீடு		**441,068**	688,527
இலங்கை வங்கி சேமிப்புகள் - II		**1,412,440**	1,361,683
		1,853,507	2,050,210
19 பொருளிருப்புகள்			
பீவீசீ இருப்பு குழாய்கள்	34.2	**5,032,247,170**	5,328,992,075
நீர் அளவைமானி, பொருத்திகள் மற்றும் கறையகற்றல் விடயங்கள்	34.2	**745,219,930**	815,140,804
இரசாயணப் பொருட்கள்		**328,604,834**	191,847,637
மின்னியல் பொருட்கள்		**735,849,788**	720,232,246
கட்டிடப் பொருட்கள்		**70,345,208**	32,798,463
நீரகற்றல் பம்பு மற்றும் உபபாகங்கள்		**1,249,805,822**	1,220,749,686
வாகன உதிரிப்பாகங்கள்		**308,596,261**	334,782,918
காகிதாதி மற்றம் அலுவலக உபகரணங்கள்		**76,141,325**	83,882,174
ஏனைய விடயங்கள்		**561,631,653**	467,932,626
பொருட்கள் சரிசெய்தல்		**35,732,252**	131,870,865
		9,144,174,242	9,328,229,494
குறைக்கப்பட்டுள்ளது – முக்கிய உதிரிப் பாகங்கள			
களஞ்சியத்திலுள்ள ஆதனம் பொறி மற்றும் உபகரணங்கள்		**(606,941,540)**	(442,927,939)
பழுதடைந்த இருப்புக்கான ஏற்பாடு		**(144,532,262)**	(154,394,581)
		8,392,700,441	8,730,906,974

நிதிக் கூற்றுக்களிற்கான குறிப்புகள்

2020 மார்கழி 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கானது

		உள்ளபடியானது	மீண்டும் கூறப்பட்ட மீதி
		2020	2019
		ரூபா	ரூபா
20 வியாபார மற்றும் ஏனைய பெறவேண்டியவைகள்			
வியாபார கடன்பட்டோர்		**8,030,015,131**	4,706,427,817
ஏனைய கடன்பட்டோர்	34.2	**359,403,706**	377,412,918
கழி: கடன்பட்டோர் பெறுமதிக்குறைப்பு		**(1,466,952,481)**	(1,233,945,273)
கடன்பட்டோர் சேகரிப்பு கட்டுப்பாடு		**479,699,404**	(723,553,484)
பெறவேண்டிய பெறுமதி சேர் வரி	34.2	**11,888,233**	6,117,059
பெறவேண்டிய பிடித்துவைத்தல் வரி		**247,129,963**	244,221,362
பெறவேண்டிய ESC	34.2	**172,656,652**	272,728,231
பதவியணியினருக்கான முற்பணம்		**19,984,791**	13,099,604
ஊழியர்களிற்கான கடன்கள்		**2,704,816,354**	3,068,896,781
திறைசேரியிடமிருந்து பெறவேண்டிய பாக்கிகள்		**659,277,280**	-
பெறவேண்டிய வட்டி மற்றும் ஏனையவைகள்		**48,456,634**	137,444,157
		11,266,375,666	6,868,849,172

அறிக்கையிடல் நடவடிக்கையை விரைவுபடுத்துவதற்காக, 2020 ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தின் பிரதான வருமானமானது 2020 ஆம் ஆண்டு நவம்பர் மாதத்திற்குரிய உண்மையான பிரதான வருமானத்தை அடிப்படையாகக் கொண்டு மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது.

21 வைப்புக்கள் மற்றும் முற்பணங்கள்			
முற்கொடுப்பனவுகள்		**956,151**	8,096,500
முற்பணம் (உள்ளீடுகள் உள்ளடங்கும் வகையில்)		**28,412,896,392**	40,406,847,644
வைப்புக்கள்		**294,461,356**	291,896,019
		28,708,313,898	40,706,840,162
22 முதலீடுகள்			
முடிவுத் திகதி வரை வைத்துக் கொள்ளப்படும் நிதி நடைமுறைக்கேற்ற பத்திரம்	34.2	**23,598,991,188**	27,736,376,662
		23,598,991,188	27,736,376,662
23 காசு மற்றும் காசிற்கு சமமானவைகள்			
வங்கிலுள்ள காசு		**1,575,845,777**	3,567,782,050
தலைமை அலுவலக் காசு கட்டுநிதிகள்		**4,107,362**	2,629,300
பிராந்திய காசுக் கட்டுநிதிகள்		**6,272,935**	6,243,980
இடைப்போக்கிலுள்ள காசு		**166,479,620**	251,931,795
சேமிப்புக் கணக்கு		**82,231,943**	83,143,640
		1,834,937,637	3,911,730,765
24 அரசாங்கத்திடமிருந்து கையேற்ற சொத்துக்கள்			
அரசாங்க திணைக்களத்திடமிருந்து கையேற்ற சொத்துக்கள்		**185,480,387**	185,480,387
		185,480,387	185,480,387
25 அரச பங்கு			
கடன் மூலதனமாக மாற்றுதல்	34.2	**74,631,444,685**	71,206,455,762
அரசாங்க பங்களிப்பு (பிணை)		**13,899,983,925**	13,899,983,925
		88,531,428,611	85,106,439,687

31.12.2014 ஆண்டிற்குரிய வெளிநாட்டு கடன் தொகையை அரச பங்காக மாற்றம் செய்வதற்காக கொள்கைரீதியான தீர்மானமொன்றினை இலங்கை அரசாங்கம் எடுத்துள்ளது

நிதிக் கூற்றுக்களிற்கான குறிப்புகள்

2020 மார்கழி 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கானது

		உள்ளபடியானது	மீண்டும் கூறப்பட்ட மீதி
		2020	2019
		ரூபா	ரூபா
26 உத்தியோகத்தர் நலன்புரி நிதியம்			
ஆரம்ப மீதி		**29,411,874**	23,463,597
ஆண்டின் போது பெறப்பட்டவை		**(8,803,047)**	5,948,277
		20,608,827	29,411,874
27 அரசாங்க மானியம்			
திறைசேரி மானியம்		**109,812,274,767**	105,903,930,027
		109,812,274,767	105,903,930,027
28 மூலதன மானியம்			
வெளிநாட்டு மானியம்	34.2	**265,549,744,453**	239,719,094,394
உள்நாட்டு மானியங்கள்		**1,744,061,642**	1,589,394,210
		267,293,806,096	241,308,488,604
29 செலுத்த வேண்டிய கடன்கள்			
திறைசேரி ஊடான வெளிநாட்டு கடன்கள்		**163,342,347,199**	115,484,776,594
உள்நாட்டு கடன்கள்		**34,833,424,166**	23,831,277,018
நீண்டகாலக் கடன்களின் செலுத்தப்படத்தக்க குறுகிய கால பகுதி		**198,175,771,364**	139,316,053,612
நீண்டகாலக் கடன்களின் செலுத்தப்படத்தக்க நீண்ட கால பகுதி		**2,920,569,236**	12,034,922,913
செலுத்தப்பட வேண்டிய கடன் தொகை		**201,096,340,601**	151,350,976,525
30 ஏனைய பிற்போட்ட பொறுப்புக்கள்			
ஓய்வூதிய பணிக்கொடை ஏற்பாடுகள்	**30.1**	**4,003,984,078**	4,003,984,078
வாடிக்கையாளர் மற்றும் ஊழியர் பிணை வைப்புக்கள்		**15,425,526**	53,950,172
		4,019,409,604	4,057,934,251
30.1 ஓய்வூதிய பணிக்கொடை ஏற்பாட்டு அசைவு			
ஆண்டு தொடக்கத்திலுள்ள மீதி		**4,003,984,078**	4,003,984,078
கூட்டு: ஆண்டிற்கான ஏற்பாடு		**485,960,193**	578,942,828
கழி: ஆண்டின் போதான பணிக்கொடைக் கொடுப்பனவுகள்		**(485,960,193)**	(578,942,828)
		4,003,984,078	4,003,984,078
31 வியாபார மற்றும் ஏனைய செலுத்த வேண்டியவைகள்			
மீள்கட்டணமிட வேண்டிய வேலைகள் -வாடிக்கையாளர் முறபணங்கள்		**9,285,334,967**	11,061,757,655
ஒப்பந்தகாரர் பிடிகாசு		**15,016,366,516**	13,256,692,526
குத்தகை உடமை கடன்கொடுத்தோர்		**-**	3,190,775
கழி: தொங்கல் வட்டி		**-**	(76,347)
கடன்கொடுத்தோர் கட்டுப்பாடு	34.2	**2,127,054,981**	1,677,303,246
ஏனைய கடன்கொடுத்தோர்		**339,170,471**	338,462,216
அட்டுறு செலவினம்	34.2	**6,314,782,183**	12,310,204,618
வைப்புக்கள்		**283,501,586**	248,578,020
செலுத்தப்பட வேண்டிய வட்		**200,605,713**	156,097,480
செலுத்த வேண்டியபெறுமதி சேர் வரி	34.2	**141,677**	7,459,405
சம்பளங்கள் மற்றும் ஏனைய செலுத்த வேண்டியவைகள்		**177,572,741**	184,346,670
		33,744,530,835	39,244,016,264

நிதிக் கூற்றுக்களிற்கான குறிப்புகள்
2020 மார்கழி 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கானது

32 தொடர்புபட்ட தரப்பினர் கொடுக்கல் வாங்கல்கள்

அரச மற்றும் அரச கட்டுப்பாட்டு வருகையாளருடனான கொடுக்கல் வாங்கல்கள்

தொடர்புபட்ட தரப்பினருடான கொடுக்கல் வாங்கல்களிற்குள் சபை நுழைந்து அதன் செயற்பாடுகளின் சாதாரண பாடநெறிகளில், தொடர்புபட்ட தரப்பினர் இலங்கை அரசாங்கம், பல்வேறு அரசாங்க திணைக்களங்கள் மற்றும் அரச கட்டுப்பாட்டு வருகையாளர்கள் என்போரை உள்ளடக்குகிறது. (அரசு: சபையின் இறுதி பங்காளராக) கொடுக்கல் வாங்கல்களின் விபரங்கள் மற்றும் முக'கியமாக தனிப்பட்ட ரீதியில் அரச மற்றும் அரச கட்டுப்பாட்டு வருகையாளர்களுடன் சபையால் செய்யப்பட்ட ஒழுங்குகள் மற்றும் ஏனைய கொடுக்கல் வாங்கல்களிற்காக சரியாக உள்ளன. ஆனால், தனிப்பட்ட ரீதியில் முக்கியமற்றவை பின்வருமாறுள்ளன.

33 ஐந்தொகை திகதிக்கு பிந்திய நிகழ்வுகள்

ஐந்தொகை திகதிக்கு பிந்திய கசல நிகழ்வுகளும் கவனத்திற்கொள்ளப்பட்டிருந்ததுடன் அவசியமான சீராக்கல்கள் மற்றும் வெளிப்படுத்தல்களை நிதிக்கூற்றுக்களில் செய்யப்பட்டிருந்தது.

நிதிக் கூற்றுக்களிற்கான குறிப்புகள்
2020 மார்கழி 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கானது

34 முன்னைய ஆண்டுச் சீராக்கல்

34.1 2007.12.31 ஆம் திகதிக்கு சபைக்குச் சொந்தமான சொத்துக்களை விலைமதிப்பீட்டுத் திணைக்களத்தின் ஒத்துழைப்புடன் மறுமதிப்பீடு செய்யப்பட்டது. குறித்த மறுமதிப்பீட்டு பெறுமதிகள் 2010 ஆம் ஆண்டில் புத்தகங்களில் பதியப்பட்டுள்ளதுடன், இப்பெறுமதிகள் தற்போது வரை சுமக்கும் பெறுமதியாக புத்தகங்களில் காணப்படுகின்றது. சொத்துக்களின் பெறுமதி மிக அதிகமாதலினால் 2010 ஆம் ஆண்டில் நிகழ்ந்துள்ள சில கைவிடல்கள் மற்றும் இரட்டிப்பு கணக்கிடல் ஆகியவற்றை முன்னைய ஆண்டுக்கான சீராக்கள்களின் கீழ் முன்னைய ஆண்டுகளுடன் தாக்கம் செலுத்தக்கூடிய வகையில் சீராக்கப்பட்டுள்ளது. அதனடிப்படையில் சொத்து ஆலைகள் மற்றும் உபகரணங்களின் சுமக்கும் பெறுமதிக்கு நிகழக்கூடிய நிகர விளைவான 120.21 மில்லியன் ரூபா சீராக்கப்பட்டதுடன், 2018.12.31 ஆம் திகதிக்கான தேய்மானமாக 11.62 மில்லியன் ரூபா சீராக்கப்பட்டது.

நிதிக் கூற்றுக்களிற்கான குறிப்புகள்
2020 மார்கழி 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கானது

34.1.1 சராசரி வைத்திருப்புப் பெறுமதி

செலவு இறையில் சொத்துக்கள்	2019.12.31 ஆம் திகதிக்கு உள்ளவாறான நிலுவை	முன்னைய ஆண்டுச் சீராக்கல்	2019.12.31 திகதிக்கு மீண்டும் கூறப்பட்ட நிலுவை
	ரூபா.	ரூபா.	ரூபா.
இறையில் காணி	8,642,267,971	-	8,642,267,971
குத்தகையுடமைக் காணி	626,761,182	-	626,761,182
உட்கட்டமைப்பு வசதிகள்	8,778,290,484	(27,981)	8,778,262,503
கட்டிடம்- இறையில்	17,412,764,260	-	17,412,764,260
கட்டமைப்பு	61,478,244,218	(19,170)	61,478,225,048
பொறி மற்றும் உபகரணம்-சுத்திகரிப்பு	47,539,026,163	(14,090)	47,539,012,073
பராமரிப்பு மீற்றர்	19,513,655	-	19,513,655
மொத்த தண்ணீர் மீற்றர்	624,016,577	(15,896)	624,000,681
பரிமாற்றமும் விநியோகமும்	125,568,430,655	(9,547)	125,568,421,108
நடமாடும் உபகரணம்	1,201,158,339	(603,907)	1,200,554,432
அளவீட்டு உபகரணம்	51,638,530	-	51,638,530
ஆய்வுகூடம்	898,105,578	(285,986)	897,819,592
ஏனைய உபகரணங்கள்	2,882,094,302	2,923,996	2,885,018,298
தளபாடமும் பொருத்திகளும்-கணனிகள்	671,768,393	(11,257,162)	660,511,232
கணனிகள் மற்றும் உபபாகங்கள்	694,667,797	(826,663)	693,841,134
மோட்டார் வாகனங்கள் கார்கள்	211,112,404	-	211,112,404
வான், பஸ் மற்றும் ஜீப்	531,581,337	-	531,581,337
லொறிகள் மற்றும் டிரக்	2,522,319,121	-	2,522,319,121
உழவு இயந்திரம் மற்றும் பெட்டிகள்	60,345,191	-	60,345,191
தண்ணீர் பவுசர் மற்றும் பார ஊர்திகள்	1,577,451,896	-	1,577,451,896
மோட்டார் சைக்கிள்	26,026,213	-	26,026,213
முச்சக்கர வண்டிகள்	7,659,975	-	7,659,975
குத்தகையுடமை வாகனங்கள்	23,180,000	-	23,180,000
மொத்த தேய்மானத்திற்கு உட்படுத்தக்கூடிய சொத்துக்களின் பெறுமதி	**282,048,424,242**	**(10,136,405)**	**282,038,287,838**

நிதிக் கூற்றுக்களிற்கான குறிப்புகள்

2020 மார்கழி 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கானது

34.1.2 பெறுமானத்தேய்வு

இறையில் சொத்துக்கள்	2019.12.31 ஆம் திகதிக்கு உள்ளவாறான மீதி	முன்னைய ஆண்டுச் சீராக்கல்	2019.12.31 திகதிக்கு மீண்டும் கூறப்பட்ட மீதி
	ரூபா.	ரூபா.	ரூபா.
இறையில் காணி	-	-	-
குத்தகையுடமைக் காணி	-	-	-
உட்கட்டமைப்பு வசதிகள்	961,396,314	(5,390)	961,390,924
கட்டிடம்- இறையில்	1,946,829,047	-	1,946,829,047
கட்டமைப்பு	6,147,387,144	(4,136)	6,147,383,008
பொறி மற்றும் உபகரணம்-சுத்திகரிப்பு	10,738,289,956	(8,663)	10,738,281,293
பராமரிப்பு மீற்றர்	18,568,187	-	18,568,187
மொத்த தண்ணீர் மீற்றர்	297,146,464	(15,741)	297,130,723
பரிமாற்றமும் விநியோகமும்	10,840,745,243	(12,056)	10,840,733,187
நடமாடும் உபகரணம்	355,981,354	(200,321)	355,781,032
அளவீட்டு உபகரணம்	18,720,780	-	18,720,780
ஆய்வுகூடம்	428,216,030	(164,779)	428,051,251
ஏனைய உபகரணங்கள்	1,354,821,638	(133,746)	1,354,687,892
தளபாடமும் பொருத்திகளும்-கணனிகள்	351,737,678	(9,152,994)	342,584,684
கணனிகள் மற்றும் உபபாகங்கள்	571,681,676	(740,237)	570,941,439
மோட்டார் வாகனங்கள் கார்கள்	141,810,922	-	141,810,922
வான், பஸ் மற்றும் ஜீப்	421,030,273	-	421,030,273
லொறிகள் மற்றும் டிரக்	713,238,570	-	713,238,570
உழவு இயந்திரம் மற்றும் பெட்டிகள்	54,867,123	(4,750,000)	50,117,123
தண்ணீர் பவுசர் மற்றும் பார ஊர்திகள்	383,677,042	2,850,000	386,527,042
மோட்டார் சைக்கிள்	12,442,725	-	12,442,725
முச்சக்கர வண்டிகள்	2,888,294	-	2,888,294
குத்தகையுடமை வாகனங்கள்	10,216,329	-	10,216,329
	35,771,692,788	**(12,338,062)**	**35,759,354,725**

நிதிக் கூற்றுக்களிற்கான குறிப்புகள்

2020 மார்கழி 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கானது

34.2 ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணங்களுக்கு உரிய முன்னைய ஆண்டு சீராக்கல் நடவடிக்கைகளுக்கு மேலதிகமாக கீழே காணப்படும் பொருட்களும் முன்னைய ஆண்டுகளுக்கு தாக்கம் செலுத்தக்கூடிய விதத்தில் சீராக்கப்பட்டுள்ளது.

	2019.12.31 ஆம் திகதிக்கு உள்ளவாறான நிலுவை	முன்னைய ஆண்டுச் சீராக்கல்	2019 ஆம் ஆண்டுக்குரிய சீராக்கல்	2019.12.31 ஆம் திகதிக்கு மீண்டும் கூறப்பட்ட நிலுவை
	ரூபா.	ரூபா.	ரூபா.	ரூபா.
செயற்பாட்டிலுள்ள மூலதன பணிகள் (குறிப்பு 17)				
நிர்மாண வேலைகள்	285,674,800,823	(7,810,955)	(2,170,190)	285,664,819,677
பொருளிருப்புகள் (குறிப்பு 19)				
குழாய்கள் மற்றும் உதிரி பாகங்கள்	1,219,549,844	1,199,842	-	1,220,749,686
எழுது பொருள் மற்றும் அலுவலக உபகரணங்கள்	83,875,792	6,382	-	83,882,174
வேறு பொருட்கள்	470,729,900	(2,797,274)	-	467,932,626
வியாபாரம் மற்றும் பிற பெறத்தக்கவை (குறிப்பு 20)				-
வியாபார கடன்பட்டோர்	4,707,186,657	(758,840)	-	4,706,427,817
கடன்பட்டோர் சேகரிப்பு கட்டுப்பாடு	(722,383,592)	-	(1,169,893)	(723,553,484)
ஈ எச் சி பெறவேண்டியவை	273,028,231	-	(300,000)	272,728,231
				-
காசு மற்றும் காசிற்கு சமமானவைகள் (குறிப்பு 23)				-
வங்கியிலுள்ள காசு	3,581,786,632	(14,004,583)	-	3,567,782,050
				-
வியாபார மற்றும் ஏனைய செலுத்த வேண்டியவைகள் (குறிப்பு 31)				-
கடன்கொடுத்தோர் கட்டுப்பாடு	1,680,514,246	(3,211,000)	-	1,677,303,246
திரட்டப்பட்ட செலவுகள்	12,308,133,852	2,070,767	-	12,310,204,618
				-

டபிள்யூஎஸ்எஸ்/ஏ/ 2021 யூன் 25

என்டபிள்யூஎஸ்டிபீ/எவ்ஏ/01/2020

தலைவர்
தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை.

தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையின் 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மற்றும் ஏனைய சட்டரீதியான மற்றும் பிரமாண ரீதியான தேவைப்பாடுகள் மீது 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 12 ஆம் பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை

---

1. நிதிக்கூற்றுக்கள்

1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையின் (என்டபிள்யூஎஸ்டிபீ) (“சபை”) இன் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று மற்றும் ஏனைய வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டம் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டம் என்பவற்றின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. அரசியலைமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க பாராளுமன்றத்திற்கான எனது அறிக்கை காலக்கிரமத்தில் பட்டியல்படுத்தப்படும்.

எனது அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து சபையின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

1.2.1 இலங்கை கணக்கீட்டு நியமங்கள் நியமங்கள் (LKAS/ SLFRS) பிரயோகிப்பதிலிருந்து விலகுதல்

(அ) நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல் மீதான இலங்கை கணக்கீட்டு நியமத்தின் (LKAS 01) 32 ஆம் பந்திக்கு முரணாக நடைமுறைச் சொத்துக்களாக பிரதிநிதித்துவப்படுத்துகின்ற ரூபா 8,506,031 தொகையான வியாபார பெறவேண்டியவைகளின் அசாதாரண செலவு மீதி செலுத்த வேண்டியவைகளிற்கு எதிராக சரிசெய்யப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதியிலுள்ளவாறான நிதி நிலமைக் கூற்றில் செயற்பாடற்ற பொறுப்புக்களாக இனங்காணப்பட்டிருந்தது. அதேபோல, நடைமுறைப் பொறுப்புக்களை பிரதிநதித்தவப்படுத்துகின்ற ரூபா 1,078,112 தொகையான பெறப்பட்ட பிடிகாசின் வரவு மீதி பெற வேண்டியவைகளிற்கு எதிராக சரிசெய்யப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதியிலுள்ளவாறான நிதி நிலமைக் கூற்றில் செயற்பாடற்ற சொத்துக்களாக இனங்காணப்பட்டிருந்தது.

(ஆ) நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல் மீதான இலங்கை கணக்கீட்டு நியமத்தின் (LKAS 01) 60 ஆம் பந்திக்கு முரணாக சபையானது இருப்புக்கள், கடன்பட்டோர் மற்றும் முற்பணங்கள் உள்ளடங்கலான ரூபா 149,681,812 தொகையான செயற்பாடற்ற சொத்துக்களாக இனங்காகாணப்பட்டிருந்ததுடன் அவர்களுடைய கணக்கிலுள்ள திரவத்தன்மையை கருத்திற்கொள்ளாமல் காசு மற்றும் காசிற்கு சமமானவைகளின் கீழே காட்டப்பட்டிருந்தது.

(இ) நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல் மீதான இலங்கை கணக்கீட்டு நியமத்தின் (LKAS 02) 09 ஆம் பந்திக்கு முரணாக மூன்று ஆண்டு காலத்திற்கு மேலாக நகராதிருந்த ரூபா 496,204,232 கூட்டுத்தொகையான இருப்புக்கள் அவற்றினுடைய தேறிய தேறத்தக்க பெறுமதியை மதிப்பிடாமல் அதன் கிரயத்தில் பதியப்பட்டிருந்தது.

(ஈ) காசுப் பாய்ச்சல் கூற்று மீதான இலங்கை கணக்கீட்டு நியமத்தின் (LKAS 07) 07 ஆம் பந்திக்கு முரணாக ரூபா 1,412,440 தொகையான சேமிப்பு கணக்கில் செய்யப்பட்ட வைப்புக்கள் மற்றும் ரூபா 12,887.03 மில்லியன் தொகையான எஸ்குரோ சேமிப்புக் கணக்கில் செய்யப்பட்ட வைப்புக்கள் என்பன காசு மற்றும் காசிற்கு சமமானவையாக காட்டுவதற்குப் பதிலாக நிதிச் சொத்தக்கள் மற்றும் முதலீடுகளின் கீழ் வகுதிப்படுத்தப்பட்டிருந்தது.

(உ) கணக்கீட்டுக் கொள்கைகள், கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தவறுகளிலுள்ள மாற்றங்கள் மீதான இலங்கை கணக்கீட்டு நியமத்தின் (LKAS 08) 41 மற்றும் 42 ஆம் பந்திகளுக்கு முரணாக 2019 ஆம் ஆண்டு தொடர்புபட்ட ரூபா 65,430,227 தொகையான மூன்று டொலர் வைப்புக்கள் மீதான வட்டி வருமானம் மீளாய்வாண்டின் வருமானமாக இனங்காணப்பட்டிருந்தது.

(ஊ) ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள் மீதான இலங்கை கணக்கீட்டு நியமத்தின் (LKAS 16) 51 ஆம் பந்தியின் பிரகாரம், சகல சொத' துக்களின் பயன்பாட்டு ஆயள் காலம் குறைந்தது ஒவ்வொரு நிதியாண்டு இறுதியிலும் மீளாய்வு செய்யப்பட வேண்டியதுடன் எதிர்பார்ப்புகள் முந்திய மதிப்பீடுகளுடன் வித்தியாசப்படுமானின் இ.க.நி 08 இற்கமைய மாற்றங்களை கணக்கீடு செய்ய வேண்டும். எவ்வாறாயினும், 17 வகுதியான நிலையான சொத்துக்கள் தொடர்புபட்ட ரூபா 1,888,920,123 தொகையான முழுமையான பெறுமானத்தேய்விடப்பட்ட சொத்துக்களின் பயன்பாட்டுக் காலம் மீளாய்வு செய்யப்பட்டு அதன்படி கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(எ) 2012 யூலை 17 இல் கொள்வனவு செய்யப்பட்ட மற்றும் வவுனியாவில் நில்தடி நீர் துறையில் இருந்த காற்று அழுத்தி உபகரணம் 2018 செப்தெம்பர் 27 இல் தீயில் எரிந்திருந்தது. எவ்வாறாயினும், ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள் மீதான இலங்கை கணக்கீட்டு நியமத்தின் (LKAS 16) 7 ஆம் பந்திக்கு முரணாக ரூபா 2,221,615 ஆன பெறுமானத்தேய்வு ஏற்பாடு 2020 செப்தெம்பர் 28 இலிருந்து 2020 ஒக்தோபர் 31 வரை செய்யப்பட்டிருந்தது. இதன் விளைவால், மீளாய்வாண்டிற்கான இலாபம் ரூபா 888,646 ஆல் குறைத்துக் காட்டப்பட்டிருந்ததுடன் ஆண்டின் தொடக்கத்தில் திரண்ட நட்டம் ரூபா 1,332,969 ஆல் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது. மேலும், மீளாய்வாண்டின் போது இந்த சொத்துக்கள் கைதவிர்த்தமையால் ரூபா 2,221,615 தொகையான கைதவிர்ப்பு மீதான மிகை இலாபம் நிதிக்கூற்றுக்களில் இனங்காணப்பட்டிருந்தது.

(ஏ) ஊழியர் நலன்புரிகள் மீதான இலங்கை கணக்கீட்டு நியமத்தின் (LKAS 19) 66 மற்றும் 144 ஆம் பந்திகளின் பிரகாரம், சபையானது உள்ளபடியான மதிப்பாய்வு முறை பிரியோகிக்கப்பட்டிருக்காததுடன் எந்தவொரு உள்ளபடியான நிகழ்வுகளும் செய்யப்பட்டிருக்காததுடன் மீளாய்வாண்டின் போது முந்திய ஊழியர் நலன்புரி உதவிகள் மற்றும் தொடர்புபட்ட சேவைக் கிரயம் என்பவற்றின் தற்போதைய பெறுமதியை மதிப்பிடும் நொக்கில் அவற்றினை வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை என்பது கணக்காய்வில் வெளிப்பட்டது. மேலும், நியமத்தின் 58 ஆம் பந்தியில் வேண்டப்பட்டவாறு

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்களில் ஓய்வூத்திய நலன்புரி உதவிகளிற்கான ஏற்பாடுகள் (பணிக்கொடை ஏற்பாடு) செய்யப்பட்டிருக்கவில்லை. மீளாய்வாண்டின் போது பணிக்கொடையாக (செயற்திட்ட உத்தியோகத்தர் தவிர) செலுத்தப்பட்டிருந்த ரூபா 485,960,193 இற்கு சமமான தொகைக்கு பதிலாக மீளாய்வாண்டின் ஏற்பாடாக இனங்காணப்பட்டிருந்தது.

(ஏ) அரசாங்க மானியங்களின் கணக்கீடு மற்றும் அரசாங்க உதவிகளின் வெளிப்படுத்தலின் மீதான இலங்கை கணக்கீட்டு நியமத்தின் (LKAS 20) ஏற்பாடுகளிற்கு முரணாக 9 முதல் 13 ஆண்டு காலத்திற்கு மேலாக திரட்டப்படாமல் இருந்த 34 செயற்திட்டங்கள் தொடர்பில் ரூபா 13,704.8 மில்லியன் கூட்டுத் தொகயான வெளிநாட்டு மானிய மீதிகள் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கணக்குகளிற்கு கொண்டுவரப்பட்டிருந்தது. வெளிநாட்டு மானியங்கள் தொடர்பில் விபரங்கள் எதுவும் கிடைத்திருக்காமையால் கடன் தீர்க்காமையின் தாக்கம் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வில் மதிப்பிட முடியவில்லை.

(ஐ) அரசாங்க மானியங்களின் கணக்கீடு மற்றும் அரசாங்க உதவிகளின் வெளிப்படுத்தலின் மீதான இலங்கை கணக்கீட்டு நியமத்தின் (LKAS 20) 03 ஆம் பந்திக்கு முரணாக காலி முகாமையாளர் அலுவலகத்தில் ஆண்டின் இருப்பின் மெய்மையாய்வின் போது இனங்காணப்பட்டிருந்த ரூபா 3,399,965 பெறுமதியான பீவீசீ உபபாகங்கள் முறையாக இனங்காணாமல் வெளிநாட்டு மூலதன மானியமாக பதியப்பட்டிருந்தது.

(ஒ) முதலீட்டு ஆதனத்தின் மீதான இலங்கை கணக்கீட்டு நியமத்தின் (LKAS 40) ஏற்பாடுகளிற்கு முரணாக, ரூபா 333,020,680 தொகையான முதலீட்டு ஆதனத்தின் முற்கொண்டுவரப்பட்ட பெறுமதி 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு முதலீட்டு ஆதனமாக காட்டவதற்குப் பதிலாக ஆதனம் பொறி மற்றும் உபகரணங்களாக காட்டப்பட்டிருந்தது. மேலும், நியமத்தின் 75(ஊ)(i) மற்றும் 79 ஆம் பந்தியின் பிரகாரம், முதலீட்டு ஆதனத்திலிருந்தான வருமானம் வெளிப்படுத்தப்பட்டிருக்காததுடன் சபையானது பெறுமானத்தேய்வு முறை, பயன்பாட்டு காலம் அல்லது பெறுமானத்தேய்வு வீதம், மொத்த முற்கொண்டுவரும் தொகை மற்றும் ஆரம்ப மற்றும் இறுதி திரண்ட பெறுமானத்தேய்வு மற்றும் குறைபாட்டுத் தொகை என்பன தொடர்பில் முறையாக வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஓ) நிதி முதலீடுகள் மீதான இலங்கை நிதி அறிக்கையிடல் நியமத்தின் (SLFRS 09) 5.5 ஆம் பிரிவுக்கு முரணாக, கழிவகற்றல் கடன்பட்டோர் மற்றும் ஏனைய

கட்டுப்பட்டோருக்கு குறைபாட்டிற்கான ஏற்பாடு எதிர்பார்க்கப்பட்ட கடன் நட்டங்களை இனங்காணாமல் நிலையான வீதத்தின் அடிப்படையில் செய்யப்பட்டிருந்தது.

(ஒள) நிதி முதலீடுகள் மீதான இலங்கை நிதி அறிக்கையிடல் நியமத்தின் (SLFRS 16) 53 ஆம் பிரிவின் பிரகாரம், குத்தகை பொறுப்புகள் மீதான வட்டி செலவினம், குத்தகைக்கான மொத்த காசு வெளிப்பாய்ச்சல், சுட்டிக்காட்டப்படுகின்ற சொத்துக்களின் வகுதிகளால் அறிக்கையிடல் காலத்தின் இறுதியில் பயன்படுத்திய சொத்துக்களின் சரியான தொகை முற்கொண்டுவரல், போன்ற சம்பந்தப்பட்ட வெளிப்படுத்தல் தேவைகள் என்பன மீளாய்வாண்டு இறுதியிலுள்ளவாறு ரூபா 599.5 மில்லியன் புத்தக பெறுமதியில் இறையில் ஆதன காணியின் வழக்கில் தெளிவாக்கல் செய்யப்பட்டிருக்கவில்லை.

1.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

(அ) 2015 ஆண்டின் கணிப்பீட்டுச் சபையின் போது குருநாகல் பிராந்திய அலுவலகத்தில் 16 நீர் வழங்கல் திட்டங்கள் தொடர்பில் ரூபா 65,852,393 கூட்டுத் தொகையான நிலையான சொத்துக்கள் நீண்ட காலமாக பயன்படுத்த முடியாத நிலையில் நிலையான சொத்துக்களில் இருக்கின்றன. எவ்வாறாயினும், கணக்கேடுகளிலிருந்து அவற்றினை அகற்றுவதற்கு முறையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டது. மேலும், கணக்காய்வு மூலம் செய்யப்பட்ட கணிப்பீடுகளின் பிரகாரம், ரூபா 40,605,148 பெறுமதியான 42 பெறுமானத் தேய்விடக்கூடிய விடயங்களிற்காக மீளாய்வாண்டின் பொதான பெறுமானத் தேய்விற்கான ஏற்பாடுகளாக ரூபா 851,398 ஆன தொகை செய்யப்பட்டிருந்தமை வெளிப்பட்டது.

(ஆ) 2028 ஆம் ஆண்டின் போரு செலுத்தப்பட்ட ரூபா 133,867,477 தொகையான சிக்கன சேவைக் கட்டணங்கள் (ESC) மீளாய்வாண்டிற்கான உள்ளபடியான வருமான வரிச் செலவினமாக கருதும் நோக்கில் விரிவான வருமான வரி கணப்பீடு செய்யாமல் ஆண்டின் திரண்ட வருமான கூற்றில் வரிச் செலவினமாக தவறாக இனங்காணப்பட்டிருந்தது.

(இ) 2016/2017 வரி மதிப்பீட்டு ஆண்டிற்கான சிக்கன செவைக் கட்டணம் 2016 ஏப்ரல் 01 இலிருந்து 0.5 சதவீத்திற்கு வீதங்கள் திருத்தப்பட்டிருந்த போதிலும் 0.25 சதவீத அடிப்படையில் செலுத்தப்பட்டிருந்தது. இதன் விளைவால், வரி மதிப்பீடு தண்டப்பணம் உள்ளடங்கலாக ரூபா 128.76

மில்லியன் உள்நாட்டு இறைவரி திணைக்களத்தால் விதிக்கப்பட்டிருந்தது. சபையின் பதிவேடுகளின் பிரகாரம், வீத மாற்றங்கள் காரணமாக (தண்டப் பணம் உள்ளடங்கலாக) சபையால் ரூபா 66.37 மில்லியன் செலுத்தப்பட வேண்டியிருந்தது. எவ்வாறாயினும், கணக்கேடுகளில் செலுத்த வேண்டிய மிகுதி வரிக்காக எவ்வித ஏற்பாடுகளும் செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஈ) அம்பாறை, யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, சப்ரகமுவ மற்றும் வவுனியா பிராந்தியங்களில் பன்னிரண்டு (12) கிரய நிலையங்கள் தொடர்பில் ரூபா 454,636,398 கூட்டு மொத்த பெறுமதியான நிலையான சொத்துக்கள் பௌதீக ரீதியில் இல்லாமையால் மெய்மையாய்வு செய்யமுடியவில்லை. எவ்வாறாயினும், கணக்கேடுகளிலிருந்து அவற்றினை அகற்றுவதற்கு நடவடிக்கைகள் எடுக்காமல் மீளாய்வாண்டின் போது பெறுமானத் தேய்விற்காக ரூபா 17,171,243 ஆன ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

(உ) அம்பாறை, யாழ்ப்பாணம் மற்றும் மட்டக்களப்பு பிராந்திய அலுவலகங்களின் பௌதீக மெய்மையாய்வு அறிக்கையின் பிரகாரம், ஏழு கிரய நிலையங்கள் தொடர்பில் ரூபா 20,829,745 கூட்டுத் தொகையான கட்டிட உட்கட்டமைப்பு, பொறி மற்றும் உபகரணங்கள், நடமாடும் உபகரணங்கள், கட்டிட இறையில் ஆதனம், மொத்த தண்ணீர் மீற்றர்கள் என்பன சேதமடைந்திருந்ததுடன் அவற்றினை பழுதடைந்திருந்தவற்றிலிருந்து அகற்றப்பட்டிருந்தது என அவதானிக்கப்பட்டது, எவ்வாறாயினும், எவ்வித நடவடிக்கைகளும் எடுக்காமல், மீளாய்வாண்டின் போது பெறுமானத்தேய்விற்காக ரூபா 616,308 ஆன ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

(ஊ) மட்டக்களப்பு, அம்பாறை, வவுனியா மற்றும் கிழக்குப் பிராந்தியங்களில் பௌதீக ரீதியாக இருந்த காணி இறையில் ஆதனம், உட்கட்டமைப்பு, கட்டிட இறையில் ஆதனம், கட்டமைப்பு போன்ற 197 நிலையான சொத்து விடயங்கள் நிலையான சொத்தப் பதிவேடு மற்றும் சபையின் கணக்கேடுகளில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது. கணக்காய்வு மூலம் செய்யப்பட்ட கணிப்பீடுகளின் பிரகாரம், ரூபா 4,385,262,876 பெறுமதியான மேற்குறித்த 196 விடயங்களில் 74 விடயங்களிற்காக ரூபா 102,843,910 ஆன பெறுமானத்தேய்விற்கான ஏற்பாடு செய்யப்பட்டிருக்கவில்லை. எனவே, மீளாய்வாண்டிற்கான இலாபம் அதே தொகையால் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது. மேலும், வவுனியா பிராந்தியத்திற்கு உடமையான ஆறு (06) காணிகளின் பெறுமதி மற்றும் மன்னார் பிராந்தியத்திற்கு உடமையான பத்து (10) காணிகள் என்பன நிலையான சொத்துப் பதிவேடுகளில் சொத்துக்களாக பதியப்பட்டிருந்த போதிலும் கணக்கேடுகளில் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(எ) மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு புதிய இணைப்பு கடன்பட்டோர் உள்ளடங்கலாக வியாபார கடன்பட்டோர் மீதி ரூபா 8,213,888,162 ஆக இருந்தன. எவ்வாறாயினும், ரூபா 7,978,854,614 தொகையான கடன்பட்டோர்களிற்காக (புதிய இணைப்பு கடன்பட்டோர் உள்ளடங்க) மாத்திரம் கடன்தீர்த்தலிற்கான ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. எனவே, ரூபா 235,033,548 கூட்டுத் தொகையான அந்த கடன்பட்டோருக்காக எவ்வித ஏற்பாடுகளும் செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஏ) செயற்திட்டங்களிற்காக ஒப்பந்தகாரர்களிற்கு பெறுமதி சேர் வரியாக சபையால் செலுத்தப்பட்ட ரூபா 12,430,354 தொகை, அவை சபையின் வெளியீட்டு வற் இற்கு எதிராக ஏற்கனவே கோரப்பட்டிருந்த போதிலும் அவற்றினை பெறவேண்டிய வற் ஆக கணக்கிடுவதற்கு பதிலாக நடைபெறும் வேலையாக தவறாக இனங்காணப்பட்டிருந்தது. எனவே, நடைபெறும் வேலைகளின் மீதி அதிகரித்துக் காட்டப்பட்டிருந்ததுடன் பெறவேண்டிய வற் நிதிக்கூற்றுக்களில் அதே தொகையால் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது.

(ஐ) பெறப்பட்ட தகவல்களின் பிரகாரம், ரூபா 5,246,945,547 தொகையான நாற்பத்தி நான்கு (44) பூர்த்தியாக்கப்பட்டு பரீட்சித்து ஒப்பட்டக்கப்பட்ட நீர் வழங்கல் மற்றும் புனரமைப்பு செயற்திட்டங்களின் கிரயங்கள் மூலதனமாக்கப்படாமல் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நடைபெறும் வேலையில் இருந்தது.

(ஒ) மீள்சுழற்சி வேலைகளிற்காக பெறப்பட்ட முற்பணங்களில், களுத்துறை பிராந்தியம், கேகாலை மற்றும் மேல் மத்திய பிராந்தியத்திலுள்ள 06 செயற்திட்டங்கள் தொடர்பில் ரூபா 13,447,905 ஆன தொகை மற்றும் பிராந்திய ஆதார நிலையங்கள் (மத்திய) தொடர்பில் ரூபா 3,997,933 ஆன மீள்சுழற்சி நிலத்தடி நீர் வேலைகள் என்பன மீளாய்வாண்டில் பூர்த்தியாக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், 2021 ஏப்ரல் 30 வரையும் உரிய வருமானக் கணக்கிற்கு எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஓ) சபையானது 2017, 2018 மற்றும் 2019 ஆம் அண்டுகளில் நிலவியமை போல 2019 மற்றும் 2020 ஆண்டுகளின் நிதிக்கூற்றுக்களில் முன்னைய ஆண்டு சீராக்கல் செய்திருந்தது. இதன் விளைவால், 2019 ஆண்டு இறுதியிலுள்ளவாறான நிறுத்திவைத்த நட்டம் ரூபா 192.12 மில்லியானல் வீழ்ச்சியடைந்திருந்தது. எனவே, அடுத்துவரும் ஆண்டில் மீளாய்வாண்டிற்கான இலாபத்திற்கு சீராக்கல் செய்வதற்கான சாத்தியம் கணக்காய்வில் ஐயத்திற்கிடமாக உள்ளது. மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டில் செய்யப்பட்ட முன்னைய ஆண்டு சீராக்கலின் விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

(ஒள) ஏழு (07) செயற்திட்டங்கள் தொடர்பில் நடைபெறும் வேலைகளின் கீழ் காட்டப்பட்ட ரூபா 198,729,791 கூட்டுத் தொகையான மீதிகள் நிதிக் கூற்றுக்களில் அவசியமான சீராக்கல்கள் செய்யும் நோக்கில் புலனாய்வு செய்யப்படாமல் பதினொரு ஆண்டுகளிற்கு மேலாக மாற்றமடையாது இருந்தது.

(க) நலன்புரி நிதியத்திலுள்ள ரூபா 8,803,047 தொகை எவ்வித காரணங்களும் இல்லாமல் மூலதன அறவீட்டுக் கட்டணங்களின் வருமான வளங்களிற்கு எதிராக சீராக்கப்பட்டிருந்தது எனவே, மீளாய்வாண்டிற்கான தேறிய இலாபம் விரிவான வருமானக் கூற்றில் அதே தொகையால் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது என அவதானிக்கப்பட்டது.

(கா) சேமிப்பு கணக்கு இலக்கம் 200934 இல் இருந்த மீதி ரூபா 54,980,079 ஆக இருந்தது. எவ்வாறாயினும், நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், இது ரூபா 53,065,335 ஆக இருந்தது. எனவே, நடைமுறைச் சொத்துக்கள் மற்றும் வட்டி வருமானம் ரூபா 1,914,744 ஆல் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது.

(கி) ஏனைய கடன்பட்டோர், முற்பணங்கள், வியாபார கடன்கொடுத்தோர், கோரப்படாத சம்பளங்கள் போன்றன உள்ளடங்கலாக ரூபா 149,681,812 மற்றும் ரூபா 71,927,749 தொகையான முறையே சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் நிலுவையாக இருக்கின்ற மீதிகளில் அத்தகைய மீதிகளை தெளிவாக்குவதற்கு நடவடிக்கைகள் எடுக்காமல் செயற்பாடற்ற சொத்துக்கள் மற்றும் செயற்பாடற்ற பொறுப்புகளாக இனங்காணப்பட்டிருந்தது. மேலும், செயற்பாடற்ற சொத்துக்களாக மேற்குறிப்பிட்ட மீதியிலுள்ள ரூபா 95,796,513 ஆன இனங்காணப்படாத முன்னைய ஆண்டு மீதி, நான்கு பிராந்தியங்களிலுள்ள ரூபா 22,007,307 ஆன இருப்பு மீதி மற்றும் ரூபா 5,906,882 ஆன வங்கி மீதி என்பன புலனாய்வு செய்து தீர்ப்பனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படாமல் இருந்தது.

(கீ) ஐந்து ஆண்டுகளிற்கு முன்பு களணி பிராந்தியதிலுள்ள ரூபா 2,549,788 தொகையான களவுபோன இருப்புகள் மற்றும் மேல் மத்திய பிராந்திய ஆதார நிலைய (கொகுவல) ரூபா 1,211,323 ஆன இருப்புக் குறைவு 2020 திசெம்பர் 31 வரையும் பொருளிப்பு பதிவேட்டில் உள்ளடக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், உரிய உத்தியோகத்தர்களிடமிருந்து அத்தகைய நட்டங்களை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(கு) கண்டி வடக்கு பிராந்திய ஆதார நிலையத்தின் கீழ் மாத்தளை பிராந்திய அலுவலகத்திற்கு பொருத்தமான தகைமையுடைய களஞ்சியக் காப்பாளரை

ஒதுக்குதல் மற்றும் இருப்பு பெறுதல் மற்றும் வழங்குதல் என்பவற்றினை செய்யத் தவறியமையால் முறைப்படி பதியப்பட்டிருக்கவில்லை. இதன்விளைவால், மீளாய்வாண்டின் இறுதியில் ரூபா 41,739,680 ஆன இருப்புக் குறைவு பதியப்பட்டிருந்தது. இதன் விளைவால, ஆண்டின் தொடக்கத்திலுள்ள திரண்ட நட்டம் ரூபா 26,604,682 ஆல் குறைத்துக் காட்டப்பட்டிருந்ததுடன் ஆண்டிற்கான இலாபம் ரூபா 15,134,998 ஆல் அதிகரித்துக் காட்டப்பட்டிரந்ததுடன் இறுதி இருப்புக்கள் ரூபா 41,739,680 ஆல் அதிகரித்தக் காட்டப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், இருப்பு குறைவிற்கான காரணங்களை இனங்காண்பதற்கும் அவற்றினை கணக்கேடுகளிலிருந்த அகற்றுவதற்கும் 2021 ஏப்ரல் 01 வரையும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(கூ) 2020 யூலை 02 இல் எடுக்கப்பட்ட அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம், தேசிய சேமிப்பு வங்கயிலிருந்து பெறப்பட்ட ரூபா 30 பில்லியன் கடன் மீதான வட்டிச் செலவினம் பொதுத் திறைசேரியால் செய்யப்பட்டுள்ளதுடன் சபையானது அந்த கடன் மீதான வட்டியாக ரூபா 699,702,314 மேற்கொண்டிருந்தது. எவ்வாறாயினும், மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்களில் திறைசேரியிடமிருந்து பெறவேண்டியவையாக ரூபா 659,277,279 மாத்திரம் அடையாளம் காணப்பட்டிருந்தது.

(கே) நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட இரண்டு (02) வெளிநாட்டு நிதியளிக்கப்பட்ட செயற்திட்டங்களின் நிலுவையாகவிருக்கின்ற கடன் மீதிகள் தொடர்பில் வங்கியிடமிருந்து பெறப்பட்ட உறுதிப்படுத்தல்களுடன் ஒப்பிடும் போது நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் நிலுவையாகவிருக்கின்ற கடன் மீதிகள் ரூபா 1,723,847,989 ஆல் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(கே) ஒன்பது (09) வெளிநாட்டு நிதியளிக்கப்பட்ட செயற்திட்டங்களின் கடன் மீதான அட்டுறு வட்டி தொடர்பில் வங்கியிடமிருந்து பெறப்பட்ட உறுதிப்படுத்தல்களுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டு இறுதியில் ரூபா 10,254,724 ஆன குறைவான ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

(கை) 2019 திசெம்பர் மாதத்திற்கான கோட்டை பிராந்திய (பத்திரமுல்லை) மீட்டர் விற்பனை வருமானம் ரூபா 59,129,751 ஆக தொகை தவறுதலாக மீளாய்வாண்டிற்கான வருமானமாக கருதப்பட்டிருந்ததுடன் ஆண்டிற்கான இலாபம் அதே தொகையால் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது. .

(கொ) மாத்தறை கட்டம் (iv) செய்திட்டதின் சுற்றாடல் மதிப்பீடாக 2016 ஆம் ஆண்டின் பொது செலுத்தப்பட்ட ரூபா 2,074,821 ஆன தொகை மற்றும் நில்வல ஆற்றுக்கு குறுக்கே உப்புநீர் தடை நிர்மாணிப்பதற்கு ஆலோசனை

கட்டணமாக 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளின் போது செலுத்தப்பட்ட ரூபா 9,590,000 என்பன பிற்போட்ட பொறுப்புக்களிலிருந்து கழிக்கப்பட்டிருந்ததுடன் உரிய செயற்திட்டங்களின் நடைபெறும் வேலையாக இனங்காண்பதற்கு அல்லது மீண்டெழும் செலவினமாக திரண்ட நட்டத்திற்கு சீராக்கப்படுவதற்குப் பதிலாக நடைமுறையல்லாப் பொறுப்பின் கீழ் காட்டப்பட்டிருந்தது.

(கோ) ரூபா 81,502,527 தொகையான புதிய இணைப்பகள் தொடர்பில் மீளளிக்க வேண்டிய மற்றும் மீளளிக்க தேவையற்ற வைப்புக்களின் மீதி எந்தவொரு சபை அனுமதியும் இல்லாமல் ஆண்டிற்கான வருமானத்திற்கு மாற்றப்பட்டிருந்தது. மேலும், ஒரு ஆண்டில் மீளளிக்க வேண்டிய மற்றும் மீளளிக்க தேவையற்ற வைப்புக்களிற்கு சொந்தமான ரூபா 42,600,938 இற்கு சமமான தொகை உள்ளடக்கப்பட்டிருந்தத என அவதானிக்கப்பட்டது.

(கௌ) ரூபா 16,731,847 தொகையான இருப்பு விடயங்களின் பெறுமதி நிதிக் கூற்றுக்களில் பொருளிருப்பாக இனங்காணப்பட்டிருந்த இருப்புக்கள் பௌதீக ரீதியாக மெய்மையாய்வு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ச) மொனறாகலை பிராந்தியம் மற்றும் தலைமை அலுவலகத்தில் மீளாய்வாண்டிற்கான மற்றும் முன்னைய ஆண்டிற்கான வாடிக்கையாளர்களிடமிருந்தான வழங்கல்கள் மீதான பெறுமதி சேர் வரியாக சாட்டுதல் செய்யப்பட்டிருந்த முறையே ரூபா 2,327,771 மற்றும் ரூபா 99,121 ஆன தொகை செலுத்த வேண்டியவ ட்டியாக காட்டுவதற்கப் பதிலாக தவறாக வருமானமாக கணக்கிடப்பட்டிருந்தது. எனவே, மீளாய்வாண்டிற்கான இலாபம் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்ததுடன் ஆண்டுத் தொடக்கத்திலுள்ள திரண்ட நட்டம் அதே தொகையால் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது.

1.2.3 இணக்கம் செய்யப்படாத மீதிகள்

(அ) சபையின் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட மீதிக்கும் வர்த்தகப் பிரிவால் சமர்ப்பிக்கப்பட்ட காலப் பகுப்பாய்வு பட்டியலில் காட்டப்பட்ட மீதிக்கும் இடையில் முறையே வியாபார கடன்பட்டோரில் ரூபா 131,472,986 உம் புதிய இணைப்பு கடன்பட்டோரில் ரூபா 103,560,564 உமான விதியாசம் அவதானிக்கப்பட்டது. எவ்வாறாயினும், 13 பிராந்தியங்கள் தொடர்பில் ரூபா 3,149,283,146 தொகையான வியாபார கடன்பட்டோர் மீளாய்வாண்டு இறுதியில் மாத்திரம் இணக்கம் செய்யப்பட்டிருந்தது. மேற்குறித்த இணக்கக்கூற்றில், ரூபா 96,700,258 மற்றும் ரூபா 39,773,258 கூட்டுத் தொகையான முறையே ஆரம்ப மீதி வித்தியாசம் மற்றும் இனங்காணப்படாத

வித்தியாசம் என்பன முறைப்படி புலனாய்வு செய்யப்பட்டு சரிசெய்யப்பட்டிருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டது.

(ஆ) வர்த்தக பிரிவு அறிக்கை மற்றும் நிதிக்கூற்றில் காட்டப்பட்ட மீட்டர் விற்பனை மற்றும் மொத்த விற்பனைகள் என்பவற்றிற்கு இடையில் ரூபா 530.38 மில்லியன் இணக்கம் செய்யப்படாத வித்தியாசங்கள் அவதானிக்கப்பட்டது. மேலும், நிதிக்கூற்றுக்கள் பிரகாரம் புதிய இணைப்பு வருமானம் மற்றும் வருடாந்த வற் அறிக்கையில் வெளிப்படுத்தப்பட்ட வருமானம் என்பவற்றிற்கு இடையில் ரூபா 383.42 மில்லியன் இணக்கம் செய்யப்படாத வித்தியாசங்கள் அவதானிக்கப்பட்டது.

(இ) சபையின் நிதிக்கூற்றுக்களை உரிய செயற்திட்டங்களின் தனிப்பட்ட நிதிக்கூற்றுக்களுடன் ஒப்பிடும் பொது கண்டி கழிவு நீர் முகாமைத்துவ செயற்திட்டம், தெதுறு ஓயா நீர் வழங்கல் செயற்திட்டம் மற்றும் உலர் வலய நகர நீர் மற்றும் சுகாதாரச் செயற்திட்டம் என்பவற்றின் வெளிநாட்டு மாணியங்களில் ரூபா 19,342.19 மில்லியன் கூட்டுத் தொகையான வித்தியாசம் அவதானிக்கப்பட்டது. மேற்குறித்த வித்தியாசங்களில், கண்டி கழிவு நீர் முகாமைத்துவ செயற்திட்டத்தில் ரூபா 10,756.71 மில்லியன் வித்தியாசத்திற்காக மாத்திரமே இணக்கக்கூற்று தயாரிக்கப்பட்டிருந்ததுடன் ரூபா 97.08 மில்லியன் பெறுமதியான கொடுக்கல் வாங்கல்கள் அந்த செயற்திட்டம் தொடர்பான சபையின் கணக்கு புத்தகங்களில் பதியப்பட்டிருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டது.

(ஈ) மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வு தெரிவுசெவ்வையின் பிரகாரம், சபையின் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட நடைபெறும் வேலை மீதி மற்றும் ஐந்து (05) வெளிநாட்டு நிதியளிக்கப்பட்ட செயற்திட்டங்களின் தனிப்பட்ட நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட நேரொத்த மீதிகளிற்கும் இடையில் ரூபா 2,346.26 மில்லியன் கூட்டுத் தொகையான வித்தியாசம் அவதானிக்கப்பட்டது. மேலும், தயாரிக்கப்பட்ட இணக்கக்கூற்றினை ஆய்வு செய்யும் போது தம்புதேகம நீர் வழங்கல் செயற்திட்டம் மற்றும் கொழும்பு பெரும்பாக நீர் மற்றும் கழிவு நீர் முகாமைத்துவ முன்னேற்ற முதலீட்டு நிகழ்ச்சிதிட்டம் (செயற்திட்டம் iii) தெடர்பில் ரூபா 1,274.81 மில்லியன் பெறுமதியான கொடுக்கல் வாங்கல்கள் சபையினுடைய நிதிக்கூற்றுக்களில் பதியப்பட்டிருக்கவில்லை என கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது.

(உ) பன்னிரண்டு (12) வங்கிக் கணக்குகள் தொடர்பில் 2008 முதல் 2019 வரையான வங்கி கணக்கிணக்கக் கூற்றில் காட்டப்பட்ட ரூபா 7,250,860 மற்றும் ரூபா 33,929,517 தொகையான முறையே இனங்காணப்படாத வரவு மீதிகள் மற்றும் செலவு மீதிகள் தெளிவாக்கப்பட்டிருக்கவில்லை.

(ஊ) 2015 யூலை 08 ஆந்திகதிய PE/WS/NWSDB/GEN/2015 ஆம் இலக்க பொது முயற்சிகள் திணைக்கள பணப்பாளர் நாயகத்தால் வழங்கப்பட்ட நெறிப்படுத்தல்களின் அடிப்படை மற்றும் 2016 பெப்ரவரி 04 ஆந் திகதியில் எடுக்கப்பட்ட அமைச்சரவைத் தீர்மானம் என்பவற்றின் பிரகாரம் ரூபா 88,531,428,611 தொகையான நிலுவையாகவிருக்கின்ற கடன் மீதி 2015 ஆம் ஆண்டிலிருந்து அரசாங்க உரிமை மூலதன கணக்கிற்கு மாற்றப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், பொதுத் திறைசேரி பதிவெடுகளின் பிரகாரம், ரூபா 62,415,763,525 இற்கு சமமான தொகை சபைக்கு மூலதன பங்களிப்பாக இனங்காணப்பட்டிருந்தது. எனவே, வெளிநாட்டு கடனாக சபையால் செலுத்த வெண்டியிருந்த ரூபா 26,115,665,086 இற்கு சமமான தொகை எவ்தவொரு அனுமதியும் இல்லாமல் அரசாங்க உரிமை மூலதனத்திற்கு மாற்றப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

1.2.4 கணக்காய்விற்கான சான்றுகளின்மை

கீழே காட்டப்பட்ட ஒவ்வொரு விடயங்களிற்கும் எதிரே குறிப்பிடப்பட்ட சான்றுகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

	விடயம்	பெறுமதி	கிடைக்கப்பெற்றிராத சான்றுகள்
		ரூபா	
(அ)	புதிய இணைப்பு கடன்பட்டோர்	177,496,727	விரிவான பட்டியல்கள் மற்றும் காலப்பகுப்பாய்வு
(ஆ)	ஏனைய கடன்பட்டோர்	51,690,693	விரிவான பட்டியல்கள்
(இ)	நகராத மற்றும் மெதுவாக நகரும் இருப்பக்கள்	1,139,127,273	காலப்பகுப்பாய்வு
(ஈ)	வியாபாரக் கடன்பட்டோர்	34,727,558	விரிவான பட்டியல்கள்
(உ)	வரிச் செலவினம்	133,867,482	ஆண்டிற்கான விரிவான வருமான வரிக் கணிப்பீடு
(ஊ)	வேறு நிறுவனங்களிலுள்ள குறுகியகால வைப்புக்கள்	12,779,730	விரிவான பட்டியல்கள்
(எ)	வீடமைப்பு கடனிற்கான HDFC முதலீடுகள்	441,068	வங்கி கணக்கிணக்கங்கள்
(ஏ)	உள்நாட்டு வங்கி கடன்கள்	20,713,132	வங்கி உறுதிப்படுத்தல்கள்
(ஐ)	ஒப்பந்தகாரர் பிடிகாசு	67,376,711	விரிவான பட்டியல்கள்

(ஒ)	ஒப்பந்தகாரருக்கான முற்பணம்	104,564,741	விரிவான பட்டியல்கள்
(ஓ)	புனரமைப்பு வரி	1,757,515	விரிவான வருமான வரிக் கணிப்பீடு, பட்டியல்கள்
(ஔ)	அரசாங்க திணைக்களத்திடம் இருந்து கையெற்கப்பட்ட சொத்துக்கள்	185,480,387	கையேற்கப்பட்ட விரிவான சொத்துப் பட்டியல்
(க)	அட்டுறு செலவினம்	110,578,062	விரிவான அட்டுறு செலவினப் பட்டியல்கள்
(கா)	ஒப்பந்தகாரருக்கான முற்பணம் (விசேட செயற்திட்டங்கள்)	11,474,470	விரிவான பட்டியல்கள்

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க நான் கணக்காய்வை மேற்கொண்டேன். இக்கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் இந்த அறிக்கையின் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் என்ற பகுதியில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதனை முன்னிட்டு என்னால் பெற்றுக் கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் போதியளவானதும் பொருத்தமானதும் என்பது எனது நம்பிக்கையாகும்.

1.3 சபையின் 2020 ஆம் ஆண்டிற்கான ஆண்டறிக்கையில் உள்ளடக்கப்பட்ட ஏனைய தகவல்கள்

ஏனைய தகவல்கள் சபையின் 2020 ஆம் ஆண்டு அறிக்கையில் சேர்க்கப்பட்டுள்ள தகவல்களை உள்ளடக்கியது. ஆனால் இக்கணக்காய்வு அறிக்கைத் திகதிக்குப் பின்னர் எனக்கு கிடைக்க பெறும் என எதிர்பார்க்கின்ற நிதிக்கூற்றுக்கள் மற்றும் எனது கணக்காய்வு அறிக்கையில் உள்ளடக்கப்படவில்லை. ஏனைய தகவல்களுக்கு முகாமைத்துவம் பொறுப்பாக இருத்தல் வேண்டும்.

நிதிக்கூற்றுக்கள் மீதான எனது அபிப்பிராயம் ஏனைய தகவல்களை உள்ளடக்கியிருக்காததுடன் நான் அவை மீது எவ்வகையிலும் சான்றுப்படுத்தும் முடிவுரையினை வெளிப்படுத்தவில்லை.

நிதிக்கூற்றுக்கள் மீதான எனது கணக்காய்வு தொடர்பாக, எனது பொறுப்பானது மேலே இனங்காணப்பட்ட ஏனைய தகவல்களை பெற்றுக் கொள்ளக்கூடியதாக இருக்கையில் வாசித்தல் மற்றும் அவ்வாறு செய்யும் போது ஏனைய தகவல்களை நிதிக்கூற்றுக்களுடன் அல்லது கணக்காய்வின் போது ஏனைய வகையில் பெற்றுக் கொள்ளப்பட்ட எனது அறிவின் பிரகாரம் பொருண்மையாக பொருத்தமற்றுள்ளதா என்பதனை கவனித்துப் பார்ப்பதாகும்.

இக்கணக்காய்வு அறிக்கைத் திகதிக்கு முன்னர் நான் பெற்றுக் கொண்ட ஏனைய தகவல்களின் அடிப்படையில் மற்றும் என்னால் மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுகளை அடிப்படையாகக் கொண்டு இந்த ஏனைய தகவல்கள் பொருண்மையாக பிழையாகக் காட்டப்பட்டுள்ளது என நான் முடிவு காண்பதானது அந்த விடயங்களை என்னால் அறிக்கையிடுவது அத்தியவாசியமானது என்பதனாலாகும். இது சம்பந்தமாக நான் அறிக்கையிடுவதற்கு எதுவும் இல்லை

1.4 நிதிக்கூற்றுக்கள் மீது முகாமைத்துவத்தினதும் நிருவகிக்கின்ற தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்தும் சரியாகவும் நியாயமாவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூய பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்ற நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு இயலுமான வகையில் தேவையான உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தீர்மானித்தலும் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது சபை தொடர்ந்து இயங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான இயலுமையினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமாக வெளிப்படுத்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாக உள்ளதுடன் சபை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்றுவழி இல்லாதுவிட்டால் செயற்பாடுகளை நிறுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்து செயற்படும் கணக்கீட்டு அடிப்படையினை பயன்படுத்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

சபையின் நிதி அறிக்கையிடல் நடைமுறை சம்பந்தமான மேற்பார்வை நிருவகிக்கின்ற தரப்பினர்களால் வகிக்கப்படுகின்றது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) உப பிரிவின் பிரகாரம் சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சபையின் அனைத்து வருமானங்கள், செலவுகள், சொத்துக்கள், பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறைப்படியாக ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

1.5 கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்றவை என்பதற்கு நியாயமான

உறுதிப்பாட்டை வழங்குவதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்கின்ற கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையை வழங்குவதும் எனது குறிக்கோளாகும். நியாயமான உறுதிப்பாடானது உயர் மட்டத்திலான ஒரு உறுதிப்பாடாகக் காணப்படுகின்ற போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எவ்வேளையிலும் பொருண்மையான பிறழ் கூற்றுக்களை வெளிப்படுத்தும் என்பதற்கான ஒரு உத்தரவாதமாக இருக்கமாட்டாது. மோசடிகள் மற்றும் தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கத்தை ஏற்படுத்துவதன் காரணமாக பொருண்மையான பிறழ்கூற்றுக்கள் ஏற்படக்கூடியதுடன் இந்நிதிக் கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துபவர்களால் எடுக்கப்படுகின்ற பொருளாதார தீர்மானங்கள் தொடர்பாக தாக்கத்தை ஏற்படுத்தலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம், கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது தொழில்சார் தீர்ப்புக்களை மேற்கொண்டு தொழில்சார் ஐயப்பாட்டினை பேணுகிறேன். மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பதற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளல். தவறாகக் காட்டுவது காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் ஏற்படும் ஆபத்தின் விளைவானது அதிகமாகும்.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான அறிவு பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்தப்படுகின்ற கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தத்தன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை மற்றும் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புபட்ட வெளிப்படுத்தல்களும் மதிப்பீடு செய்யப்பட்டது.

- சம்பவங்கள் அல்லது நிலைமைகளின் காரணமாக சபையின் தொடர்ச்சியான நிலைத்திருத்தல் மீது பொருண்மையான நிச்சயமற்றதன்மை காணப்படுகின்றதா

என்பது சம்பந்தமாக பெற்றுக் கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கீட்டிற்காக நிறுவனத்தின் தொடர்ச்சியான நிலைத்திருத்தல் மீதான அடிப்படையினை பயன்படுத்துதலின் பொருத்ததன் தன்மை தீர்மானிக்கப்பட்டது. போதியளவான நிச்சயமற்றதன்மை காணப்படுகின்றது என நான் முடிவு செய்தால் நிதிக்கூற்றுக்களில் அது சம்பந்தமான வெளிப்படுத்தல்களுக்கு எனது கணக்காய்வு அறிக்கையில் கவனம் செலுத்தப்பட வேண்டியுள்ளதுடன் அந்த வெளிப்படுத்தல்கள் போதியவையல்லாததாக எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. அபிப்பிராயம் திருத்தப்படுதல் வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால சம்பவங்கள் அல்லது நிலைமைகள் நிலைமைகள் சபையின் தொடர்ச்சியாக நிலைத்திருத்தலை முடிவுறுத்த நேரிடலாம்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடங்கல்களுக்காக அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளது எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

எனது கணக்காய்வின் போது இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு காண்புகள், மற்றும் உள்ளடக்கப்பாடுகளிலுள்ள ஏனைய விடயங்களிற்கிடையேயான ஏதாவது பலவீனங்கள் தொடர்பாக நிருவகிக்கப்படுகின்ற தரப்பினர்களுக்குத் தெரியப்படுத்துகின்றேன்.

2. ஏனைய சட்ட மற்றும் ஒழுங்குபடுத்துதல் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2.1 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தில் பின்வரும் தேவைப்பாடுகள் சம்பந்தமாக விசேட ஏற்பாடுகள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

2.1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை பந்தியில் குறிப்பிடப்பட்ட விடயங்களைத் தவிர, 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 12(அ) பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் கணக்காய்விற்குத் தேவையான அனைத்து தகவல்களும் வெளிப்படுத்தல்களும் என்னால் பெற்றுக் கொள்ளப்பட்டதுடன் எனது பரிசோதனையிலிருந்து தோன்றும் வகையில் முறையான நிதி அறிக்கைகளை சபை பேணி வந்திருந்தது.

2.1.2 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருக்கின்றன.

2.1.3 2.1.3 1.2.1(I), 1.2.1(IV), 1.2.1(VI), 1.2.1(VIII), 1.2.1(IX), 1.2.1(X), 1.2.2(I), 1.2.2(II), 1.2.2(VII), 1.2.2(IX), 1.2.2(XI), 1.2.2(XII), 1.2.2(XV) , 1.2.3(I), 1.2.3(II), 1.2.3(III), 1.2.3(IV), 1.2.3(V), 1.2.3(VI) மற்றும் 1.2.4. ஆம் பந்திளை தவிர, 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ)(iv) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டு இறுதி அறிக்கைகளில் என்னால் செய்யப்பட்ட பரிந்துரைகள் அனைத்தையும் உள்ளடக்குகின்றன.

2.1.4 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(i)(ஈ)(iv) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளுக்கு இணங்க முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட சிபார்சுகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

2.2 பின்பற்றப்பட்ட நடைமுறைகள் அடிப்படையில் மற்றும் பெற்றுக் கொள்ளப்பட்ட சான்றுகள் பொருண்மையான விடயங்களுக்கான மட்டுப்பாடுகளுக்குள் காணப்பட்டன. எனினும், வேறு எதுவும் எனது கவனத்திற்கு உட்பட்டிருக்கவில்லை.

2.2.1 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 12(ஈ) பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளுக்கு இணங்க சபையின் அங்கத்தவர்கள் எவருக்கும் சபை சம்பந்தப்பட்ட ஏதேனும் உடன்படிக்கை சம்பந்தமாக நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ வழமையான வணிக செயற்பாடுகளுக்குப் புறம்பாக தொடர்புகள் காணப்படுகின்றமையை குறிப்பிடுதல்.

2.2.2 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 12(ஊ) பிரிவில் குறிப்பிட்ட தேவைப்பாடுகளுக்கு இணங்க சபையின் நிருவாக சபையினால் வழங்கப்பட்ட ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுக்கு இணங்கியொழுகாதமையை குறிப்பிடல்.

சட்டங்கள் / நெறிப்படுத்தல்களிற்கான தொடர்பு	**விபரங்கள்**
(அ) பொதுமுகாமையாளருடைய சுற்றறிக்கைகள்	
(i) 2015 ஆகஸ்ட் 12 இன் நிர்வாகம்/12/2015	இணைப்பு துண்டிக்கப்பட்ட பின்னர் மூன்று மாதங்களிற்குள் நிலுவையாகவிருக்கின்ற கடன்பட்டோரை அறவிடுவதற்கு சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும். எவ்வாறாயினும்,

		ரூபா 50,000 இற்கு மேலான விலைப்பட்டியலுடைய 2,713 இணைப்பு துண்டிக்கப்பட்ட கடன்பட்டோர் தொடர்பில் ரூபா 617,878,548 கூட்டுத் தொகையான நிலுவையாகவிருக்கின்ற கடன்பட்டோரை அறவிடுவதற்கு சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.
	(ii) 2018 செப்தெம்பர் 26 இன் நிர்வாகம்/09/2018 - பிரிவு (02)	5 ஆண்டுகளிற்கு அதிகமாக உத்தியோகபூர்வ விடுதியில் வசிக்கின்ற ஊழியர்களிடமிருந்து சந்தை வாடகைக்கு சமமான மாதாந்த வாடகை அல்லது அவர்களுடைய சம்பளத்திலிருந்து 12.5 சதவீதம் அறவீடு சாட்டுதல் செய்யப்பட வேண்டும். எவ்வாறாயினும், 2019 ஆகஸ்ட் மாதத்திலிருந்து 2020 செத்தெம்பர் வரை பிராந்திய ஆதார நிலையத்தில் (ஊவா) இரண்டு ஊழியர்களிடமிருந்து ரூபா 230,010 தொகை மற்றும் 2019 இலிருந்து 2021 மார்ச் வரை பிராந்திய ஆதார நிலையத்தில் (மத்திய) 19 ஊழியர்களிடமிருந்து ரூபா 4,688,010 தொகையான தண்டப்பண வாடகையை (மிகை அறவீடு உள்ளடங்கிய வாடகை) அவர்கள் 5 ஆண்டுகளிற்கும் அதிகமாக வசித்திருந்த பொதிலும் 2021 ஏப்ரல் 30 வரையும் அறவிடப்பட்டிருக்கவில்லை.
(ஆ)	2006 செப்தெம்பர் 27 ஆந்திகதி 30 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கை	சபையின் ஆட்சேர்ப்பு திட்டம் மற்றும் பதவி உயர்வு நடைமுறைக்காக முகாமைத்துவ செவைகள் திணைக்களத்தின் அனுமதி பெறப்பட்டிருக்கவில்லை.
(இ)	2020 சனவரி 27 ஆந் திகதிய 01/2020 ஆம் இலக்க போது முயற்சிகள் திணைக்களத்தின் சுற்றறிக்கை	
	(i) பிரிவு 1.2	மீளாய்வாண்டின் பெப்ரவரி முதல் மே வரை தலைவரிற்காக இரண்டு வாகனங்கள் ஒதுக்கப்பட்டிருந்தது.

	(ii) பிரிவு 1.4	2020 யூன் முதல் 2021 சனவரி உப தலைவரிற்காக இரண்டு வாகனங்கள் ஒதுக்கப்பட்டிருந்தது.
	(iii) பிரிவு 1.5	தகுதியுடய மாதாந்த எரிபொருள் எல்லை 150 லீட்டர், மாதாந்த எரிபொருள் கட்டுநிதி ரூபா 60,000 இற்கு மேலாக திறைசேரிச் செயலாளரின் சிபார்சினைப் பெற்றுக் கொள்ளாமல் 2020 யூலை 22 இல் எடுக்கப்பட்ட சபைத் தீர்மானத்தின் அடிப்படையில் 2020 சனவரியிலிருந்து சபையின் தலைவர் மற்றும் உப தலைவரிற்காக அனுமதிக்கப்பட்டிருந்தது.
(ஈ)	2015 மே 25 ஆந் திகதிய 01/2015 ஆம் இலக்க போது முயற்சிகள் திணைக்களத்தின் சுற்றறிக்கையின் 3.1.4 ஆம் பிரிவு	2019 சனவரி முதல் 2020 யூலை வரையான காலத்தின் போது பிராந்திய ஆதார நிலையத்தில் (ஊவா) உதவி பொது முகாமையாளரின் எரிபொருள் செலவினமா ரூபா 280,281 ஆன தொகை செலவழிக்கப்பட்டிருந்தது.
(உ)	கம்பஹா அத்தனகல மற்றும் மினுவாங்கொட ஒருங்கிணைந்த நீர் வழங்கல் செயற்திட்டத்தின் வசதியளிப்ப உடன்படிக்கையின் பிரிவு 2, பந்தி 3.1.18.15 மற்றும் எஸ்குரோ உடன்படிக்கையின் 11.1 ஆம் உட்பிரிவு	கைதவிர்க்கப்பட்ட கடன் பெறுகைகளில், அனுமதியில்லாமல் 2019 முதல் 2020 வரையான அண்டின் போது ஒன்பது (09) ஐ.அ.டொலர் கணக்கில் ஐ.அ.டொலர் 140,641,551 ஆன தொகை முதலீடு செய்யப்பட்டிருந்தது.
(ஊ)	2017 பெப்ரவரி 15 ஆந் திகதிய 1/2017 ஆம் இலக்க முகாமைத்துவ கணக்காய்வு சுற்றறிக்கை	வெளிநாடு நிதியளிப்பால் நிதியளிக்கப்படட்ட அபிவிருத்தி செயற்திட்டங்களிற்காக ஒரு உள்ளக கணக்காய்வாளர் மாத்திரம் நியமிக்கப்பட்டிருக்தது.
(எ)	2003 யூன் 02 ஆந் திகதிய PED/12 ஆம் இலக்க போது முயற்சிகள் திணைக்களத்தின் சுற்றறிக்கையின் 8.3.9 ஆம் பிரிவு	மீளாய்வாண்டின் பொது சபையானது 2020 திசெம்பர் 31 அளவில் உரிய அமைச்சிற்கு விடுவிக்கப்பட்டிருந்த பதினேழு (17) ஊழியர்களின் சம்பளங்கள் மற்றும் படிகளாக ரூபா 18.94 மில்லியன் தொகை செலுத்தியிருந்தது. இதன்படி, நீர் வழங்கல் மைச்சு 2015 திசெம்பர் முதல் 2020 திசெம்பர்

		31 வரை சபைக்கு ரூபா 187.39 மில்லியன் மீளளிக்க வெண்டியிருந்தது.
(ஏ)	நிதிப் பிரமாணத்தின் 156(8) ஆம் பிரிவு மற்றும் சபையின் நெறிமுறை குறியீடு 1.12 ஆம் பிரிவு	பண்டாரவளை முகாமையாளர் அலுவலகத்தில் ஒப்பந்த அடிப்படையில் குறைந்த தர ஊழிர்களை ஈடுபடுத்துவதன் மூலம் மீட்டர் வாசிப்பால் ரூபா 706,205 ஆன முறையற்ற இலாபம் உழைக்கப்பட்டிருந்தது.
(ஐ)	2002 இன் 14 ஆம் இலக்க திருத்திய பெறுமதி சேரி வரி அதிகாரச்சட்டம்	
	(i) பிரிவு 22(6) (iv)	ஒரு ஆண்டிற்கு மேலாக 48 விலைப் பட்டியல்களின் ரூபா 2,224,236 தொகையான வெளயீட்டு வற் வரி 2019 இன் இரண்டாவது, மூன்றாவது மற்றும் நான்காவது காலாண்டுகளிற்கான வெளியீட்டு வற் வரியிருந்து கோரப்பட்டிருந்தது.
	(ii) பிரிவு 26(i)	2019 இன் 4 ஆவது காலாண்டிற்கான ரூபா 38,802,349 தொகையான செலுத்த வேண்டிய வற் வரி ஆறு மாதங்கள் தாமதத்தில் செலுத்தப்பட்டதுடன் 2020 ஆம் ஆண்டின் முதல் மூன்று காலாண்டுகளிற்காக வற் அறிக்கைகள் 1 ½ முதல் மூன்று மாத காலம் வரையான கால தாமதத்துடன் உள்நாட்டு இறைவரி திணைக்களத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.
(ஒ)	2019 யூலை 09 ஆந் திகதிய CGIR/2019/3V(INS&Cir) ஆம் இலக்க உள்நாட்டு இறைவரி திணைக்கள சுற்றறிக்கை	கணக்காய்வு தெரிவுச் செவ்வையின் பொது ரூபா 501,513 தொகையான பெறுமதி சேர் வரி செயற்பாடற்ற வழங்குநர்கள் வற் வரிக்கு மீளாய்வாண்டின் பொது செலுத்தப்பட்டிருந்தது.
(ஒ)	2002 இன் 14 ஆம் இலக்க திருத்திய பெறுமதி சேர் வரி அதிகாரச்சட்டத்தின் கீழ் வெளியிடப்பட்ட 2019 நவம்பர் 29 ஆந் திகதிய 2151/52 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமாண அறிவித்தல்	நிலத்தடி நீர் வருமானம், புதிய இணைப்பு வருமானம், மீட்டர் விற்பனைகள், தெஹிவளை, அநுராதபுரம், மற்றும் பொலநறுவை பிராந்தியம் மற்றும் தலைமை அலுவலகத்தின் விசேட செயற்திட்ட பிரிவு மூலம் சனவரி மாதத்தின் பொது பவுசர் வழங்கல் என்பவற்றின் மீது 15 சதவீதத்திற்கு பதிலாக 8 சதவீதம் சாட்டுதல் செய்யப்பட்டிருந்தது. தலைமை அலுவலகத்தின்

மீள்சுழற்சி வருமானத்திலிருந்து ஒரு பகுதி 2020 இல் ஆறு மாத காலத்தின் போது 8 சதவீதத்திற்கு பதிலாக 15 சதவீதம் சாட்டுதல் செய்யப்பட்டிருந்தது. எனவே ரூபா 7,096,144 தொகையான மேலதிக பெறுமதி சேர் வரி சாட்டுதல் செய்யப்பட்டு வெளிபடுத்தப்பட்டது.

2.2.3. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 12(எ) பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் சபை அதன் தத்துவங்கள், பணிகள் மற்றும் கடமைகளுக்கு இணங்க செயலாற்றியிருக்காதமையை குறிப்பிடுதல்.

2.2.4. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 12(ஏ) பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் சபையின் வளங்கள், காலவரையறைகளினுள்ளும் ஏற்புடையற்பாலனவான சட்டங்களுக்கு இணங்கியொழுகவும் சிக்கனமாகவும், வினைத்திறனாகவும், பயனுறுதியாகவும் பெறப்பட்டுப் பயன்படுத்தப் பட்டிருக்காதமையை குறிப்பிடுதல். தவிர

(அ) யாழ்ப்பாணம், கிளிநொச்சி பிராந்தியங்களிற்காக தண்ணீர் வழங்கும் நோக்கில் கடல் நீரிலிருந்து உப்பினை அகற்றுவதற்கான பொறியின் நிர்மாணம் 2023 இல் பூர்த்தியாக்கப்பட வேண்டுமென பட்டியலிடப்பட்டது. இதன்படி, ரூபா 1,140 மில்லியன் கிரயத்தில் 15 தண்ணீர் கோபுரங்களின் நிர்மாணம் மற்றும் ரூபா 5,536 மில்லியன் கிரயத்தில் சுத்திகரிக்கப்பட்ட தண்ணீர் பரிமாற்ற குழாய் குழாயிடல் என்பன 2018 திசெம்பர் 31 இல் பூர்த்தியாக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், அந்த சகல நிர்மாணங்களும் மீளாய்வாண்டு இறுதி வரையும் தண்ணீர் வளம் கிடக்காமையால் பயன்படுத்தப்படாமல் இருந்தது.

(ஆ) குண்டசாலை ஹொரனை நீர் வழங்கல் செயற்திட்டத்திற்கான ஒப்பந்தம் ஆரம்பத்தில் 2016 இல் வழங்கப்பட்டிருந்ததுடன் இது நிறுத்தப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், வினைத்திறனற்ற கொள்வனவு நடைமுறை காரணமாக, இது 2019 யூன் மாதத்தில் திரும்பவும் புதிய ஒப்பந்தம் வழங்குவதற்கு இன்னொரு மூன்று ஆண்டுகள் எடுத்திருந்தது. எவ்வாறாயினும், செயற்திட்டமானது வினைத்திறனற்ற கொள்வனவு நடைமுறை மற்றும் முறையற்ற திட்டமிடலை அடிப்படையாக கொண்டு சபையால் செயற்திட்டங்கள் தொடங்குதல் மற்றும் சபையின் நிதி ஸ்திரதன்மையை முறையாக மதிப்பிடாமை போன்றவற்றால், ரூபா 75.12 மில்லியன் செலவு ஏற்பட்ட பின்னர் மீளாய்வாண்டு இறுதியளவில் நிறுத்தப்பட்டிருந்தது.

(இ) வாழைச்சேனை நீர் வழங்கல் திட்டத்திற்கான ஒப்பந்தம் 2011 பெப்ரவரி 21 இல் நிதிப் பரிந்துரைகள் சமர்ப்பித்த திகதியிலிருந்து எட்டு ஆண்டுகளின் கடந்த பின்னர் 2019 சனவரி 22 இல் ஒப்பந்தகாரர்களிற்கு வழங்கப்பட்டிருந்தது. எனவே, கடனளிக்கும் முகவரால் கைதவிர்க்கப்பட்ட நிதிகள் 2 ஆண்டுகளும் 6 மாதகாலங்களாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. பின்னர், நிதியளிப்பு உடன்படிக்கை இரத்து செய்யப்பட்டதுடன் செயற்திட்டமானது நிறுத்தப்பட்டிருந்தது.

(ஈ) தகராறு நடுவர் தீர்ப்பு சபை (DAB) தீர்மானத்தின் அடிப்படையில், ஒப்பந்த உடன் படிக்கையின் 3.7 ஆம் பந்தி மற்றும் கொள்வனவு வழிகாட்டலின் 8.13.4 ஆம் பிரிவின் 14 ஆம் குறைநிரப்பு என்பவற்றிற்கமைய செயற்படுவதற்கு பதிலாக அவிசாவளை கொஸ்காம ஒருங்கிணைந்த நீர் வழங்கல் செயற்திட்டத்தின் முரண் கட்டளைகளை ஆய்வுசெய்வதற்காக நியமிக்கப்பட்டிருந்த குழுவால் ஒப்பந்த கொடுப்பனவுகள் இடைநிறுத்திமையால் DAB மற்றும் நடுவர் தீர்ப்பு உறுப்பினர்களின் சபையானது முறையே ஒப்பந்தகாரருக்கு தாமத கட்டணங்களாக ரூபா 44.93 மில்லியன் மற்றும் தொழில் ரீதியான கட்டணமாக ரூபா 1.5 மில்லியன் செலுத்த வெண்டி இருந்தது.

(உ) ரூபா 7,602,006 பெறுமதியான பயன்படுத்த முடியாத நிலையில் இருந்த மூவாயிரத்து இருநூற்றி என்பத்தி நான்கு (3,284) தண்ணீர் மீட்டர் உபபாகங்கள் மீளாய்வாண்டு இறுதிவரை குறித்த நோக்கத்திற்காக பயன்படுத்தாமல் 3 முதல் 7 ஆண்டுகள் வரையான காலவீச்சில் இரத்மலானை காட்சியறையில் வைக்கப்பட்டிருந்தது.

(ஊ) ஏழு வித்தியாசமான டயாமீட்டரில் ரூபா 43,293,308 பெறுமதியுடைய மூவாயித்து ஐநூற்றி அறுபத்தி எட்டு (3,568) தண்ணீர் மீட்டர்கள் மீளாய்வாண்டு இறுதிவரை குறித்த நோக்கத்திற்காக பயன்படுத்தாமல் 3 முதல் 7 ஆண்டுகள் வரையான காலவீச்சில் பிரதான களஞ்சியத்தில் வைக்கப்பட்டிருந்தது. மேலும், சில தண்ணீர் மீட்டர்களின் உத்தரவாதக் காலம் ஏற்கனவே காலாவதியாகிருந்தது என அவதானிக்கப்பட்டது.

(எ) சபைக்கும் கம்பஹா, அத்னகல மற்றும் மினுவாங்கொடை ஒருங்கிணைந்த நீர் வழங்கல் திட்டத்தின் பிரதான ஒப்பந்தகாரரிற்கும் இடையில் கைச்சாத்திட்ட உப ஒப்பந்த உடன்படிக்கையின் கீழ் நிட்டம்புவ மற்றும் கம்பஹா பகுதியில் குழாய்கள் குழாயிடல் மற்றும் தண்ணீர் கோபுரம் நிர்மாணம் என்பவற்றிற்கான ஒப்பந்தம் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பிரதான ஒப்பந்தத்தை வழங்கி ஏறத்தாழ 4 ஆண்டுகளின் பின்னரும் வழங்கப்பட்டிருக்கவில்லை. மேலும், ஒப்பந்தகாரரின் நலிவான செயலாற்றல் காரணமாக இடைநிறுத்தப்பட்டிருந்த தண்ணீர் கோபுரத்தின் நிர்மாணம் மற்றும்

பஸ்ஜலாவில் குழாய்கள் குழாயில் என்பவற்றிற்கான ஒப்பந்தம் 2021 பெப்ரவரி மாதத்தின் இறுதி வரையும் வழங்கப்பட்டிருக்கவில்லை. ஏற்கனவே வழங்கப்பட்ட ஒப்பந்தத்தின் குழாய்கள் குழாயிடல் வேலைகளின் ஒரு பகுதி பட்டயலிடப்பட்ட பூர்த்தியாக்கல் திகதி 2020 ஆகஸ்ட் 20 அளவில் கடந்திருந்த பொதிலும் 2020 திசெம்பர் 31 வரையும் பூர்த்தியாக்கப்பட்டிருக்கவில்லை.

(ஏ) பன்னிரண்டு வெளிநாட்டு நிதியளிக்கப்பட்ட செயற்திட்டங்கள் மற்றும் மூன்று உள்நாட்டு நிதியளிக்கப்பட்ட செயற்திட்டங்கள் ஒப்பந்தகாரரின் நலிவான செயலாற்றல், காணி தெளிவுபடுத்தலில் தாமதம், சுற்றாடல் மற்றும் மீள்குடியேற்ற பிரச்சனைகள், ஒப்பந்தம் வழங்குவதில் தாமதம், கொள்வனவு நடைமுறையில் தாமதம், தற்போதைய நிலத்தடி நீர் எதிர்பார்க்கப்பட்ட பயன்படுத்தலிற்கான வழி மாற்றம் போன்றவற்றினால் 82 நாட்கள் முதல் 1,460 நாட்கள் வரையான கருத்திற்கொள்ளக்கூடிய தாமதம் அவதானிக்கப்பட்டது.

(ஐ) FIDIC வழிகாட்டலின் (நிர்மாணத்திற்கான ஒப்பந்த நிபந்தனை) 14.6 ஆம் பிரிவிற்கு முரணாக, மாத்தறை கட்டம் (iv) நீர் வழங்கல் செயற்திட்டத்தில் மீளாய்வாண்டின் போது இடைக்கால கொடுப்பனவுச் சான்றிதழ் இல. 07 மற்றும் 08 இல் மொத்த ஒப்பந்த பெறுமதியில் 2.5 சதவீத்திற்கு குறைவாக கொடுப்பனவுகள் செய்யப்பட்டிருந்தது.

(ஒ) ஒரு நிதியளிக்கப்பட்ட செயற்திட்டங்கள் மற்றும் மூன்று உள்நாட்டு நிதியளிக்கப்பட்ட செயற்திட்டங்கள் தொடர்பில் சபையால் கடன் தவணைப்பணங்கள் மீளச் செலுத்துவதிலுள்ள தாமதம் காரணமாக குறைவான வட்டியாக ரூபா 7,653,137 இற்கு சமமான தொகை ஏற்பட்டிருந்தது.

(ஓ) 2016 ஆம் ஆண்டின் போது நிலவிய சந்தை வீதங்களுடன் ஒப்பிடும் போது ஒப்பந்தகாரரின் அளவீட்டுப் பட்டியலில் மிகையான மதிப்பீடு காரணமாக பதுளை காலிஎல நீர் வழங்கல் செயற்திட்டத்தில் 7 விடுதிகளின் நிர்மாணத்திற்காக ஒப்பந்தகாரருக்கு ரூபா 39.92 மில்லியன் மேலதிக கொடுப்பனவுகள் செய்யப்பட்டிருந்தது.

(ஔ) கடன் மீது செலுத்த வேண்டியிருந்த வட்டியை விட குறைவாக 0.6 சதவீத திருப்புதல் செலுத்தப்பட்டிருந்த ஐ.அ.டொலர் வைப்புக்களில் கம்பஹா, அத்தனாகல மற்றும் மினுவாங்கொடை ஒருங்கிணைந்த நீர் வழங்கல் செயற்திட்டத்தில் பெறப்பட்ட நிதிகள் முதலீடு செய்தமையால் 2019 ஒக்தோபர் 18 முதல் 2020 ஒக்தோபர் 30 வரையான காலத்தின் போது

சபையால் ரூபா 93 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 502,779 ஆன நட்டம் ஏற்பட வேண்டியிருந்தது.

3. ஏனைய கணக்காய்வு அவதானிப்புகள்

(அ) ரூபா 1,447 மில்லியன் கூட்டுத்தொகையான வியாபார கடன்பட்டோர், புதிய இணைப்பு கடன்பட்டோர், கழிவகற்றல் கடன்பட்டோர் மற்றும் ஏனைய கடன்பட்டோர் இரண்டு ஆண்டுகளிற்கு மேலாக அறவிடப்படாமல் இருந்தது. மேற்குறிப்பிட்ட வியாபார கடன்பட்டோரில், கொழும' பு, களணி, கோட்டை, மற்றும் தெகிவளை, கொழும்பு தெற்கு மற்றும் கொழும்பு வடக்கு பிராந்தியங்களில் 54 சதவீதங்களை பிரதிநிதித்துவப்படுத்தகின்றது.

(ஆ) மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு அமைச்சர்கள் உத்தியோகபூர்வ விதிகளிற்கு வழங்கப்பட்ட 22 தண்ணீர் இணைப்புகள் தொர்பில் ரூபா 7,357,065 ஆன தொகை அறவிடப்படாமல் இருந்தது. அவற்றில், ரூபா 2,823,630 ஆன தொகை இரண்டு ஆண்டுகளிற்கு மேலாக அறவிடப்படாமல் இருந்தது. மேலும், மாத்த விலைப் பட்டியல் ரூபா 100,000 இற்கு அதிகமான பெறுமதியிலுள்ள அரசாங்க நிறுவனங்களிற்கு வழங்கப்பட்ட 37 இணைப்புகளிலிருந்து மீளாய்வாண்டு இறுதியில் ரூபா 28,316,137 தொகை நிலுவையாக இருந்தது.

(இ) 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிலுவையாகவிருக்கின்ற துண்டிக்கப்பட்ட கடன்பட்டோர் ரூபா 1,276,725,598 ஆக இருந்தது. அவற்றில், 85 சதவீதத்திற்கு சமமாக இருந்த ரூபா 1,088,634,725 தொகையான கடன்பட்டோர் இரண்டு ஆண்டுகளிற்கு மேலாக அறவிடப்படாமல் இருக்கின்றன.

(ஈ) ரூபா. 18,030,810 தொகையான முன்னாள் ஊழியர்களிற்கு வழங்கப்பட்ட கடன்கள் மற்றும் முற்பணங்கள் மூன்று ஆண்டுகளிற்கு மேலாக கணக்குகளில் இருந்தது. எவ்வாறாயினும், அவற்றினை அறவிடவதற்கு முறையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 18 பிராந்தியங்களில் ரூபா. 141,422,678 மற்றும் ரூபா. 65,002,525 தொகையான முறையே வியாபார கடன்கொடுத்தோர் மற்றும் ஏனைய கடன்கொடுத்தோர் மூன்று (03) ஆண்டுகளிற்கு மேலாக இருந்தமை அவதானிக்கப்பட்டது.

(ஊ) 2003 முதல் 2008 வரையான ஆண்டின் போது பிராந்திய ஆதார நிலையங்களில் (மத்திய) நிறுத்தப்பட்ட செயற்திட்டங்களிற்கான

ஒப்பந்தகாரர்களிற்கு வழங்கப்பட்ட ரூபா 9,278,335 கூட்டுத் தொகையான முற்பணங்கள் அறவிடுவதற்கும் புனரமைப்பு செயற்திட்டங்களிற்காக தலைமை அலுவலகத்தால் வழங்கப்பட்ட ரூபா 4,049,022 தொகையான முற்பணங்களை அறவிடுவதற்கும் 2021 ஏப்ரல் 30 வரையும் எவ்வித சட்ட நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. மேலும், 20214 யூலை 08 இல் தலைமை அலுவலகத்தால் ஒப்பந்தகாரர்களிற்கு வழங்கப்பட்ட ரூபா 1,148,885 தொகையான முற்பணங்களை அறவிடப்பட்டிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது.

(எ) வீதி அபிவிருத்தி அதிகாரசபை, கொழும்பு சபை, மாகாண வீதி அபிவிருத்தி அதிகாரசபை, இரத்தினபுரி பிரதேச சபை மற்றும் பேருவளை நகர சபை உள்ளடங்கலாக வெளி நிறுவனங்களில் வைப்புச் செய்யப்பட்ட ரூபா 43,538,237 கூம்டுத் தொகையான குறுகிய கால வைப்புக்கள் அறவிடப்படாமல் மூன்று ஆண்டுகளிற்கு நிலுவையாக இருந்தது. மேலும், உரிய அமைச்சுக்களில் வைக்கப்பட்ட ரூபா 4,378,828 தொகையான முற்பணங்கள் அறவிடப்படாமல் எட்டு ஆண்டுகளிற்கு மேலாக நிலுவையாக இருந்ததுடன் விரிவான தகவல்கள் கிடைக்காமையால் கணக்காய்வில் மெய்மையாய்வு செய்ய முடியவில்லை.

(ஏ) ரூபா 1,144.86 மில்லியன் மற்றும் ரூபா 2.61 மில்லியன் தொகையான முறையே ஒப்பந்தகாரருடைய முற்பணங்கள் மற்றும் மீளளிக்க கூடிய கேள்வி வைப்புகள் உரிய தரப்பினரிடமிருந்து விடுவிக்கப்படவோ அல்லது அவற்றினை வருமானமாக கருதப்படாமல் மூன்று ஆண்டுகளிற்கு மேலாக இருந்தது. மேலும், ஒப்பந்தங்கள் தொடர்புபட்ட அந்த பிடிகாசு மற்றும் வைப்புக்கள் சரிசெய்யப்பட்டிருந்தா என கணக்காய்வில் ஆய்வு செய்வதற்கு சான்றுகள் எதுவும் கிடைத்திருக்கவில்லை.

(ஐ) மொனறாகலை பிராந்திய அலுவலகம் தொடர்பில் ரூபா 1,854,980 தொகையான செலுத்தவேண்டிய நிலுவையாகவிருக்கின்ற வற் மீதி மூன்று ஆண்டுகளிற்கு மேலாக புலனாய்வு செய்து தீர்க்கப்பட்டிருக்கவில்லை.

(ஒ) சபையானது காலி பகுதி கழிவுநீர் அகற்றல் செயற்திட்டத்தின் கீழ் கழிவுநீர் சுத்திகரிப்பு பொறியொன்று நிர்மாணிப்பதற்கு காணியை கொள்வனவு செய்திருந்ததுடன் மதிப்பீட்டு திணைக்களம் இந்த காணிக்கு ரூபா 71.5 மில்லியனாக பெறுமதியிட்டிருந்தது. காணியின் பெறுமதிக்கு 30 சதவீதத்திற்கு சமமான ரூபா 21.25 மில்லியன் தொகையை சபையின் சிரேஸ்ட சட்ட உத்தியோகத்தரின் சிபார்சில் முற்பணமாக காணி உரிமையாளருக்கு 2014 ஏப்ரலில் வழங்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், காணியில் வசித்தவரின் உரிமையாண்மை தொடர்பான தகராறு காரணமாக

செலுத்தப்பட்ட முற்பணம் அறவிடுவதற்கு நீதி மன்றத்தில் வழக்கு தொடரப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், மீளாய்வாண்டு இறுதியளவில் சில குடும்பங்கள் ஏற்கனவே காணியில் வசித்திருந்தனர். செலுத்தப்பட்ட முற்பணம் மற்றும் அவற்றின் மீதான தண்டப்பணம் 2021 ஏப்ரல் 30 வரையும் காணி உரிமையாளரிடமிருந்து அல்லது சபையின் பொறுப்புடைய உத்தியோகத்தரிடமிருந்து அறவிடப்பட்டிருக்கவில்லை.

(ஓ) சபையானது காட்சியறை மற்றும் ஊழியர் உத்தியோகபூர்வ விடுதிகளை நிர்மாணிப்பதற்கு களுத்துறையில் 1981 இல் காணியொன்றை சுவீகரித்திருந்ததுடன் உரிமையாளர்களிற்கு இழப்பீட்டு கொடுப்பனவிற்காக 1991 இல் ரூபா 531,000 செலுத்தியிருந்தது. எவ்வாறாயினும், மீளாய்வாண்டு இறுதியளவில் சில குடும்பங்கள் ஏற்கனவே காணியில் சட்டவிரோதமாக வசித்திருந்தனர். எவ்வாறாயினும், 2020 யூலை 21 இல் சுவீகரித்து 39 ஆண்டுகள் தாமதத்தின் பின்னர் காணியின் உரிமையாண்மையை தெளிவாக்குவதற்கு சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தது.

(ஔ) 1999 முதல் 2006 வரையான ஆண்டுகளின் பொது திருகோணமலை, களணி மற்றும் அம்பாறை பிராந்தியங்களில் இடம்பெற்ற ரூபா 246.64 மில்லியன் தொகையான காசு மோசடிகள் 2021 ஏப்ரல் 30 வரையும் அறவிடப்பட்டிருக்கவில்லை. எவ்வாறாயினும், திருகோணமலை பிராந்தியம் தொடர்பில் ரூபா 171.9 மில்லியன் காசு மோசடியில் மீளாய்வாண்டு இறுதியில் கடன்பட்டோராக 24.15 மில்லியன் மாத்திரம் அறவிடப்பட்டிருந்தது. மேலும், 2001 ஆம் ஆண்டின் போது பண்டாரவளை பிராந்தியத்தில் இடம்பெற்ற ரூபா 272,735 தொகையான இன்னொரு காசு மோசடி 2020 திசெம்பர் 31 வரையும் பொறுப்புடைய நபர்களிடமிருந்து அறவிடப்பட்டிருக்கவில்லை.

(க) நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு இடைப்பொக்கிலுள்ள இருப்புகள் (உள்நாட்டு கொள்வனவு) மற்றும் இடைப்போக்கிலுள்ள இறக்குமதி செய்யப்பட்ட இருப்புகள் முறையே ரூபா 60,344,917 மற்றும் ரூபா 1,425,133,927 ஆக இருந்தது. அவற்றில், ரூபா 1,898,285 மற்றும் ரூபா 325,687,234 தொகையான இருப்புகள் புலனாய்வு செய்யப்படாமல் ஒரு ஆண்டிற்கு மேலாக இருந்தது. மேலும், பண்டாரவளை OIC அலுவலகத்தில் ரூபா 906,957 அழிவடைந்த இருப்புக்கள், பொலநறுவை பிராந்தியத்தில் ரூபா 330,000 தொகையான கணனி உபகரணங்கள் என்பன மீளாய்வாண்டு இறுதியில் அவற்றினை பொருளிருப்பு பதிவெட்டிலிருந்து அகற்றாமல் இடைப்போக்கிலுள்ள இருப்பாக இனங்காணப்பட்டிருந்தது.

(கா) மொத்த உற்பத்தியில் 24.63 சதவீதம் மீளாய்வாண்டின் வருமானமற்ற தண்ணீராக பதியப்பட்டிருந்தது. வருானமற்ற தண்ணீரின் பெறுமதி, நீர்க்கசிவுகள், சட்ட வீரோத இணைப்புகள், இலவச நீர் வழங்கல் மற்றும் நிர்வாக திறமையின்மை போன்றன காரணமாக சபைக்கு குறிப்பிடத்தக்களவு இழப்பை எற்படுத்தியிருந்த போதிலும் புறம்பாக கணக்கிடுவதற்குப் பதிலாக சாதாரண செலவினங்களாக கணக்குகளிற்கு கொண்டுவரப்பட்டிருந்தது. மேலும், கொழும்பு நகரத்தில் வருமானமற்ற தண்ணீர் 39 சதவீதம் பதிவுசெய்திருந்த அதேநேரம் கோட்டை, தெஹிவளை, காலி, கண்டி, கேகாலை, பண்டாரவளை மற்றும் திருகோணமலை பிராந்தியத்தில் மீளாய்வாண்டின் இறுதியில் 25 சதவீத்திற்கு மேல் பதிவுசெய்திருந்தது. கொழும்பு நகரத்தில் வருமானமற்ற தண்ணீர் குறைப்பிற்கான கொழும்பு பெரும்பாக கழிவுநீர் முகாமைத்துவ முன்னேற்ற முதலீட்டு நிகழ்ச்சித்திட்டம் (செயற்திட்டம் 01 மற்றும் 02) ஒப்பந்தம் வழங்குவதிலுள்ள தாமதம், போதியளவு தொழிலாளர் ஈடுபடுத்தாமை, ஒப்பந்தகாரர் மற்றும் செயற்திட்ட கண்காணிப்பு பிரிவின் நலிவான செயலாற்றல் போன்ற காரணங்களால் மெதுவான முன்னேற்றத்தைக் காட்டியிருந்தது.

(கி) வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபைக்கு 06 இணைப்புகள் வழங்கப்பட்டிருந்ததுடன் மிளாய்வாண்டின் வருடாந்த நுகர்வு 439,607 கனமீற்றராக இருந்தது என அவதானிக்கப்பட்டது. எவ்வாறாயினும், இது 2021 மார்ச் 31 வரையும் பட்டியலிடப்பட்டிருக்கவில்லை.

(கீ) பண்டாரவளை பிராந்திய அலுவலகத்தில் ரூபா 22,217,467 தொகையான வியாபாரக் கடன்கொடுத்தோரலுள்ள அசாதாரண வரவு மீதி மூன்று ஆண்டுகளிற்கு மேலாக கணக்குகளில் இருந்தது அதேநேரம் மட்டக்களப்பு மற்றம் காலிப் பிராந்தியத்தில் ஆறு மாதங்களை விட குறைவான காலத்தில் ரூபா 28,714,980 தொகையான அசாதாரண வரவு மீதி புலனாய்வு செய்து தீர்ப்பனவு செய்யப்படாமல் இருந்தது. மேலும், ஊவா பிராந்தியத்தில் இருந்த ரூபா 143,507,022 ஆன மொத்த கடன்கொடுததோர் மீதியில் ரூபா 12,820,102 ஆன அசாதாரண வரவு மீதி தொடர்பில் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(கு) ரூபா 1,708,659 தொகையான ஒரு ஆண்டிற்கும் அதிகமாக இடைப்போக்கிலுள்ள காசில் அசாதாரண செலவு மீதி 2021 ஏப்ரல் 30 வரையும் தெளிவாக்கப்பட்டிருக்கவில்லை.

(கூ) அக்கரைபத்து பிராந்தியம் மற்றும் மாத்தளைப் பிராந்தியத்தில் முறையே ரூபா 18,200,656 மற்றும் ரூபா 50,000 தொகையான இடைப்போக்கிலுள்ள

இருப்பிலுள்ள அசாதாரண செலவு மீதி 2021 ஏப்ரல் 01 வரையும் தெளிவாக்கப்பட்டிருக்கவில்லை.

(கெ) மீளாய்வாண்டு இறுதியில் ரூபா 107,837 ஆன அசாதாரண செலவு மீதி புலனாய்வு செய்யப்படாமல் கொழும்பு பெரும்பாக நீர் மற்றும் கழிவுநீர் முகாமைத்தவ முன்னேற்ற முதலீட்டு செயற்திட்டத்தின் (கட்டம் 03) தொழிலாரம்பிப்பு முற்பணம் அவதானிக்கப்பட்டது.

(கே) அழிவடைந்த மற்றும் பயன்படுத்த முடியாத இருப்புக்களை கைதவிர்ப்பதற்கு கேள்வி மற்றும் அவற்றினை கைதவிர்ப்புக்கு 2019 ஆகஸ்ட் 20 இல் சபை அனுமதி வழங்கப்பட்டிருந்த போதிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

டபிள்யூ.பி.சீ. விக்கிரமரத்ன
கணக்காய்வாளர் தலைமை அதிபதி

M

சுருக்க வடிவங்கள்

AC	-	அஸ்பெஸ்டோ சீமெந்து
ADB	-	ஆசிய அபிவிருத்தி வங்கி
ADRA	-	அட்வன்டிஸ்ட் அபிவிருத்தி மற்றும் நிவாரண முகவராண்மை
AE	-	பிரதேச பொறியியலாளர்
AFD	-	பிரான்ஸ் அபிவிருத்தி முகவராண்மை
AGM	-	உதவிப் பொது முகாமையாளர்
AIWSP	-	ஆணமடுவ ஒருங்கிணைந்த நீர் வழங்கல் கருத்திட்டம்
AWSSIP	-	அம்பத்தலே நீர் வழங்கல் முறைமை மேம்பாடு மற்றும் சக்தி சேமிப்பு கருத்திட்டம்
BMICH	-	பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபம்
BOC	-	இலங்கை வங்கி
BOQ	-	அளவுப் பட்டியல்
BOI	-	முதலீட்டுச் சபை
CBO	-	சமூக அடிப்படையிலான அமைப்புகள்
CCN	-	கொழும்பு நகர வடக்கு
CCS	-	கொழும்பு நகரம் தெற்கு
CCTV	-	மூடிய சுற்றுத் தொலைக்காட்சி
CEA	-	மத்திய சுற்றாடல் அதிகார சபை
CEB	-	இலங்கை மின்சார சபை
CETRAC	-	நிர்மாணிப்பு உபகரணங்கள் பயிற்சி நிலையம்
CHPB	-	வீடமைப்பு திட்டமிடல், கட்டடங்கள் நிலையம்
CI	-	வார்க்கப்பட்ட இரும்பு
CIPM	-	ஆளணி முகாமைத்துவ பட்டய நிறுவனம்
CKDu	-	நோய்க் காரணி கண்டறியப்படாத நாட்பட்ட சிறுநீரக நோய்
CMC	-	கொழும்பு மாநகர சபை
CP	-	கூட்டிணைந்த திட்டம்
CRIP	-	காலநிலை நம்பகத்தன்மை மேம்பாட்டுக் கருத்திட்டம்
CRIWM	-	காலநிலை நெகிழ்திறன் ஒருங்கிணைந்த நீர் முகாமைத்துவக் கருத்திட்டம்
CS	-	கட்டுப்பாட்டுப் முறைமை
cu.m.	-	கன மீற்றர்
DAB	-	பிணக்கு நீதித்தீர்ப்புச் சபை
DEWATS	-	பன்முகப்படுத்தப்பட்ட கழிவு நீர் சுத்திகரிப்பு மற்றும் அகற்றல் முறைமை
DGM	-	பிரதி பொது முகாமையாளர்
DGM (WC)	-	பிரதிப் பொது முகாமையாளர் (மேல் மத்திய)
DI	-	இளகு இரும்பு
DMA	-	மாவட்ட மானியிடல் பிரதேசம்
DoNCWS	-	தேசிய சமுதாய நீர் வழங்கல் திணைக்களம்
DS	-	பிரதேச செயலகம்
LBF	-	உள்நாட்டு வங்கி நிதியம்
LKR	-	இலங்கை ரூபாய்
M&E	-	இயந்திரவியல் மற்றும் மின்னியல்
DSC	-	வடிவமைப்பு மற்றும் மேற்பார்வை மதியுரை
DSD	-	பிரதேச செயலகப் பிரிவு
DZUWSP	-	உலர் வலய நகர நீர் மற்றும் சுகாதார செயற்திட்டம்
EIA	-	காலநிலைத் தாக்க மதிப்பீடு
EPZ	-	ஏற்றுமதி தயாரிப்பு வலயம்
EWSP	-	எட்டம்பிட்டிய நீர் வழங்கல் கருத்திட்டம்
GCWWMIIP	-	கொழும்பு பெரும்பாக நீர் மற்றும் கழிவுநீர் முகாமைத்துவ மேம்பாட்டு முதலீட்டு நிகழ்ச்சித்திட்டம்
GIS	-	புவியியல் தகவல் முறைமை
GM	-	பொது முகாமையாளர்
GMWSP	-	மாத்தளை பெரும்பாக நீர் வழங்கல் கருத்திட்டம
GN	-	கிராம உத்தியோகத்தர்
GND	-	கிராம உத்தியோகத்தர் பிரிவு
GoSL	-	இலங்கை அரசாங்கம்
GPOBA	-	வெளியீட்டு அடிப்படையிலான உதவி தொடர்பான உலக பங்காளர்
GR	-	நில நீர்த் தேக்கம்
GVWSP	-	வவுனியா பெரும்பாக நீர் வழங்கல் கருத்திட்டம
HDPE	-	உயர் கன பொலி எதிலீன்
HRM	-	மனித வள முகாமைத்துவம்
IEC	-	சர்வதேச மின்தொழில்நுட்ப ஆணைக்குழு
ICT	-	தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பம்
ICTAD	-	நிர்மாணிப்புப் பயிற்சி மற்றும் அபிவிருத்தி நிறுவகம்
IWA	-	சர்வதேச நீர் கழகம்
IWSP	-	ஒருங்கிணைந்த நீர் வழங்கல் கருத்திட்டம்
IEE	-	மின் பொறியியலாளர் நிறுவனம்
IESL	-	இலங்கை பொறியியலாளர் நிறுவகம்
IMS	-	பொருட்பட்டியல் முகாமைத்துவ முறைமை
IoT	-	விடயங்களின் இணையம்
ISO	-	தரப்படுத்தலுக்கான சர்வதேச அமைப்பு
IT	-	தகவல் தொழில்நுட்பம்
ITEC	-	இந்திய தொழில்நுட்ப, பொருளாதார கூட்டமைப்பு
IPVPN	-	இணைய நெறிமுறை மெய்மைப்பாடு பிரத்தியேக வலையமைப்பு
JICA	-	யப்பான் சர்வதேச கூட்டுறவு முகவர்
JPY	-	யப்பான் யென்
KCWMP	-	கண்டி நகர கழிவுநீர் முகாமைத்துவக் கருத்திட்டம்
Km	-	கிலோ மீற்றர்
KRB	-	களனி வலது கரை
RSC	-	பிரதேச உதவி நிலையம்
RSC (WN)	-	பிரதேச உதவி நிலையம் (மேல் வடக்கு)
RSC (WS)	-	பிரதேச உதவி நிலையம் (மேல் தெற்கு)
MD&T	-	மனிதவலு அபிவிருத்தி மற்றும் பயிற்சி
MIS	-	முகாமைத்துவ தகவல் முறைமை
MoU	-	புரிந்துணர்வு ஒப்பந்தம்
MSC	-	முாமைத்துவ உதவி ஆலோசனை

MUDWSHF	-	நகர அபிவிருத்தி, நீர் வழங்கல் மற்றும் வீடமைப்பு வசதிகள் அமைச்சு
NAITA	-	தேசிய பயிலுனர் மற்றும் கைத்தொழில் பயிற்சி அதிகாரசபை
NBRO	-	தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனம்
NC	-	வட மத்திய
NCP	-	வட மத்திய மாகாணம்
NDB	-	தேசிய அபிவிருத்தி வங்கி
NDT	-	தேசிய தொழில்நுட்ப டிப்ளோமா
NGOs	-	அரச சார்பற்ற அமைப்புகள்
NHDA	-	தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை
NIBM	-	தேசிய வியாபார முகாமைத்துவ நிறுவனம்
NPD	-	தேசிய திட்டமிடல் திணைக்களம்
NRW	-	வருவாயற்ற நீர்
NWSDB	-	தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை
O&M	-	தொழிற்பாடு மற்றும் பராமரிப்பு
OIC	-	நிலையப் பொறுப்பதிகாரி
OKP	-	ஒரேஞ்ச் அறிவு நிகழ்ச்சித்திட்டம்
PAM	-	Polyacrylamides
PE	-	Poly Ethelene
PVC	-	Polyvinyl Chloride
P&D	-	திட்டமிடல் மற்றும் வடிவமைப்பு
PAC	-	கருத்திட்ட மதிப்பீட்டுக் குழு
PDMRC	-	திட்டமிடல், வடிவமைப்பு கைநூல் மீளாய்வுக் குழு
PMU	-	கருத்திட்ட முகாமைத்துவ அலகு
PRDA	-	மாகாண வீதி அபிவிருத்தி அதிகாரசபை
PTB	-	Physikalisch Technische Bundesansdalt
PWD	-	அரச வேலைத் திணைக்களம்
R&D	-	ஆராய்சியும் அபிவிருத்தியும்
RDA	-	வீதி அபிவிருத்தி அதிகார சபை
RDB	-	கிராமிய அபிவிருத்தி வங்கி
RFP	-	முன்மொழிவுக்கான வேண்டுகோள்
RIDEP	-	கிராமிய உட்கட்டமைப்பு அபிவிருத்திக் கருத்திட்டம்
RM	-	பிராந்திய முகாமையாளர்
RO	-	Revese osmosis- தகைழ் சவ்வூடுபரவல் மதியுரை
DSD	-	பிரதேச செயலகம்
DZUWSP	-	உலர் வலய நகர நீர் மற்றும் சுகாதார செயற்திட்டம்
EIA	-	சுற்றாடல் தாக்க மதிப்பீடு
EPZ	-	ஏற்றுமதி தயாரிப்பு வலயம்
EWSP	-	எட்டம்பிட்டிய நீர் வழங்கல் கருத்திட்டம்
GCWWMIIP	-	கொழும்பு பெரும்பாக நீர் மற்றும் கழிவுநீர் முகாமைத்துவ மேம்பாட்டு முதலீட்டு நிகழ்ச்சித்திட்டம்
GIS	-	புவியியல் தகவல் முறைமை
GM	-	பொது முகாமையாளர்
GMWSP	-	மாத்தளை பெரும்பாக நீர் வழங்கல் கருத்திட்டம
GN	-	கிராம உத்தியோகத்தர்
GND	-	கிராம உத்தியோகத்தர் பிரிவு
GoSL	-	இலங்கை அரசாங்கம்
GPOBA	-	வெளியீட்டு அடிப்படையிலான உதவி தொடர்பான உலக பங்காளர்
GR	-	நில நீர்த் தேக்கம்
GVWSP	-	வவுனியா பெரும்பாக நீர் வழங்கல் கருத்திட்டம்
HDPE	-	உயர் கன பொலி எதிலீன்
HRM	-	மனித வள முகாமைத்துவம்
IEC	-	சர்வதேச மின்தொழில்நுட்ப ஆணைக்குழு
ICT	-	தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பம்
ICTAD	-	நிர்மாணிப்புப் பயிற்சி மற்றும் அபிவிருத்தி நிறுவகம்
IWA	-	சர்வதேச நீர் கழகம்
IWSP	-	ஒருங்கிணைந்த நீர் வழங்கல் கருத்திட்டம்
IEE	-	மின் பொறியியலாளர் நிறுவனம்
IESL	-	இலங்கை பொறியியலாளர் நிறுவகம்
IMS	-	பொருட்பட்டியல் முகாமைத்துவ முறைமை
IoT	-	விடயங்களின் இணையம்
ISO	-	தரப்படுத்தலுக்கான சர்வதேச அமைப்பு
IT	-	தகவல் தொழில்நுட்பம்
ITEC	-	இந்திய தொழில்நுட்ப, பொருளாதார கூட்டமைப்பு
IPVPN	-	இணைய நெறிமுறை மெய்மைப்பாடு பிரத்தியேக வலையமைப்பு
JICA	-	யப்பான் சர்வதேச கூட்டுறவு முகவர்
JPY	-	யப்பான் யென்
KCWMP	-	கண்டி நகர கழிவுநீர் முகாமைத்துவக் கருத்திட்டம்
Km	-	கிலோ மீற்றர்
KRB	-	களனி வலது கரை
RSC	-	பிரதேச ஆதார நிலையம்
RSC (WN)	-	பிரதேச ஆதார நிலையம் (மேல் வடக்கு)
RSC (WS)	-	பிரதேச ஆதார நிலையம் (மேல் தெற்கு)
RSC (N)	-	பிரதேச ஆதார நிலையம் (வடக்கு)
RSC (NW)	-	பிரதேச ஆதார நிலையம் (வடமத்திய)
RWS	-	கிராமிய நீர் வழங்கல்
SBD	-	தரநியம விலைக்கேள்வி ஆவணங்கள் ளுஊயுனுயு - மேற்பார்வைக் கட்டுப்பாடு மற்றும் தரவு பெறுதல்
SCAPC	-	நிலையான அமைச்சரவை அங்கீகார பெறுகைகள் குழு
SDG	-	நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள்
SEP	-	துப்புரவேற்பாட்டு மேம்பாட்டு கருத்திட்டம்
SHIFT	-	நகரங்களுக்கான துப்புரவேற்பாடு மற்றும் சுகாதார முன்னெடுப்பு
SIDA	-	சுவீடன் சர்வதேச அபிவிருத்தி முகவராண்மை
SLIDA	-	இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவனம்
SLSI	-	இலங்கை தரக் கட்டளை நிறுவனம்
SMS	-	குறுகிய செய்திச் சேவை

ST	-	சிறிய நகரம்
STPs	-	சாக்கடை சுத்திகரிப்பு பொறித்தொகுதி
TA	-	தொழில்நுட்ப உதவி
TCE	-	மொத்த மதிப்பீட்டுச் செலவினம்
THM	-	Tihalomethane
ToR	-	செயல் விதிகள்
ToT	-	பயிலுனர்களுக்கு பயிற்சியளித்தல்
UNICEF	-	ஐக்கிய நாடுகள் சர்வதேச சிறுவர் அவசர நிதியம்
UPVC	-	Unplasticised Polyvinyl Chloride
USD	-	ஐக்கிய அமெரிக்க டொலர்
VPN	-	கற்பித பிரத்தியேக வலையமைப்பு
VPP	-	வவுனியா பங்களிப்புத் திட்டமிடல்
VAT	-	பெறுமதி சேர் வரி
WASSIP	-	நீர் வழங்கல் மற்றும் துப்புரவேற்பாட்டு மேம்பாட்டுக் கருத்திட்டம்
WDCE	-	நீர் மற்றும் அபிவிருத்தி மகாசபை மற்றும் கண்காட்சி
WHO	-	உலக சுகாதார அமைப்பு
WSP	-	நீர் வழங்கல் கருத்திட்டம்/ நீர் பாதுகாப்புத் திட்டம்
WSS	-	நீர் வழங்கல் திட்டம்
WTP	-	நீர் சுத்திகரிப்புப் பொறித் தொகுதி
WWDS	-	கழிவுநீர் அகற்றல் முறைமை
WWTP	-	கழிவுநீர் சுத்திகரிப்புப் பொறித்தொகுதி

அடிப்படைத் தகவல்கள்

நிறுவனத்தின் பெயர்
தேசிய நீர் வழங்கல், வடிகாலமைப்புச் சபை
(தே.நீ.வ.வ.ச.)

சட்ட வடிவம்
அரசாங்கத்திற்குச் சொந்தமானதொரு நியதிச்சட்ட சபையாகும்.

கூட்டிணைக்கப்பட்ட திகதி
1974 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க தே.நீ.வ.வ.ச. சட்டமான பாராளுமன்றச் சட்டத்தின் மூலம் 1974.03.01 ஆம் திகதி

1992 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க தே.நீ.வ.வ.ச. (திருத்தச்) சட்டத்தின் மூலம் 1992.03.11 ஆம் திகதி சட்டம் திருத்தப்பட்டது.

வரிப் பதிவு இலக்கம்
4090 31820

VAT பதிவு இலக்கம்
4090 31820 7000

தொடர்புகளுக்கு, தலைமை அலுவலகம்
காலி வீதி, இரத்மலானை, இலங்கை
தொலைபேசி: +94 11 2638999 (உடனடி)
+94 11 2637194, +94 11 2611589
தொலை நகல்: +94 11 2636449
மின் அஞ்சல்: gm@waterboard.lk
இணையத் தளம்: www.waterboard.lk

வழிகாட்டல் அமைச்சு
நீர் வழங்கல் அமைச்சு

அழைப்பு நிலையம்
1939 (24 மணி நேரமும்)

பாவனையாளர் சேவைப் பிரிவு, தலைமை அலுவலகம்
+94 11 2623623 (கடமை நேரத்தில்)

வங்கியாளர்
இலங்கை வங்கி

கணக்காய்வு
பிரதி பொதுமுகாமையாளர் (உள்ளக கணக்காய்வு)
அரச கணக்காய்வுப் பிரிவு

பணிப்பாளர் சபை
திரு. நிஷாந்த ரணதுங்க – தலைவர் தே.நீ.வ.வ.ச.
(2020.01.16 தொடக்கம்)
திரு. நிமல் ஆர். ரணவக்க - உப தலைவர்
(2020.01.23 தொடக்கம்)
டாக்டர் எல்.ரீ. கம்லத் - சபை அங்கத்தவர் தே.நீ.வ.வ.ச.
(2019.06.04 தொடக்கம்)
திருமதி ஏ.ஆர். விக்கிரமசிங்க – சபை அங்கத்தவர்
(2020.01.11 தொடக்கம்)

பொறி. ரீ.எம்.ஆர்.பீ. தென்னகோன் -
சபை அங்கத்தவர், தே.நீ.வ.வ.ச. (2020.01.19 தொடக்கம்)
பொறி. ஆர்.ஏ.எஸ்.எல். ரணசிங்க் -
சபை அங்கத்தவர் தே.நீ.வ.வ.ச. (2020.02.18 தொடக்கம்)
திரு. பி.என். தமிந்த குமார -
சபை அங்கத்தவர் தே.நீ.வ.வ.ச. (2020.06.22 தொடக்கம்)

சபைச் செயலாளர்
திருமதி. டபிள்யு.பீ. சந்தமாலி த சில்வா

சிரேஷ்ட முகாமைத்துவம்
பொறியியலாளர் ஆர்.எச். ருவினிஸ்,
பொது முகாமையாளர்
(2020.09.06 வரை)
பொறியியலாளர் விஜேதுங்க, பொது முகாமையாளர்
(2020.10.15 தொடக்கம்)
பொறியியலாளர் கே.டீ.பி.எப். சிறிவர்தன மே.பொ.மு.
(வடக்கு / மத்திய)
பொறியியலாளர் என்.எச்.ஆர். குலநாத மே.பொ.மு.
(கழிவுநீர்)
பொறியியலாளர் (திருமதி) வசந்தா இலங்கசிங்க,
மே.பொ.மு. (கொள்கை, திட்டமிடல்)
பொறியியலாளர் ஆர்.ஏ.ஏ. ரணவக்க மே.பொ.மு.
(தெற்கு / கிழக்கு)
பொறியியலாளர் ரீ.டபி.எஸ். பெரேரா, மே.பொ.மு.
(நீர் வழங்கல் கருத்திட்டங்கள்)
பொறியியலாளர் சீ.சீ.எச்.எஸ். பர்னாந்து, மே.பொ.மு.
(மேற்கு)
பொறியியலாளர் எஸ்.ஜே.ஆர். ராஜ்குமார்
(கூட்டிணைந்த சேவைகள்)
திரு. ஜீ.கே. இத்தமல்கொட மேல.பொ.மு.
(மனித வள முகாமைத்துவம்)
திரு. ஆர்.ஏ.எம்.எஸ். வீரசேன மேல.பொ.மு. (நிதி)

பிரிவுகளின் பிரதி பொதுமுகாமையாளர்கள்
திருமதி என்.வை.எஸ். அபேகுணவர்தன
(கைத்தொழில் உறவு)
திரு. டபி.ஏ.எஸ். சுமனசூரிய
(மனித வளங்கள்)
திரு. ஆர்.எம்.ஏ. பண்டார
(வழங்கல் மற்றும் பொருட்கள் முகாமைத்துவம்)
திருமதி எம்.எம்.எஸ். பீரிஸ் (நிதி)
திரு. ஏ.ஜீ.எஸ். குமார
(கிரயம்) - பதில் கடமை
பொறியியலாளர் எஸ்.ஜீ.ஜீ. ராஜ்குமார் (வர்த்தகம்)
பொறியியலாளர் ஐ.வீ.டபி. எதிரிவீர
(கூட்டிணைந்த திட்டமிடல்)
பொறியியலாளர் எம்.ஏ.சீ. ஹேமசந்திர
(சி.ந./கி.நீ.வ.)
பொறியியலாளர் (திருமதி) டீ.எம்.எல்.சீ. பிட்டவல (அபிவிருத்தி)
பொறியியலாளர் ஜே.எல். சீக்குகே
(ADB கருத்திட்டம்)
பொறியியலாளர் ரீ.எம்.டபி. சுனில் பண்டார (எந்.மின்) - பதில்
பொறியியலாளர் ஏ. முனசிங்க
(திட்டமிடல், வடிவமைப்பு)
பொறியியலாளர் ஜே. சந்திரதாச
(தகவல் தொழில்நுட்பம்) - பதில்
பொறியியலாளர் தனேஷ் குணதிலக்க
(கழிவுநீர்)
செல்வி ஏ. சிறியலதா
(உள்ளக கணக்காய்வு) - பதிற் கடமை

மாகாணங்களின்/பிராந்திய உதவி நிலையங்களின் பிரதி பொது முகாமையாளர்கள்
பொறியியலாளர் கே.பீ.ஆர்.எஸ். சமரசிங்க - (மேல் - மத்திய)
பொறியியலாளர் எம்.ரீ.எம். ரஸில் - (மேல்-தெற்கு)
பொறியியலாளர் என்.யூ.கே. ரணதுங்க (மேல் - வடக்கு)
பொறியியலாளர் டபி.என். பிரேமசிறி (உற்பத்தி)
பொறியியலாளர் டபி.ஜீ.சீ.எல். வீரசிங்க (வட மேல்)
பொறியியலாளர் ஜீ.வீ. விஜேரத்ன (வட மத்திய)
பொறியியலாளர் எம்.கே.டீ.ஜே.எச். மீகொட (மத்திய)
பொறியியலாளர் ரீ. பாரதிதாசன் (வடக்கு)
பொறியியலாளர் ஆர்.எஸ். லியனகே (ஊவா)
பொறியியலாளர் ஏ.கே. கபுருகே (சபரகமுவ)
பொறியியலாளர் (திருமதி) எம்.கே.ஏ.ஜே.எம். விஜேசிங்க (தெற்கு)
பொறியியலாளர் என். சுதேசன் (கிழக்கு)

கருத்திட்ட பணிப்பாளர்களாக செயலாற்றுகின்ற மே.பொ.மு. பிரதி பொது முகாமையாளர்கள்
பொறியியலாளர் எஸ்.ஏ. ரஷீட்
(கொழும்பு நீர் வழங்கல் சேவைகள் மேம்பாட்டுக் கருத்திட்டம்)

பொறியியலாளர் ரீ.ஆர்.ஜே. பர்னாந்து
(களு கங்கை நீர் வழங்கல் கருத்திட்டம்)

பொறியியலாளர் என்.ஏ.எஸ். சாந்த
(களனி வலது கரை நீர் வழங்கல் கருத்திட்டம்)

பொறியியலாளர் என்.எச்.டீ.பீ. தர்மபால
(கம்பஹ அத்தனகல்ல நீர் வழங்கல் கருத்திட்டம்)